கடவுட்டுணை.

இஃது

# பாலவாகட திரட்டு

தெய்வீக

## அகத்திய மஹா முனிவர்

திருவாய் மலர்ந் தருளிச் செய்த

## பாலவாகடத்தை

தொண்ட மண்டலம் வல்லக்காளத்தி நகர்

வீராஸ்வாமிதாச ரவர்கள் குமாரர்

## அயோத்திதாச

பண்டிதரவர்களால்

பலபிரதிகளைக் கொண்டு பரிசோதித்து இதனுடன் தன்

வந்திரி, பிரமமுனி, தேரையர், புலிப்பாணி, போகர்,

இம்முனிவர்கள் சொல்லியசிற்சில செய்யுள்களுஞ்

சேர்த்து பிழையற திருத்தப்பட்டு

இராயவேலூர் - பள்ளிக்கொண்ட தாசர் குமாரர்

கம்சேரியாட் ஆடிட்டாபீஸ் றயிட்டர்

## கோவிந்தராஜதாசரவர்கள்

கேட்டுக்கொண்டபடி

திருமயிலை

## பா. இராமஸ்வாமிதாச

ரவர்களால்

சிந்தாதரிப்பேட்டையிலிருக்கும்

பு. இராஜரத்ந முதலியா ரவர்களது

பூரணசந்திரோதய

அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது

---

சாளபுக்த்தி ஹூ ஐப்பிசிமீ

இதன்விலை ரூபாய (௩.௧)

அகத்தியர் திருவடிகளேசரணம்.

இஃது

# முகவுரை

களங்கரகித சட்குண சர்வஜீவ சாக்ஷாத்காரபகாப்பொருள் நிர்மித்த நெடுங்கடல் புடைசூழ்ந்தபூலோகத்தின்கண்வாழ்ந்திலகி விளங்கும் மானிடர்கட்கு சிறந்த பொதிகைமலையிலெழுந்தளிய திவ்ய முத்தமிழ்க்குரிய பிரம சைதந்நிய சின்மய ஞானாதீத பிரணவ சூக்ம தெய்வீக அகத்திய மஹாமுனிவர் திருவாய்மலர்ந் தருளிச்செய்த பாலவாகடசாஸ்திரத்தை சர்வத்திராளுக்கும் பிரயோசனமாகும்படிக்கு பலபிரதிகளைக்கொண்டுபரிசோதித்து நோயுற்றக்குழந்தைகளின் பரிதாபம்நோக்கி இதனுடன் தன்வந்திரி, பிரமமுனி, தேரையர், புலிப்பாணி, போகர், இம்முனிவர்கள் சொல்லியசிற்சில செய்யுள்களுஞ்சேர்த்து எழுத்துச்சொற்பொருள் பேதமாகிப் பிறழ்ந்திருந்தவைகளை சிக்கறுத்து திரிபுகளில்லாமல் வெளிப்படையாக்கி கற்றோரும் பிள்ளைகளைப் பெற்றோரும் பெரியோராயுற்றோரும் மற்றோரும் மயங்காம லெளிதிலுணர்ந் தறியும் பொருட்டுக் கற்கலந் துண் சோற்றினுங் கல்லாய்ந்துண்கூழ்நன்மைபோல் முதல் பண்டிதா ளிலக்கணமும் பஞ்சபூதிய சக்கரமும் இரண்டாவது கர்ப்பங்கோளிலக்கணமும், மூன்றாவது பாலவாகடத் திரட்டி லக்கணமும், அவ்வவ் வியாதிகளின் குணக்குறிகளும் அவைகட் கௌஷதங்களும் பாலக்கிரகமுஞ்சேர்த்து அச்சிற்பதித்தனம் இந்நூற்றிரட்டில் இயந்திரம் மந்திரம் பஞ்சாட்சரம் புனல்சொரிதல் சேவற்பலி ஓந்தி உடும்பு முதலை காக்கை வௌவால் சர்ப்பம் இவைமுதலிய கிரியையுங் கொலையும் வடக்கயிறுஞ் சொல்லியிருப்பதால் சகலசமயத்தவருங்கொலைமறுத்த புண்யபுருஷோத்மரும் என்பேரிற்கோபஞ்செய்யாமல் எய்தவர்தம் மருகிருக்க அம்பைநொந்து காரியமென்னென்று ஞானிகள் சொன்னவற்றில் நாங்குற்றஞ் சொல்லக்கூடா வெனமன்னிப்பதுமன்றி ஆயுர்வேததேர்ச்சியுடைய பண்டிதாளென்னை யிகழாமலும் புகழாமலும் காரிய காரணத்தை மாத்திரந் தெரிந்துக் கொள்ளப் பிரார்த்திக்கின்றேன்.



# உதவிச்சிறப்பு

## ஆசிரியப்பா

---

குஞ்சரநிகர்முகில் - குளிர்கடல்சலத்தை ................... *
சஞ்சயமடுத்து - தகைநபத்தெழும்பி........................ *
மஞ்சுகட்பொழிய - மாநிலமுழுதும் ........................ *
விஞ்சுபல்லுயிர்கள் - வீறுடன்சிறப்பப் ...................... *
படீஇரநற்சைலப் - பரமசற்குறுமுனி ...................... *
துடீஇரபூமண்டலத் - தொன்றுபைஞ்ஞீலின்.................. *
மகிழுமகாஅர்க்கு - வளமுடனுரைத்த......................... *
பகரம்பரவிய - பாலவாகடத்துட ............................ *
ணயுருவேதத்தழகு - தன்வந்திரி .............................. *
பாயிரமுதற்புலிப் - பாணிதேறையர் .......................... *
முடலையம்பிரம - முனியும்போகர் ........................... *
திடபரமாக - செப்பியபலவுஞ் ................................ *
சேளர்த்தொருங்கொழுங்குறத் - திரட்டித்தருகென............ *
நேளர்த்தியதான - நீர்வளரிராய ................................ *
வேலமாநகரின் - விபுதுவமுறையுங் ............................ *
கோலமாய்ப்பள்ளிக் - கொண்டதாசன்முளைஇ ............... *
வன்கவிநிபுணன் - வரமலிவாஞ்சை ............................ *
யின்புறுகோவிந் - திராஜதாஸ்சேட்ப .......................... *
முட்டாட்டாமரை - முருகவிழுவளகம் ........................ *
மட்டார்ப்பேழ்பணை - வளமிகதழைத்து........................ *
மேதிகண்முலைகளை - மிளிர்கயன்முகைகளு ................. *
மோதகுபீரென - மூரிசுறப்பிட ................................. *
வாளைசேலெழும்பி - வாழையின்சீப்பும்.......................... *
பாளைவாயக்கமுகைப் - பரிவுடனொடித்துக்..................... *
காளத்தைக்கிழித்துக் - கமலத்தோடிறங்கித்..................... *
தாளடியாடத் - தாழையுமரம்பைக்............................. *
குலைகளுமடலவிழ் - கொங்குநெற்கதிர்க ....................... *
டலைவணங்கிடவத் - தடத்துழிமுப்பான்.......................... *
வகைத்ரளக்குவை - மலிநிலவெறிப்ப.............................. *

துசைமைவெண்சங்கினந் - தமரமிகும்பைந்......................*

தண்டலைபூம்பொழி - றண்மலர்கனிபிழி........................*

வண்டுகளுறைந்து - மாந்திசையரற்ற..........................*

கோரகைபிளிற - கோலமராளம்..................................*

வாரமுட்கொடுகண் - வளரசிகாவளஞ்...........................*

சாமளகலாபத் - தைவிரித்தாட ...............................*

கோமளதத்தைக் - குழகுமைமிழற்றப்...........................*

பளிங்குசாளரப் - படர்மாளிகைகள்...........................*

விளங்குபொற்கலசம் - விலோதனமசைப்பப்.......................*

பகர்மணியரணம் - பாம்புரிபுடைநெடு.........................*

சிகரகோபுரங்கட் - சினகரவிலாசஞ்...........................*

சூழ்ந்தழகொழுகுஞ் - சுந்மமாமயிலை .........................*

வாழ்பாளயநல் - வரோதயதனயன்................................*

மகரகேதனனினு - மாழையினுயர்ந்தோன் .........................*

சகசன்மூவேழு - தலைவர்கட்கதிக .............................*

யுதிட்டிரன்சார்வ - பௌமனுபேந்திரன் .........................*

மதிநுதன்மடவரன் - மடலூர்மார்பன் ..........................*

றவளமாவிபமைந் - தருநிழல்கௌசிக ...........................*

ளவநிதிவளரு - நகையளகேசன் .................................*

மாலைதோட்கிரீஇடி - மழைபொழிசலதரம் ........................*

போல்கொலடையாளன் - பொற்புயாசலனனி.........................*

சததளசலச - தண்ணுண்மலர்முகன்..............................*

மதர்வுளவாய்மை - மறவாசற்சனன்.............................*

பக்த்தியினுகாதியை - பழிச்சுளங்களிப்போன்....................*

சக்த்திபின்வாஅகை - சரதசிலாக்கியன்.........................*

பேறீரொண்வரப் - பிரசாதவிளரிக்..............................*

கூறியசகல - குணசம்பன்னன் .................................*

சலநிதியனைய - சாஸ்திரதேர்ச்சிப் ............................*

பலபலசமயகோட் - பாடொருங்குணர்ந்தோன் ......................*

பாரதிஸ்ரீமது - பாக்கியன்பூஷித...............................*

பேரதிகிர்த்திப் - பிரதாபமானே..............................*

ஞுவலர்புகழு - நயமொழிசுகுணன்..............................*

காவலர்மெய்ச்சுங் - கற்னுவுதீரன்............................*

புண்ண்யகாம்பீரன் - பூரணசற்சிதன்...........................*

பண்ண்ணியபலத்துவ - பாஸ்கரசுபாஷிதன் .......................*

மன்னுயிரனைத்து - மாதிரமீது...............................*

தன்னுயிர்போலே - தனதுளத்தெண்ணுவோ .......................*

னன்னெறிவழாதோ - னளினமாநிதியுந் ..........................*

துன்னருஞ்சங்க - சுவர்னமுந்துலங்க............................*

## உதவிச்சிறப்பு

படைத்தவைசூரியன் - பஞ்ஞ்சகற்பகநிகர்........................ *
திடத்துயர் நாமன் - றிகழ்வடமதாணி.................................. *
காஅங்கேயன்போற் - கடாக்ஷவீக்ஷண.................................. *
னூஉங்குபெரும்புகழ் - நுணங்கியோனிவ்........................... *
வுலகெலாம்புகழ்பெற் - றோங்கியவிபவ................................ *
மிலகியஇராம - ஸ்வாமிவேளென்போன்.............................. *
பெட்புறுமுவகைப் - பெருகிப்பிரபல.................................... *
சட்குணனருளாற் - ரூராளமாக............................................ *
வேஎண்டியதிரவ்ய - விசோஷணமளித்து.............................. *
காஅண்டலங்கோடிக் - கதழ்விற்றிராவிட............................. *
வண்மைசேர்பால - வாகடத்திரட்டை.................................... *
பண்புளவச்சிற் - பதித்தனனன்றே....................................... *



உ

# கடவுள்வணக்கம்.

எண்சீராசிரிய விருத்தம்.

சீர்கொண்ட நிலவுப்புயல் பரிதிதானை... *
திகழண்டகோளமலைதியமடங்கல்... *
பார்கொண்டகடலுலவை சராசரங்கட்... *
படைத்துக்காத்தநவரதபரோக்ஷமேலும்... *
பேர்கொண்டவொருங்கழிப்பவருட்பிரவாகப்... *
பேயூஷமுறழ்வு தருப்பேரானந்தத்... *
தார்கொண்டவியாபகவாணிர்விகார... *
சாக்ஷாத்காரப்பொருளைவஸ்தௌஸ்த்தியஞ்செய்வாம்... *

## அக்த்தியர்வணக்கம்.

எழுசீராசிரிய விருத்தம்.

சகத்திரபணமுடிபார்ந்தடாலுவினற்... *
சாற்றுதற்கரியமெய்ஞ்ஞான... *
மசத்வப்பிரபாதிதத்திருசுதர்ம... *
வரோதயபிழம்பொளிர்தழைத்தக்... *
குகத்திரண்முனிவர்புடைகொளநளினக்... *
குரங்கியந்தவழ்பொதிகையின்வா... *
மூகத்தியர்பத்மபூஞ்சலனமஞ்சிரத்தி... *
னணிந்தநவரதமுந்துதிப்பாம்... *

## அவையடக்கம்.

அறுசீராசிரிய விருத்தம்.

பாலதனைப்பாச்சியென சோறதனைசோச்சியென... *
பாலர்நாவாற்... *
சிலமொடுமழலைமொழி மிழற்றிடினும்பெரியோர்கட்... *
சினங்கொள்வாரோ... *
கோலவிருவம்பகமுளார்க்குச்குருடன்சோல்கை... *
கொடுத்துமார்க்க... *
மாலுடனேகாட்டுதல்போல்பிடகருக்குசிற்றறிவேன்... *
வழுத்தலன்றே... *

இஃது

# பண்டிதாளிலக்கணம்

## அறுசீராசிரியவிருத்தம்

பண்டிதன்முறைமைகேட்கில் பழிப்பிலான்சலிப்பிலானுய்... ... ... *
கொண்டதோர் உறுப்பில் சற்றுங் குறையிலான் பொறையிலானும்... ... *
வண்டணிகுழலார் நம்பி மாதாதாய்தந்தைபோல... ... ... ... ... *
மண்டலமொக்க எண்ணில் வைத்திய னுகுந்தானே ... ... ... ... ...(க)

### இதுவுமது.

உத்தமகுணத்தையுள்ளோன் உயர்பெறுங்கீர்த்தியுள்ளோன் ... ... ... *
புத்தியாலாய்ந்து சொல்வோன் பொருள்களையாயவல்லோன்... ... ... *
சத்தியவார்த்தையுள்ளோன் தருமசிந்தனையேயுள்ளோன்... ... ... ... *
*குத்திரவார்த்தைப்பேசா குணன்பரிகாரியாமே... ... ... ... ... ...(உ)

* குத்திரம் - பொய்.

### இதுவுமது.

மண்ணின்மேற்பெண்ணுணுக்கும் மற்றுளபல்லுயிர்க்கும்... ... ... ... *
கண்ணினில் நிமைபோற்காக்குங் * கடவுளான் கருணையுள்ளோன்... ... *
நண்ணியபெண்ணுணெல்லாம் நாடியதந்தைதாயென்... ... ... *
ஏறெண்ணியேமருந்துசெய்யில் இடர்பிணிதீருமன்றே... ... ... ... (ங)

* கடவுள் - குரு.

### இதுவுமது.

#### வேறு.

* குணங்கள் † குறிகள் ‡ நாடியினுல் குறித்துமனத்தின்திடமதனுல் ... *
பிணங்கியேறும் பிணியலவும் பின்முன்கண்டுதானறிந்து... ... ... ... *
வணங்குமருந்தால் மந்திரத்தால் மஹாதேவ கடாக்ஷத்தால்... ...... ... *
இணங்குமாகில்மருந்துசெய்வீ என்றேமுனிவரியம்பினரோ...... ... ... (ச)

* குணங்கள் - அவ்வவ்வியாதியின் குணங்கள்.
† குறிகள் - விழி- நாசி- நா- மலசலக்குறிகள்.
‡ நாடி - வாத, பித்த, சேஷ்ம, பகுப்பால் பிணிகளைகுறித்தறிதல்.

கடவுட்டுணை.

இஃது

# சாத்துக்கவிகள்.

இராமாயணகீர்த்தனப்பிரசங்கி
உடையூர்.

## கிஷ்டையங்கா ரவர்கள் பாடியது

எண்சீராசிரிய விருத்தம்.

சொல்விற்பீடுறு மலையமுனிவனுதி த்
துணையில்புகழாய ஞூற்புலவருன் னி
யல்வற்பர்டுறும்பிணியாற்பாலர்நா ளு
மழுங்காதவணமுனைத்தமுறைகளெல்லா ம்
வெல்லப்பாகமுத * நுனையெனத்திரட் டி
விரிபாலவாகடமென்றச்சிட்டாலு ல்
வல்லக்காளத்திநகரயோத்திதா ச
வள்ளலிந்தமகியுளோர்மகிழவென் றே.

* நுனை-வெண்ணெய்.

புரசபாக்கம்அஷ்டாவதான

## சபாபதிமுதலியாரவர்கள் பாடியது

எண்சீராசிரியவிருத்தம்.

பாலர்களுக்குறும் பறவைத்தோஷமாந்த ம்
பால்செரியாகுணங்கணங் கண்ணோயுமா தி
கோலமறவியாதிகட்குக்கியாழம்பற்ப ங்
குளிர்ச்சிவெண்ணெய்ப் பச்சிலைகட்குறித்துக் காட்டிச்
சாலவல்லக்காளத்திநகரயோத் தி
தாசனெனும்பெயரினுயுள்வேத ப்
பாலவாகடத்திரட்டென்றிந்நூறன்னை ப்
பரிந்தெழுதாவெழுத்தினிலிட்டுதவினு னே.

ள-ள ஸ்ரீமஹாராகனம்பொருந்திய கவனர்மெண்டாரால் ஏற்படுத்திய
போர்ட்ஆவ்எக்ஸாமினர்களிலொருவராகிய

## சாமுவேல்பிள்ளையவர்கள்

பாடியது.

எழுசீராசிரிய விருத்தம்.

சார்போதவொழிவடைந்தார்ச்சயங்கொண்டா ரீ
தருசோழமண்டலத்துதொண்டநாட்டி ற்
றேர்போதமுழுதுணர்ந்தோன்திறத்திருவர் க்
கிருபத்தோராமிருக்கின்செயற்கைஞான ங்
கூர்போதவல்லக்காளத்திநகர்க்குடிகொண் டோ
ன்யோத்திதாச ன்
பார்போதவாயினுட்பம்பாலகர்க்காய் ப்
பகுத்துணாயிட்டச்சிட்டா னே

## பள்ளிகொண்டாபிள்ளையவர்கள்

பாடியது.

ஆசிரிய விருத்தம்.

உலகுபுகழ்மலையமுனிதன்வந்திரிதேறை ய
ருணாசெய்கொங்கணராதி யோ
ரோதியுளநூல்களையொருங்குணர்ந்துறமுலன் மை
யுட்கொண்டவற்றினின்று ம்
நலமிக்கபரிகாரமுறைகள்பற்பலவுந ணி
நாடித்தொகுத்தெடுத் து
நானாவிதப்பிணிகடம்மாற்பிணிப்புண் டு
நலியாமலெளிதறிந்து ண்
டலகவின்புற்றுய்யுவண்ணந்திரட்டந் த
மமர்பாலவாகடமெ னு
மபிதானமிட்டதனையச்சிற்பதித்திந் த
வவனியோர்க்குதவினன் ரோ
கலபமாமயில் * குயின்கண்டுட்களித்தக வு
காவளம்பெருகுவல்ல க்
காளத்திநகர்வாழயோத்திதாசன்பெரு ங்
கவிகள்புகழ்புலமையோ னே

* குயின் - மேகம்

புதுவை,

## குழந்தைவேல்கவிராயரவர்கள்

பாடியது.

எண்சீராசிரியவிருத்தம்.

நச்சிட்டேடமச்சநமேயாடிநீடு ந்
தனையர்களின்வினைகளுக்கத்தவத்திலன் பு
வச்சிட்டோங்கச்சித்தர்க்கருத்தையெல்லா ம்
வகைவகையாவெடுத்தெளிதிற்றிரட்டி சேர்த்தங்
கச்சிட்டாரிச்சித்தேநடிக்கும்வல்ல க்
காளத்திமாநகரயோத்திதாச ன்
அச்சிட்டான்மெய்ச்சிட்டேயுவப்பமூ வா
வமுதமெனப்பாலவாகடநூன்மாதே ர.

## புதுவைசோமசுந்தரம்

பிள்ளையவர்கள்பாடியது.

எண்சீராசிரியவிருத்தம்

ஞாலமகிழ்க்குறுமுனிவனுதியாயோ ர்
நவித்தியுளநூல்களெல்லாநன்குதேர்ந் தே
யேனுமெனநோய்க்கிடங்கொடாதருந்த ற்
சேற்றபலமுறைகளெலாமெடுத்துச்சேர்த்து ப்
பாலவாகடத்திரட்டென்றிந்நூலச்சி ற்
பதித்துலகோர்க்களித்ததனற்பழனச்செல்வ ன்
சாலவல்லக்காளத்திநகரயோத் தி
தாசனெனுமியற்பெயர்கொடன்மையோ னே.

போளூர்வேங்கிடசாமிநாயகர்குமாரராகிய

## வீராசாமிநாயகரவர்கள்

பாடியது.

வெண்பா

பாலருக்குமேலோர்பகர்ந்திட்டவாகடத் தை
சாலவேவயச்சிட்டுச்சாற்றினன்-ஞால ம்
புகழுங்காளத்திப்புரிவாழயோத் தி
இசமீதெல்லோருக்குமென் று

க்ருஷ்ணகிரி-பெரியண்ணனவர்கள் குமாரராகிய,

## திருவேங்கடஸ்வாமி

பண்டிதரவர்கள் பாடியது.

### ஆசிரியப்பா.

கங்கையுங் குளிர்ந்த-கலாநிதிசடிலம்... ......*
பொங்கம் பகதிரய-புகழுபயரங்கன் ........*
திருவருட்பூரிதஞ்-செய்மழை தவழ்நீள் ... *
விரிகொவி முடிதட-மிளிரும்பொதிகையின் *
வாழ்சூக்மப்பிரபை-வளர்கருணாநிதி.........*
சேழகத்தியமுனி-இளத்திய நன்னூற் ... ...*
சிபிட்டகசிகிற்சை-தேவாமிர்தத்தை...... ...*
சீபட்சமிந்நாளிற்-றராதலமீது...... ...... ..*
நன்குறக்கடைந்து- நவநீதமாக ...... ......*
வின்புறதிரட்டி-யியாவர்க்குமெளிதாய் ......*
பெரும்புகழ்படைத்த-பிடகர்மேதாவியர் .. *
சரும்பிரசமெனக்-கருத்துட்களிப்ப....... *
வங்கரதலத்தி-னளித்தனனொளிற் ... .......*
றங்குமிவ்வுலகிற்றயங்கு விலக்கிய... ........*
பஞ்சலட்சணத்தையும்-பரிந்துட்கொண்ட *
விஞ்சையன்பின்னர்-வேட்கைமாலையு ......*
மூலாமடலென்னு-மூயர்பிரபந்தத்தையு ..*
மிலாவண்ணியமா-யியற்றியச்சிட்டோன் ...*
றொண்டமண்டலந்-துதிதமிழ்நாட்டிற் ......*
கண்டல்சூழ்வல்லக்-காளத்திநகரான்...... ...*
பெருமைப் பொருந்திப்-பிரபலமோங்குந் *
தனாபுகழயோத்தி-தாசநாவலனே... ......*

## புரசைபாக்கம்சாசாலமோனவர்கள்

பாடியகழிநெடில்விருத்தம்.

உலகமதெளிதிற் பாலகர்தமக்கு வுடலினின்றெழும்பிடும் பிணியை
யொழுங்கதாயறிந்து வெளழ்தமற்றதுகளுணர்வுகளாகக்கையாடக்
கலகமில்லாமன்முனிவர்கள்சித்தர்க் கழறியபாலவாகடத்து ட்
காட்டியக்குறிகள்விதவிதமுளவைக்கசடறவணிபெறசேர்த்தி ட்
டிலகவேபாலவாகடத்திரட்டென் றெழிற்பெறநாமமுந்தரித் தே
யிகத்துபகாரமாயிடமுடித்தானினி மொழியுளமதுகனிந் தே
குலம்புகழ்வீராஸ்வாமிதன்மரபிற்குஞ்சரம்போன்முளைத்தெழுந்த
கோஷினயோத்திதாசனன்றும குணநிதியுயர்புலவோ னே

திருவேங்கடசாமி பண்டிதரவர்கள் மாணாக்கரிலொருவராகிய

திருவெவ்வளூர்

## பெ. ஆதியப்பனவர்கள் பாடியது.

ஆசிரியவிருத்தம்.

சீர்கொண்ட வாயுள் வேதத்தி லொளிர் மெய்ஞ்ஞா ண
திபதேசோமயத்தி ... ... ன்
செப்பரியவத்துவித துவிதசாந்தத்தினி ... ற்
திகழ்ஜோதி யமலவிதித ... ம்
பேர்கொண்ட தென்பொதிகை மலையகத்தியமுனி ப்
பிரமமுனி தேரையனு ... ... ம்
பிசகிலாதன்வந்திரியும் புலிப்பாணியு .. ம்
பேரானந்திசொன் ... ... ன
வார்கொண்டபாலசாஸ்திர மூலவகளாய்ந்தறி ... ல்
வைத்தியர்களின் முறைமையு ... ம்
மாதர் கர்ப்பக்கோ ளிலக்கணத் தொடுபா ல
வாகடதிரட்டென்பதா ... ய்
சார்கொண்ட வல்லக்காளத்திநகர்வாழ்திபு ... ண
கவிராஜ கோளரியெனு ... ம்
கௌரவ வயோத்தி தாசன்செய்து வச்சினி ற்
கனிவோடியற்றினு ... னே

செங்கற்பட்டு

## முத்தமிழ்ப் புலமைமுதுவரந் தாசரவர்கள்

பாடியநேரிசை வெண்பா.

பன்னூலு மாய்ந்து பழுத்த மனமுடை ய
நன்னூல னயோத்தி நாவலன் - முன்னூலை ப்
பாலர்க்கிரங்யே பண்பாய் திரட்டினா ன்
ஞாலக்கமுதமென நாடு *
காட்டுஞ்சுரமாந்தக் கானலினும் பல்பிணிக ள்
வாட்டும்படிபாலர் மாய்வரோ - நாட்டுகு வி
லெந்நூலு மாய்ந்துணர்ந்த வேந்தலயோத்தித்திரட்டா
மிந்நூலந்நாளிருக்கினே *

## திருமயிலை சோசிய

# முத்திருளப்பண்டிதரவர்கள்

### பாடிய நேரிசை யாசிரியப்பா.

கடல்சூழுலகிற் கதித்துவாழ் மாந்தர் க்
இடர்பலநீங்கி யின்புற்றிட வே
பலமுறைவருங்குறைபாரார்தமக்கு ச்
சிலநாளாகத்தேடியநூல்களி ற்
திருவருள்சிறந்த தெட்சணப்பொதி கை
குறுமுனியவராற்கூறியபா ல
வாகடமதனின் மணிசிலசெய்யு ள
ளேகமாங்குறைவை நிதியுடைச்சித்தரி ற்
றேனையருளியசீர்வாகடத்தினு ந்
தாரினின்மிகுபுகழ்தன்வந்திரியா ர்
செப்பியநூலிற்சிலபுலிப்பா ணி
யொப்பியநூலிலுளாத்தபலவினு ஞ்
சொற்பலதிருத்திதொகைமுன்னுள தா
யற்புதமாகவியாவர்க்கும்பா ல
வாகடதிரட்டெனவருபெயர்தந் து
பாகமாய்செய்துபதித்தனனச்சி ற்
பண்டையோருரைத்தபழமொழிதவிரா ன்
மண்டலந்தனில்சன்மார்க்கசகா ய
னுத்தமசிலாக்கிய னுயர்மதியூ கி
சித்தர்நூலவையிற்றேர்ந்தமாநிபுண ன்
றத்வபாராயணஞ்சகலமுமாய்ந் து
முத்தசிவயோகவுறுதியைகைவிடா ன்
றூலதேகத்தின்சூட்சமதறிந் து
ஞாலத்தின்மிக்கநல்லருதிதா ன
ஞானமபுராணமறுபத்துநாற்க லை
யேகமாமதினின்புறுகிபா லா
லிஷ்டையில்வலவனிதியுடைபூப ன்
றுஷ்டனாவன்கவிசொற்கொண்டடிப்போ ன்
ரெண்டமண்டலஞ்சுகத்தவழிக வே
வண்டமிழ்பாவும்வல்லக்காளத் தி
நகர்வாழ்தாசநாவலனையோத் தி
பகரொணுகீர்த்திப்பாஸ்கரனஞ் றே.

ம-ா-ா-ஸ்ரீ-ஐயா அவர்கட்கு சிரஞ்சாய்ந்து தெண்டனிட்டெழுதியது தாங்கள் திரட்டிய பாலவாகடத்திற் கெவர்மனந்தான் களிக்காமலிருக்கும் பலருந்தேடி சோர்வடையாம லியாவரும் நுண்ணிய பொருள்களை யெளிதினுணரும்படிக்கு நோயின்குணமுந்தக்க வௌழ்தமு மிணைக்கப்பட்டப் படியால் என்பன மிகவுஞ் ளிக்கின்ற தவ்வாறே யாவருமிப் பாலவாகடத்திரட்டை உச்சிமேல்வைத்து மெய்ச்சுவார்க ளென்பதற்கு சந்தேகமிராது.

சாலமோனவர்கண் மாணாக்கரி லொருவராகிய,

எழுமூர்;

## மூ. சின்னையபண்டிதரவர்கள்

பாடிய ஆசிரிய விருத்தம்.

அகிலவானங்களுக்காதியுமநாதியா யருளொடு நிறைந்த பொருளை
யநுதினமுமறவாத பரிசுத்த துறவரிவ் வளக்கருக்குபயோகமா ய்
மகிமையொடுபாலவாகட நூலதைத்ததன் மயக்கறக்கூடாமையான்
மங்காமலெந்நாளு மபிவிர்த்தியாகவே மனதினிற் கனிவுகூர்ந் த
திகழுநற்செந்தமிழை வடியிட்ட பன்னூல்கடேடியாராய்ந் தெய் [த்துச்
செப்பரிய வாலர்பிணியொடுகுணமருந்தாதி சேர்த்தொருக் கோ [வையாக
வகுத்தச்சினிற்பதித் தான்வில்லக்காளத்தி வளமைநகர் வாழ் புல [மையான்
வண்மையோடயோத்திதாச பண்டிதனிந்தமண்டலம்புகழவன்றே.

## வி. அயோத்திதாச கவிராஜ

பண்டிதரவர்கண்மாணாக்கரி லொருவராகிய,

## அ. வே. வைரக்கண்வேலாயுதனவர்கள்

பாடிய இரட்டையாசிரிய விருத்தம்.

சீர்கொண்டவமுதமுதன் மும்மண்டலத்தையு ஞ்
சிருஷ்டித்துதாரணமிடு ந்
தேஜோமயாநந்த பரபிரம் சைதந்நி ய
திரியம்பகப்பொருளெனு ஞ்

சித்திரனுட்சத்தாய் விளங்கு கேசவன் முனை ட்
க்ஷீராப்தியைக் கடைந் து
தேவருக் கமிழ்தளித் தேனையர்க் கீய்ந்திலா த்
தீதறச்சேண்டொடுமுடி ப்

பார்கொண்ட பொதிகைவளர் கும்பமுனி நந்திகே ஸ்
பார்போகர் தேறையர் புலி ப்
பாணிதன் வந்திரி பிரமமுனி யிவர்கள்சொ ற்
பாலவாகட சுரபிவே ட்
பாற்பிரவாகத்தைத் தசுமபநேகத்தி ற்
படர்த்திவைத்தனரதையிரா ட்
பலரும்மெளிதினிற் கூட்டுணக் கருதியைம்மத ப்
பகடதனை காக்கவல்ல த்

தார்சொண்டவங்குசத் துணர்வென்று மத்தினை ற்
ருக்கிகுற்றங்களைந் து
தண்ணமையும் வெண்ணெயாகத்திரட்டித்த ந்
தனன்மயிர்க்குச் சிட்டிட த்
தாலதாரூறல்பெருகத் தராதலஷீ து
சகலபேருக் குதவியா ய்
சந்திரோதயக்குவளை யனையமுகமாக்கினை ன்
ருரித்திரியம் போக்கினை ன்

பேர்கொண்ட வல்லக்காளத்தி பெனுமூரினை ன்
பெருகு வித்தையை வளர்க்க ப்
பிறங்கு கலைசாரினனலங்கலணி மார்பின ன்
பேழ்பெறுமயோத்திதாச ன்
பேருலகி லுளநரர்க் கிடுகொடை யினற்புக ழை
பேசநெடு வாதிசேட ன்
பின்வாங்கு வானெனிற் பெருமை யிவ்வளவென் று
பேதையான் புகல்வதிலை யே

இதுவுமது.

வாகடசாஸ்திர நாடிமுறை மற்றுங்கருவிகரணுதி........................... *
பாகமிதஞ்சேர் * பரிசனையும் பருவமருந்தின்பதமுறையும்........................*
வேகமருந்தின் சீர்முறையும் விடஞ்சேர்மருந்து மிகதள்ளி................... *
மேகம்போல பொழியவலோன் வித்தார பிடகனெனலாமே............ (ரு)

* பரிசனே - பழக்கம், வேகமுடையவும் விஷமருந்துந் தள்ளிசெய்யெ ன்பது கருத்து.

வேறு.

குருவினை நினைந்துக்கொண்டு குணங்கண்டுப்பிணியைத்தீர்க்க... ................*
மருவிய வியாதிகொண்டோன் வாகுடனுடிக்கண்டால்....................................*
திருவினைவென்றசோதி திருமேநாவிலொன்று..............................................*
வெருவிடா மருந்துதன்னுல் மீளுமுக்கூறுந்தானே...............................(சு)

பாயிரமுழுதுநூலின் பாட்டியலறிந்துக்கொண்டு...... .............................. *
மாப்கிறமனிதர்க்கன்பாய் மருந்துட னுடிப்பார்க்க.................................... *
* ஆயுருவேதந்தன்னே யருள்கணுல்வடநூல்பார்த்து.......................................*
போயறுபொதிகைவாழும் புகழ்முனியருள்செய்தாரே............................ (எ)

* ஆயுருவேதம் - வைத்தியசாஸ்திரம்

---

## வைத்தியருக்கின்னவஸ்திரமாகா - இன்னவஸ்திரம் உடுக்கவெனக் கூறுகின்றார்

---

வேறு.

காங்குசிவப்புபலபுள்ளிக் கமழும்பட்டுமரவுரிகள்............................................*
நீங்குமிவைகள் துகிலுடுக்க நேரேயாகாவைத்தியருக்.................................... *
கோங்கும் வெள்ளைத்துகிலுடுத்தி யுண்மைநினைந்துமருந்துசெயில்............. *
பாங்குபெறவேபிணிதீரும் பாரிற்பாரும்பண்டிதரே.................................. (அ)

## பரிமளவர்க்கம் அணிதலும் கிரியையுங் கூறுகின்றார்

வேறு.

சந்தனம்புனுகுபிச்சு சடத்தினிற்பூசி பின்னர்......................*
* அந்தணர்கிரியைபோல † ஆசிரியனடிவணங்கி.............................*
சிந்தையிற்குருவைவாழ்த்தி சிவபதம்நெஞ்சிலுன்னில்.........................*
வந்ததோர் பிணிகள்தீரும் வைத்தியன் மறையென்றோதே......................(க)

* அந்தணர் - முனிவர்.

† ஆசிரியன் - குரு.

(குறள்.)

அந்தணரென்போரறவோர்மற்றெவ்வுயிர்க்குஞ்...... *
செந்தண்மை பூண்டொழுகலான் ...................... *

ஆகையின் - அந்தணர் - பார்ப்பாரெனக் கொள்ளாமல் - எவ்வுயிருந் தன்னுயிர்போல் - நினைக்கும் புண்ணிய புருஷோத்தமரெனக்கொள்க.

---

## நான்குவிதபண்டிதர்க்கும் எச்சரிக்கை கூறுகின்றார்

நிலமண்டில் - ஆசிரியப்பா.

சாத்திரமறிகிலார் சதுர்விதபண்டிதர்...............................*
வார்த்தையின்பலத்தினால் மருந்தையீந்திடில்...........................*
கோத்திரங்கிளையொடு குலங்கள்வேரற..................................*
வீழ்த்திடநரகினில் வீழ்வதுதிண்ணமே.................................. (ய)

இதுவுமது.

எண்சீர்கழிநெடில் விருத்தம்.

அச்சமறவைத்தியரோநோயிலுள்ள அசாத்திய சாத்தியமுமிரண்டறிந்து, பக்ஷமுறகுறிகுணமெய்ப்பரிசுபார்த்து பரிகாரமாட்மருந்து பகிரீராகில், சச்சமறுங்கிளைகுலங்கள் வேரோடற்றுத் தரணிதனில்வெகுபாவந் தலைமேற்கொண்டு, இச்சையற எரிநரகில்வீழ்வதல்லால் இகபரமொன்றில்லாமலேங்குவீரோ...................................................... (யக)

## பிணிதீர்த்தவைத்தியர்க்கு பணங்கொடாதலோபிகட் கின்னலையென்று கூறுகின்றார்

---

வஞ்சமறவுமன்றுபிணியாளர்தங்கள் மகவதினும்பதின்மடங்கு மருந்து பார்த்து, நெஞ்சுதனில் நோயாளிப்படிநிதானம் நிறுத்துமந்த வைத்தியர்க்கு நிதிகொடாமல், பஞ்சைமொழிப் பகருமரும் பாவியோனைப் பாழ்நரகில்வீழ் நமன்பாசத்தாலே, அஞ்சவிழுத் தடித்துதைத்து ஆழ்த்துவானொன் றகத்தியரு மிந்நூலையருள்செய்தாரோ........................................ (௰௨)

---

## இன்னின்னவனுக்குமருந்து பலிக்காதெனக்கூறுகின்றார்

---

அறுசீர் கழிநெடில் விருத்தம்

கன்னெஞ்சன் வழிபறிப்போன் கண்டதன் பிறகேசெல்வோன்.......... *
வன்னெடுங்கோபமுள்ளோன் மாதர்மேலாசையுள்ளோன்..................... *
பொன்னையேபுதைத்துவைத்த * பிடகர்க்குப்பொய்யைச்சொல்வோன்...... *
இன்னெடுங் கொடியபாவிக்கிடுமருந்தேருதன்றே..... ....................(௰௩)

* பிடகர் - வைத்தியர்

---

## இன்னின்னவர்க்கு பிணிதீராதெனக் கூறுகின்றார்

---

பஞ்சமாபாதகர்க்கும் பழிதனை நினைப்பவர்க்கும்............................ *
கெஞ்சியேமருந்துசெய்து கேடுகள் நினைப்பவர்க்கும்........................ *
அஞ்சிடா வஞ்சகர்க்கும் அநியாயக்காரருக்கும்.................................. *
நஞ்சினுங் கொடியவர்க்கும் நாடியபிணிதீராதே ........................ (௰௪)

---

## இன்னின்னவர்க்கு வைத்தியஞ்செய்யெனக் கூறுகின்றார்

---

தரித்திரப்பட்டபேர்க்குந் தருமத்தையடைந்தபேர்க்கும்..................... *
கருத்துடன்பிணிதிரொன் றுச்சபடன்றி மெய்சொல்வோர்க்கும்................ *
பெருத்திடுந் தனங்கொடுத்துப் பிணிதீருமென்றபேர்க்கும்.................... *
உருக்கடியாயுள்ளும்பேர்க்கும் உடன்வைத்தியஞ்செய்வீரோ...................(௰௫)

இதுவுமது.

வேதியவேடத்தோர்க்கும் விளங்கிய குருக்கள்மார்க்கும்………………… *
நீதியாயுள்ளபேர்க்கும் நெறிமுறை யுள்ளபேர்க்கும்……………………… *
சாதியாயுள்ளபேர்க்குந் தவநெறியுள்ளபேர்க்கும்…………………… *
பேதியாமல் மருந்து செய்திடப் பிணிபோமென்றார்………………… (௰௬)

———

## ஔழ்தஞ்செய்யவும் உண்ணவும் இன்னின்னக்கிழமை யாகும் இன்னின்னக்கிழமையாகாதெனக் கூறுகின்றார்

———

காரியும்புதனுந்திங்கட் கருதிடில் மருந்துதீதாம்……………………… *
சீரியவெள்ளிநோயாம் செவ்வாய் வியாழம்பிணிதீரும்…………………… *
பாரினிலுள்ளபேர்க்குப் பரிகாரஞ்செப்யவேண்டில்……………………… *
ஆரியனருளினாலே அருக்கனில் மருந்துசெய்யே…………………… (௰௭)

நாளுங்கிழமையும் நவிந்தோர்க்கில்லை

இதுவுமது.

வேறு.

ஆதித்தனுதித்த மூன்றேமுக்கால் அறிந்துபிணிக்குமருந்துசெட்வீர்………*
ஆதித்தனுதித்த மூன்றேமுக்கால் அறிந்துபிணிக்கு மருந்துகொள்வீர்……… *
ஆதித்தகிரணமிருபோதும் அறிந்தவுடனே மருந்துசெப்வீர்…………………*
ஆதித்தன்சாக்ஷியாய் பிணிதீரும் * அயனம் † விருத்தமும் வாராதே… (௰௮)

* அயனம் - பிறப்பு

† விருத்தம் - மூப்பு

# பஞ்சபூதிய சக்கரம்

| பஞ்சபூதம். | இடம். | நிறம். | வடிவு. | பஞ்சதானம். | பஞ்சபட்சி. | உயிரெழுத்து. | பஞ்சதேவர். | பஞ்சாட்சரம். | * பீசம். | சுவை. | சுவாசதொகை. | நாழிகை. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பிரிதிவி | கால் | பொன்மை | நாற்சதுரம் | பாலன் | வல்லூறு | அ | பிரமா | ந | சு | தித்திப்பு | ௰சு - விரல் நீளவோட்டம் | கஉ |
| அப்பு | வயிறு | வெண்மை | எட்டாம்பிறை | குமரன் | ஆந்தை | இ | விட்ணு | ம | ௰ | துவர்ப்பு | ௰உ - விரல்நீளவோட்டம் | கவ |
| தேயு | மார்பு | சிவப்பு | முக்கோணம் | அரசன் | காகம் | உ | உருத்திரன் | சி | ௰உ / ௰சு | உவர்ப்பு | அ - விரல்நீளவோட்டம் | க |
| வாயு | கழுத்து | நீலம் | அறுகோணம் | மூப்பு | கோழி | எ | மயேச்சுரன் | வ | உ | புளிப்பு | ச - விரல்நீளவோட்டம் | ஆ |
| ஆகாயம் | தலை | படிகம் | வட்டம் | மரணம் | மயில் | ஒ | சதாசிவன் | ய | க | கைப்பு | க - விரல்நீளவோட்டம் | உ |

* பீசம் - இதழ்

இங்ஙனஞ்சொன்ன பூதிய சக்கரத்துள்ளப்பிரகாரம் பஞ்சபூத தியக்கம் ஆகநாழிகை ஐந்துக்கு உபயமாகிய அபரபட்சம் பூர்வபட்சம் வாரமேழிற்கும் இவைமாறிமாறிவருவதலான் மானிடதேகத்தில (௭௰௨௲) நாடியிற்பிரதானநாடி (௰) அவற்றுட் பிரதானநாடி (௩) நாழிகையொன்றுக்கு (௩௱௬௰) சுவாசமும் நாளொன்றுக்கு (௨௰௧௲௬௱) சுவாசமும் இரேசகபூரக கும்பகமாயந்நாடிமூன்றும் இடகலை பிங்கலை சுழிமுனை யாகிய வாத பித்த சேஷ்ம மென்பவைகளே அவையாவன.

இடகலை (௰௬) அங்குலப்பிரமாண மோடும் எழுத்திலிரட்டை நிலந் தெற்கு மேற்கு பெண் சந்திரன் அமுதம் திரராசி கறுப்பு அதேவாதநாடி மாத்திரை (௧) மலத்திலடங்கும்.

பிங்கலை (௰௨) அங்குலப்பிரமாண மோடும் எழுத்திலொற்றை நிலங் கிழக்கு வடக்கு ஆண் சூரியன் சரராசி வெண்மை அதேபித்தநாடி மாத்திரை (௨) சலத்திலடங்கும்.

சுழிமுனை இரண்டுநாசியினும் உபயமாகப் பகுந்தோடும் அதற்கு இடம் மத்தி அக்கினி அலியெனப்படும் உபயராசி சிவப்பு அதேசேஷ்மநாடி மாத்திரை (வ) விந்துவிலடங்கும் அன்றியுஞ் சரமோடுந்திசை பூரணம் சரமோடாதிசை சூந்யம் பாழென்றும்பெயரா மிவ்விரண்டினுக்கு மிடத்திற்குரிய காரியமின்னவையென்றும் வலத்திற்குரியகாரியமின்னவையென்றும் பஞ்சபூதத் தியக்கமறிந்து சரத்தின் பிரகாஞ்செய்யின் சகலகாரியமும் நன்ருய் பலிக்குமென்றும் அருடத்திற்காணுக்காணும் பெண்ணுக்குப்பெண்ணும்வந்து கேட்கின் ஆணுக்குச்சூரியன்றிசை பின்னுங் கிழமென்றும் பெண்ணுக்குச் சந்திரன்றிசை முன்னுமேலெனவு மந்தந்தபாகம் நன்றென்றும் மாறிவரிற் றீதென்றும் பெரியோர்சொல்வார்கள் இச்சரத்தின்விரிவை சரநூலிற்காண்க இஃதிங்ஙனம் நிற்க பண்டிதாளுக்கு கட், சாராயம், அபீர், கஞ்சா, லகரி, கோபம், சோம்பல், மிகுநித்திரை, அஞ்க்கா, றவா, கடுஞ்சொல், துர்த்தசெய்கை, இவைகட்கிஞ்கிற்றுமகா மேலும் உறுப்பிற் குறைவின்றி. குலம், குணம், சீர், ஒழுக்கம், மேன்மை, சுலட்சணமும் நிறைந்து ஸ்நானம் வெண்வஸ்திரம் வெண்ணகை வெண்பூச்சு வெண்மலரணிந்து திரிகாலமும் தெய்வதோத்திரமும் சமயநூல் புறநூலிலக்கணமும் ஆயுர்வேத பயிற்சியிற்றெளிவும் எண்வகைச்குற்றமில்லாமல் சத்வகுணமும் ஷி ஸ்ரீ புருஷாளே தாய்தந்தை போற்பாவிக்கும் (௩௰) (௪௰) (௫௰) (௬௰) வயதுள்ளயாவராணுலுஞ்சிறந்த பண்டிதரொன்றுலகம்புகழுமென்று மேலோராகிய புண்ய புருஷோத்தஞானிகள் சொல்லுவார்கள்.

பண்டிதாளிலக்கணமுற்றிற்று.

அகத்தியர் திருவடிகளே சரணம்.

உ

# கர்ப்பக்கோளிலக்கணம்.

---

## பெண்கள் தோயாப்பூபுக்கு

## ஔஷதம்

---

எண்சீராசிரிய விருத்தம்.

மீறுமல் * தூரமிலாபெண்களுக்கு வேலியிலைப்பரித்திச்சா றருந்தநீரும்; கூறுகதூதுளையுங்குப்பைமேனிக் கொட்டைகொட்டை யாய்க்கிடக்குங் குளத்துப்பாசி; ஏறுமற்புல்லைச்சாயளவுகூட்டி யிதனுடனே சர்க்கரையுங் கலந்துக்கொண்டு; பேறுகமூன் றுநாளருந்தும்போ தபிறப்படுமே செங் † குருதிசிவப்பதாமே.............................. (க)

* தூரமிலா - வீட்டுக்குதூரமாக - தண்ணீர் துறையேறு - மாதமுழுக்கில்லா - மாதவிடையாகாவெனக்கொள்க.

† குருதி - இரத்தம்.

---

## ஆண்பிள்ளைகள் பிந்து தடைப்பட்டால்

## ஔஷதம்

---

தாமென்றஆண்கட்டுத்தடையாய்ப்போனால்சங்கம்வேர் நீர்முள்ளிவிரையுங்கூட்டிப், போமென்ற * சோகிதனைச் சுட்டசாம்பல் புகலாலம் விழுதுடனே * முத்தக்காச, ஆமென்ற ஆவின்பால் தன்னாலாட்டி யதனுடனேசர்க்கரையுங்கலந்துகொள்ள, ஏமென்றஇந்திரியங் கலிதமாகும்இஷ்டமுடனநுபோகமிசைந்துபண்ணே..............................(உ)

* சோகி - பலகறை.

† முத்தக்காசு - கோரைக்கிழங்கு.

## மலட்டுச்சின்னவிகற்பங் கூறுகின்றார்.

---

இசைந்ததொருபெண்மலடு எங்குமில்லை எதனாலேமலடான சேதி கேளு, அசைந்திருக்கும்பேயாலும்பித்தத்தாலும் அடிவயிறுநோந்துவரும் வாயுவாலும், பிசைந்தசர்ப்பப்புழுவாலும் கிரகத்தாலும்பிணியாலுமேக * வைசூரியாலும், துசங்கெட்டக் † கலவியினாற்பூவொதுங்கித்துலங்காமற் பிள்ளையில்லைச் சொல்லக் கேளே.........................................................(௩)

* வைசூரி - அம்மை.

† கலவி - புணர்ச்சி.

---

## கர்ப்பத்துக்கு ஔஷதம்

---

கேளுநீ கர்ப்பந்தான்வாழ்வதற்குக் கெடியானதோர் * நாணுங்கள்ளியின்வேர், ஆளவே யதை யரைத்து புன்னைக்காய்போல் ஆவெண்ணெய்ப்பாக்களவு கலந்துக்கொண்டு, நீளவே குளித்தமுதல் மூன்றுநாளும் நினைவாகவேயருந்தகர்ப்பமுண்டாம், கோளவே பத்தியந்தான் புளி புகையும் உப்புங் கொள்ளாமல் ஆவின்பாற்சோறுமுண்ணே...........................................(௪)

* நாணுங்கள்ளி - இலைக்கள்ளி.

### கர்ப்பத்துக்கு வேறுமருந்து

உண்ணவேவேப்பலகுசீந்தில் தண்டு உயர்முத்தக்காசுடனேயொக்கக்கூட்டி, கண்ணவேசாறுரியும் நெய்புழக்குங் கலந்ததனைக்கொதிப்பித்துக் காலைமாலை, திண்ணவே குளித்தமுதல் மூன்றுநாளுந் திட்மாக ஆருந்திவரசர்ப்பமுண்டாம், எண்ணவே சீந்தில்வேர்நாணுங்கள்ளி இதமாகவேர் அரைத்து பாலில் தாக்கே...........................................................(௫)

### இதுவுமது.

தாக்குவாய்ப்பெருங்காயம் இந்துப்போடு தவறாமலேபுளியம்புறணிகூட்டி, ஆக்கமுடன்சற்றாழைவேரின்சாற்றால் அரைத்துநீயுருட்டிடுவாய்புன்னைக்காய்போல், ஏற்சவேகுளித்தமுதல் மூன்றுநாளும்இதமாகவேயருநதகர்ப்பமுண்டாம், கேட்கவே வாயு அறும்பூச்சிவீழுங் கெடியானதோஷவிஷக்கிரகம்போமே,.......................................................(௬)

### கர்ப்பத்திற்குவேறுமருந்து

விஷப்பாலை வெட்பாலைவாலுழுவைகடுக்காய் வேண்டுநெல்லித்தாம் றிக்காய்க்கொன்றைப்புட்டை, நிசப்பானகொடிவேலி இந்துசுக்கு நிறையாகவகை மூன்றுகழஞ்சுகூட்டி, அசப்பானபிரமிச்சாறுவின் பாலும்அப்பனேவகைக்கு இருநாழிகூட்டி, பிசகாமல் முன்மருந்துசாறணைத்து பின்னையுமே ஆவினெய் நாழிகூட்டே ..................................................................... (எ)

### இதுவுமது

நாழிநெய்யுடன் மருந்தெல்லாங்கூட்டி நன்றாகச்சோதிப்பித்து மெழுகுபோல, தாழியாங்கலசத்துள் வடித்துக்கொண்டு தவறாமல் முழுக்குவந்தமுன்றுநாளும், ஊழியாம் இருபோது கரண்டியுண்ண உத்தமம் கர்ப்பமுண்டாம் உறுதியாகும், காளியெனுஞ் சாமுண்டிப்பிசாசுநோய்கட் கடந்தோடும் பத்தியம் நீகண்டுக்கொள்ளே ..................................................................... (அ)

இஃது

## வேறு

# கர்ப்பக்கோள்

ெ௲

பாரப்பாபெண்மலடாங்கர்ப்பக்கோளின் பக்குவத்தைச்சொல்லுகிறேன்பண்பாய்க்கேளு, ஆரப்பா ஆண்மலடேயாகுமல்லால் அப்பனேபெண்மலடு ஆருமில்லை, நேரப்பா தவமிருந்தும் பொருளையீந்தும் நேராக இல்லையதுசூலையாலே, வேரப்பாதேவதையோடேழாங்கர்ப்பம்விரித்துநன்றாய்ப்புகலுகிறேன்விரும்பிக்கேளே ..................................................................... (க)

## கருக்குழியின் ஆறுவியாதியுங்கூறுகின்றார்

புகலுகிறேன்முதல் தரந்தான்மூலடியென்றப் பூவைக்குகருக்குழிதான்விளக்கமற்று, அகலுகிறேன் அகலாமல் பாசம்பற்றி அடைத்திருந்தால்விந்தங்கே யணுகாதப்பா, நிகலுகிறேன்மறுதரந்தான் கருக்குழியில்வாய்பு நிறைந்திருந்தால்விந்தங்கேநேராதப்பா, தகலுகிறேன் பின்னுமங்குகருக்குழியில்மூடி * தசைவளர்ந்தால் விந்தங்கேதான்செல்லாதே ..................................................................... (உ)

* தசை. சதை - இது நிலைமாறுதல்மொழி

இதுவுமது

செல்லாதுநாலாவதப்பாகேளு * சிறீயவட்கருக்குழியில் புழுதான் சேரில், செல்லாது ஐந்தாவதப்பாகேளுசெறிந்தங்கேகருக்குழியில் † சோரிக் கட்டி, செல்லாது ஆருவதப்பாகேளு செப்புகிறேன்கருக்குழிதான் ‡ மதர்த் திருந்தால், செல்லாது இவை ஆறுவியாதியாகுஞ் சென்றபின் விரோதமே மாகுங்காணே.......................................(௩)

* சிறீ - பெண்

† சோரி - இரத்தம்

‡ மதர்த்தல் - செழித்தலின்கொழுமை

---

கருக்குழி விளக்கமற்று பாசம்பற்றியமுதல் வியாதியின் குணமும்

## அதற்கு ஔழ்தமுங்கூறுகின்றார்

காணப்பாஇவைவிபரம் விரித்துச்சொல்வோங் காரிகைக்குப்புணர்வே ளைத்தலைதானேந்தால், கோணப்பாகருக்குழியிற் பாசம்பற்றிக் கொண்டுதெ ன்று தானதற்கு சாந்திசெய்வாய், பூணப்பாசோழியுடப்பித்துதானும் புசமா ன பரித்திவினைபருப்போடொக்க, தோணப்பா அவள்குளித்த அன் றுத்தொட் டுச் சொல்லுகிறேன்மூன் றுநாளாதுக்கேளே.......................................(௪)

இதுவுமது

கருக்குழியின் வாயுவினலாய இரண்டாம் வியாதியின்குணமும்

## அதற்கு ஔழ்தமுங்கூறுகின்றார்

கேளப்பா இம்மருந்தை யோனிக்குள் தேய்த்துக் கெடியானபுருஷனை யும் புணரச்சொல்லி, நாளப்பா இப்படியே மூன்றுநாட்செய் நலமானபாச மற்றுக் கர்ப்பமுண்டாம், ஆளப்பாபுணர்வேளை யுடம்புநொந்தால் அப்பனே வாயுநிறைந்திருக்குதென்று, வாளப்பாபெருங்காயம்நல்லெண்ணெய்வார்த்து மத்தித்து யோனிக்குட்பூசச்சொல்லே.......................................(௫)

இதுவுமது

கருக்குழியில் சதைவளர்ந்த மூன்றாம்வியாதின்குணமும்

## அதற்கு ஔழ்தமுங்கூறுகின்றார்

பூசியேமூன்றுநாள்புணர்ந்தானாகிற் புதல்வருண்டுமூன்றாவதப்பாகே ளு, கூசியேபுணர்வேளை யவட்குதானும் குறையாமல் நெஞ்சுவலி யிடித்துதா னால், தாசியேயோனியெல்லாஞ் சுருங்கிக்கொள்ளுந் தசைவளர்ந்திருக்குதென

திப்பிலி * பூரம், மாசியேகோழியுடப் பித்துச்சேர்த்து வாட்டியேயோனிக்கு ள் தடவச்சொல்லே......................................................(ச)

* பூரம் ஆலாத்திகர்ப்பூரம்

இதுவுமது

கருக்குழியிற் புழுசேர்ந்த நாலாம் வியாதியின் குணமும்

## அதற்கு ஔழ்தமுங்கூறுகின்ருர்

நடவியேமூன்றுநாட் புணர்ந்தானுகில் தப்பாது பிள்ளையுண்டாம்நா லாங்காட்சி, அடவியேபுணர்வேளை முதுகு நொந்தால் அவட்கங்கே * கிரு மிநிறைந்திருக்குமென்று, விடவியே இந்துப்பு அரிதாரம் † காயம் வெந்நீரில் மூன்றுபணந்தூக்கியாட்டி, படவியேமூன்றுதினம் யோனிக்குள் தேய்த்துப் ப டுத்திடவே பிள்ளையுண்டாம் பண்புதானே........................................ (எ)

* கிருமி - புழு
† காயம் - பெருங்காயம்.

---

கருக்குழியிவிரத்தமூடிய ஐந்தாம்வியாதியின்குணமும்

## அதற்கு ஔழ்தமுங்கூறுகின்ருர்

தானென்றஐந்தாவதப்பாகேளு தமுவயிலே கெண்டைக்கால்வலித்து தானல், வானென்ற சோரியவட் கருக்குழியைமூடி மறைத்திருக்கு மென்றறி ந்துமைந்தாநீயும், பானென்றகடுக்காயும் * பஞ்சதாளா † பச்சைபூரம் ‡ புழு கும் ஆட்டிவாங்கி, மானென்ற அவள்குளித்த மூன்றுநாளும் மாது உண்ண உ ள்ளுக்குக் கொடுத்திடாயே................................................ (அ)

* பஞ்சதாளா சர்க்கரை
† பச்சைபூரம் பச்சைகர்ப்பூரம்
‡ புழுகு புனுகு,

இதுவுமது

யோனியிற்பூசுமருந்தும் கருக்குழிமதர்த்திருக்கும் ஆரும்வியாதியின் குணமும்

## அதற்கு ஔழ்தமும்

கொடுத்திடவேபிள்ளையுண்டாங் குறைதானில்லைக் கூறக்கேள் யோனி க்குமருந்துகூட்டு, நடுத்திடவேகுங்குமப்பூ அதிமதுரந்தானும் நற்சிரகத்துட னே மூன்றுங்கூட்டி, படுத்திடவே யோனிக்குட்பூசிக்கொண்டு பாயலில்புண ர்ந்திடவே கர்ப்பமுண்டாம், எடுத்திடவே ஆருவதப்பாகேளு ஏப்பமிட்டால் பு ணர்வேளைமதர்த்து தென்னே................................................ (கூ)

இதுவுமது

மதுர்த்துமேகொழுத்திருக்கு தென்றுதானும் வாகானசவர்க்காரங்கடுக்காய்ச்சாரம், ரதைத்திவைகட்சமனுக அரைத்துவாங்கித் தடவியேபுணர்ந்திடவு மூன்றுநாளும், பிதத்துமெத்தகர்ப்பமுண்டாம் ஏழாங்காட்சிப் பேயாலும் பிதிராலும் பிழைதானுண்டு, சுதத்துமினிசாந்தியொன்று சூக்ஷமாகச் சொல்லுகிறே னன்ருகக்கேளுகேளே.................................(ய)

---

## சாந்திகூறுகின்ருர்

கேளப்பா * சூதஇலே மாதளேயினிலேயுங் கெடியானகஸ்தூரிமஞ்சள் தானும், நாளப்பாஅரைத்து நன்ருய்ப்பாதமுதல்சிரசு நயமாகமேல் நோக்கி தடவச்சொல்லி; வேளப்பாபுருஷனேதா னுதிர்க்கசெய்து விபரமுடன்கீழ்நோக்கிப்பார்க்கச்சொல்லி, வாளப்பாமருந்தெல்லாந்தூற்றிவாரி மா இலேயிலெல்லாந்தான்வாங்கிக் கொள்ளே.................................(யக)

* சூதஇலே - மாஇலே

இதுவுமது

வாங்கியதோர்மருந்ததனை அவள் முன்காட்டிமைந்தனே வாசலிலே புதைத்துவைத்து, பாங்கிதனைக்குளிப்பிவித்துப்புடைவைநல்கிப் பண்பான அகிலுடனே சாம்பிராணிகந்தம், தேங்கியதோர் தேகமெல்லாம் புகைத்து நன்ருப் தினமொன்றுமூன்றுதரம்புகைத்தபோது, ஏங்கியதோர் தேவதையும் பூதப்பிரேதம் ஏவலொடுபிசாசுவகையெல்லாம்போமே............. (யஉ)

## மருந்து எடைபாகங்கூறுகின்ருர்

போகுமப்பா மருந்துவகை யோனிச்குட்பூச பூட்டுகிறேனெடைபாகம் பிரித்துக்கேளு, ஆகுமப்பா வகையொன்றுபண எடைதானென்று ஆண்பிள்ளேக் கவ்வண்ணமரைத்துப்பூசு, ஏகுமப்பா பெண்ணுக்குப்பண எடைதான் ஐந்து எடுபடுங்காண் வியாதிமுதல் விரோதமெல்லாம், பாகுமப்பா மலடில்லேப்பிள்ளேயுண்டாம் பாடினேன் கர்ப்பத்தின் கோளேத்தானே......... (யங)

## பத்தியங்கூறுகின்ருர்

தானென்றபத்தியஞ்சூக்ஷத்தில் சொல்வேன் சாதகமாய்க்கட்டியதோர் உப்புமாகும், வேனென்றப் புளியானா சியக்கொழுந்து மேலானநெல்லிக்காய் அரிநெல்லிக்காய், தேனென்ற வெள்ளாடுமுயல் ஆமையாகுந் திறமானவளர்க்குருவிகாடைமானும், பானென்றமறையாகும் சுருமீனுகும் டண்பானகெளிற்றுமீன்மிள்குமீர்மே.................................(யச)

### இதுவுமது

ஆமப்பா சர்க்கரை தேன் சிறுகீரையாகும் ஆவின்பால் நெய்யாகும் சிறுபயறுமாகும், ஆமப்பா தவரையோடு பொன்னுங்காணி அவரைக்காய் தூதுவேளை சமூலமாகும், ஆமப்பா தித்தித்ததெல்லாமாகும் ஆகாத கைப்பாகா புளிதுவர்ப்பாகா, ஆமப்பா பழவகைகளெல்லாமாகும் ஆத்தாட்குப்பூசித்த மதுவுமாமே... ........................................................ (௰௫)

### இதுவுமது

மதுவாகுங் குளிர்ந்தசலங் கிட்ட ஆகா மைந்தனே கொதிதண்ணீர் மிகவு நன்று, சதுவாகும் வேதமுறை கண்டுசொன்னேன் சத்தியந்தான் இந்தநூல் சார்ந்துநீபார், அதுவாகுமிதுவாகு மென்றேயெண்ணி அலைந்தலைந்து திரியாமல் அருளைநோக்கி, பொதுவாகும்நினைவுகொண்டு இருப்பாராகில் புத்திசித்தி முத்திமுதல் புனிதமாமே ........................................ (௰௬)

## கர்ப்பக்கோள் முற்றிற்று

ஆகூடியசெய்யுள் (௨௪)



உ

கடவுட்டுணை;

அகத்தியர் திருவடிகளேசரணம்.

இஃது

# பாலவாகட திரட்டு.

---

## கடவுள்வணக்கம்.

எண்சீராசிரியவிருத்தம்;

ஞானபராபரத்திற்பரமாய்நின்றுதிரிபுவனந் தாங்கியவையாளானென்றப், பேரானவஸ்துவெனும்விமலர்பாதம்பேணியேநமஸ்கரித்துப்பிரியமாக, நேரானபாலசாஸ் திரத்தைப் பாட நினைந்துமுன்னூல்விதித்தபடிநேர்மையோடு, சூரானமதி மாயைத் தொழிலைநீக்கிச் சொல்லுகிறேனுள்ளபடிச் சொல்லுறேனே........................................................................(க)

## சேஷார்த்தவீட்சியம்.

அறுசீராசிரியவிருத்தம்

வாலக்கிரகக்குணச்குறியு மருந்தும் மந்திரம் இயந்திரமும்.................... *
காலக்கழிப்பும் நீர்சொரிதல் கட்டுங்குளிசவேருடனே ........................ *
கோலச்குளிகை எண்ணெய்தனைக் குணத்தின்படியே சொல்வதற்கு......... *
சீலக்குருவாம் விநாயகனார் சிந்தித்தோர் சஞ்சீவியென்றே.................. (உ)

# நூல்

கர்ப்ப ஸ்ரீகட்கு (ய) மாதத்திற்கும் வருநோயும்

அதற்கு ஔஷதமுங்கூறுகின்றார்

## கலிவெண்பா

அதுவே உலா

க அத்திபுரித்தோனிடத்தில் அமர்ந்த உமையாளீன்...ற
சத்திக்கணபதியின் தாள்போற்........................றி எத்திசையுங்
உ கெர்ப்பமின்னாருக்குக் கிளைத்தபிணிதான்தீ.........ர
கற்பமதாங் கிரியைக் கண்டுரைப்பே.......................ன் உற்பத்தி

௩ திங்கள் முதல்கர்ப்பஞ் சிறுவலியாய்தான்வலிக்கி .. ல்
எங்கள் * மனைப்பூ † சந் திலாமிச்......................சு மங்கைநன்னீர்
* மனைப்பூ - தாமரைப்பூ
† சந்து - சந்தனம்

௪ வார்த்தனைத்து ஆப்பாலில் வாசாகவே கொடுக்......க
சேர்த்திரண்டாமாதஞ் •சிலுகினு......................ல் மாற்றிக்கொள

௫ தக்கோலம் தாமனையின் தன்பூவும் நீரனைத்......... து
அக்காலமே கொடுநீ * ஆன்பாலி..................... ல் எக்காலம்
* ஆன்பால் - பசும்பால்

௬ மூன்றுந்திங்களதனில் முறுக்கிவயிற்றிளக்கி............ல்
* வாணிமலர் செங்கழுநீர் வன்கிழங்.....................கு பேணி
* வாணிமலர் - வெண்தாமனை

௭ பாலிலனைகொடுக்க பாவையர்க்குக்கர்ப்ப..............ம்
நாலில்வலித்து ரத்தம்நாடினு......................... ல் சூலியர்க்கு

௮ நெய்தல்கிழங்குநொச்சில் நீர்வார்த்தனைத்தத......னை
உய்தபசும்பாலில் உண்ண.......................... வே ஐந்தாம்

௯ மாதம்வலிக்கில்-வரும் * ஆம்பலின்பூவு.................. ம்
வேதமறை விலாமிச்சம் வேரு......................... ம் போத
* ஆம்பல் - அல்லி

௰ நீர்வார்த்தனைத்து நிட்செபம் பாலிற்கொடுக்......... க
கூர் ஆறில் கர்ப்பக்குடலழன்.......................... று நேரோ

௰௧ சுற்றிக்குடல்வலித்துச் சுழன்றுமேநீர்ச்சுருக்கி......ல்
பற்றிபிதற்கும் மருந்துபகரக்கே...... ..................ள் உற்ற

௰௨ திப்பிலியுமுநதிரிகை சேர்ந்த நெய்தல்கிழங் ...... கு
அப்பில் அனைத்துப்பாலி லேயருந்.....................தி ஒப்பில்லா

௰௩ ஏழில் வலிக்கில் இலாமிச்சம் சந்தனமு ............ ம்
வாழுந்தக்கோலம் வகைமூன்று............ ...........ம் சூழும்

௰௪ கோவினுடப்பாலில் கொடுக்க எட்டாமாத.........ம்
பாவைகை கால் அயரும் பசிக்கன்ன ..... ............ந் தேவை

௰௫ இல்லைதான் இன்னம் இதற்கு * மனைப்பூவு......... ம்
தொல்லை நெய்தல் கிழங்கும் தொந்தித் ........... து நல்-ஆவின்
* மனைப்பூ - தாமனைப்பூ

௰௬ பாலிலனைகொடுக்க பாவை * நவமாத................ ம்
சூலின் வலிக்காணில் அரசந்தோலு.................... ம் கோவி
* நவம் - ஒன்பது

௰௭ மருதந்தோல் நீரில்வாகாகவேயனைத்............... து
கருத்தாய் ஆவின்பாலில் கண்டுகொ .................. டு பருகப்

௰அ பத்தாகுமாதமதில் பானவயிறுளைக்கி............ ல்
எத்தாகும் சர்க்கரை யிலுப்பைப்.......................பூ சித்தர்க
நீரில் அரைத்துப்பாலில் நினைவாகதான் அருந் ...... த
பேருமத்தித்தோர்க்குப் பேசுவே.......................ன் கூறும்

வயிற்றில் பிள்ளைமத்தித்து போனால்

## வீழ மருந்து,

உ௦ அறிந்து நிலக்குமிழ்வேர் அரைத்துக்கரைத் ........ து
விரைந்து குடிக்கப்பிள்ளை வீழு... ............... .....மே வரையில்

உக அரனுர் உரைத்த தறிந்து முனிதானுரைத்............ த
திறமாகும் என்றிதனைச்செப்.............................. பு

## உருதரிக்குமிலக்கணங் கூறுகின்றார்

அறுசீராசிரிய விருத்தம்

ஆகநாள் விந்துவிட்ட ஐந்தாநாள் கடுகுபோலாம் ........................... *
போக ஈரைந்தா நாளில் பொருந்தியமுட்டைப்போலாம்........................ *
* ஏகமாதத்தில் பிண் டம் இரண்டினில் மார்புமட்டாம்] ....................... *
பாகமாய்மூன்றுந்திங்கள் பகர் உர்திமட்டுமாமே...............................(உஉ)

* ஏகம் ஒன்று

இதுவுமது.

மட்டுடன் நாலாந்திங்கள் வளர்ந்திடும் பாதமெங்கும்....................... *
கட்டுடன் ஐந்தாமாதம் கருதுபூரணமாம் ஆறில் .............................. *
தட்டுடன் எலும்புசிவன் தலைமயிர் நரம்பு ஏழாம்................................*
எட்டுடன் அறிவாம் ஒன்பதியல் * தசம்பிறவிதானே.......................... (உங)
* தசம் - பத்து.

மாதாபிதாவால் பிள்ளைக்கு

## வருநோய்க்கூறுகின்றார்

எண்சீராசிரிய விருத்தம்.

பிறந்தநாள் பிள்ளைக்குத்தானேதன் தாய் பிதாவாலே சிசுவுக்குமேலே தோன்றும், சிறந்தபிணிமாந்தசணங் சுரப்பான் தோஷம் தீதான அக்கரங்கள் கிரந்தியுண்டாம், அறந்தழைக்கு மருத்துவச்சி யாலேதீரும் அது அன்றிம ருந்தறிவர் ஆனல் தீரும், திறந்தெரிந்துபார்த்துவிடுஞ் சிறுபிள்ளைக்குச் சீராகவருநோய்கள் செப்பக்கேளே................................................(உச)

இதுவுமது.

செங்கிரந்திக் கருங்கிரந்தி செவ்வாப்புத்தான் தீயானக்கரப்பானும் அனையிற்காணும், அங்கமெல்லாஞ் செவ்வாப்புச் சிவந்துகாணும் அது அன்றிக்கருங்கிரந்தி தொண்டைக்கட்டும், பிங்கிரகம் பேய்த்தோஷம் பக்ஷித்தோஷம் பின்னுவெகுரோகங்கள் பிரித்துச்சொல்ல, அங்கரிது குழந்தைபிணியறிந்துதீர்க்க ஆராலுமாகாதென் றரன்சொன்னுரே........................ (உரு)

இதுவுமது.

சொல்லுகின்ற குழவிக்குக்கரப்பானேது தோஷமென்ற வினையேது மாந்தமேது, கொல்லுகின்ற கணமேது அக்கரங்களேது கூறும் வைசூரியென்றக்குளறலேது, புல்லுகின்றதாயாலே தந்தையாலே புனேந்துகொடிபடர்ந்ததுபோல்படர்ந்து திப்பால், கொல்லுகின்ற கரப்பானுங் கர்ப்பமேகம் கோதிற்றதோஷமெல்லாம் முலைப்பால்சூடே...............................(உசு)

இதுவுமது.

சூடானமாந்தமெல்லாந் தாய்ப்பால்மந்தம் தொகையான கணங்களெல்லாங் கர்ப்பச்சூடு, பீடானஅங்கரங்கள் எல்லாந்தாயும்பிதாஇருவர்புணர்ச்சியினுல் எழுந்தசூடு, பாடானவைசூரியெல்லாம் அநுபோகத்தால் படர்ந்துதிந்தவினையெல்லாங் கற்மத்தாலே, காடான வகைபோலே சொன்னதற்குக் கண்டுவருந் தோற்றமினி கழறுவேனே...................................(உஎ)

குழந்தைகளை நோய்கள் வாதிக்கும்நாள்

## கூறுகின்றுர்

கழருனகரப்பான்தான் பிறவிநோக்கிக் கண்டமுதல் நாள்தொடங்கித் திங்கள்மூன்று, புழருனகுழவிகளை வதைக்குங்காலம் புணர்ந்தபலதோஷமெல்லாந் திங்கள்மூன்று, பழருன நாள்தொடங்கிவருஷம் ஒன்று பதைபதைக்கக்குழவிகளைவதைக்குங்காலம், சிழருனமாந்தமெல்லாம் வருஷந்தொட்டுச் செறிமூன்று வருஷமட்டும் வதைக்கும்என்னே............................(உஅ)

என்னவே கணமூன்று வருஷந்தொட்டு ஏழாண்டுமட்டுக்கும் இருக்குங்காலம், பன்னவே அக்கரங்கள் ஏழாண்டுத்தொட்டுப் பகர்முப்பதாண்டுமட்டும் படருங்காலம், உன்னவேவைசூரி ரோகமெல்லாம் உயிர்பிரியுங் காலமட்டும் உரித்துதானென், றின்னவேமுன்னுலில் முனிவர்சொன்ன இயல்புகண் டிந்நூலில் சொன்னதாமே..............................................(உக)

பிள்ளைப்பிறந்தவுடன் சீறிசீறியழுதால் விக்கல்பொருமலுக்கு

## மருந்து

---

திருமேதிங்கள்சென்று பிள்ளைப்பெற்றால், சீறியழும்பாலகர்க்குமருந்து கேளு, கூறுடனே சிறுதேக்கு திப்பிலியுங்கூட்டிக் குறுகவேபொடிசெய் தேன் ஆவினெய்யில், வேறுபடகொங்கை பிள்ளை யுண்ணும்போது விக்கல்போம் பொருமலுடன் விஷமும்போகும், பாருடனே திப்பிலி ரோகணியுங்கூட்டிப்ப ருவமுடன் நெய்குழைத்து தனத்தில்பூசே.................................(௧௰)

பிள்ளை வயிறுவீங்கினல் குடித்தபாலெதிரிட்டால்கோட்டாவி விட்டால்

## மருந்து

---

பூசுவாய் பிள்ளையுட வயிறுவீங்கில் பொடிமதுரங் காடியனைப்பூசத்தீ ரும், கூசியே குடித்த பாலெதிரிட்டாலும் கோட்டாவிவிட்டாலும் கூறக்கே ளு, பாசமுள்ளவெள்ளுள்ளி * அசமதாகம்பரிவுடன்கியாழம்வைத்து பருகதீ ரும், தோஷங்கள் † டெச்சமுலையுண்ணுதாகில் துலங்கவே அதிமதுரம்பொ டியதாக்கே............................................................(௧௧)

* அசமதாகம் - ஓமம். † எச்சம் - பிள்ளை.

பிள்ளைவயிறு நொந்தழுதால் மலங்கட்டினல்

## மருந்து

---

பொடியாகப்பால்அரைத்து முலைக்கண்பூசிப்பிள்ளைதனம் உண்ணவே போகுநோயும், துடியாய்ச் * சேய்வயிறுநொந்து அழுதிதானுல் துலங்குபுன் னைசிறுதேக்குக் கோஷ்டங்கொண்டு, வடிவாகநீர் அரைத்துக்காய்ச்சியேதான் மைந்தன் வயிற்றில்பூச நோயுந்தீரும், அடிவயிறுநொந்துமலங் கட்டுமாகில் அதிமதுரம் † பிசிததுளிர் சர்க்கரையும்அரையே.............................(௧௨)

* சேய் - பிள்ளை † பிசிததுளிர் - வேப்பந்துளிர்

பிள்ளைக்கு சிறுநீர் இறங்காவிட்டால் தோஷங்கண்டால்

## மருந்தும் குளிசமும்

---

அரைத்துநெய்யில் புகட்டிடவேமலம் இறங்கும் அதுவல்லால் நீரிறங் க எலிப்புழுக்கை, உரைத்திடுவாய் வெள்ளரிக்காய் விரையுங்கூட்டி உகந்தரை

த்து அடிவயிற்றில் பூசவேதான், நிரைத்திடவே நீர்இறங்கும் பாலும்உண்ணும் நினைவாகமஞ்சள் துத்திவேருங்கொண்டு, பசைத்திடுவாய் மஞ்சள்நூல் குளிச ங்கட்டில் பறக்குமேதோஷமுடன் பலநோய்த்தானே...................... (௩௩)

## எட்டுவிததோஷகுணங்கூறுகின்றார்

---

செங்கிரந்தி கருங்கிரந்தி பக்ஷித்தோஷம் பறவைதோஷக்குணம்

வெண்பா.

செங்கிரந்திதேகம் சிவப்பாம் கருங்கிரந்தி ...................................... *
பொங்கி * மிடறுகட்டிப் போகுமே - நங்காய்கேள்.................................*
பேட்ப்போலேசிறியமும் பிறந்தபக்ஷியின் தோஷம்.................................*
நீ இப்பறவை தோஷத்தைநேர்..................................................(௩௪)

* மிடறு - தொண்டை

புள்ளுத்தோஷம்கர்ப்பம் அழிந்ததோஷம் குளிதோஷக்குணம்.

நேராய்த்திடுக்கிடுமே நின்றபுள்ளுத்தோஷம்......................................*
வாராய்க்கழியும் பச்சைவாறுபோல் - நேராய்........................................*
* அளிதோஷங்கால்பின்னும் ஆகுமதுவாந்திக்.....................................*
குளிதோஷம் ஆமென்றேகூறு.................................................. (௩௫)

* அளிதோஷம் - சர்ப்பம் அழிந்ததோஷம்

தெரைத்தோஷம் முட்டுத்தோஷம்பெண்ணின் தோஷக்குணம்.

---

கூறுமதுதேரைக் குணந்தேகந் தான்வற்றும்......................................*
மாறுமுட்டுத் தோஷமுலை மறக்கும் - வீறுடனே ..................................*
பெண் தோஷந்தான்மயக்கும் பேராகும் எட்டும்....................................*
நண்பாகுந்தோஷத்தைநாடு................................................... (௩௬)

ஆ தோஷம் (அ)

## எண்வகைமாந்தகுணம்கூறுகின்றார்

---

மாந்தம் - செரியாமாந்தம் - தலைமாந்தம் - போர்மாந்தக்குணம்.

நாடுதனில்மாந்தம் நன்றாய்வயிறுபோம் .......................................... *
தேடுசெரியாமாந்த சேதிகேள்-ஓ * டகடு..........................................*

மாக்கனாத்தால்போல வலிப்பாந் நிலைமாந்தம்.....................*
காக்கப்போர்மாந்தத்தைக் காண்.......................... (௩௭)

* அகடு - வயிறு

## கட்டுமாந்தம் விஷமாந்தம் நீர்மாந்தகுணம்

காணவயிறுபோம் கட்டும் அதுமாந்தம்.......................... *
வானம்போல் உப்பி மலம்போகா - தூன ......................*
விஷமாந்தம் மெய்விளைக்கும் மேலேமிகவெதும்பும் .................. *
இசையாய் நீர்மாந்தம் இயம்பு ............................ (௩௮)

## கழிமாந்தக்குணம்

இயம்புவது மேனி எங்குங்குளிர்ந்திருக்கும்.........................*
தியம்புகழி மாந்தத்தின் சேதிகேள் * சொயம்பி ...................*
பலவிதமாய் தான்கழியும் பார்க்கில் இவை எட்டும்.....................*
உலகில் இது வெவ்வேறுனை.............................. (௪௧)

* சொயம்பி - சோம்பி - ஆடு மாந்தம் (அ)

## எண்வகைகணங்கூறுகின்றார்

கணம் - மஹாகணம் - கழிகணம் - சுழிகணக்குணம்

உளையாய்ச்கணங்காயும் உண்மைமஹாகணந்தான் .......................*
நிளையாய் உதடுவெடிநேருமே * குளைசேர் .......................*
கழிகணந் தான்வயிறுபோம் காண விலா இரண்டும்.....................*
சுழிக்குங் கணமெனவே சொல்..............................(௪௰)

* குளை இளைச்சல்

வரட்கணம் - நீர்க்கணம் - முக்குக்கணம் - மூலகணக் குணம்.

சொல்லாய்வரட்கணந்தான் சுரம் அஸ்தியில் நிற்கும்..................... *
செல்லாய்நீர்க்கணம் வேர்வைச்செய்யும் - நல்லாய்கேள்....................*
முக்குக்கணமுக்கும் மூலகணஞ் சீதரத்தம் ........................ *
தக்கும்அடி தள்ளுந்தான்................................(௪௫)

(ஆமகணம் - ) ஆமசன்னி - ஊதுகாமாலை - மஞ்சட்காமாலைக்குணம்.

தானலரும் ஆமகணம் தையலே ஆமசன்னி ....................... *
ஊனமுறநெற்றிச் சுழியுண்டாம் - தேனேகேள்.......................*

காமாலை ஊதும் கருது மஞ்சட்காமாலை.......................... *
மாமூத்திரம் மஞ்சள் நிறமாம்.......................................... (சஉ)

இனி இவைகளை தனித்தனிவிளக்குதும்.

## கிரந்திவருவிதங்கூறுகின்றார்.

வெண்பா.

எல்லாக்கிரந்தி யெழும்வாதப்பித்தப்.......................................*
பொல்லாதசேஷ்மத்தால் பொங்கிவிடும் - வில்லான்...................... *
நீள்புருவத்தாளேநிறைந்த சேயற்கரப்பான் ..................................*
ஏழ்புவியோர்க்கென்றே இயம்பு..............................................(சங)

## செங்கிரந்தியின்குணம்

அறுசீராசிரியவிருத்தம்.

பிள்ளைப்பிறந்த உடன் அழுதப் பிறகு மிடறு தனைக்கட்டி.................. *
மெள்ளப்பூனைச்குரல்போன்று விடாமல் நீர்மலம்வயிறூதித்.....................*
துள்ளிக்கைகால்சிவப்பேறிச் சும்மாய்க்கிடக்கும் ஏதென்னில்.................. *
கள்ளமானசெங்கிரந்திக்கருத்தாய் இதனைக்கண்டுகொளே.............. (சச)

## செங்கிரந்திக்குமருந்துங்குளிப்பாட்டவுமருந்து

கோரோசினைதான்முலைப்பாலில் கொடுக்கக்கர்ப்பூரவள்ளியிலை............ *
நேரோடு உள்ளித்தனைநறுக்கி நிகருங்குன்றிமணியிலையின் .................. *
சாறும் அருந்த முருங்கையிலைத் தன்சா றருந்த செங்கிரந்தி.................. *
தீரும்செம்முள்ளியினிலையைத் தினமும் நீரில்குளிப்பாட்டே............ (சரு)

## கருங்கிரந்தியின் குணம்

முழங்க அழுதுமுலையுண்ணு மூர்ச்சையாகும் உடல்வெதும்பும்.............. *
கொழுங்கண் திறவாவாய்வரட்சிக்கொண்டே * அதரங்கறுப்பேறும்......... *
† அழுங்கி அலறும் குரல்கம்மும் அதிகமாக வயிறூதும்.............................*
புழுங்கும் வலிக்குங் கருங்கிரந்திப் பொல்லாதெனவும் புகன்றனரே... (சசா)

* அதரம் - கீழுதடு.
† அழுங்கி - அழுது - அன்றியுங்கைகால் கறுப்பேறுமென்றறிக

## கருங்கிரந்திக்கு மருந்து

ஓணான் இரத்தம் * காளவாயன் உகந்தபாலுந் தான்கொடுக்க............... *
மூணு † கரிய ‡ கத்தபத்தின் மூத்திரம் அவுரிச்சாறுசமன்.......................*
நாணுவசம்பு உள்ளியுமாய் நறுக்கி § ஏரண் டெண்ணெயுடன்....................*
ஆணைல் எரித்துக்கொடுத்திடுநீ ஆறும் கரிய கிரந்தியதே... ............... (௪௭)

* காளவாயன் - கழுதை. † கரிய - கறுந்த. ‡ கத்தபம் - கழுதை.
§ ஏரண்டம் - ஆமணக்கு அன்றியும் ஓணானிரத்தங் களிவாயனென்றும் ஓணானிரத்தங் காசளவென்றுஞ் சிலபிரிதிகளினும் உண்டு.

### இதுவும் கருங்கிரந்திக்கு வேறு எண்ணெயுங்குளிப்பாட்டவும்

எண்சீராசிரியவிருத்தம்.

நெய்யுடனே விளக்கெண்ணெய் நல்லெண்ணெய்க்கூட்டி நீடுஞ்சங்கிலைச்சாறு சமனுய்விட்டுத், திய்யாமல் * கடுகம் தான்நீர் அரைத்துத் தீதில்லா ரவியில் வடித்தேயெடுத்துப், பையவொருபணஎடைதான் உட்கொடுத்துப்பாங்குடனே மேலெங்குந் தடவிவைத்துச், † செப்பமுள்ளிக்கிரந்திநாயகம் ‡ நீர்ப்போட்டுத் தினமுமே குளிப்பாட்டத்திருமென்றே.........................(௪௮)

* கடுகம் - சுக்கு மிளகு திப்பிலி. † நீர்ப்போட்டு - சலத்தில்போட்டு.

### இதுவுங்கருங்கிரந்திக்கு வேறு எண்ணெய் உள்ளுக்கும்மேலுக்கும் பூச

மூக்கணைசாரணைமுடக்கொத்தான் * செந்நெருஞ்சில் முத்தெருக்கஞ் செவியினுடன் ஓரிதழ்தாமரையும், ஆக்குமுடன் சுருள்ளி மயிலிறகுகூட்டி ஆமணக்கெண்ணெயில் எரித்துக்கொடுபின்பு, தாக்கிமேல் பூசியிட வந்தவலிநிற்கும்தாயையும் பத்தியம் சமரசம்வைக்கப், பூக்கமழுங் குழல்மடவாய் உமைக்கரள்புகன்ற புகழுரைபுமிதுவாகும் புவியிலுள்ளவர்க்கே.......................... (௪௯)

* செந்நெருஞ்சில் - செப்புநெருஞ்சில்.

### பன்னிரண்டு கிரந்திக்கும் பதினெட்டுச் சூலைக்கும்

## எண்ணெய்

ஆசிரியவிருத்தம்.

அண்டபகிரண்டமுதல் கொண்டுமனுவிண்டுதொழ ஆமணக்கெண்ணெயதுசேர், அடவான தேங்காயைத் திருகிமுன்பாலெயெடு அவிர்செம்பரித்திச்சாற்சேர், கண்டதொருபாண்டங் கலந்தடுப்பேற்றியே காய்ச்சிவடிஎண்ணெயதிலே, கற்கம் இனி வர்க்கமொடு சுக்கது கிராம்புடன் களிவாயுகந்த ஏலம், கொண்டசிறு திப்பிலிச் சண்டமாருதபூரங் குன்றுமிளகுப் பொடியகாய், குறையாமல் இவ்வகை வகைக்கே விருகனெடைகூட்டிவிடும் எண்ணெயதிலே, இண்டபடிஒருசங்கு தந்த * குழவிக்கிய ஏகுநோயானவகைகேள் ஈராறிரந்தியும் அறுமூன்றுசூலையும் ஏங்கியோடிப்போகுமே .................... (௫௰)

* குழவி - பிள்ளை.

### தீராத அசாத்திய கருங்கிரந்தியின் குணம்

## தன்வந்திரி

எண்சீராசிரியவிருத்தம்.

பாரோநீகருங்கிரந்திக்குணம் ஏதென்றால் பனிபோலே சீறியழும் முலை புண்ணூறு, ஆரோதான் முறிமுறித்து உடலும் விம்மும் அரிய நாவரட்சியுடன் கண்விழிக்கும், வாரோதான் மலர்முகமும் வாடிக்காணும் வல்வினையாய் * குக்கில் புழுவிளையும்பாவம், மாரோதான் மைந்தன் அஞ்சுநாளில் சாவும் மஹா கொடிது கருங்கிரந்தி யுரைத்தோம்நாமே.......................................(௫௧)

* குக்கில் - வயிற்றில்

## கிரந்தி வகுப்பு

முற்றிற்று.

---

### இனிதோஷம்வருமாறு

அகத்தியர் திருவடிகளே சரணம்.

# தோஷவகுப்பு

## பட்சித்தோஷகுணம்

---

அறுசீராசிரியவிருத்தம்

*உதகமாய்க்கழிவதன்றி உவாந்தியுமிக உண்டாகி.........................*
இதமொடு தலையெடாமல் இருகண்ணில பீளைக்கட்டி..........................*
விதவிதமாகமேனி வெதும்பியே பேய்போல்சீறும்..........................*
பதமிதுமுனிவன் சொன்னப் பட்சியின் தோஷந்தானே.........................(௫௨)

* உதகம் - சலம்

இதுவுமது.

பெருகிவயிறுதான்போகும் பேதம் உடம்பு சன்குழியும்..........................*
பெருகுங்கழுத்தும் முகஞ்சிறுக்கும் பேரானகுரல் போல்சீறியழும்..........*
அருவி முலையும் உண்ணாது அலறுந் தண்ணீர்க் குடியாது......................*
பருவவிடயோன் தான் அறியப் பகரும் பட்சித்தோஷமிதே...........(௫௩)

பட்சித்தோஷ நிவர்த்தி

## குளிசமும் மருந்தும்

---

பட்சியின் தோஷந்தீரப் பனையின்வேர்க்குளிசம் ஆடி........................*
உச்சிதமணித்தக்காளி உகந்திடும் வேரோடுள்ளி..................................*
பிச்சியின் வேரோடெண்ணெய்ப் பிசைசதிர் புடமேசெய்து.......................*
உச்சியில் இட்டுப் பின்னும் உள்ளுக்குங்கொடுத்திடாயே........................(ருச)

---

இதுவும் பட்சித்தோஷநிவர்த்தி குளிசமும் சாந்தியும்

## தன்வந்திரி

---

எண்சீராசிரியவிருத்தம்

**கா**ணவே செப்பேடு தகடுவாங்கிக் கண்மணியே எண்கோணம் அதன் மேல்வட்டம், பூணவே சிங் கிரீயும் ஸ்ரீயுஞ்சவ்வும் பூட்டியே எண்கோணம் அதிலேயூன்று, தோணவேநான்சொல்வேன் தருமமாக தூக்கான ஐயுமென்று நடுவிற்போடு, மாணவே போட்டதிலே பஞ்சநூலால் மகிமையாய்ச் சுற்றிநன்றுப் குளிசம்ஆடே.............................................................. (ருரு)

இதுவுமது

ஆடுகிற உழுந்தோடு அரிசிப்போட்டு அச்சமறசமைத்து ஒருபாண்டந் தன்னில், வாடுகிற எருக்கிலையில் சாதம்வைத்து வளமாக மூவிளக்கு மாவால்ஏற்றி, நாடவே மந்திரத்தால் நூற்றெட்டோதி நயமாக சாந்திசெய்துக்குளிசங்கட்டுப், பாடுகிறதில்லையந்த பட்சித்தோஷம் பலத்தநோய்ப் பறந்தோடும்வித்தைத்தானே...................................................... (ருசு)

## பறவைதோஷகுணம்

---

அறுசீராசிரியவிருத்தம்

* குஞ்சியின் உடம்புநொந்துக் குடல் தனில் பாலுந்தங்கா.........................*
நெஞ்சையுஞ்சுழியாய் வாங்கும் நெற்றியும் வலிப்புண்டாகும்...........................*
† துஞ்சிடும்போதுசற்றே திணக்கெனவலித்துச்சீறும்......................................*
பஞ்சின் மெல்லடியினளேபறவையின் தோஷந்தானே............................(ருஎ)

* குஞ்சி குழந்தை † துஞ்சிடும் தூங்கும் இம்மூன்று மொருதொடர்

இதுவுமது

குடித்தபால் எதிரொடுக்கும் குழிந்திடுந் தலையுங்கண்கள் .....................*
அடிக்கடி திடுக்கிட்டேங்கும் அகமதில்தாகமாகும்.........................................*
எடுத்திடக்கையில் தங்கா எதிரிளைப்பெடுக்கும்பிள்ளை...................................*
கடுத்துடன்வயிறுபோகும் கருதுநீ பறவைதோஷம்..........................(௫௮)

இதுவுமது

## தன்வந்திரி

உச்சிமூளைத்தலைப்பற்றி உடலம் எங்கும் வெதுப்புண்டாம் .................. *
எச்சமாகநாவுலர்ந்து இரண்டுகண்ணும் வெளுப்பெய்தும்..................................*
பச்சைமஞ்சள் முறித்தால் போல் பசும்பொன்னிறமாய் முகமினுக்கும்......*
இச்சைப்புரியுங்குழல் மாதே இதுவேபறவை தோஷமென்றே............(௫௯)
இஃதொன்றுமொருதொடர்

---

பறவை தோஷத்துக்குக் குளிசமுங் கியாழமும்

பறவையின் தோஷந்தீர பயன் உரைத்திடுவேன் இந்த .........................*
துறையைநீகேளாய் ஆலின் துளிர் தனைக்குளிசம் ஆடித்.........................*
திறமைசீரகம் ஈருள்ளித் திகழ் வரப்பூலாவேரும்.......................... *
உறவதாய்க்காப்ச்சியேதான் உறு பிணிக் * குழவிக்கீயே .................. (௬௰)
* குழவி - பிள்ளை

இதுவும் பறவைதோஷநிவர்த்தி

## தன்வந்திரி

வருத்தம்வெள்ளைக்குன்றியதை வளமாய்ப்பலியும் பொங்கலிட்டு ............*
மறுத்தசாபம் நிவர்த்திச்செய்து மகிமைவடக்கின் வேர்வாங்கிக் ...............*
கறுத்த செவ்வாய் நாளது தான் * கனகமதனிற் குளிசமிட்டுக் ................*
கருத்தக்குளிசமதுகட்டிக் கழிப்புங்கூடக்கழித்திடுமே......................(௬௧)
* கனகம் - பொன்

## எட்சித்தோஷ குணம்

தேயும் உடம்பு மிகநாறும் செல்வன் முலைப்பால் மறந்திருக்கும் ............*
* தாயைக்கண்டாலொவ்வாது சற்றே வயிறு தானெழுகும் ....................*
பாயும் புலிபோல் பதறியழும் பாலரைக்கண்டால் பார்த்திருக்கும்............*
பாயும்விடையோன் தான் அறியப் பகராய் எட்சித்தோஷமிதே.........(௬௨)

இதுவுமது

வித்தாந்தேகமிகதாறும் மெல்லிமூலேப்பால் அருவருக்கும்.........................*
சற்றேவயிறு தான் கழியுஞ் சண்டாளம்போல் சுரங்காயும்.........................*
தத்துந் தாயைக்கண்டாலே தவனம் அதுவாய் சிறி அழும்......... .. ........*
மற்றுங்கண்ணைப்பிலசைபிசைந்துமண்ணில் புரளும்பாலனதே............(௬௩)

இதுவுமது

மண்ணில் புரண்டே * மண்ணைப்போல் மடிந்துமடிந்து தான்புரளும்......*
சன்னிக்குணமாம் மாந்தமிது தான்சண்டாளசிசுரோகம் ........................*
வெண்ணிவேததன்வந்திரி விளம்பும் இந்நோய்க்கண்டுக்கொள்..............*
எண்ணிப்பறக்கும்பட்சி யென்ற இயல்பாந் தோஷமிதுதானே ...........(௬௪)

* மண்ணை - பேய்

இதுவுமது

எண்சீராசிரிய விருத்தம்

போமேதான் எட்சித்தோஷகுணத்தைக்கேளு பேரான உதிரத்தில் சூடுகொண்டு, வாமேதான் மயக்கிவித்துத் தலையெடாமல் வரண்டுமே கண்பீளைக்கட்டிமூடும், காமேதான் உடல்வற்றிக் கனலேமீறுங் கற்மாதிவினையிது தான் சிசுகட்கெல்லாம், ஆமேதான் விதவிதமாய் மேனிவற்றும் ஆகவுநீ எட்சித்தோஷகுணந்தான்பாரே..................................................... (௬௫)

## எட்சித்தோஷ நிவர்த்தி குளிசம்

அறுசீராசிரிய விருத்தம்

தானேசுக்கிரவாரமதில் தனித்த * அசுவகெந்தித்தான்..........................*
மானேகாப்புமீந்திட்டு - ம - ந - சி - வ - ய - வென்றுருவேற்றுப்......... *
பானே நூற்றெட்டுருவேற்றிப் பண்பாய் வடக்கின் வேர்பிடுங்கித்.........*
தேனேபட்டுநூல் குளிசமிட்டுத் தேவிநிறுத்தி அருகில்வையே......... (௬௬)

* அசுவகெந்தி - அமுக்கரா

இதுவுமது

வைய்யேபூசைநேமமதாய் வாழைக்கனிகள் அதுபடைத்து....................*
துய்யச்செம்பில் சலமொண்டுத் தோஷநிவர்த்தித் தான்செய்து............. *
தையல்தேவிதனை நினைந்து தண்ணீர் ஓதி தான்தெளித்து..................... *
மையக்குளிசந்தனை யெடுத்து மைந்தன் தனக்குக்கட்டிவிடே.... ......... (௬௭)

இவ்வேழுமொருதொடர்

### இதுவும் எட்சித்தோஷ நிவர்த்தி வேறு

## குளிசமும் குளிப்பாட்டவும்

எண்சீராசிரிய விருத்தம்.

வேலமரப்புழுக்கூட்டில் கன்னிநூல் சுற்றி விளங்கு மஞ்சள் அதுபூசித்தூபங்காட்டிச், சாலவுமே முக்குளநீர் மந்திரித்துத் தலைமீதேசொரிகநீள் ஆலம்விழுதைப், பாலனுக்குக் குளிசங்கட்டிக்கோழிப் பலிகொடுத்துத்தலைச்சுற்றி அப்பால்போட்டு, மேலுக்கு நிலவிளா ஆதல் வில்வ இலையாதல் போட்டுக்குளிப்பாட்டநன்றே.......................................... (சுஅ)

எட்டுவகைப் புள்ளின் பெயர்

## கூறுகின்றார்

அறுசீராசிரிய விருத்தம்

வீங்குப்புள் தூங்குப்புள்ளும் விளக்கொளிக்கணன் வெங்கண்ணன்......... *
தீங்குசொல் கருடக்கண்ணன் செங்கணன் வரட்புள்தோஷம்.................. *
பாங்குடன் தொடுபேப்கண்ணன் பட்டதோர் எட்டுப்புள்ளும்.................*
ஈங்குள்ளக் குணங்கள் கண்டால் இன்னமும் இசைக்கின்றேமே.........(சுக)

## வீங்குப்புள்ளின் தோஷகுணம்

உச்சியுங்குழிந்துநாவு உலர்ந்திடும் உவாந்திப்பண்ணும் ......................*
பச்செனமலமுந்தானும் பாலதுபோல ஆகும் .....................................*
பிச்சுடன் எடுக்கும்பாலும் பின்கையால் முகந்துடைக்கும் ......................*
நிட்செயம்வீங்குப்புள்ளின் நிகழ்குண மென்று சொல்லே...................(எய)

## வீங்குப்புள் தோஷத்துக்குக் குளிகை

வேறு

மதுரமுத்தம் அதிவிடையம் மானேகடுக்காய் மாவசம்பு.....................*
உதிருந்தேவதார மஞ்சள் உடனேவகைக்கு ஓரளவாய்...... ...................*
அதிருங் குறிஞ்சிப் பொடுதலைச்சாறதனு லரைத்து உண்டைசெய்து.........*
சதிரமுலைப்பால் தன்னிலிட தணியாதோஷந் தணிந்திடுமே...............(எக)

இம்மருந்து சகலதோஷத்திற்குமாகும்

## தூங்குப்புள்ளின் தோஷகுணம்

வாங்குந்தாகம்நீர்குடிக்கும் வயிறுங்கழியும் வாந்தியுமாம்.......................*
பாங்சாய்த்திரும்பிமுகம் பார்க்கும் பயமாய் அழுது வீரொன்னும்..............*
தூங்கித் * துஞ்சிப்பாயல்மிசைச் சோர்ந்தே யலறியெழுந்திருக்கும்.........*
தூங்குப்புள்ளின் தோஷமெனச்சொன்னூர் அரனூர் தோகைக்கே.........(எஉ)

* துஞ்சி - சோம்பி

இதுவுமது.

அரண்டெழுந்திருக்குஞ்சோரும் அருந்திய எல்லாம்கக்கும்.................*
இருண்டிடும்கண்கள் தானும் இமையின்மேல்சொருகிக்கொள்ளும்...........*
முரண்டெழும்வீரிட்டேதான் மூர்க்கமாய்ப் பல் கடிக்கும்......................*
சுருண்டுதான்கிழேநோக்கும் தூங்குப்புள் தோஷந்தானே..............(எங)

இதுவுமது

## தன்வந்திரி

ஓடும் உறக்கம் மயக்கமுடன் ஒசோ உவாந்திவயிறிழியும்.........................*
பாடுஞ்சிரசுப்பள்ளமதாய்ப் புரங்காய்மேல் மூச்சேறிட்டு......................*
வாடும்பாலன் எந்நேரம் வகையாய் அழுகும் முகம்வேறும்.....................*
சூடுமலர்வேல்விழியாளே தூங்குப்புள்ளின் தோஷமிதே ..............(எச)

## தூங்குப்புள்ளின் தோஷநிவர்த்தி

தோஷந்தணிய * ரோசினையும் தூவு மஞ்சள் வசம் பேலம்..............*
வாசவேப்பின் ஈர்க்கோடு வகையாய் ஓமம் விளாவோடு........................*
பாசமதுவாய் அரைப்பரைத்துப் பாலன் தனக்கு முழுக்காட்டிக் ................*
கோசமதுவாய் நூற்றெட்டுக் குணமாஞ்சாந்திந்தான்செய்யே..........(எரு)

* ரோசினை - கோரோசினை

இவ்விரண்டுமொருதொடர்

இதுவும் தூங்குப்புள்ளின் தோஷநிவர்த்தி

*வவ்வால்சிறகுதன்னில் ஊமத்தின் அறுகம் வேர்சுருட்டிச்...................*
செவ்வாய்க்கன்னிப்பெண் நூற்றநூலால் சிறகுதனில்சுற்றிக்.........................*
கவ்வாய்ப்புனலும் சொரிகுளிசம் கட்டிக்கோழிப் பலிகொடுத்து.............*
தவ்விவிழியாய்க் † கூவிளவேர் நன்றாய் அரைத்துப் புகட்டுகவே......... (எசு)

* வவ்வால் வெளவால்(சிற்றகத்தியம்) போலியெழுத்தைப்போற்றுதல் கடனே. † கூவிளம் வில்வம்.

## விளக்கொளிக்கண்புள்ளின் தோஷகுணம்

குடித்தப் பால் எடுக்கும் மெய்யும் கூர்மையாய்க்காயும் ஓயும் ..............*
அடிக்கடிக்காயும் அஃறி அரிய தாய்ச் சிந்தைநோக்கும் ........................*
பிடித்துநல் மூலே உண்ணுதப் பெருவிடாய்க் கொண்டுச்சோரும்...............*
விடுத்திடும் எழுந்தநோய்தான் விளக்கொளிக்கண்ணன் தானே............(எஎ)

விளக்கொளிக்கண் புள் தோஷநிவர்த்தி

வெண்பா

சின்னிவசம்புள்ளிச் சிறுவிளாதான் நாலும்.......................................*
நன்னுகவேமுடிந்து நற்சிலேத் - தன்னாலே.........................................*
மார்பில்படம் கட்ட வாராது தோஷமெல்லாம்.......................................*
காரிழையாய்ச் சொன்ன திதைக்காண்.........................................(எஅ)

## வெங்கண்புள்ளின் தோஷகுணம்

அறுசீராசிரியவிருத்தம்.

வெளுச்செனக் கழியும் பால்போல் விளரிமெப்த்துவண்டுக்காயும்..........*
குளுக்கென இரைச்சல் உண்டாம் குடித்தவ் வண்ணம்பேதிக்கும் ............*
அளித்திடும் வயிற்றின் உள்ளே ஆனதோர்வலியும் ஆகும் ...................... *
வெளிப்படை ஆமே என்றில் வெங்கண்ணன்குணமும் ஆமே............ (எகூ)

வெங்கண் புள் தோஷ நிவர்த்தி

வெண்பா

* கன்னி அன்னம் தன்னுடனே கடுக்காய்ப் பொடிக்கூட்டி..................*
உன்னிதமாய்த் தான்பிசைய ஊறுநீர் - மின்னேகேள்...........................*
திப்பிலித்தூள் இட் டருந்த சேர்ந்தசிறுவோர்க்கு.....................................*
ஒப்பில்லா தோஷமெலாம் ஓடும்..........................................(அ௦)

* கன்னியன்னம் - கற்றாழஞ் சோறு

## கருடக்கண்புள்ளின் தோஷகுணம்

அறுசீராசிரியவிருத்தம்

புதுப்புனல்வடிந்துக்கொண்டு புகழ்மூலேப்பாலெடுக்கும்...........................*
எதுப்படக்கண்ணுந்தாமும் இருப்பக்கம்பீளேச்சுட்டும் ..............................*
முதிர்ப்பிள்ளேப்படுப்பாடாக முந்தியே பற்றிநிற்கும்.................................*
விதத்தினேக்கருடக்கண்ணன்மிகுத்திடுந்தோஷந்தானே .................... (அக)

கருடக்கண் புள் தோஷத்துக்கு

## மருந்து

வேறு

தனியுங்கோரோசினையுடனே சாற்று மதுரம் திப்பிலியும் ........................*
கனிவாய்ப்பெண்முலைப்பால் தன்னில் கலந்தே அரைத்து ஒருசங்கு ............*
பிணியாங்குழவிக்கிடும்போது பேரும் அநேகதோஷமெலாம் ...................*
பிணியுந்தணியுமென்றேதான் பேதைக் கரனார் மொழிந்தனரோ .............(அஉ)
இம்மருந்து சகலதோஷத்திற்குமாகும்

## செங்கண்புள் தோஷகுணம்

---

சிவந்து கண்ணீர்ச்சொரிந்து சிரங் குளிர்ந்திருக்கும்வெப்பி ...................*
தவழ்ந்துபோய் நிலத்தில் வீழ்ந்து தடக்கையால் முகந்துடைக்கும் ............*
விவந்தியாய் அழுதுபாலன் வெப்புநீராய் பேதிக்கும் ............................*
சிவந்ததோர் குணங்கள் கண்டால் செங்கண்புள் தோஷமாமே ............(அங)

செங்கண் புள் தோஷத்துக்கு

## எண்ணெய்

வேறு

மொழியுமதுரம் சிரகமும் முத்தம் ஏலம் பத்திரிச்காய் ..........................*
பொழியும் கிராம்பு சண்பகமும் பொன்னே லவங்கப்பட்டையுடன் ............*
கிளிசேர்மொழியாய் விருகன் எடை கேளுமுசுக்கைபிலை நன்றாய்த் .........*
தெளியுங்காணிசிறுகீரைச் சிந்தில்வேரும் பலமொன்றே.................. (அச)

இதுவுமது

பலமேசொல்லும் ஈருள்ளிப் படிகால் சாறுக் காரியின்வேர் ....................*
வளமாய் எண்ணெய் இரண்டுபடி வாகாய் இவைகள் கலந்துடுப்பில் ............*
நலமாய் எரித்துக் குழவிகட்கு நன்றாய்ச்சங்கு புகட்டிடவே ..................*
வலுமையானபிணிதோஷம் வாராதென்றுவகுத்தனரோ ........................(அரு)

## வரட்புள்ளின் தோஷகுணம்

உடலதுவரண்டுமெந்த உறங்கிடும்மேனிவற்றும் ...................................*
கடல் இரைந்தாற்போல்சத்தம் கறுதுறு என்றேமீறி .............................*
திடமுடன் தாவரண்டு திக்கெங்கும்பார்த்திருக்கும் ..............................*
விடமது போலகாயும் விரண்டிடும்வரட்புள் தானே ........................(அசு)

இதுவுமது
வேறு

வேப்பம்பூப்போல்வயிறெழுகும் விடாதவெப்புத் தலைவலியும் ..................*
பூப்புனல் * மாந்திப்புறங்கையால் பொருந்தமூக்கையே துடைக்கும் ..........*
கோப்பாய் நாவுவரண்டு சலங்குடிக்கக்கண்டிப்பறதவிக்கும்.....................*
சேப்பங்கயத்தின்முகமாதே சேப்பாய்வரட்புள் தோஷமிதே..................(அஎ)

* மாந்தி - குடித்து.

இதுவுமது

## தன்வந்திரி

வேறு

பாலகன்மேனிவாடிப் பசலைவாய் விழிகள் நீராய் ..................................*
சிலமாய்விலாகுளிர்ந்து சிறும்பால் எதிர் எடுக்கும் ..................................*
கோலமாய்க்கண்குழிந்து குணமதுபலவேசெய்து............................................*
மாலுறவயிறுபோகும் வரட்புள்ளின் தோஷந்தானே ..........................(அஅ)

இதுவுமது

கழித்தபின்புமேனிவற்றிக் கண்ணின்மணிகள்நீர்கலங்கித் ..........................*
துளிர்த்தத்துளிராய்க்குளிர்ந்துமிக தொண்டைநாவுமிகவரண்டு.....................*
வழுத்தவேப்பம்பழச்சாற்போல்வயிறுபோம்விடாதலையசைக்கும்......................*
அழுத்த உடம்புமிகவெதும்பும் ஆன்குரல்போல் வேற்றுக்குரலே ..........(அக)

இதுவுமது

குரலேகையால் முகந்துடைக்குங் குழறிப்புறங்கையாலுந்துடைக்கும்.........*
வரலே நாவுமிகவரண்டு வாயால்குடிக்க மிகதவிக்கும்...............................*
அரலே அஞ்சித்தானழுகும் அன்னத்திரோஷவிடாய்ப்போலே........................*
எரலே இந்தகுணங்கண்டால் என்றேம் வரட்புள் தோஷமென்றே ...... (கூ0)

வரட்புள் தோஷ நிவர்த்தி குளிசம்

மென்றேவட்ட * நரிவிரட்டி வியாழந்தன்னில் காப்பிட்டு.............................*
துன்றுஞ்சேவல்பலிகொடுத்து தோஷந்தீரவெனப்பணிந்து ...........................*
குன்றின்மஞ்சள் அஞ்சோதிக்குழைந்தைத்தாயைக் குளிப்பித்து......................*
மன்றில்வேரைப்பிடுங்கிக்கட்ட வரட்புள் தோஷம்போய்விடுமே..........(கூக)

வட்ட * நரிவிரட்டி வட்டக்கிலுகிலுப்பை
இந்தான்குமொருதொடர்

## அந்திப்புள் தோஷகுணம்

பாலகன்மேனிவாடி பசைந்து கண்விழித்துப்பின்னும்........................ *
சில கை கால் குளிர்ந்து சிறும்பால் எதிரொடுக்கும்த் ........................... *
மேலெல்லாம் நரம்புத்தோன்றி மேனியும்வெளுத்துங்காயும்..................... *
ஆலமேயுண்டகண்ணாப் அந்திப்புள்தோஷந்தானே.......................... (௯௨)

அந்திப்புள்தோஷநிவர்த்தி

வருக்குந்துவாலை தணைக்கேளு மானேசின்னி விளாநொச்சில்............... *
பருக்குஞ்சிந்தில் தான்வேட்பு பைடநறுக்கி வசம்புள்ளி........................ *
தொருக்கத்துவளைத்தானிடித்து தவாலைக்கண்டங்கால் தன்னில்.............. *
மிருக்க முடிந்து கட்டிடவே விரைந்து தோஷம்போயிடுமே...............(௯௩)

## நீர்ப்புள்தோஷகுணம்

———

நெஞ்சுவரண்டு கண்குழிந்து நீடுப்பெருமூச்சுண்டாகி........................ *
பஞ்சுப்போலே கண்வெளுத்துப் பாலுங்குடியாதேயலறி...................... *
துஞ்சாதிரவுபகலுந்தான் சுருங்கப்பண்ணிமிகவேர்க்கும்............................*
செஞ்சொற்கிள்ளை மொழிமாதே செய்யநீர்ப்புள் தோஷமிதே............(௯௪)

நீர்ப்புள் தோஷநிவர்த்தி

எண்சீராசிரியவிருத்தம்

பச்சோந்திதன்னை ஸ்ரீங்காரஞ்சொல்லிப் பாங்குடனே பிடித்துவந்து மஞ்சள்நூல்சுற்றி, அச்சமறபுறமடைநீர் ஏழுதரஞ் சொரிந்தழகான செஞ்சேவல் பலிகொடுத்து, நிட்செயமாய் இயந்திரம் கட்டத்தீரும் நிகரானமருந்துதனை நிகழ்த்துங்காலை, வெச்செனவிட்ணுக்கரந்தை * சீரங்கூட்டி வேறேநீர்க்கொடுத்திடவே வியாதிபோமே................................................. (௯௫)

* சீரம் - சீரகம்

இதுவும் நீர்ப்புள் தோஷநிவர்த்தி

## தன்வந்திரி

அறுசீராசிரியவிருத்தம்

தோதமுதலைக் கொழுப்போடு திருவவட்ட தித்தியின்வேர்................ *
மாதேயிதனைக் குளிசமிட்டு மருவப்போட்டுக் கட்டினபின்....................... *
ஓதே தோஷமந்திரத்தால் ஒருநூற்றெட்டுச் செபித்திடுவாய்.................... *
பாதேநீர்ப்புள் தோஷமது பயந்துபறந்து ஓடிடுமே.......................... (௯௬)

## புள்ளின் தோஷகுணம்

---

உச்சிக்கண்ணுந்தான்குழியும் உண்ணும்பாலுந்தங்காது ....................*
பச்சைநிறம்போல்வயிறுவிடும் பறவைக்குரல்போல்சிறியழும் ....................*
* எச்சம் இளக்குந்தண்ணீரை எடுத்துக்குடிக்கும் மெய்மறக்கும் ............ *
கச்சையணிந்தமுலைமாதே காணும்புள்ளின் தோஷமிதே ..................(கஎ)

* எச்சம் பிள்ளை

### புள்ளின் தோஷநிவர்த்தி

புள்ளின் தோஷம் தீர சிறு புள்ளடிவேர்க்குளிசஞ்செய்து ....................*
மெள்ள ஓரிதழ் தாமரையும் வெந்தயமுடனேவிடத்தேரும் ....................*
எள்ளத்தோரளவாய்மிளகும் இதமாயதனைக்குடிநீராப் ....................*
உள்ளத்தோர்மனதாகியநீர் உண்டிடநன்றென ஓதுமிதே ..................(கஅ)

---

பக்ஷி - பறவை - புள் - இம்மூன்றும் - ஒருபெயராயினும்;

பக்ஷியென்பது - கழுகு, நாரை, முதலாயின.

பறவையென்பது - புறாமுதலாயின.

புள்ளென்பது - காடைமுதலாயினவு மெனக்கொள்க, [அன்றியும்] அந்தியிற் சிலும்பும் சிலபக்ஷி, சந்தியிற்சிலும்பும் சிலபக்ஷி, [அங்ஙனம்] எண்வகைப்புட்குணங்களைச் சொல்லுமிடத்து.

விங்குப்புள்-கழுகு, நாரைமுதலாயின, பார்ப்புப்படுங்குணம்போல, பிள்ளையுடல்கனக்கும்.

தூங்குப்புள் - கொக்குமுதலாயின பார்ப்புப்படுங்குணம்போல பிள்ளைக்கண்ணையாய்த்தூங்கும்.

விளக்கொளிக்கட்புள் - காடை, கரடமுதலாயின பார்ப்புப்படுங்குணம்போல பிள்ளை விளக்கைநோக்கா

வெங்கட்புள் - ஆந்தை முதலாயின பார்ப்புப்படுங்குணம்போல, பிள்ளைப், பகலைநோக்கா.

கருடக்கட்புள் - நாமனுத்திமுதலாயின, பார்ப்புப்படுங்குணம்போல, பிள்ளை வயிறுந்தலையுங் கனத்துக்கழியும்.

செங்கட்புள் - குயில்செம்போத்து முதலாயின, பார்ப்புப் படுங்குணம்போல பிள்ளைக்கண்ணுந் தேகமுஞ்சிவக்கும்.

வரட்புள் - சாக்குரீஇமுதலாயின பார்ப்புப்படுங் குணம்போல பிள்ளை உடலி ளைக்கும்

பேய்க்கட்புள் - கோட்டான்முதலாயின பார்ப்புப்படுங்குணம்போலப் பிள்ளை யரற்றும் எனக்கூறுப)தாய் தந்தையிருவரால் பிள்ளைக்குவந்தநோயை பட்சிகளின் ஸ்ரேஷமென அந்நோய்களின் குணக்குறிக ளறியும்பொரு ட்டுவமித்துக்கூறினர்.

இதற்கு மேலிட்டக்கருத்து மேலோர்க்கே) இப்பட்சியின் ஸ்ரேஷ குணத்தையும் (உஉசு)ஞ் செய்யுளிற்சொன்ன கர்ப்பமாந்தகுணத்தையும் பார்க்க.

---

## புருஷ தோஷகுணம்

---

தன்வந்திரி

போமே உச்சிக்கண்குழியும் பொருந்துண் பாலுந் தங்காது.................*
போமே வயிறுபச்சென்றுப் பொருமியழுகும் பறவைகுரல் .................*
தாமேகுறுகும் ஒருவேளைத் தனியே தனியே சீறியழும்.........................*
காமேசுறுத்தச்குயிலாளே கருவால்புருஷ தோஷமிதே..................... (கூக)

### புருஷ தோஷ நிவர்த்தி

எண்சீராசிரியவிருத்தம்

புருஷனென்ற உடம்பினுடநாக்குவாங்கிப் புகழான எருக்கனுர்சுளி சமாடிப், புருஷனென்ற தாம்பூலமுன்னே வைத்துப் புதுமையாய்ப்பூசைசெ ய்யச்சொல்வேன்கேளு, புருஷனென்ற நயவசிம நூற்றெட்டோதி பூமூலையா ய்ப் பாலகர்க்குக்கட்டுக்கட்டு, புருஷனென்ற குழைந்தைகட்குக் கட்டும்போது புகழ்பலி ஒண்ணன் கொடுக்க தோஷம்போமே......... ........................ (ரா)

இவ்விரண்டு மொருதொடர்

## பெண்ணின் தோஷகுணம்

---

அறுசீராசிரியவிருத்தம்

பருசுவரண்டு கட்குழிந்து நீடும்பெருமூச்சுண்டாகிப் ........................*
பஞ்சுப்போலே கன்வெளுத்துப் பாலுங்குடியாதேயலறித் ..................*
துஞ்சா திரவும்பகலுந் தான்சுருங்கித் தேகமுகம்வேர்த்துச்......................*
செஞ்சொன் மயக்கமுண்டாகில் செப்பும் பெண்ணின்தோஷமிதே...... (ராக)

பெண்ணின் தோஷகுணம்

## தன்வந்திரி

அரிவையர்க்கும் ஆண்பிள்ளைக்கும் அதனில்தோஷமேதென்றால் ............*
கருவாம் அஞ்சுமாதத்தில் காணில் கலந்த தாய்முகத்தை ...................*
பெறுவாள் அந்தப்பிள்ளைக்குப் பேணில்சுளுக்கும் வயிற்றுவலி ...............*
சருகு முகமும் பேயின் குணங்கண்டே யறிந்துச்செய்வீரோ................ (௱உ)

பெண்ணின் தோஷநிவர்த்தி

எண்சீராசிரியவிருத்தம்.

செய்யவே பஞ்சவன்ண மலரொடுத்துச் சேகரமாய்ப் பஞ்சவண்ணமான அன்னம், ஐயமில்லா ஐந்துவெள்ளிப்பணமும் வைத்து அதனுடன் தீபத்தூபம்நெய்விளக்கு, வைக் * கதலியிலேயில் உரு எழுதிதானே வளைதோறுஞ் சாம்பிராணி வர்த்திநட்டு, பொய்யல்லநான்சொன்னேன் பண்டிதர்க்குப்பொதுவாக முச்சந்தி அதில்வைப்பீரோ.........................................(௱௩)

* கதலி - வாழை

இதுவுமது.

வைத்திடவே தோஷமெங்கே கிரகமெங்கே வலியெங்கே நோயெங்கே பறந்துப்போகும், நைத்திடவே சிசுவுடையப் பருவந்தன்னை நாட்டமுடன் கண்டறிந்து கருத்திற்கொண்டு, மெய்த்திடமாய் வதிஷ்டனைப்போல்பொறுமைபூண்டு மேலானபத்மகுணஞ் சாருவோர்க்கு, பைத்திடவே மோட்சமுண்டு நரகம்போச்சுப் பாதகருக்கிந்நூல் தான்கிட்டிடாதே.....................(௱௪)

இம்மூன்று - மொருதொடர்

இதுவும்பெண்ணின் - தோஷநிவர்த்தி - வேறு

குளிசமும் - குடிநீரும் - கைகாலிற்கட்ட

## மருந்தும்

பாவையின்தோஷந்திர பரித்திவேர்க்குளிசமாடி .........................*
பூவைகேள் கஞ்சாங்கோரைப் புனலினிற் காய்ச்சியேதான் ...................*
தேவைநீ குடி கேள்சின்னி சிறுவிளா வசம் போடுள்ளி ......................*
மாவைசிலேயில் முடிந்து மாறு கை காலிற்கட்டே................................(௱௫)

இஃதொன்று மொருதொடர்

முட்டுத்தோஷகுணம்

## தன்வந்திரி

அறுசீராசிரிய விருத்தம்

போமென்றக் குழைந்தை மேனிப் பொன்னிறம் வாடிவேருய் ...............*
தாமென்ற வயிற்றில்பாலுந் தங்காமல் வாயால்போகும்......................*

நாமென்றக் கண்குழிந்து நாக்கு வாய்க்கருகித்தோன்றும் ........................*
காமென்ற மாதவிடையின் கன்னியரொடுத்தக்கூறே........................ (ஈசு)

முட்டுத்தோஷநிவர்த்தி

---

எண்சீராசிரியவிருத்தம்.

கூருனமுன்மந்திரத்தினுலே குளிர்ந்த சலமொண்டுவேப்பிலையாலோது ...*
ஊரான தாய்ப்பிள்ளையிருவருக்கும் ஓதியேயிருவேளைச்சார்தி செய்நீ.........*
சீரானதிப்படியே ஏழுநாள்செய் சிவசிவாபறந்தோடுந்தோஷந்தானும்......*
வேரானமந்திரமேயதில்வேறில்லை வெகுவானநோயெல்லாம் ஓடிப்போமே.()

## குளித்தோஷகுணம்

---

அறுசீராசிரியவிருத்தம்

உச்சிபுங்குழிந்திருக்கும் உயர்விழி வளையமாகும்.............................*
மிச்சமாய் வாந்திசெய்யும் வேர்வைபுமிகவே காணும் ..........................*
பச்சுப்பச்சென்றுதானும் பலபலவண்ணமாக.........................................*
எச்சமாய்க்கழிச்சலுண்டாம் இது குளிதோஷந்தானே.......................(ஈअ)

இதுவுமது

## தன்வந்திரி

---

வேறு

பாரோ உச்சிக்கண்ணிரண்டும் பரிவாய்ப்பள்ளம்வீழ்ந்திருக்கும் ...............*
சாரோகழிச்சல் மிக உண்டாம் தணல்போல் தேகம் மிகக்காயும் ...............*
வாரோகுப்யம்புண்ணுகும் வளமாயுடலுமிகவற்றும் .............................*
மாரோ துன்பமிகப்படும்பார் மனையாள் குளித்துக்கண்டதுவே ............ (ஈக)

இதுவுமது.

வேறு

தண்ணீர்க்குடிக்கும்நெஞ்சுலரும் தளர்ந்துபிள்ளைத்தான் உலரும் ............*
கண்ணீர்ச்சொரியுங்கால்வீங்கும் கழியுஞ்சத்திமிகவுண்டாம்.......................*
அன்னமேநீ அஞ்சாதே அறிந்துசொன்னேன்குளித்தோஷம் .....................*
பெண்ணேசுடலைவிடத்தலைவேர் பிடுங்கிக்கட்டப்புகழ்பெறவே ............(ஈ௰)

குளிதோஷநிவர்த்தி

## தன்வந்திரி

———

எண்சீராசிரியவிருத்தம்

**தோ**ஷமிதுதமுதானைமீக் குட்டிவிளாவேம்பு சோம்பு மஞ்சள்வசம்புட னேசுக்குங்கூட்டி, வாசமிது அரைப்பணாத்துவைத்துக்கொண்டுவாகையிலேபோ ட்டுநீர்க்காய்ச்சியேதான், தேசமிதுதாய்ப்பிள்ளையிருவருக்குந்தேப்த்தமேமுழு க்காட்டிச்சொல்லுவேன்கேள், பாசமிதுமுக்கிணற்றின் தண்ணீர்மொண்டுப்ப சுமஞ்சள் அரைத்ததிலேகலக்கிடாயே.........................................(ாய ௧)

இதுவுமது.

**க**லக்கிடாய் மங் ஸ்ரீயும் ஐயும் சவ்வும் கண்மணியே அறுகாலைநூற்றெட் டோதி, வலக்கிடாய்மேல்தெளித்துக்கடுகவாருவாசமுறுந்தேகமோபசும்பொ ன்வீசும், அலங்கிடாய் சூரிவேர்ப்பிடுங்கிவந்து அன்பாகப்பஞ்சநூல்குளிசமா டி, வலக்கிடாய் பாலனுக்குக் கட்டிப்போடு மகத்தானகுளித்தோஷம் பறந்து போமே.................................................................(ாய ௨)

இவ்விரண்டுமொருதொடர்.

இதுவுங்குளிதோஷநிவர்த்தி

**கு**ளிதோஷந்தான் திரசுடலைதன்னில் குளித்துமுளைத்தறுகம்வேர்க்குளி சமாடி, புளிதோஷந்தனையகற்றிக் கீழ்க்காய்நெல்லிப் புசமும்மான்பச்சரிசிப் புள்ளினோடு, வளிதோஷந்தனையகற்றும்வசம்பு உள்ளிவன்சாறுகொடுத்துமேல் துவாலைசெய்யச், குளிதோஷம் வாந்தியொடுதாகந்தீருங்குறுமுனிவனுணாத்த படிக்கூர்ந்துசெய்யே ................................................ (ாய ௩)

இதுவுங்குளிதோஷநிவர்த்தி

**கே**ளுநீகருடனுடக்கூட்டுச்குள்ளே கிடந்ததோர்முட்டைத்தோடெடுத் துவந்து, ஆளவேசுட்டதனைச்சாம்பலாக்கி அழகாகருலைழந்தைசட்ருத்திலர்தம் போடு, வாளவேமுன்கூட்டைச்சுட்டச்சாம்பல் மைந்தனுக்குநெற்றிபிடமயக்க ந்திரும், தாளவேகுளிதோஷம் பக்ஷித்தோஷம்தான்பறக்குந்தப்பாது தனித்து ச்செய்யே................................................ (ாய ௪)

இதுவுங்குளிதோஷநிவர்த்தி

**சொ**ரிந்தாவின்நெய் உரியில் நல்லெண்ணெய்ப்பாதி சுகமானநன்னாறி த்தண்ணீர்விட்டான், கரந்தைபொன்னாங்கண்ணியுமே பலமொன்றாகக்கழஞ்சு ஏலரிசிச்சிரசமுங்கூட்டிப், பொருந்தவே ஆவின்பால்வார்த்தரைத்துப் புசமடு ப்பில் ஏற்றியே காய்ச்சிக்கொண்டு, திருந்தவேகுளிதோஷம்போவதற்கு சிறு சுரண்டிப்புகட்டிடவேதெளியுங்காணே.........................................(ாய ௫)

### இதுவுங் குளிதோஷநிவர்த்தி

அறுசீராசிரியவிருத்தம்.

ஓமந்தண்ணீர்காட்டாத்தி உயர்ந்தபரித்திபயற்றம்வேர் ..........................*
அமேகுளிசமதுகட்டி அன்பாய்சொரியும்புறமனடைநீர் ............................*
போமேகோழிப்பலிகொடுத்துப் புறமாய்ச்சுற்றிப்போட்டாற்கால் ..................*
தாமேருழவிபிழைக்குமென் றுத்தையற்கரனுர்சாற்றினரோ...............(௱௰௬)

### இதுவுங் குளிதோஷ நிவர்த்தி

வேப்பங்கொழுந்துப் பிடி யொன்று மிளகுபத்து வசம்பு சுக்கு ..............*
வாய்ப்பமலையைத் தான் தாங்கி வளமாய் சமனுய் அரைத்திட்டு...............*
பாப்ப அதனை வடித்திட்டுப் பாங்காயுளளே புகட்டிடவே.......................*
வாய்த்ததோஷங் கழிச்சல்களும் வயமாய் நிற்குங்கண்டாயே..............(௱௰௭)

### குளித்தப்பெண்கண்ட தோஷகுணம்

## தன்வந்திரி

தாயின்முலையில்வாய்வைக்குஞ் சற்றேயுண்ணுந்திகைத்திருக்கும் ...............*
தேய்வாய்தேயும்மெய்வேர்க்கும் சிறுகவெதும்பும்வயிறூளையும்......................*
சாய்வாய் உறங்குஞ் சத்திக்கும் சற்றேசென்றால் * விரோசிக்கும்...............*
பேய்நோய்க்கொண்டதல குளித்தப்பெண்ணுள் கண்டதோஷமிதே... (௱௰௮)
* விரோசிக்கும் - பேதிக்கும்

### குளித்தப் பெண்கண்ட தோஷ நிவர்த்தி

தினமாயிதனைக் கண்டுணர்ந்து காலமாலை யிருவேளை ..........................*
குணமாய்ஓது சடாட்சரத்தைக் குருநீர் அதனை மேல்தெளிக்க.....................*
வனமாயிந்நோய் வர்க்கமெலாம் மாறிப்போகும் இதுதன்னல்...................*
தினமும் வேண்டாம் மூவைந்து தினந்தான்தெளிக்கநோய்போமே ...(௱௰௯)
இவ்விரண்டு மொருதொடர்

## குளித்தவள் எடுத்த தோஷகுணம்

மதலையின்மேனிவாடி வயிற்றினில் பாலுந்தங்கா...................................*
சதலையிற்சுழியுண்டாகி சத்தியும் எடுக்குநீராய்...................................*
* நுதலினிற்சலமுநண்ணி நோக்கியவிழியுந்தாழ்ந்து...............................*
குதலைவாய்க்கருகித்தோன்றுங் குளித்தவளெடுத்தக்காலே...............(௱௨௰)
* நுதல் - நெற்றி.

இதுவுமது.

பாலகன்பவளவாயிற் பனியென வேர்க்கும் மூக்கும்............. ............*
ஆலகண் விளையமாகும் அடிக்கடி வயிறுபோகும்...............................*
காலதுபின்னிக்கொள்ளுங் கதரியே யலறிச்சீறும்................................*
சீலமாய் விழித்துத்தாவுந் தீதவுளெடுத்தக்காலே.........................(ாஉக)

---

குளித்தவளெடுத்த தோஷநிவர்த்தி குளிசம்

எண்சீராசிரியவிருத்தம்

ஆரியதோர் இன்னமொருகிரியைகேளு அழகானபாலனுமேமெலிந்துவாடில், சீருடனேமாந்தகணதோஷமெல்லாந்தெறிப்பட்டுப்போவதற்குசேதிக்கேளு, வேருவசைதூதுவளைக்குப்பைமேனி விளங்குகின்றக்குருவிச்சித்தும்பையோடு, நீருடனேயிவ்வேருகொண்டுவந்து நிட்செயமாய்க்குளிசம்நீ நிகழ்த்திக்கட்டே..................................................(ாஉஉ)

இதுவுங் குளித்தவளெடுத்த தோஷநிவர்த்தி வேறு குளிசம்

கட்டுவாய் திருகுகள்ளி வடக்குவேரைக் காப்பிட்டு ஞாயிறுநாட் பிடுங்கிவந்து, சுட்டுவாய்க்குளிசமுடன் நீர்ச்சொரிந்து சுகமாகக்கட்டிடவே நோய்கள்தீரும், மட்டாக மூன்றுநாள் நீர்ச்சொரிந்து மதலைக்குச்சாந்திசெய்ய மயக்கந்தீரும், தொட்டிருந்த தோஷமெல்லாந் துடித்தே யோடுஞ் சொன்னபடிக் குளிசமு நீர்ச்சொரிந்திடாயே..........................................(ாஉங)

இக்கிரியை மாந்தகண தோஷத்துக்குஞ் செய்க

## கர்ப்பம்அழிந்த தோஷகுணம்

---

அறுசீராசிரியவிருத்தம்.

குடித்தபாலுந்தங்காது குஞ்சியுடம்புமிகநொந்து..............................*
மிடித்த நெஞ்சுயர்ந்தண்ணந்து மிகவே நோகுஞ் சடநாறும் ...............*
படியுங் கைகால் அழுக்கேறிப் பதைத்து வருத்தப்படுமானல்..................*
துடிக்குச் சமனும் இடையாளே சொல்லாயழிந்தோஷமிதே ..........(ாஉச)

இதுவுமது

காலும்பின்னும் உடம்பிளைக்கும் கழியுஞ்சத்திமிகவுண்டாம் ................*
மேலும்சிவக்கும் உடல் நாறும் விழியுஞ்சொருகிமிகமயக்கும் ...............*
வேலுஞ்சேல்போல்விழியாளே வில்போல் புருவமுடையாளே....................*
கேளுமிந்தகுணங்கண்டால் செர்ப்பம் அழிந்ததோஷமிதே ;..........(ாஉரு)

கர்ப்பமழிந்த தோஷநிவர்த்தி குளிசமும் குடிநீர்

கெர்ப்பமழிந்ததோஷத்தின் கிலேசந்திரக்கிரியைக்கேள்..........................*
கர்ப்பக்காட்டாத்தியின்வேரைக் கதிக்கவே குளிசஞ்செய்து..........................*
அப்பப்பரித்திவேர் அரைத்து அருந்தக்குளிர்ந்தத்தண்ணீரை ..........................*
கற்பப்பனையின்வெல்லமதைக்கரைத்துநீரில் கொடுத்திடுமே............(௱௨௬)

## தேரைத் தோஷகுணம்

---

தேனேர் மொழியாய்நீகேளாய் தேரைக்குணந்தான் இயம்புகிறேன் .........*
ஊனேவற்றி யுடம்புலரும் உயர்ந்தே நெஞ்சு தான்கூடும் ..........................*
கானேகண்ணும் பொடித்திருக்கும் கையுங் காலுஞ்சுரிமுடக்கும்..............*
மானே வயிறுபுடைத்திருக்கும் மலமுந்தீயும் வாயுலரும்..................(௱௨௭)

இதுவுமது

உலருந்தண்ணீர் தாகிக்கும் உந்திமலருங் குரல்வேறும்..........................*
மலர்ந்த தாமரைப்போல் முகமும்வாடி யொடுங்கிச்செவி தாழும் ...... .....*
முலையின்பாலும் உண்ணாது மூச்சுவாங்கும் இதுதீர..............................*
பலருஞ் சொன்னார் என்னாமல் * பழிச்சேதென்றுக் கேட்டிடுமே......(௱௨௮)
பழிச்சல் - துதித்தல்

இதுவுமது

காலுங்கையுமிகவற்றிக் கட்டிப்போட்டால் போல்பிள்ளை ...................... *
மேலும் வற்றிவெளுப்பிட்டு வேறேகுணமாய்க் குரல் நெறித்து .............. *
சாலமுலைப்பால் குடித்தாலுஞ் சற்றுந்தேறுதிருப்ப தெனில் ................... *
நீலவட்டமுலைமாதேநிசமாம் தேரைத் தோஷமிதே........................ (௱௨௯)

தேரைதோஷத்துக்கு

## மருந்து

ஆசிரியவிருத்தம்

புள்ளடிச்சிறுபீளைநீராரை தன்னுடன் புகழ் காணி நீர்முள்ளியும் ............*
பொய்யாமல் இவ்வகைசமூலமுடனே களா * புனமல்லிக்குமிழ் † நீலியும்....*
மொள்ள வரு கரிசலாங்கண்ணியுடனே முடக்கொத்தானுவேர்சமனதாய் ...*
முந்நாழிநீர்தனைநாலிலொன்றாகவே முதல் பாகமாயிறக்கி.......................*
மெள்ள அதிமதுரமும் திப்பிலிபிநேடேலம் மிளகுவகைக்கால் பலமதாய்...*
மென்பசும் பால்விட்டரைத்துக்கலந்திமே யிருநாழிநெய்யினுடனே .........*
உள்ளபடி நன்றாய் எரித்ததைவடித்துபின் உரைத்திடுகரண்டி யளவாய்.........*
உண்டிடக்குளி தோஷந்தேரையின்தோஷமுடன் ஓடியேபோய்விடுமதே(௱௩௰)
* புனமல்லி - காட்டுமல்லி † நீலி - அவுரி

சகலதோஷ நிவர்த்தி

## தன்வந்திரி

எண்சீராசிரியவிருத்தம்

நிமையான தோஷசர் வாங்கமெல்லாம் நிமைட்போதில் தீருதற்கு மூலஞ்சொல்வேன், வமையான - வ - ந - சி - ம - ய - என்றுதானே வங்- சிங்- என்று சி - வ - ய - ந - ம என்ன, திமையானதோஷநிவர்த்தித்தானுச்சுசொல்லவும் போகுமோ சூட்சாசூட்சம், கமையான தோஷநிவர்த்தித் தன்னுலே கவலை நீக்கிக் காட்சிப் பெறுவாய் தானே ................................(௱௩௧)

சகலதோஷத்துக்கும் குளிசம்

கீழ்க்காயினெல்லிவேர் முடக்கொத்தான்வேர் கிருபையுள்ளநாயுருவிகஞ்சாங்கோரை, தாழ்க்காயின்விடத்தலேவேர் நிலக்கடம்பு தழைத்தசிறுபுள்ளடி பேய்ச்சுரையின்வேரும், கோழ்க்சாயின்எட்டுவிதவேரு வாங்கிக் குளிசமிட்டுக் குழைந்தைக்குந்தாய்க்குங்கட்ட, ஊழ்க்கான சகலதோஷங்களெல்லாம் ஓடிகடலிற்புக்கும் உண்மைதானே ........................................... (௱௩௨)

தோஷங்களுக்கெல்லாம்

## மாத்திரை

---

எண்சீராசிரியவிருத்தம்

அதிமதுரம் மரமஞ்சள் முத்தக்காசு அதிவிடையம் வசம்பு கடுக்காயும்நல்ல, புதிதேவதாரமெல்லாஞ்சமனுப்ச்சேர்த்துப்பொடிதலேச்சாற்விட்டரைத்துக் குன்றிப்போல, கதிபெறவேயுண்டைசெய்து மூலைப்பால்தேனில் கருணையுடனேகொடுக்கமதலேகட்கு, சதியானதோஷமெல்லாம்பறந்தோடி சமுத்திரத்திற்புக்குமெனச்சாற்றினேமே..................................................(௱௩௩)

சகலதோஷத்துக்கும் துவாலை கைகாலிற்கட்ட

## மருந்து

அறுசீராசிரியவிருத்தம்

வகுக்குந்துவாலேதனைக்கேளு மானேசின்னிவிளாநொச்சில் ....................*
பகுக்குஞ்சீந்தில் தான்வேம்பு பையநறுக்கிவசம்புள்ளி ..........................*
தொகுக்கத்துவளேத்தனேயிடித்துத் துவாலேகண்டக்கால் தன்னில் ............*
மிகுக்கமுடிந்துக்கட்டிடவே விரைந்துதோஷம்போய்விடுமே............(௱௩௪)

## திராதோஷகுணம்

அறுசீராசிரிய விருத்தம்

செய்யக்கண்ணுமிகசொருகும் சிதந்தண்ணீராய்கழியும்.........................*
மையமேனிக்கறுப்பாகும் மாங்காய்ப்போலே ஆசனமாம்.........................*
வையதேகமிக இளைச்சும் வானப்போலேவயிறுக்கும்.........................*
செப்பதோஷமிதுதானே திராதென்றுதான் உரையே ....................(ாநரு)

இதுவுமது

சேயினுடம்புமிகவுறுங் செல்லாமுலைப்பால் அருவருக்கும் ....................*
காயுமுடம்புகண்குழியுங்கண்டால் இதுதான் அறியாயோ.........................*
தேயுமிடையாய் சிவனுணைத் திராத்தோஷமென்றேதான்.........................*
ஆயுர் வேதத்தளவுகண்ட அகத்தீஸ்வரனுர் அருளினரோ................ (ாநசு)

தோஷவகுப்பு முற்றிற்று.

அகத்தியர் திருவடிகளே சரணம்.

---

# மாந்தவகுப்பு.

---

## மாந்தம்வருமாறுகூறுகின்றூர்

அன்னமும் பாலு நெய்யும் அழகிய பழமுந்தெங்காய் .........................*
பிள்ளைபுங்கடலைவெல்லம் பெரியதோர்க் கதலிப்பண்டும் ....................*
தின்னுமோர்க் காலந்தன்னில் தீயென வெதுப்புமாகில்.........................*
ஒண்ணில்லா பிள்ளைக்குத்தான் உகந்துமே மாந்தமுண்டாம்............ாநஎ)

இதுவுமது

அன்னைப்பால் மலக்கட்டாகி அதன் உடல்கனத்துத்தோன்றி ..... ........*
* தின்னத்தால்வாயுபண்டந் தின்றதனுலேமாந்தம் .........................*
பின்னைத்தான்மயிர்க்குச்சிட்டுப் பிள்ளைக்குவெதுப்புக்காணும் ....................*
மின்னுெத்த இடையாய்கேளாய் மிகுத்திடுங்கழிச்சல் தானே............(ாநஅ)

* தின்னம் - வலி.

இதுவுமது

மாதாவயிற்றின்மந்தமுலைப்பாலையருந்திவருமாந்தம் ........................*
ரூதாம் அரம்பைத்தெங்கிளநீர் * சுரபி மாங்கிஷங்கனி கவிச்சு...............*
பேதா மலைத்துவணக்கடலைப் பேசுமொச்சைப்புளியங் கொட்டை............*
மாதாக் கொள்ளில் பிள்ளைக்கு வருங்காண்மாந்தந்தப்பாதே ............(௱௩௬)
* சுரபி - கள்

இதுவுமது

தன்வந்திரி

எந்தநோயும்வருவிதந்தான் இனித்தவெல்லமுந்தெங்காய் ....................*
சொந்த உண்டை உளுவைபுடன் துள்ளுவாளை வரால் கெண்டை...............*
சுந்தமேதிப்பால் இறைச்சி சருகுந்தண்ணீர்ப்புளி மோர் தான்................*
வந்தபாகல்சுரைக்கதலி வருகுமாந்தமிவைதின்றால் ........... ........(௱௩௰)
இஃதொருதொடர்

மாந்த தொகை (உக) கூறுகின்றார்

---

என்னுமாந்தவகைகேளு இயலும் வாதமாந்தமுடன் ........................*
உன்னியபித்தமாந்தம் உயர்செறி சேஷ்ம மாந்தம்..............................*
பன்னியவிஷமா மாந்தம் பாடுதுபோரின் மாந்தம்..................................*
துன்னியவாலைமாந்தம் சுரமாந்தம் இன்னங்கேளே........................(௱௪௧)

இதுவுமது

எண்சீராசிரிய விருத்தம்.

கேளேநீர்மாந்தமுடன் செரியாமாந்தம் கேடுபுரிகட்டுமாந்தத்தி னோடு, பாளானபால்மாந்தம் துலையாமாந்தம் பகரரிய எரிமாந்தந் தலையின்மாந்தம், தாளான கணமாந்தம் வலிப்புமாந்தம் சதியானசுழிமாந்தம் முக்குமாந்தம், வேளான சன்னிமாந்தம்ஊதுமாந்தம் வீக்கமுறு மாந்தமுடன் இருபத்தொன்றே............................................................... ...(௱௪௨)

வாதமாந்த குணம்

அறுசீராசிரியவிருத்தம்.

ஒன்றும் வாதமாந்தகுணம் உரைக்கக்கேளு * திருக்கறவே .................*
பொன்ற கால் கை குளிர் † துதரம் பொருமும் விழியால் பார்த்தழுகும்.....*

குன்றுமெய்யில் வேர்வையுமாம் குழியவலிக்கும் பலவிதமாய்.....................*
துன்றுதுடிக்குங் கோட்டாவி துளையுநாசிப் புண்ணுமே.....................(௱சு௩)
* திருக்கு - குற்றம் † உதரம் - வயிறு

## பித்தமாந்த குணம்

ஆமேபித்தமாந்தகுணம் அடுத்தேவாந்திபேதியுமாய்.....................*
தாமேமூர்ச்சையாய்க்குரலுந் தயங்கிக்கம்மலாகிவிடும்.....................*
போமேமேனிமஞ்சனித்துப் புசியும்வேர்வையாய்க்கடுக்கும்.....................*
வாமேகுழவிதேகமெங்கும் வலிக்குங்குளிருமயக்கிடுமே.....................(௱சச)

## சேஷ்மமாந்த குணம்

மயக்கிடுஞ் சேஷ்மமாந்தம் வகையினை தகையாய்க்கேளு .....................*
முயக்கிடுநளிருண்டாகும் முழுதுடல் சிலுசிலீர்ப்பாம்.....................*
பயக்கு நாவும்வெளுக்கும் பயந்தே * அரலைதான்கொடுக்கும்.....................*
சயக்கவயிறுசழிந்துவருந் தளராபொருமும் வயிறதுவே..................... (௱சரு)
* அரலை - கோழை

## மாந்தகுணங் கூறுகின்றார்

பிள்ளையுங்கனத்திருக்கும் பிரண்டைபோல் காலும் பின்னி.....................*
உள்ளமுங் கண் சிவந்து உடம்பினில் நோயுங் காட்டும் .....................*
துள்ளியே கையில் தங்கா துடுக்கெனச் சுழலுமாகில் .....................*
கள்ளமாய்க்குரலுந் தாழ்ந்துக் கண்குழிந் திருக்குமாந்தம்.....................(௱சசு)

இதுவுமது

மாந்தத்தின்குணமேகேளாய் வயிறுபோம் வெப்பு நாறும்.....................*
சோர்ந்து கைகால்குளிர்ந்து தேசகையேமுலையுண்ணாது .....................*
வாந்தியுங்கமேபண்ணும் வாயுமே யுலர்ந்துக்காயும்.....................*
மாந்தியேமயக்கமுண்டாம் மாந்தத்தின்குணமதாமே.....................(௱சஎ)

இதுவுமது.

வேறு

மாந்தத்தின் குணமேதென்றால் வயிறுசழியுமயக்கமதாய் .....................*
காந்துப் பசியுமில்லாமல் காமவிசாரங்கொண்டவர்போல்..................... *
சோர்ந்துகிடக்குங்கைகாலுங் குளிர்ந்தேகாணுர்தொல்லுலகில்..................... *
காந்தள் மலர்போல் கையுடையாய்க்கனத்தமாந்தகுணமிதுவே..... (௱சஅ)

இதுமவுது

## தன்வந்திரி

பாரோசிதமலமுடனே பதமாய்க்கழியும் பலவிதமாய் ..........................*
தேரோ கெட்டப்பாலதுபோல் தெளிந்ததண்ணீர்ப் போலவுமே ..............*
வாரோகழியுங்குணம்பாரு வளமாய் உள்ளங்கைகாலும் ............................*
நேரோகுளிர்ந்தத்தண்ணீர்போல் நிசந்தானென்றுத் தான்பாரோ... .....(௱சகூ)

இதுவுமது

பாரோவெதும்புங் கண்சுழலும் பனிபோல் தேகமிகவேர்க்கும்..................*
பாரோமுகமும்பலவிதமாய்ப் * பளிங்குபோலே ஒளிமினுக்கும்..................*
பாரோயிந்தக்கூறதனைப் பருவம்அறிந்துக் கொண்டெல்லாம் ................ *
பாரோயிந்தக்குறிதானே பண்பாய் மாந்த மென்றனையே................ (௱௫௰)

* பளிங்கு - கண்ணுடி. இவ்விரண்டுமொருதொடர்.

மாந்தத்துக்கு

## பச்சிலைச்சாறு

வெண்பா

நொச்சிப்பொடுதலையும் நுணா * வேலி இந்நான்கும் ..........................*
பச்சை இலைசரியாய்ப்பாலருக்கு - அச்சமற.........................................*
† நீர்வரவேதான் நறுக்கி நீகொடுக்கவேமாந்தம்........................................*
ஊர்விட்டுப் போமென்றுனை ............................................. ...... (௱௫க)

* வேலி - உத்தாமணி † நீர்வரவே - சாறுவர

மாந்தத்துக்கு வேறு

## பச்சிலைச்சாறு

அறுசீராசிரியவிருத்தம்

உத்தாமணியும் பேய் மிரட்டி உகந்தசாணைக்கிலையுடனே .......................*
வித்தாரமுள்ள வெதுப்படக்கி வேளை நொச்சில் இவை ஆறும்.................*
ஒத்தே வதக்கிச்சாறு கொண்டு உயர்ந்த வசம்பு சிறுதேக்கு ....................*
சற்றே ஆமை ஓடுச்சுட்டுச் சாற்றிற் கொடு மாந்தம்போமே............(௱௫௨)

மாந்தத்துக்கு வேறு

## சுரசம்

நிலமண்டில வாசிரியப்பா

ஒருபிடிபொடுதலை ஓர்கல்லுப்புடன்..................................................*
இருவிதம் ஒன்றதாய் இடித்துச்சாறுசெய் ................................................*

சிறுவிதசட்டியிற் சிறுகசெய்தபின் ..............................................*
தருவிதம் உண்டிடத் தணியுமாத்தமே ..............................................(௱௫௩)

மாந்தந்துக்கு வேறு

## குழம்பு

---

அறுசீராசிரிய விருத்தம்

வெற்றிலேக்காம்பு பதினென்று மேவு வசம்பு அவ்வளவு ..........................*
பற்றிய உள்ளித்தான் இரண்டுப்பண்பாந் திப்பிலி தான் ஒன்று...................*
சுற்றி வெதுப்பித்தான் அரைத்துச் சுகமாய்ப் பருவந்தக்கபடி.......................*
வற்றிய வெந்நீர தனிலிடவே மாந்தம் போமென்றருளினரோ .........(௱௫௪)

மாந்தத்துக்கு வேறு

## குடிநீர்

---

கிடுமே ஓமம் உள்ளியுடன் மீறுமிளகுதிப்பிலியும் ...................................*
நடுமேசிலேந்தனில் முடிந்து நன்றுய்ந்நாழிநீர்தன்னில் ............................*
இடுமே அடுப்பில் எட்டொன்றுய் இதமாய்க்காய்ச்சிக்குடிநீரை...................*
கொடுமே மாந்தம் உள்ளவெலாங் குடிபோமென்றுக்கூறினரோ.........(௱௫௫)

மாந்தத்துக்கு வேறு

## மருந்து

வல்லக் * குரேட்டை இலேயதனைவாட்டிப்பிழிந்து தானதிலே .....................*
† கல்வியோடு நல்வசம்புக் கனத்தவட்டத்திருப்பியுடன் ...............................*
சொல்லிச்சுட்டு ஆட்டியதை சுருக்கில் கலக்கிவார்த்திடவே........................*
மல்லும் பொல்லாவினையான மாந்தம் போமென்றருளினரோ .........(௱௫௬)
* குரேட்டை - விளா † கல்வி - ஆமை

மாந்தத்துக்கு வேறு துவளேயும் உள்ளுக்கு

## மருந்து

* வேலிப்பரித்தி † மேனியுடன் வேளேயிண்டுப் பொடுதலேயும்....................*
ஆவித்தின்னும் அகத்தியிலே ஆறும் வதக்கிச்சாறு ‡ கொடு ........................*
கோலவசம்பு ஆமையோடுக் குலவும் ஓமம் சுட்டரைத்துக் ..........................*
காலிற் கையில் துவளேயிட்டுக் கடுகக்கொடுமாந்தம்போமே ........... (௱௫௭)
* வேலிப்பரித்தி - உத்தாமணி † மேனி - குப்பைமேனி ‡ கொடு - கொண்டு.

மாந்தத்துக்கு வேறு துவளை

## தேறையர்

கலிவிருத்தம்

ஆவும் சின்னி அடவி வெஞ்சணைச்சிலை.............................................*
ஏவு வேப்பிலைச் சீந்தில் இடித்து * நீர்.................................................*
மேவு மூன்றுநாள் மேல்த்துவளையிட .................................................*
நோவுமாந்தம் நொடிக்குளே நீங்குமே................................................. (௱௫௮)

* நீர் - சாறு- இஃதொருதொடர்

மாந்தத்துக்கு வேறு

## கியாழம்

வெண்பா

வேளைவேர்ச்சுக்குடனே வெந்தயமும் வெள் உள்ளிப்...............................*
யாளைசேர் ஓமம் பருவசம்பு - வாள்விழியாய் ...........................................*
ஒன்றாகக் காப்ச்சி உடன் குழவிக்கீயக்.................................................... *
கண்டாலும் மாந்தம் போம்காண் ................................................... (௱௫௯)

மாந்தத்துக்கு வேறு

## கியாழம்

எண்சீராசிரியவிருத்தம்

என்றே * மஞ்சணத்திநொச்சில் இனிய † வேலிக்கழல்கொடியும்......................*
ஒன்றாய் ஒவ்வொன் றொருபிடியாய் ஒக்கவறுத்துச்சட்டிதனில்..........................*
நன்றாய்க்கருக்கி நீர்ந்நாழி நயந்துவிட்டு அடுப்பேற்றி................................*
கன்றாய் ஓமம் வசம்புச்சுக்கு மிளகுப்பொடுதலைக்காயாமே ............ (௱௬௰)

* மஞ்சணத்தி - நுணா. † வேலி - உத்தாமணி.

இதுவுமது

ஆமேதிப்பிலி அதனோடு அரு நல்லெண்ணெயில்சிவக்கத்..................................*
தாமேவறுத்துப்பொட்டணமாய்ச் சமைந்த நீரினுடன்போட்டு..............................*
வேமேகாய்ச்சியோர் சங்கு விளாவில்கொடுப்பீர் ஆமாகில்..................................*
போமேமாந்தமுள்ளவெலாம்போயிக்கடலிற்புக்கிடுமே..................(௱௬௧)

மாந்தத்துக்கு வேறு

## கியாழம்

உத்தாமணியிலைவேளையின்வேர் உகந்தநொச்சில் பொடுதலையும்............ *
சித்தமுருங்கைநுணா ஈர்க்குச் சேரவறுத்து நீர்விட்டு ...................................... *

ஒத்தாய் ஓமம் * திரிகடுகு உயர்ந்தவசம்பு முடிந்ததனை..........................*
வைத்தெட்டொன்ருய்க்காய்ச்சி தர மாந்தம் எலலாம் ஓடிடுமே.........(௱௬௨)
* திரிகடுகு - சுக்கு, மிளகு, திப்பிலி.

மாந்தத்துக்கு வேறு

## கியாழம்

சுக்குமிளகுதிப்பிலியும் துப்ய ஓமம் உள்ளியுடன் ..................................*
ஒக்கநறுக்கிச்சிலேயினில் உகந்துமுடிந்துநீர் உழக்காய்...........................*
செக்கச்சிவக்கக்காய்ச்சியபின் சீராய்ச்சங்குபுகட்டிடவே ..........................*
மிக்கமாந்தப்பிணிதோஷம் விட்டேயோடுங்கண்டாயே ................. (௱௬௩)

மாந்தத்துக்கு வேறு கியாழம்

## தன்வந்திரி

எண்சீராசிரிய விருத்தம்

கியாழத்தால் மாந்தங்கள் போகக்கேளு கெடியானமாசிபத்ரிபற்பாடந்தான், கயாழத்தால் நாயுருவி முட்காவேளை கருஞ்சீரகத்துடனேகோழியெச்சம், இயாழத்தால்பற்பமாய்ச் செப்துங்கொண்டு * இருவேலிசங்குச்சுக்கோடேஏலம், சியாழத்தால் † ரோகணியும் பறங்கிச்சக்கைச் சீக்கனும்பட்டைக்காவட்டம்புல்லே ......................................................... (௱௬௪)

* இருவேலி - வெட்டிவேர். † ரோகணி - கடுகுரோகணி.

இதுவுமது

புல்லானகடுக்காயும் மாசிக்காயும் புகழானவசம்போடு தான்றி முத்தம், வில்லான நீர்படியிரண்டதாகும் விதமாக எட்டொன்ருய்க் காய்ச்சியேதான், கல்லான மாந்தமொடுசுழிமாந்தங்கள் * கைப்† பினிப்பால் வந்ததொருகழிச்சல் மாந்தம், மல்லான மாதா வாய்ச்சிறுபண்டத்தால் மருவிவந்த மாந்தமெல்லா மயங்கிப் போமே ...........................................(௱௬௫)

* கைப்பு - கசப்பு. † இனிப்பு - தித்திப்பு. இவ்விரண்டு மொருதொடர்

மாந்தத்துக்கு வேறு

## குளிகை

அறுசீராசிரியவிருத்தம்

என்றே ஓமம் திப்பிலி சுக் * கிருசீரகமுங் கொத்தமலி......................*
பன்ருமையோடு குராசானி பகரதிறுத்து ஓர்நிறையாய் ........................*
துன்ருநீரில் தானரைத்துத் துதித்தநல்லத்துவரையென ......................*
உண்டைமாந்தம் உள்ள எலாம் ஓடுங்கண்டாய்உண்மையிதே..........(௱௬௬)

* இருசீரகம் - நற்சீரகம் - கருஞ்சீரகம்.

மாந்தத்துக்கு வேறு

## குளிகை

மாசிலார்க்குமாந்த உண்டை வண்மையுடனேதான் அணக்க..................*
ஆசையாக வாய்விளங்கம் ஆமைஓடு நன்மிளகு.......................................*
வாசமான பொடுதலைக்காய் வசம்புதிப்பிலி கழல்பருப்பு.........................*
கூசாமல்சரிநிறையாகக் கூட்டிநீவைத்தரைத்திடுமே .....................(௱௬௭)

இதுவுமது

அரைத்தமருந்துபொடுதலைச்சா றம்மிதனிலேவிட்டரைத்து..................*
நிரைத்தசூரைக்காயளவு நிழலில் உலர்த்திக் குளிகைதனை ...................*
சுரத்தின்கழிச்சல் இருமலுக்கு சொற் * சிறுவழுதலைக்கியாழத்தில் .........*
உரைத்து உண்டைதனைகொடுக்க உடம்பிற்பிணியுந்தீர்ந்திடுமே.........(௱௬௮)
சிறுவழுதலை - கண்டங்கத்திரி.

இதுவுமது அதற்கு

## அநுபானம்

வாந்திப் பொருமலுக்கெல்லாம் வளரும் * வேலிக்கியாழத்தில்...............*
ஒப்ந்த வெகுவாய்க்கழிச்சலுக்கு ஓமக்கியாழந்தன்னிலிட .....................*
சேந்தியான மாந்தத்துக்குக் கியாழமறிந்தே யிடுவீரேல்.........................*
மாந்தம் விட்டுத் தானகலும் வளரும்பிள்ளையாமென்றே ...............(௱௬௯)
* வேலி - உத்தாமணி

மாந்தத்துக்கு வேறு

## குளிகை

திரிகடு கோமம் உள்ளிச் சீர்பெருங்காயமற்றக் ..................................*
கரிடசீரகம் வகைக்குக் கணக்கது விருகன் நாலு .....................................*
அரியதோர் வசம்பு மூன்று * அரிதகிப் பதினைந்தாகும் ..........................*
புரியசாரணைவேர் ஐந்துப் பொடுதலைக்கொழுந்துமாமே ...............(௱௭௰)
* அரிதகி - கடுக்காய் (அன்றியும்)

கடுக்காய்களில் எழுவகைப்படும் அவையாவன

விசையன்கடுக்காய் விந்திய தேயத்திலுற்பத்தி பேய்ச்சுரைக்காய் போன்றிருக்கும் இதற்கு வாதந்தீரும், உரோகணிகடுக்காய் கன்னிமா குமரியிலுற்பத்தி நால்வகிராயிருக்கும் இதற்கு சன்னிதீரும், பிரிதிவிகடுக்காய் சௌராஷ்டிரதேயத்திலுற்பத்தி மேற்றோல் மெல்லியதாயிருக்கும் இதற்கு பயித்தியந்தீரும், அமுர்தகடுக்காய் காசிதேயத்திலுற்பத்தி சதைபோன்றிருக்கும் இதற்கு

சேஷ்மந்தீரும், சிவர்திக்கடுக்காய் கானிலுற்பத்தி பொன்னிறமாயிருக்கும் இதற்கு மூலந்தீரும், திரிவிருதைகடுக்காய் மலைகளிலுற்பத்தி பஞ்சவன்னமாயிருக்கும் இதற்கு விரணந்தீரும், அபையன்கடுக்காய் பொதிகை மலையிலுற்பத்தி கறுப்பாயிருக்கும் இதற்கு துன்பந்தீரும்........................(௱எக)

இதுவுமது

ஆம்பெருந்தும்பைக்கொழுந்து அவ்வளவு * வேலிப்பத்ரம் ..................*
ஓம்பெறதான்வெதுப்பி ஒன்றாகவே இடித்து...................................*
தாம்பெருந்தும்பைச்சாற்றில் தனி பொடுதலையின்சாற்றில் ..................*
காம்பட அரைத்துச்சுண்டைக் காயள வுண்டைசெய்யே................(௱எஉ)
* வேலிப்த்திரம் - உத்தாமணியிலே.

இதுவுமது

செய்ததோர்குளிகைதன்னைத் திகழ்நிழல் உலர்த்திக்கொண்டு..................*
வையகபாலர் தங்கள் வளர்பருவத்தைப்பார்த்து ...................................*
கொய்ய * கால் அரை முக்கால் முழுக் குளிகைவெந்நீரிலீய ...................*
மைமாந்தங் கட்டுமாந்தக்கழிச்சலும் வலிப்பு போமே ..................(௱எ௩)
* வ - ௨ - ௩ - க.

மாந்தத்துக்கு வேறு குளிகை

## தேரையர்

---

கலிவிருத்தம்

போகுஞ் சண்பகப் பூ இலாமிச்சம்வேர் ........................................*
ஏகுங் கோஷ்டமோ டேலங்கோரோசினே ........................................*
வேகுஞ் சாத்திர பேதி * மதுரமும் ................................................*
வாகுவெட்டிவேர் மாசிப்பச்சொன்பதே ..................................(௱எச)
* மதுரம் அதிமதுரம்

இதுவுமது

ஒன்பது வகைக் கொன்றுங் கழஞ்செடை .......................................*
மின்பதவெட்டி வேர்த்தண்டுச் சாற்றினில் .......................................*
நன்பது எழு நாழிகையாட்டிநீ ...................................................*
பின்பது குன்றிப் போலத்திரட்டியே....................................... (௱எரு)

இதுவுமது.

திரட்டு உலர்த்தி யொருமாத்திரை ..............................................*
விரட்டுமுலைப்பாலிள வெந்நீரில் ...............................................*

குரட்டிடும் இழைத்தே கொடு மூன்றுநாள் ..............................*
சுரட்டிடும் பின் கடும்பிணியாவுமே...............................(ாஎசு)
இவைமூன்றுமொருதொடர்.

மாந்தத்துக்கு வேறு குளிகை

## தன்வந்திரி

உடைப் பென்பூரம் பலம் அரைதான் ஓகோ லவங்கம் ஏல்முடன் ..........*
திரைப்பென்வசம்பு சீரகந்தான்திறமாய் மாசி அதிவிடையம் ..........*
கரைப்பேன் வகைக்குங் காலபலமாய்க் கனமாய்ப்பூரஞ் சுத்திசெய்து........*
மரைப்பேன்கல்வம் அதிற்போட்டு மாசிப்பத்திரிவேர்ச்சாறே...........(ாஎஎ)

இதுவுமது.

வேர்ச்சாற் சாமம் ஒன்றரைப்பாய் விட்ணுக்கரந்தைச்சாற்சாமம்...........*
வேர்ச்சாற்வார்த்து அரைத்துசகொண்டு விதமாய்க்கொத்தமல்லியைப்போல்*
வேர்ச்சாற்குளிகைசெய்துக்கொண்டு விளங்குநிழலில் உலர்த்தியபின்.........*
வேர்ச்சாற்குளிகைசெப்பில்வைத்து வேதப்பொருளேமனதிலெண்ணே(ாஎஅ)

இதுவுமது.

எண்சிராசிரியவிருத்தம்.

எண்ணவே குளிகை யொன்றெடுத்துக் கொண்டு எழிலானமாந்தத்தின்கியாழத்திய, எண்ணவே ஓடிவிடு மாந்தமெல்லாம் இயம்பினேன் முன்சொன்னதெல்லாம்போகும், எண்ணவே இம்மொழிபோல் ஆர்தான்சொல்வார் எடுத்த முறையாடு மிந்தமுன்னூறுபாரு, எண்ணவே முன்சொன்ன மாந்தமெல்லாம் என்சொல்வேன் பறந்தோடும் இதனுல் பாரோ ..........(ாஎகூ)

மாந்தத்துக்கு வேறு

## நெய்

* கட்டளைக் கலித்துறை

சுத்தாவின் நெய்யும் ஒருநாழி ஓமம் துதிபலந்தான் ........................*
உத்தாமணி இலை வெற்றிலைச்காம்பொவ் வொருபிடியாய்.....................*
வித்தான சுக்குடனே வசம்புள்ளி விருகனெடை ...............................*
எத்தாய் அரைப்பித் தெரியிடமாந்தங்க ளேகிடுமே ...................(ாஅய)

மாந்தத்துக்கு வேறு

## எண்ணெய்

ஏகும் அகத்திச் சாரணை வேலி எண்ணெய் ஓர் உழக்காய் ..................*
வேகமதாகவுங் * கூனன்முது குள்ளி வெண்வசம்பு .............................*

ஆகமதாகவிருகல்லெனடையும் அரைத்ததனைப்...........................*
பாகமதாக எரியிடமாந்தம் பறந்திடுமே...........................(௱௮௧)

* கூனல்முதுகு - ஆமைஓடு.

* சொல்லாறுவல்லின மெல்லினமோடிடை தோன்றிலொற்று...........*
நில்லாது நேர்நிரை நேராய் நிறைந்து நிரம்பியநூற்...........................*
கல்லாதமாந்தர்க டேமாங்கனியென்பர்கற்றுணர்ந்த...........................*
நல்லாரொவர்களுங் கூவிளங்காயெனநாட்டுவரோ...........................(௱௮௨)

* இச்சூத்திரத்தாற் கட்டளைக்கலித்துறையை யறிக

மாந்தத்துக்கு வேறு எண்ணெய்

## தன்வந்திரி

கலிவிருத்தம்

செய்திடமாந்த எண்ணெயைச்சொல்வேன்...........................*
வைதிட இஞ்சி சங்குடன் சின்னி...........................*
சைதிட காணி கரந்தையும் வன்னி...........................*
நெய்திட எல்லாம் நேராய்ப்பிழிந்திடே...........................(௱௮௩)

இதுவுமது.

பிழிந்து * சிற்றேரண்டத்தின் எண்ணெய்...........................*
கலந்திட்டேயொரு கட்டையால் தீயிடு...........................*
செலந்திகழ்க்காய்ச்சிசிறுக இறக்கிடு...........................*
மெலிந்தநோய் தீர விளம்புவேன்கேளே...........................(௱௮௪)

* சிற்றேரண்டம் - சிற்றாமணக்கு.

இதுவுமது

கேளிடு மாந்தம் மலபந்த மாந்தம்...........................*
சேவிடு சலத்திற் * செனி † சிரமாந்தம்...........................*
பாலகர் உண்ணப் பறந்திடும்பாரு...........................*
சீலக்கொடிய சீதளம்போகுமே...........................(௱௮௫)

* செனி - உண்டாகும் † சிரமாந்தம் - தலைமாந்தம்

மாந்தத்துக்கு

## எண்ணெய்

அறுசீராசிரியவிருத்தம்

விளக்கெண்ணெய் அரை அழாக்குவெண் காயம்பெரும்பூண்டைந்து.........*
தளுக்குறுமணித்தக்காளிச் சாறது உழக்கதாகும்...........................*
களக்கமாய்ச் சாறும் எண்ணெய்க் கலந்துவெண்காயந்தன்னை...........*
அளக்கவே அரிந்துபோட்டு அடுப்பில்வைத்தெரித்திடாயே...........(௱௮௬)

இதுவுமது

எரித்து பொன்னிறமதானால் இறக்கிநீ வடித்துக்கொண்டு ..................*
விரித்திடுங் கடுகுரோணி விளம்பிய விருகனென்று ..............................*
தரித்துமே வறுத்துநாளாய் தானதிற் போட்டொன்றாக ..............................*
பிரித்தொரு கரண்டி எண்ணெயைப் பிள்ளைக்குக் கொடுப்பதாமே ......(௱அ௭)

இதுவுமது

கொடுக்கவேதான் உட்காய்ச்சல் கொடுங்கணக்காய்ச்சல் மாந்தம் .........*
முடுக்கிய தொண்டை வாய்ப்புண் மூலத்தின் சூடுமேற்ற ..............................*
படுக்கவே மிகபொல்லாத பலவகை கழிச்சலெல்லாம் ......................... *
அடுக்குடன் ஓடிப்போமென் றறைந்தனர் நூல்வல்லோரே ...........(௱அ௮)

மார்சத்துக்கு வேறு

## எண்ணெய்

---

கஞ்சாங்கோரைப் பிரமியிலே கனத்தத்துளசிபழம்பாசி ......................... *
செஞ்சா நிலவிளாவல்லாரைச் சிந்தில்தண்டுசமூலமுடன் ........................*
மிஞ்சாவசம்புரோகணியும் * வெண்காவெளியோர்விருகனெடை ............*
அஞ்சா எண்ணெய் ஓர் அழக்கு அதிலிட்டெரித்துபதம்பாரே............ (௱அக)
* வெண்காவெளி - வெள்ளைப்பூண்டு.

பாரோயிறக்கிவடிகொண்டுப் பரிவாந்துட்டெடை ஒன்றாக .....................*
கூரோபாலர் உள்ளுக்குக்கொடுக்கமாந்தம்போமிப்பால்................................*
காரோயிச்சாபத்தியமாய்க் காதலனைப்பெற்றதாயை ..............................*
நீரோவைக்க நலமாகும் நீலவிழிமாமடமயிலே.......................... (௱கூ௰)

தோஷமாந்தத்துக்கு தைலம்

## தேறையர்

---

கலிவிருத்தம்.

அன்னமேமுருங்கைப்பட்டை அத்துடன் .......................................*
மின்னமே வெண்கருவும் வெள்ளுள்ளியும் .......................................*
இன்னம் வேப்பெண்ணெ யிவைநாலுடன் ........................................*
சன்னமே செய் தைலம் இறக்கிடே ............................................... (௱கூக)

இதுவுமது

இறக்கிடுந் தைலமதிற் குத்தியே ..........................................*
உறக்கிடுங் கண்ணில் இட்டுறநாவினில் ..........................................*
அறக்கிடுந் தடவத்தோஷ மாந்தமும் ..........................................*
மிறக்கிடுமிது மெய்ம் முறை கண்டிடே .......................................... (௱௧௨)

இவ்விரண்டு மொருதொடர்

மாந்ததோஷத்திற்கு

## சாறு

வெண்பா

சீரவென் காயமுடன் எழில் முடக்கொத்தான் இலையும்..........................*
பேராப்வெதுப்பிப் பிழிந்திட்டுச் - சேரவே..........................................*
மூன்றுகாசெடை புகட்ட முனைமாந்த தோஷம் ..........................................*
ஊன்றுத லில்லாமல் பறந்தோடும்.......................................... (௱௧௩)

மாந்ததோஷம் வலிப்பு மலக்கட்டுக்கு

## பச்சிலைச்சாறு

---

எண்சீராசிரியவிருத்தம்.

நல்வேளை இலைவசம்பு வள்ளித் * தமாலம்நையவேநறுக்கிவெதுப்பிப்பிழிந்து, சல்லியமாக் குழைந்தைகட்குப்பருவம்பார்த்து தக்கக்கால் அரைமுக்கால் முழுச்சங்காக, புல்லவேபுகட்டிடவேமாந்ததோஷம்பொல்லாதவலிப்புமலக்கட்டுந்தீரும், அல்லளகப்பவள இதழ்ப்பெண்ணேயித்தை அன்புடனேசெப் தருமம் ஆக்கமாமே.......................................... (௱௧௪)

* தமாலம் - இலை

மாந்ததோஷம் வலிப்புக்கு உச்சியிலப்புதற்குங் கால்கையிற் கட்ட

## மருந்து

---

அறுசீராசிரியவிருத்தம்

சிறுபுள்ளடியும் வெள்ளுள்ளித் தின்னும்நற்கீழ்க்காய்நெல்லி ..................*
உறவாய் அரைத்துப் பிள்ளைதன துச்சியில் தப்பிமிஞ்சினதை..........................*
நெறிபிரண்டு மூன்றுங்குளிகை நேராய் உருட்டி நெடுஞ்சிலே ..........................*
மறைவாய் அதனிலே முடித்து மாறு கை காலிற்கட்டே .................. (௱௧௫)

மாந்தம் பாலகிரியைக்கு

## கியாழம்

வேலிப்பரித்தி யொருபிடியும் விரும்புஞ்சுக்கு சடாமாஞ்சில்..................*
கோலவிளாவும் வசம்புள்ளிக் குறித்தமிளகு * கூனனுடன் ..................*
சில ஓமம்சீரகமும் சிவக்கக் காய்ச்சிபெட்டொன்றாய்..................*
பாலர்க் கொருசங் கிடுவீரேல் பாலக்கிரியைப் போய்விடுமே............(௱௬௪)

* கூனன் - ஆமை ஓடு

மாந்தம் வயிற்றுப்பலுக்கு

## மருந்து

* அசமதாகமும் வசம்பு ஆனசட்டிக்காயவைத்து ..................*
வசமாய்வறுத்துப்பொடிசெய்து † மணியின்சாற்றிலிவையிரண்டும்..........*
நிசமாய்க்குழப்பிக்கொதியிட்டு நீயோர்சங்குகொடுத்தாற்கால்..................*
அசையாமாந்தம்வயிற்றுப்பல் அகலும்பின்னர் அணுகாதே ............(௱௬௭)

* அசமதாகம் - ஓமம். † மணி - உத்தாமணி.

மாந்த உப்பிசத்துக்கு

## கியாழம்

ஒப்பும் ஓமம் காசெடையை உகந்துசட்டியினில்வறுத்து ..................*
குப்பைமேனிவேர் பட்டைக்கூறும் இரண்டுபலந்தானே..................*
* அப்பு ஓர் அரைப்படிவிட்டு அளவைவற்றவேகாய்ச்சி..................*
வைப்பாய்க்கொடுக்கவே உப்பல்மாந்தம்போகுங்கண்டாயே ............(௱௬௮)

* அப்பு - தண்ணீர்.

மாந்தம்வயிற்றுவலி செரியா மாந்தம்வயிறூதலுக்கு

## மருந்து

வேலிப்பரித்திச்சா றழக்கில் மீறுவசம்புந்திரிகடுகு..................*
மாலிக்கோரோசினை ஐந்தும் வகைக்குவிருகனெடையிரண்டு ..................*
வேலிக்கொழுந்துமேநான்கு விருகன் அரைத்துட்கொளமாந்தம்..................*
பாலர்வயிற்றுவலிசெரியா மாந்தம்வயிறூதற்போமே ..................(௱௬௯)

மாந்தபொருமலுக்கு

## எண்ணெய்

எண்சீராசிரிய விருத்தம்.

பேய்மிரட்டிவெதுப்படக்கிப்பொடுதலைத்தான் பிரமியிலைவேலியொடுநு ணசிதுத்தி,சாய்கின்ற அகத்தியிலைச்சமன்இடித்துச்சாறுபடிகால் பச்சைமஞ்சட்

சாறு, வேப்கின்றவிசமதுகூடக்கூட்டி விளக்கெண்ணெய்ப்படி அனையுமாகவே தான், ஆப்கின்ற ஓமங்கால்பலமதாகும் ஆமையோடுச்சுட்டுப்பலமுங்காலே.()

இதுவுமது.

காலான உள்ளிபலங்காலதாகும் கனவசம்புபலங்காலும் இடித்துக் கொண்டு, மாலான எண்ணெயினிற்கலந்துர்காய்ச்சி வடித்து ஒருதுட்டெடை யாம் எண்ணெய்தானும், வேலானவெண்காயம்பண எடைதான் ஒன்றுவிபர மாய்பொரித்து போட்டிழைத்துபின்னும், பாலானபெருங்காயம்பண எடையு ளைத்துப் பண்பாகவே கொடுக்க சேதிகேளே. .................... (உாக)

இதுவுமது

கேளேநீமுதல்நாளிற்கழிச்சல் மெத்தக் கிளரிவருமற்றுநாளதுதுவக்கி......*
தாளேநீபொருமலுடன்சத்திமார்தம் தணியாத உறக்கமதுதீருந்திரும் ......*
நாளேநீ வியாதியதுநீரமட்டும் தலமானஎண்ணெயதுகொடுக்கநன்று ......*
நீளேநீ பத்தியந்தான்பிசகவேண்டாம் நீலவிழிமாமயிலேநிதானிப்பாயே....()

மாந்தத்துக்கு

## எண்ணெய்

அறுசீராசிரியவிருத்தம்

நன்றேசங்குஆமணக்கு நாவல் நன்னாறிச் கருந்துளசி ......................*
கொன்றேசின்னி பற்பாடம் குப்பைமேனிக் கௌதும்பை ....................*
வென்றேயிவைகள்வகைவகைக்கு வேர்பிடிவெட்டி ரவி இருநாள்...........*
ஒன்றே உலர்த்திதான் இடித்து ஒரு தூணிநீரில் ஊட்டிடுமே .......... (உாங)

இதுவுமது

ஊட்டிடுமெணித்தக்காளியுடன் ஓரிலைதாமரை அவுரி புங்கு.....................*
நாட்டிடு இவ்விதம் வகைவகைக்கு நாழிச்சாற்றில் பிழிந்தூட்டி ..............*
வாட்டிடு * சிங்கி மதுரமுடன் மாஞ்சில்சண்பகப்பூவுடனே ......................*
காட்டிடு லவங்கம் செவ்வியமும் கடுக்காயுடன்வால் மிளகதுவே...... (உாச)

* சிங்கி - கர்க்கடகசிங்கி

இதுவுமது

அதுவே கண்டபரங்கியுடன் அடவாட்வீதம்வகைவகைக்கு..........................*
வதுவே இரண்டுவிருகனெடை வாங்குகடைசரச்சவையெல்லாம்...............*
பதுவே இளம் வறப்பாய்வறுத்துப் பாங்குடன் இடித்துத்தூளதுவாய் .........*
அதுவே நீரிலுடன்தாக்கி அறிவாய்ப்பின்னு மருந்ததுவே ............ (உாரு)

இதுவுமது

மருந்தே லிங்கம் மனேசிலையும் வாளம் பூரம் கெந்திபுடன்.....................*
பொருந்தே புழுகு கஸ்தூரிப்புகழாய் விருகன் எடை இரண்டு ..... .........*
அருந்தே வீதம் வகைவகைக்கு அடாவாயெடுத்துத் தூள்செய்து...............*
வருந்தே கோரோசினையதுவும் வளமாய விருகன் எடைபோடே......(உ௱௬)

இதுவுமது

எடையாதே சிற்றுமணக்கு எண்ணெய் அதிலொருபடியிட்டு...................*
திடையாய் அடுப்பில் இதை ஏற்றி நீ இருசாமம் எரித்துப்பின் ...............*
நடையாய்ச் சுண்டிடும் நீரெல்லாம் நலமாய்ச் செழுமை நிறங்காணும்......*
படைட்யே துரத்தும் நோய்ப்போகும் பண்பாயிறக்கிப் பார்த்திடவே...(உ௱எ)

இதுவுமது

இறக்கி அதனைவடிக்கட்டி எடுத்து இறுத்திடு கலசமதில் ......................*
வறக்கிவாலேப்பதம்வைத்து வள்து இதுவெனப்பணிந்திட்டு......... .........*
நறக்கி எண்ணெய்தனைக்கொண்டு நலமாய் இரண்டுகழஞ்சு எடை............*
உறக்கி பிள்ளைதனக்கேழு உபாயமாய் உள்ளுக்குக்கொடுமே........... (உ௱அ)

இதுமவுது வேறு சந்தம்

கொடுத்துமே இரண்டுநாழிச்சென்றபின் மூலைப்பாலீந்து......................*
எடுத்தநாள் தவரு இந்த எண்ணெயைக்கொடுத்த பின்னர் ................. *
அடுத்த தோர்குழந்தைமாதா அவளுக்குப்பத்தியங்கேள்............................*
விடுத்ததோர் வறுத்த உப்பு வெந்நீராம் மிளகுசாறே ................. (உ௱௯)

இதுவுமது

வெந்நீரும் அன்னம் உன்டால் வினையது அகண்டுபோகும் ................ *
கன்னியேபதனமாக காமனை நினைக்கலாகா ........................................ *
நன்னிமையாக ஏழு நாளதுகடந்துதானுல்...........................................*
பின்னுமேவருகா துண்மைப் பிள்ளையுஞ்சுபஸ்தம்நன்றே..............(உ௱ய)

இதுவுமது

சுபஸ்தமாம் ஏழுஞ்சென்று பின்பு நீ ஏழுந்தள்ளி ....................................*
நிபஸ்தமாய் தாயும் பிள்ளை இருவர்க்கும் தலைநீர்வாரு ............................*
தபஸ்தமாய் ஓமந்தேய்த்து சலமது வெந்நீர்ப்பட்டால் ......... ...............*
சபஸ்தமாய் வினைவிட்டோடும் சடமது வலுக்குந்தானே...............(உ௱யக)

இதுவுமது

வழுக்கவேஇந்த எண்ணெய் மாந்தத்துக்கெல்லாம் ஆகும் ...................*
குழுக்கவே எண்ணெய் தன்னைக் கொடுத்தபின் பேதியாகும்................*
உழுக்கவே அதிகபேதிசோபமும் மூர்ச்சையானால் .........................*
தெழுக்கென சுக்கைச்சீவி க்ஷணமதிற்கியா ழம்வையே............ (உரசஉ)

இதுவுமது

வைத்துமேகியாழம் ஆக்கி வதுவினிற்கழஞ்சுமூன்று..........................*
உத்துமேகொடுத்தபின்பு உபாயமாய்முலைப்பால் ஊட்ட.......................*
சித்ததும் களையுஞ்சோபம் க்ஷிணத்தினில்வாங்கிப்போகும் ....................*
வற்றினதேகந்தானும் வச்சிரம் போலேயாமே ........................ (உரசந)

மாந்தம் கருங்கிரந்தி அட்சரம் கணங்கள் மேகவெட்டைக்கு

## எண்ணெய்

அறுசீராசிரியவிருத்தம்.

மணித்தக்காளி யிலைத்துளசி வளருந்துத்திப்பிரமியிலை ...........................*
கணித்த வில்வம் வல்லாரைக் கையாந்தகரைப் பொடுதலையும்.................*
தணித்தநுணுபுங்கிலைச்சங்குச் சமனிவை யிடித்தச்சாறு படி ..................*
துணித்த ஒன்று தான்றிக்காய்ச்சுக்குக் கடுக்காய்த் திப்பிலியே...... (உரசச)

திப்பிலி * கமடத்தோடரத்தை திகழும்ஓமம்வசம்புடனே........................*
மப்பிலியானகஸ்தூரி மஞ்சள்வகைக்குப்பலமரையாய்...............................*
இப்பிலிசாதிக்கா யொன்று இவைகளிடித்துச்சாற்றிலிடு .........................*
எப்பவிளக்கெண்ணெய்ப்படியொன்றிட்டு எரித்துப்பதமெழுகே ... (உரசரு)

* கமடத்தோடு - ஆமையோடு

மெழுகுப்பதமதிலெண்ணெய்வடி விடுமொருகரண்டிதனயர்க்கு ........... *
அழகுபெரியோர்க்கிருகரண்டி ஐந்து ஏழுநாளிடவே.................................*
சழகுமாந்தம்அட்சரமுங் கணங்கள்கரியகிரந்தியொடு ...............................*
விழுகுங்கொடியப்பபடர் மேகவெட்டைத்தீரும் பைங்கொடியயே...... (உரசசு)

## ஊதுமாந்தகுணம்

உடலெல்லாம் ஊதிக்காணும் உவாந்தியுங் கழிச்சலுண்டாம் ....................*
குடலெல்லாம் இரைச்சலாகிக் கூப்பிடுஞ் சமுத்திரம்போல் ....................*
தொடையெலாம் வலிக்குமிக்கச் சுரமுடன் கடுப்புமாகும் .........................*
அடவினால் ஊதுமாந்தம் அதுசெயுங் குணங்கள்தானே......... ......(உரசஎ

ஊதுமாந்தத்துக்கு

## குளிகை

கலிவிருத்தம்

ஓதுங் * காரம் அரை ரண்டு † ரோகணி ........................ *
நீதியாய்க்கருஞ்சீரகம் நீண்முலை ........................ *
மாதுபாலினில் மாத்திரைசெய்திட ........................ *
ஊதுமாந்தம்விட் டோடுவதுண்மையே ........................ (௨௱௰௮)

* காரம் - வெண்காரம் (௭) † ரோகணி - கடுகுரோகணி (௨) இந்த ஊதுமாந்தத்துக்கு - பேதிரூபதிமாத்திரையைக்கொடுக்கதிரும்.

மாந்தம் ஐந்துக்கும்

## கியாழம்

---

அறுசீராசிரியவிருத்தம்

பொடுதலைவேம்பு மாவும் புளிநுணாநொச்சிவ்வேலி ........................ *
சடுதியில் ஈர்க்கிவ் வேழும் சமன்கொண்டுச்கியாழம்வைத்து ........................ *
இடுவகை ஓமம் உள்ளித் திப்பிலிக்கூடக்கூட்டி ........................ *
அடுதல் நீர்நாழிதன்னில் அடுப்பினில் எட்டொன்றுக்கே........ ....(௨௱௰௯)

இதுவுமது

ஆக்கிடுங் கியாழந்தன்னை ஆனதோர் சங்குவார்க்க ........................ *
போக்கிடும் ஊதுமாந்தம் போர்மாந்தம் சத்திமாந்தம் ........................ *
தேக்கிடும் செரியாமாந்தம் சிறந்திடுங்கட்டுமாந்தம் ........................ *
தாக்கிடும் மாந்தம் ஐந்தும் தரணிவிட்டோடுமென்றே ........................ (௨௨௰)

மாந்தம் ஏழுக்கும் மருந்து

## தேறையர்

---

கலிவிருந்தம்

நீங்கு * ரோசினை நேர் உள்ளித் திப்பிலி ........................ *
ஓங்குமா மதுரம்வகை ஒன்றுச்கு ........................ *
காங்கு நீ யோர் கழஞ்செடைத் தூக்கியே ........................ *
வாங்கும் அண்டவெள்ளைக்கருவார்த்திடே ........................ (௨௨௧)

* ரோசினை - கோரோசினை

இதுவுமது

வார்த்திடுமுலைப்பால் மிதமாகவார் ................................*
ஊற்றிடு அனைத்துள்ளுக்குமூன் றுநாள் ................................*
ஏற்றிடும்வகை மாந்தம் ஓர் ஏழையும் ................................*
ஆற்றிடும் புளி உப்பாகா தன்னமே ................................(உஉஉ)

இவ்விரண்டு மொரு தொடர்

மாந்தமயக்கத்திற்கு

## மருந்து

———

அறுசீராசிரிய விருத்தம்

உத்தாமணியை அனல் தாக்கி ஒடுக்கிக்கயக்கி ரசம்வாங்கி.......................*
பெற்றூர்ப்பாலிற்சிரகமும் பேதிக்கடுகுரோகணியும் .......................*
வித்தாரமாக அனைத்தருந்த வெப்புமாந்தமயக்கம்போம்.......................*
நற்றுமனைபோல் முகநல்லாய் நல்கமாந்தம்நாடாதே .......................(உஉங)

மாந்தகிராணி மாந்த இசிவு சோகை காமாலை சுரக்கட்டி விஷ
தோஷம் சுரங்கோழைக்கட்டு கோட்டாவி விம்மல் தும்ம
ல் பித்தகணபாண்டுச்சுக் கியாழம்

## தன்வந்திரி

———

எண்சீராசிரியவிருத்தம்

வாய்க்கவே சிறுதேக்குவாய்விளங்கம் வால்மிளகு ரோகணியும் சுக்கோடேலம்; சாய்க்கவே திப்பிலி இலவங்கந் தான்றி தக்கோலம் பொஸ்தகக்காய் வகைவகைக்கு, மாய்க்கவே கால்பலமாய் நிறுத்துக்கொண்டு வண்மையாய்த் தூளிடித்துப் பாண்டத்திட்டு, காய்க்கவே இருநாழிசலமும் விட்டுக் கடுகவே யெட்டொன்றாய்க்காய்ச்சிறக்கே.......................(உஉச)

இதுவுமது

இறக்கியே கொடுத்துவிடக்கிராணிமாந்தம் இயல்பானசுரக்கட்டிவிஷதோஷங்கள், உறக்கியே இசிவுகண்டமாந்தத்தோடு உற்றதொருகிராணிசோகைக்காமாலை, நொறுக்கியேகொண்டசுரம் கோழைக்கட்டு நொடிக்கின்றக் கோட்டாவிவிம்மல் தும்மல், நறுக்கிவிடும்பித்தகணபாண்டு எல்லாம் நமன் ஓடிப்போவான்பார்கியா ழத்தாலே .......................(உஉரு)

## கர்ப்பமாந்த குணம்

வேறு சந்தம்

மொழிகிறேன் கர்ப்பமாந்தக் குறிதனை முயலக்கேளாய் ..................*
பொழிகிறேன் பெண்ணுளதானும் புது * வரகரிசிக்கொழியல் ............ *
விழிகிறேன் மிதமற்றேநான் விளம்பரம் உண்டதாலே் ..................*
கழியிளங் கருவுக்கேதான் கனலதால் சூடுண்டாமே.....................(உஉசு)

* தவிடெடுபடாகொழியலரிசிசகு மொகசும்

இதுவுமது

சூடதால் * வாதவாயு தோன்றிடுங்குணத்தைக்கேளு... ......................*
பாடதால் கருவிற்பற்றிப் பலபலநோய்தான்காணும் ...........................*
வாடலோடுறுத்திவாயு † வன்னியுங்கூடச்சேர்ந்து ........ ..................*
தேடவேபிறந்தபிள்ளை தேகத்தில்நோயைப்பாரோ.......................(உஉஎ)

* வாதவாயு - இரண்டும் ஒருபெயராயினும் - சூடாலெழுந்தவாயு
† வன்னி - நெருப்பு

இதுவுமது

தேகத்தின் மேலே நோய்தான் சிலேஷ்மநாடிதானும் ..........................*
ஆகத்தின் மூலச்சூடு அருகியே மிகுத்துதானால் ..................................*
போகத்தால் புணர்ச்சிசெய்த பொருட்டதால் சிசுவுக்கேதான்...................*
* நாகத்தின் இரைச்சல்போல நடுக்கிடும் நாடிதானே.................. (உஉஅ)

* நாகம் - பாம்பு

இதுவுமது

நாடியில்வாதநாடி நடக்குமே சர்ப்பம்போல ................................ *
ஓடியே சரசமொன்று * ஒந்தியைப்போலேபாய்ந்தால்..............................*
வாடிடும் பிள்ளைதேகம் வாயெல்லாம் புண்ணுயப்போகும் .......................*
பேடியின் முலைப்பாற்சுண்டிப் பிள்ளையும் இளைக்குந்தானே ............(உஉகூ)

* ஒந்தி - ஓணான்

இதுவுமது

பிள்ளையும்பிறந் திரண்டு ஆண்டதுசென்றுதானால் .............................*
கிள்ளையே அனையிற்கட்டிக் கிலேசமாய்வரச்சிக்காணும்.........................*
விள்ளவேதேகமெல்லாம் மிகுத்ததோர்கனவினாலே.......................*
துள்ளவேபாலன் தானுந் துடித்ததோர்வீக்கமாமே.......................... (உ௩0)

### இதுவுமது

ஆடித்திடும் வெளுக்குந்தேகம் தொண்ணூறு நாட்சென்றற்கால்...........*
கடித்ததோர் விஷம்பட்டார்போல் கைகாலும் புண்ணுட்போகும்...........*
வடிந்திடுஞ்சுழற்றல் வாய்நீர் வரண்டிடும் அதன்பின் நெஞ்சில் ........... *
தடித்திடுங் காறல் காணும் தலையது நடுங்குந்தானே ..................(௨௱௧)

### இதுவுமது

நடுக்குமேமூன் றுண்டின்மேல் நாடியும் அசதிகாணும் ..........................*
படுக்குமேபாயல் மீதே பாலதுதுடித்திட்டாலும் ......................................*
எடுக்குமேவாந்தியாகும் இளைச்சலும்வயிறுநோயாம் ............................*
குடிக்கிறசாரமெல்லாங் குடங்கொண்டுபோயுந்தானே .................(௨௱௨

### இதுவுமது

பாயுமே கறுக்கும்போது * பசுமையாய்க் கொடிபோல்வீழும் ...............*
வாயுமே தவறிக்கண்கள் † மதுவெனச்சிவந்துக் காணும் .........................*
நேயுமே தேவாங்கைப்போல் செகத்தனர் சொல்லுவார்கள் ......................*
நோயுமே பட்சித்தோஷம் இதுவென அருளுவாரே ........................(௨௱௩)

* பசுமை - பச்சை † மது - தேன்

### இதுவுமது

அருளுவோம்இந்தநோயின் அசாத்திய) சாத்தியங்கண்டு ........................*
வருளுவோம் கர்ப்பமாந்த வல்பிணிவிட்டுநீங்க ......................................*
வெருளுவோம் புங்கின் எண்ணெய் விதமதைசொல்லக்கேளாய்...............*
தெருளுவோம்மூன்று * நாழி திருத்தமாய்ப்பருப்பைவாங்கே.........(௨௱௪)

* நாழி - படி

கர்ப்பமாந்தத்துக்கு

## புங்கின் எண்ணெய்

வாங்கிடுபுங்கன்கொட்டை அதனுடன்பருப்பை வாங்கி ..........................*
தீங்கில்லா ரவி நாள் மூன்று தினந்தினம் உலர்த்திதானும் .................. *
பாங்குடனெடுத்து இந்த பருப்பையும் உரலில் தாக்கி............................ *
தாங்கவே இடித்து மாபோல் தானதைபாண்டத்துட்டே ...............(௨௱௫)

### இதுவுமது

ஊட்டிடுதோணிநீரில் ஒருமையாய்சொல்லக்கேளாய்..................................*
நாட்டினிற் கருடமூலி நன்னிலப்பனையும் அத்தி ........ .........................*
சாட்டிடு சங்கு சின்னி சாரணைக் குன்றிவெள்ளை ..................................*
மாட்டிடு கண்டங்காரி மாதளை தீலவேம்பென்றே..................... ...........(௨௱௬)

இதுவுமது

வேம்புடன் குப்பைமேனி வில்வவேர் கிற்க்காய்நெல்லி......................*
காம்பது அழிஞ்சில் நாவல் கரிசலாங்கண்ணி நொச்சி ........................*
ஆம்பது ஆடாதோடை அல்லியும் கொத்தான் சூரை.....................*
வேம்பது சிவனார்வேம்பு வெண்ணொச்சில் துளசிவேரோ ............... (உ௩எ)

இதுவுமது

வேருடன்வகையொன்றுக்கு விளங்கவே பலந்தான்கொண்டு ............... *
சீருடன் ரவியில் மூன்று நாளது உலர்த்திச்சேர .........................*
நேருடன் உரவில்தாக்கி நிலைபெற இடித்துத்தூளாய் ........................*
கூருடன் தோண்டிவேறே குணமதாய்வடிதான்கட்டே .................(உ௩அ)

இதுவுமது

கட்டியமாவைக்கொண்டு கருநிடுமுன்புநீரில் ..............................*
அட்டிசெய்யாதேபின்பு அருளுவோம் மூலிச்சாறு ..........................*
தட்டிடு பிரமிச்சாறு தைவேளை அவுரி சூரி ..............................*
வெட்டிய தும்பைக் * (காட்டு அகத்தியும்) பொன்முசுட்டை......... (உ௩௯)
* கட்டகத்தி - வீழி

இதுவுமது

அகத்தியும் மணித்தக்காளி அடவுடன்வகைவகைக்கு.........................*
துகத்திய சாற்றில்வீதந் துரிதமாய்ப் பலம்இரண்டாம்.........................*
சுகத்தியமாக இந்த சாறதைநீரிவிட்டு ...................................*
அகத்தியம் இன்னஞ்சொல்வோம் அகத்தியன் உரைக்கக்கேளே ...... (உ௪0)

இதுவுமது

உரைக்கவே கடுக்காய்க் கண்டத்திப்பிலிச் செவியம்உற்ற .................*
விரைக்கவே மதுரங்சோஷ்டம் வெட்பாலையரிசி * கோலம் .......................*
நிரைக்கவே தேவதாரம் நிகழ்பெறுமாஞ்சில † சிங்கி ...........................*
தரைக்கவே சாதிக்காயும் தான்றியும் ஏலமாமே.......................... (உ௪க)
* கோலம் - தக்கோலம் † சிங்கி - கடுக்காய்ப்பிஞ்சு

இதுவுமது

ஏலமாம்புழுகுதானும் இருவி நாவியுமேயாகும் ..........................*
வாலரோசினையுமாகில் கஸ்தூரி பண்பாய்வீதம்............................*
ஞாலமே வகைவகைக்கு நளினமாம்விருகன்மூன்று ..........................*
சாலவேவாங்கிநீயும் சட்டியில்வறுத்துக்கொண்டே... ................ (உ௪உ)

இதுவுமது.

கொண்டு நீ இடித்துத்தூளாய்க் கொட்டிடுமுன் சலத்தில் ........................*
நன்றுநீசொல்லக்கேளு நவிலுவோம் கடைசரக்கு...........................................*
வண்டது வாளம்வீரம் மஞ்சளும்கெந்தி சூதம் ...........................................*
துண்டது * பூரம் சாதிலிங்கமும் † பூரமாமே...... ......................... (உசந)

* பூரம் - இரசகர்ப்பூரம் † பூரம் - பச்சைக்கர்ப்பூரம்

இதுவுமது.

பூரமுமுதலாய்வாங்கிப் புகலக்கேள் வகைவகைக்கு ....................................*
தீரவேவிருகன்நாலு திருத்தமாய் தூளாய்ச்செய்து..... ...........................*
கூறவேமுன்சலத்திற் கொட்டியேபின்புகேளு ..............................................*
ஆர பேராமணக்கு அவ்வெண்ணெய்ப்படி ரண்டாமே.........................(உசச)

இதுவுமது.

படியது ரண்டதாகும் பாங்குடன் நீரில் தாக்கி...........................................*
வடிபெற மூன்றுநாளும் வன்னியாம் ரவியில்வைத்து .................................*
கடிபெற அடுப்பிலேறறிக் காலாக்கினி மூன்றுசாமம்....................................*
துடிபெற கொதிக்கக்காய்ச்சி சுண்டியேபடி ரண்டாமே ....................(உசரு)

இதுவுமது.

ரண்டதாம்பாகமானல் இறக்கியே ஆறவைத்து.............................................*
கண்டுநீவடிதான்கட்டிக் கலசத்தில் அதனைத்தாக்கி.....................................*
நன்றதாய்க்கமலம்வைத்து நாயகிப்பூசைச்செய்து...................................*
என்றிடும் நோய்தனக்கு எண்ணெயைக்கொடுத்துப்பாரே.................(உசசு)

இதுவுமது

கொடுக்கிற விதமேதென்றால் குழைந்தைக்கு அதிகாலத்தில் ........................*
நடுக்கிற எண்ணெய் தன்னில் நாலதுகழஞ்சு வாங்கி ....................................*
துடுக்குடன் * நவநாளுந்தான் துலங்கவே கொடுத்துநீயும்...........................*
வெடுக்கென அதிதபத்தியம் விளங்கிடுங் குணத்தைக்கேளே..............(உசஎ)

* நவநாள் - ஒன்பதுநாள்

இதுவுமது.

குணங்குறி குழைந்தைப்பெற்றத்தாய் தனக்கென்னபத்தியம் ........................*
மணங்கமழ்பீர்க்கன்காயும் வறுத்ததோர் உப்புமாகும் ................................*
புணங்கலாம் வெந்நீராகும் போசனம் ஆறலாகா ..........................................*
விணங்கவே லவங்கப்பூவும் மிளகுடன் காரங்கூட்டே ......................(உசஅ)

இதுவுமது

கூட்டலாம் இருபோதன்னம் கொள்ளுடன் அகத்திக்கீரை ........................*
நாட்டவே புகையும்போகம் நவையுறும் புளியும் ஆகா ........ ..................*
தேட்டமாம் பெண்ணுள்தன்னை தெளியபத்தியந்தான் சொல்லு ................*
வீட்டைவிட்டுழலவேண்டாம் மிகுத்த நோய்ச்சிதறிப்போமே......... (உசக)

இதுவுமது.

போகுமே எண்ணெயுண்டுப் பின்புமேநவநாள்தன்னில் ............ ....... *
ஆகுமே தேகவச்சம் அதீதமாம் பொய்போலாகும் ...........................*
நாகுமே பத்யமாறி நாள்து சென்றுதானால்....................................*
வேகமே நீங்கிப்போகும் விளங்கொளி சடலமாமே..................... (உரும)

* அன்றியும் (ரு) விருகன் எடை எண்ணெயை (க) நாட்கொடுக்க நன்மை இதை நிதானித்து தக்கப்படி கையாடவும்.

## நீர்மாந்தகுணம்அதேசலமாந்தம்

---

அறுசீராசிரியவிருத்தம்

நளிர்ந்துகுளிருஞ்சிலீர்த்துவரும் நாவில் நீரும் ஓச்சாளம்........................*
கழிந்துவயிறுமிகபொருமுங் கை கால் மெய்புந்தினவெடுக்கும் ...............*
மெலிந்து உடம்புமிகபருக்கும் மெதுவாய்ப்பேசும் உறக்கமதாய்...............*
தெளிந்துசிரிக்கும் நீர்மாந்தஞ் செய்யுங்குணங்களிதுதானே............(உருக)

இதுவும் நீர்மாந்தகுணம் அதற்குஎண்ணெய்

## தன்வந்திரி

---

எழுசீராசிரியவிருத்தம்

தலையதுநோவாய்முகமதுமினுக்குந் தவிக்கவேமலஞ்சிறுத்திட்டு ............*
மூலையதுமுகவா துடம்பெலாங்குளிர்ந்து மூத்திரங்குறிகடுத்திறங்கும் .........*
மலைமருந் தீர உள்ளிமுக்குரட்டைவயங்குசா ரூவ்வொன்றோர் உழக்காய்...*
குலவிளக்செண்ணெய்தனிலெரித்தருந்தகொடியநீர்மாந்தமுங்குணமேஉ?

இஃதொருதொடர்

நீர்மாந்தத்துக்கு வேறு

## ஔழ்தம்

எண்சீராசிரிய விருத்தம்.

நொச்சியிலை வேளையிலைக்குப்பைமேனி நுணா இலையும்பேய்மிரட்டித் தும்பையோடு, பச்சிலையாய்க்கொண்டுவந்து வெதுப்பியேதான்பதமாக சாறு வரப்பிழிந்துக்கொண்டு, உச்சிதமாய்மிளகுள்ளி வசம்போடோமம் உகந்துவரு முதஞ்சாற்றில் அரைத்துக்காய்ச்சி, நிட்செயமாய்ப்பாலகர்க்குக்கொடுக்கவேதான் நீர்மாந்தம்போகும்நித்தன்சொன்னாரே..............................(௨௫௩)

நீர்மாந்தத்துக்கு வேறு கியாழம்

## தன்வந்திரி

அறுசீராசிரியவிருத்தம்

மாந்தம்போகக்கருநீலி மகத்தாஞ்செவியங்கியாழமிட ........................*
வாய்ந்தநோயும்நீர்மாந்தம் வணங்கியோடும்பண்டிதரே.............................*
தோய்ந்த இதுதான் அறிவீர்கட்சொன்னமொழியுந்தப்பாது ........................*
ஏந்திழையீர் இந்நூல்போல எவருஞ்சொல்லார் அறிவாயே..............(௨௫௪)

நீர்மாந்தத்துக்கு வேறு

## எண்ணெய்

எண்சீராசிரியவிருத்தம்.

பார்க்கவேவெதுப்படக்கி சிற்றம்மானின்பச்சரிசி பீநாறிநுணாசாறுக்கி, வார்க்கவே வகைக்குச்சாற்படிகாலாகும் வளமாக எண்ணெயதுநாழியொன்று, தீர்க்கவேவசம்புள்ளிமஞ்சளுந்தான் சேர்த்துவகைக்கைபலமாய்க்கூடக்கூட்டி, காக்ககடுகுத்திரளக்காய்ச் சிறக்கிக் கரண்டியிட மூன்றுநாட் சலமாந்தம்போம் ..................................................(௨௫௫)

இவ்விரண்டுமொருதொடர்

நீர்மாந்தத்துக்கு வேறு

## எண்ணெய்

நிலமண்டிலவாசிரியப்பா

சீறிய * ராட்சசன் சிறையினில் வைத்த ..................................*
நாறிய நல்லிலை நாட்டிலுள்ளோரை.......................................*
மீறிய † மிரட்டிலை வீறுடன் இரண்டுங் ..................................*
கூறிய இதனைக குணமுடன் நம்பே................................(௨௫௬)

* ராக்ஷசன் சிறையில் வைத்த இலை - சனகிபூண்டு † மிரட்டி - பேய்மிரட்டி

இதுவுமது

அறுசீராசிரியவிருத்தம்

நம்புவது * வெதுப்படக்கி † காக்கைமல்லி நல்லிலையுஞ்சமனுகசாறு வாங்கி, வெம்பியதோர் ‡ வேல்விழியாள் மீதுறையும்வேரு § வெகுவாசமுடையோகி ¶ குதிரைப்பல்லன், துன்பமறநறுக்கிவொய்சமுஞ்சுவீதம் தூக்கிடுசா றெண்ணெய்சேர்சமனுப்சேர்த்து, தென்புடனே எரியிலிடுமெழுகதாகதினமூமொருகாசெடையாப்குலுக்கிடாயே ............................................ (உருள)

* வெதுப்படக்கி - எருமுட்டைப்பீநாறி † காக்கைமல்லி - நுணா - இதைகாய்க்குமல்லியென்பாருமுளர் ‡ வேல்விழியாள்மீதுறைவேர் - கஸ்தூரிமஞ்சள் § வெகுவாசமுடையயோகி - வசம்பு ¶ குதிரைப்பல்லன் - வெள்ளைப்பூண்டு

இதுவுமது வேறு பிட்டவியல்

## சாறு

குலுக்கிடுவாய்முலைப்பாலில்மூன்றுநாளுங் கூப்பிட்டேயோடிவிடுஞ்சலமாந்தந்தான், அலக்கமறும் பிள்ளைமாந்தளிர்போலாகும் அதைவிட்டு இன்னமோ ரடவுகேளு, கலக்கமறதிப்பிலியுமிளகுதூளுங்கனமா இந்நிலையில் பிட்டவியல்செய்து, நலக்காமல் * திரிபொழுது வார்த்தாயானால்நாடிவந்த சலமாந்தம்நடுங்கிப்போமே..................................................(உருஅ)

* திரிபொழுது - மூன்றுவேளை

நீர்மாந்தத்துக்கு வேறு

## எண்ணெய்

அருசீராசிரியவிருத்தம்

சிற்றுமணக்கெண்ணெய்ப் பலம்பத்து திகமும்பூரம்விருகனென்று............*
வற்றுசுத்தித்தான்செப்த வாளம்விருகனெடைரண்டு ..............................*
பற்றுவெள்ளைமிளகதுவும் பகரும்விருகனெடை ரண்டு .........................*
கற்றைக்குழலாளே லவங்கங் கதித்தவிருகனெடை ரண்டே ......... (உருகு)

இதுவுமது

எடையேகொஞ்சம் எண்ணெயைவிட் டிதமாயனைத்தெண்ணெயிற்கலந்து...*
தடையில்லாமல் ஒருகரண்டிதானேமூன்றுநாட்கொடுத்த ........................*
மடைபோல் திறந்த சலமாந்தம் மாறிப்போகுமடவன்ன .........................*
நடையாய்பொரிமுளகுந்நீரும் நல்லசாதமுண்டிடுமே.................(உசுல)

## விஷமாந்தகுணம்

சிறியவன்வயிறிளைந்து சினத்திடும் உருட்டிப்பார்க்கும் ......................*
கருவுடன்பெற்றத்தாயார் கையினிற் றங்காப்பிள்ளை ..............................*
அறிவுள்ளமேனிவாடி அணைக்கில்கீழ்குளிர்ந்திருக்கும் ..............................*
வெறியெனவெருவும்வேர்க்கும் விஷமுள்ளமாந்தந்தானே ........... (௨௬௧)

இதுவுமது

வாந்தியும்வயிறுபோகும் வாகுசேர்விழியுஞ்சோரும் ..............................*
மார்தியேசோர்ந்துவீழ்ந்து வயிற்றிலேவலியுண்டாகும்..............................*
சேர்ந்திடுமலமுந்தானுஞ் சிக்கியேவயிறுபோகும் ..............................*
ஆபந்திடும் நூல்வல்லோர்கேள் அதுவிஷமாந்தந்தானே..............(௨௬௨
)

இதுவுமது

சீறியலைபோல் வயிறிரையும் சிறக்கப்பார்க்குங் கண்சொருகும் ..............*
பாறிவயிற்றில் நோயதனல் பறந்துப்பிள்ளை ஓய்ந்திருக்கும் ............ .....*
ஆறியாறிச்சுரங்காணும் அடுத்துவாந்தி வயிரேறும் ..............................*
தேறீர் இதுவிடமாந்தமெனச்செப்பீநலகிற் பண்டிதரே.............. (௨௬௩)

விஷமாந்தத்துக்கு

## கியாழம்

கூறும் ஓமம்பொடுதலையுங் குளிர்ந்த மஞ்சணத்தி நொச்சில் ..............*
வேறுவேளை வேர்சமனாய் வெளுத்த உள்ளிவசம்பினொடு ....................*
ஆறநறுக்கி வறுத்ததனை அளவாய்க்காச்சி யுண்டிடவே ..............................*
பாரமானவிஷமாந்தம் பறந்தேயோடுங் கண்டாயே.................... (௨௬௪)

## போர்மாந்தகுணம்

போர்மாந்தத்தின்குணங்கேளு பொருமிப்பொருமிவயிறெழுகும் ...........*
மார்பைத்துடிக்குந் தலையசைக்கும் வயிறுவலிக்குமிகசோரும்.............. ..*
நேரோசத்தியுண்டாகும் நெற்றிநரம்பு புடைத்திருக்கும்..............................*
பாரோர் அறியபாலகர்க்குப் பரிநதேயிதனைப்பார்ப்பாயே..............(௨௬௫)

இதுவுமது

வாயுடன்நெஞ்சுலர்ந்து வயிறது கழியுமாகில் ..............................*
சாயவே யுடம்புசோர்ந்து சடுதியீற் பொருமி ஊறும் ..............................*
காயமும் வாடிதானுங் கட்களு மலர்ந்துழும்..............................*
மாயப்போர் மாந்தமென்று வகுத்திடுந் தெரியத்தானே................ (௨௬௬

இதுவுமது

வெண்பா

பொருமுங்கழியும் புரண்டுவலியுண்டாம்...............*
மருவிமுலை உண்ணு மயங்கும் - வெருவிமிக...............*
சத்திசெய்யுங்கட்குழியுந் தாகழிசவெதும்பும்...............*
வற்றியிடும் போர்மாந்தமாம்............... (உசுஎ)

இதுவுமது

அறுசீராசிரியவிருத்தம்.

ஏற்றேயிருந்து மிகக்கழியும் இடையிற்சுரமுந்தான் தோன்றும் ...............*
தோற்றும் உடலேத்தான் உருக்கும் தோன்றும் விலாவு முதுகெலும்பும்...............*
வேற்றேர் உடலாய்சத்திபுண்டாம் மிருத்தமலமுமே யொழிக்கும் ...............*
கூற்றனுகும் போர்மாந்தக்குணமிது சுதற்குப்போலலாதே............... (உசுஅ)

போர்மாந்தத்துக்கு

மருந்து

வெண்பா

தின் * னசமதாகத்தைச் செவ்வறுப்பாய்த் தூளாக்கி...............*
வெந்நீர் முலைப்பாலில் மேற்பொடியிட் - டுண்ணப்...............*
பொருமல் கழிச்சல் போர்மாந்தம் வாந்தி...............*
ஒருநொடியிற் போமென்றுணா............... (உசுகூ)

* அசமதாகம் - ஓமம்

போர்மாந்தத்துக்கு வேறு

மருந்து

பாவட்டைக்கழல் கொடியும் பண்பாய் இவைமூன்றும் ...............*
போவேட்டிவேருங் பொங்கமாய் - நீகொட்டைப்...............*
பாக்களவு வெந்நீரிற் பாலகருக்கீந்திடவே ...............*
போக்கும் போர்மாந்தமது போம் ...............(உஎ0)

போர்மாத்தத்துக்கு வேறு

மருந்து

கோழிக்கல்லீரற்கல் கூறுநற்சீரகமும் ...............*
தாழ்வில்லா இலவங்கத் தானனையாய்த் - தோழிகேள்...............*
பாவில் அரைத்துண்ணப் பாரிற்போர்மாந்தம்...............*
வாலர்க்குமாந்தம் போமாம் ............... (உஎக)

போர்மாந்தத்துக்கு வேறு

## மருந்து

அறுசீராசிரியவிருத்தம்

உப்பைவறுத்துக்கொட்டியபின் உத்தாமணி யுந்தும்பையிலை... ............... *
செப்பமானவெற்றிலையும் சேரசமனுய்வதக்கியதை.......................... *
நுட்பமாகநீர்வாங்கி நொடியிற் * கூனன்வசம் புரைத்து ..................... *
அப்போதியப் போர் மாந்தம் அகலு மென்றே அருளினரோ............ (௨௭௨)

*கூனன் - ஆமையோடு

போர்மாந்தத்துக்கு வேறு

## எண்ணெய்

கோட்டுமெல்லிகை ஈருள்ளிக் கருஞ்சீரகமுங் கடுச்காயும் ........................*
நாட்டுக்கடுரோகணியும் நல்வச்சிரப்பால் விளக்கெண்ணெய் ................*
கூட்டி எரித்துப் பாலகர்க்குக் கொடுக்கமாந்தம் போர்மாந்தம் ................*
ஓட்டிவிடுங்காண் இந்தெண்ணெய் உலகோர்க்குண்டு செய்துகொடே (௨௭௩)

போர்மாந்தத்துக்கு வேறு

## எண்ணெய்

ஏறுஞ்சத்திச்சாரணைவேர் இதமாய் எண்ணெய் ஓரழக்கு.........................*
தாறுங்கூனன் முதுகுள்ளித் தனித்தவசம்பு விருகனெடை........................*
ஏற அரைத்து எண்ணெயுடன் எரித்து பாலர்க்கீந்திடவே ...........................*
சோருமாந்தம் போர்மாந்தம் சொல்லாதோடிப் போய்விடுமே.........(௨௭௪)

போர்மாந்தத்துக்குஞ் சவலைக்கும் வேறு

## மருந்து

கூனன்முதுகு வசம்புள்ளிச்கூறும் ஓமம் நுணாவேலி .............................. *
மானேபொடுதலை வாரலடையும் வளரும்வெற்றிலையின்காம்பும் ................ *
கானேகிராம்பு கருக்கியிட்டுக் காய்ச்சிச்சவலைப்பிள்ளைக்குத்... ................ *
தானேகொடுக்கப் போர்மாந்தம் தங்கா தோடிப்போய்விடுமே.........(௨௭௫)

போர்மாந்தத்துக்கும் வாந்திக்கும் வேறு

## மருந்து

எண்சீராசிரியவிருத்தம்.

வசம்புடனேமயிலிறகுசாம்பலாக்கி வசமாக வேப்பீர்க்கில் முலைப்பால்வார்த்து, சமாகநறுக்கியதை பிழிந்துசற்றே காதலுடன் தேனுமொரு

வரியேகுத்தி, நீசமாகசீரகமுங்கிராம்பு சேர்த்துநீண்ணயமாய் * நிம்பவினைப் பொடிமேல்தூவி, வசமாக வேயருந்த மருந்தில் மாந்தம் வல்லப்போர்மாந் தமொடுவாந்திப்போமே ........................................................ (உஎசு)

* நிம்பவினா - வேப்பம்வினா

போர்மாந்தத்துக்கு வேறு

## கியாழம்

---

அறுசீராசிரிய விருத்தம்

நொச்சில் ஈர்க்கு நுணு ஈர்க்கு நுவல் மா ஈர்க்குப் புளியீர்க்கு ..........*
மிச்சமான வேப்பீர்க்கு மீறுங்கொடிவேலியி னீர்க்கு ... ... .................... ...*
இச்சைப்பொடுதலையின் கொடியும் இதமாயவகைக்கு ஒருபிடியும் ..........*
செச்சைப்பூண்டு துட்டெடைதான் திப்பிலி துட்டெடையொன்றுமே.. (உஎஎ)

இதுவுமது

ஆமேபாண்டத்தினிலிட்டு * அப்புநாலுபடிவீட்டு ...................................*
காமேதானனாபடியாக காப்ச்சி யொருசங்கந்திசந்தி ..............................*
போமே மூன்றுநாட்கொடுக்கப் போர்மாந்தம் விட்டேபோகும் ..............*
தாமே இச்சாபதியஞ்செய் சகலநோயுந் தான்போமே.... ................. (உஎஅ)

* அப்பு - சலம்

## பால்மாந்தகுணம்

---

கண்ணுங்குழியும் செவிதாழுங் கருத்து மயங்கிக் கோழையுண்டாம் .........*
புண்போல் * உதரந்தானொந்து புளித்தேசுழியும் வயிறூதும் ....................*
பண்ணுர் மொழியும் பால்மாந்தம் பாரில் இந்நோய் தீரவென்றால்.............*
அந்நாள் ஆவின் நெய்தனிலே அன்பாய் வைக்குந் திறஞ்சொல்வாம் (உஎகூ)

* உதரம் - வயிறு

பால்மாந்தகுணமும்

## அதற்கு ஔஷதமும்

---

எழுசீராசிரிய விருத்தம்

பாலதைக்கழியும் பாலதையெடுக்கும் பரதவித்திடும் பலவிதமாய்ச்......... *
சாலவேகரங்கால்வெதும்பிடுங் குளிருந் தலையெடுத்திராமலேமயங்கும்...... *
சீலமாய் தாயார் லங்கணமிருந்து இகழ்பொடுதலையின்காய்வறுத்துக் ......*
கோல இந்துப்பு வசம் புள்ளிமிளகு கொள்சமன்கொடுத்திடகுணமே (உஅ0)

## செரியாமாந்தகுணம்

அறுசீராசிரியவிருத்தம்

மிக்கங்காய்ச்சல் தலைவலியும் மிகவேவயிறுநொந்தழகும் .................. *
தக்கமலமாக்களைத்தாற்போல் சாலக்கழிந்து கண்ணனைக்கண்.............. *
நொக்கபபக்கந் தான்படுத்து சோருங்கிளைத்தண்டதுபோல் ................ *
சிக்கென் றிலங்கு முகமாதே செரியாமாந்தகுணமிதுவே..................(உஅக)

செரியா மாந்தத்துக்கு

## கியாழம்

ஆமேவசம்பு சடாமாஞ்சில் ஆன உள்ளித்திரிகடுகு ........................ *
பூமே ஓமம் கருஞ்சீரம் புகழும் ஆமையோடெல்லாம்........................ *
தாமே இடித்துப் பொடியாக்கித் தண்ணீர்க்காய்ச்சிக் கொடுத்திடவே......... *
போமே செரியாமாந்தமெலாம் புறத்திட்டோடுங் கண்டாயே ......... (உஅஉ)

செரியாமாந்தத்துக்கு வேறு

## நெய்

வேலிப் பரித்தியிலை வாட்டிப் பிழிந்து மிளகு வசம் புள்ளி .................. *
சால அரைத்து நெய்துளிவிட்டுத் தானே யருந்த குணமாகும் .................. *
ஏலும் எருமைவெண்ணெயுடன் இசைந்தமருந்தினுடன் இஞ்சிக் ............ *
கோலங் கேளும் பெருந்தும் பைக் கூட்டியருந்திடகுணமாமே ...... (உஅங)

செரியாமாந்தத் துக்கு உப்பலுக்கு வயிற்றுவலிக்கு வேறு

## கியாழம்

எண்சீராசிரியவிருத்தம்

ஓமமுடன் கனக்கோஷ்டம் காசுதானும் உயர்வசப்புங்கருக்கிட்டுக்கியாழமாக்கி, காமமுடன் அருந்திடவே செரியாமாந்தம் கழிச்சலுமே போமென் றுக்கருதிச்சொன்னேம், சாமமுடன் உப்பலும்போம்வலிபுந்தீர்ந்து சதிருடனே உண்டதெல்லாஞ் செரிக்கும்பிள்ளை, நாமமுள்ளச் சொற்கேட்டுநாமுஞ் சொன்னேம் நலமாகும் புவியோர்க்குநன்மைதானே...... ... ......... (உஅச)

## கட்டுமாந்தகுணம்

தயார்முலையில்வாய்வைத்துச் சற்றேஉண்ணுந்திகைத்திருக்கும் ................*
ஓயாதழுகைசிற்றிருமல் உள்ளேசுரமுமிகவுண்டாம்... ........................... *
சேயாமலமுஞ் சலங்கட்டிச் சிக்கப்பண்ணும்பசியில்லை... ............ ......... *
மாயாமடசக்கும் இதுகட்டு மாந்தமென்று வகுத்தனரோ.................... (உஅரு)

இதுவுமது

எண்சீராசிரியவிருத்தம்

கொட்டாவி தலைநோயு மலம்போகாமல் குறுவேர்வை வயிற்றுவலிக்கு விடைாச்சல்; தொட்டாலும் உடலெங்குங் கனல்போற்காயுந் தூக்கமதுபோலிருந்து சோர்ந்துமாந்தி, பட்டாலே வயிறுமிகக்கழிந்திடாமற் பலநாளும் இப்படியே மலச்சிக்குண்டாம், மட்டாருங்குழல்மடவீர் கட்டுமாந்தம் வகையறியும் வாகடநூல் வல்லோர்தானே ........................ ........................ (உஅசு)

கட்டுமாந்தத்துக்கு

## கியாழம்

அறுசீராசிரியவிருத்தம்

சீந்தில் தண்டுங் களிப்பாக்கும் சிவேதைவேருங் கடுக்காயும் ................*
காய்ந்த சுக்கு ரோகணியுங் காயும் நீரில் கொதிக்கவிட்டு ............ ........*
ஏந்து முலையாய் இந்நீரை எட்டொன்றாக்கிக்கொடுகெட்டு ....................*
மாந்தமான சுரமும்போம் வயிறுங்கழியுங் கண்டாயே..... .......... (உஅஎ)

கட்டுமாந்தத்துக்கு வேறு

## எண்ணெய்

அடுமே சிற்றாமணக்கெண்ணெய் அளந்துக்கால்படிதானதிலே ...........*
கடுமே அகத்தி துளசியுடன் கதித்ததகரை கழற்கொடியும் ......................*
வடுமேநொச்சில் செம்முள்ளி மணித்தக்காளிச் சமனாக ...........................*
கொடுமே இடித்துச்சாற்படிகால் கூட்டிக் கடைசரக்கைக் கேளே ...(உஅஅ)

கேளேகடுகு ரோகணியும் கிளருங் கடுக்காய்ச்சீரகமும் ........................ *
வேளேகரியசீரகமும் வெண்காயம் வெள்ளைப்பூண்டும்...........................*
பாளேவசம்புபூதகரப் பானின்பட்டைச்சாற்வேளை ............................ *
ஏளேவிருகனெடைமூன்று இடித்துப்போட்டின்னம்பாரே.............(உஅகூ)

பாரோசதுரச்கள்ளிப்பால் பரிவாயொருகரண்டிக்கூட்டி ...................*
தாரோகாய்ச்சிவடிகொண்டு தனயர்க்கொரு துட்டெடைகொடுக்க ........... *
வாரோகழியும் அந்திதனில் * மரீசிசாம்பலுஞ்சுக்கும் ......................... *
நீர்வார்காப்பச்சியொருசங்கு நீயிடுகட்டுமாந்தம்போமே ................(உகூ0)

* மரீசி - மிளகு

கட்டுமாந்தத்துக்கு வேறு

## எண்ணெய்

எண்சீராசிரியவிருத்தம்

* அடவியினில்திருடி † மலைவர்க்காலிப்பால் அவையொவ்வொன்றே
ருழக்களந்துக்கொண்டு, திடமுடன் ஆமணக்கெண்ணெய் நாழி கூட்டித் ‡ தி
ரிபலைவெள்ளுள்ளி விருனைடையிரண்டு, பொடிசெய்து போட்டெண்ணெய்த
ணையெரித்துப்புகட்டு மோர்காசெடைமேல் விலாவிற்பூசத், தடமுடையக்கட்டு
மாந்தங் கணபேதங்கட்சராதென்று மைக்காஞர் சாற்றிஞரே .....(உகக)

* அடவியில்திருடி - சதுரக்கள்ளி † மலைவர்க்காலி - வெள்ளாடு ‡ தி
ரிபலை - கடுக்காய் தான்றிக்காய் - நெல்லிக்காய்

## தலைமாந்த குணம்

---

அறுசீராசிரியவிருத்தம்

கைகால் குளிர்ந் * துதரம்பொருமிக் கனக்கப்பார்வைபுண்டாகி ...........*
மெய்தான் வேர்வை முகத்திலெழும் விரைந்தே வலிக்கும் பலவிதமாய்......*
பொய் ஏப்பங் கொட்டாவிபுடன் புண்போல் நாசி நீர்வடியும் ....... ........*
மைசேர்விழியாய் தலைமாந்தம்)வந்தகுணமிதுகண்டாயே.............. (உகஉ)

* உதரம் - வயிறு

இதவுமது

## தன்வந்திரி

தலையுங்கனத்து உடலூதி சரீரந் தனிலேவலிபுண்டாம் .....................*
குலையும் வலித்துத்துள்ளிவிழுங் குளிருஞ்சுரமும் வேர்வைவிடும் ............ ..*
சிலையின்புருவத்தலை நிமிரா சேஷ்டைமிகவே செய்விக்கும் ......................*
மலையிலுயர்ந்ததனத்தாளே வாதைப்படுத்துந்தலைமாந்தம் ............(உகங)

தலைமாந்தத்துக்கு மருந்தும்

## துவாலையும்

எண்சீராசிரியவிருத்தம்

வெவ்தப்படக்கிப் பேய்மிரட்டித் தும்பைத்தாலும் வேலிப்பருத்தி வெள்ள
றுகுவேரோடுள்ளி. மதிப்பசதகுப்பியிடன் * தேசந்திப்பிலி வசம்புடனேஓமொ
டையாய் வாகாய்க்கூட்டிச், சதிப்பவிலை நறுக்கிய சாறள்ளிக்கிந்து காய்ந்த

சலத்தே பிழிந்துக் கைகாலங்கம், கொதிப்புடனே வலிப்பகலுந் துவாலேசெ ய்யக் கூசாமல் தலைமாந்தங் குணமதாமே............................(உகஈ)

* தேசங் - தேசாபுரம் ஷை இந்ததலைமாந்தத்துக்கு மூலாதிமாத்திரை கொடுக்க மிகவுந்நன்று

## துலைமாந்தருணம்

அறுசீராசிரியவிருத்தம்

அடக்கிடாபெருகும்வார்தி அதிகமாய்ச்சுரமுந் தோன்றும்....................*
முடக்கிடு முகச்சுடுப்பாய் மூரிகோட்டாவிபுண்டாம்..............................*
விடக்குமே வலிப்பெடுக்கும் விளைவிளைத்திருக்கும் வேர்க்கும்.................*
அடக்கிடா துலைமாந்தத்தை அறிந்துநீரடக்குவீரோ..........................(உகரு)

துலைமாந்தத்துக்குக்காந்தாதிக்கியாழம்

## தன்வந்திரி

எண்சீராசிரியவிருத்தம்

விரண்டோடக்காந்தாதிக்கியாழஞ்சொல்வோம் * மெய்யுதகம் † பெருமருந்து ‡ சிற்றேரண்டம், மிரண்டோட § நரிமிரட்டிக்கொட்டான்சின்னி மேலானகடுக்காயுமாசிபத்திரி, திரண்டோடபற்படகந் தான்றிமுத்தம் திரிபாலே அதிவிடையம் ஊசிப்பாலே, கிரண்டோடகருக்கியிவைக்கொட்டிப்போட்டுக் கருநீலிதிலவேம்புப்பொஸ்தக்காயே........................................(உகசு)

* மெய்யுதகம் - சிறுநீர் † பெருமருந்து - ஈசுரமூலி ‡ சிற்றேரண்டம் - சிற்றாமணக்கு § நரிமிரட்டி - கிலுகிலுப்பை

காயோடு பத்திரியின் தாளிசந்தான் கரியவேப்பிலே முத்தஞ்சிற்றுமுட்டி ...*
ஈயேகதூளிடித்து அகனிற்போட்டு இரண்டுபடிதண்ணீர்விட்டெட்டொன்றாக்கி
காயோடு * வயிரவனுங் கூடச்சேர்த்துங் கடுகநீயெடுத்தீய கணரோகங்கள்...*
வாயோடேபேசாமல் சர்வரோகம் வணங்கியே யோடுமிதில் வண்மைப்பாரே(உகஎ)

* வயிரவனுங்கூடச்சேர்த்தென்பது - சிறுகினாயானாலும் வயிரவமாத்திரை யிழைத்துக்கூட்டுக

துலைமாந்தத்துக்கு விரோசிக்க வேறு மருந்தும்

## எண்ணெயும்

பாக்களவு வெண் * உயவைவேர் அரைத்துப் பாவைபுடமுலைப்பாலிற் கலந்தேயீய, தாக்கவே வயிறுபேதிக்கும்பின்பு தபங்குவிளக்கெண்ணெயுடன் வசம்புவேளே, ஆக்ககொற்றான் † திரிபலையுந் ‡ திரிகடுகுந்தானும் § அங்கோ

லப்பொடியைப்போட்டெரித்து நக்க, மூர்க்கமுடன் சந்துதலை நெஞ்சில்தேய்க்க முறிந்தோடிப்போந்தலையின் மாந்தந்தானே........................(உகஅ)

* உயவைவேர் - வெள்ளைக்காக்கணைவேர் † திரிடலை - நெல்லிக்காய் கடுக்காய் தான்றிக்காய் ‡ திரிகடுகம் சுக்கு மிளகு திப்பிலி § அங்கோலம் - அழிஞ்சில்

## சுழிமாந்தருணம்

துறப்புமிகும் சக்கலுடன்சுவாசந்தோற்றும் தூக்கமதுபிடியாதுதொங்கிச்சாயும், இறைப்பெடுத்து விக்கலுடன் விலாவிம்பள்ளம் ஏந்துகொங்கைக்குடியாதிவிங்கினூற்போல், வெறுப்பார்கள்சிறுவன்மேல் இனியேதென்பார் வேறேநீமனந்தவிக்கவேண்டாஞ்சொன்னேன், உறப்பானகுணங்களிதுதானுங்கண்டால் ஓஓ சுழிமாந்த மென்றுசொல்லே.........................(உகக)

சுழிமாந்தத்துக்கு

## எண்ணெய்

சொல்லவே * சாலே † துழாய் ‡ தோடைதும்பைத் § தோகைகுழல்முடிப்பிலையுங் ¶ குறுங்கிநாதம், ௮ வல்லியுடன் * சிட்டியுமே † நறுந்தைக்கூட்டி வாகான இலையெல்லாஞ்சாறுவாங்கி, சொல்லுமேசாதிக்காய்திப்லிக்காயம் சேர்கடுகுரோகணி ‡ ரோசினியும் உள்ளி, வெல்லுதற்குவகைக்கழஞ்சுவெதுப்பித்தட்டி வீரானஎண்ணெய்ச்சாற்சமனுய்ச்சேர்த்து, நல்லகமலாக்கினியில்மெழுகதாக்கிநாவில் எண்ணெய்க்காசெடைதான் நாட்டிப்பாரே.(௩0)

* சாலே - கோடகசாலே † துழாய் - துளசி ‡ தோடை - ஆடாதோடை § தோகைகுழல்முடிப் பிலே - முதியார்கூந்தல் ¶ குறுக்கிநாதம் - சங்கிலே ௮ வல்லி - சீந்தில் * சிட்டி - சிற்றிலைச்செடி † நறுந்தை- நறுந்தாளி. (இஃதைந்தடியான்வந்தச்செய்யுள்?)

சுழி மாந்தத்துக்கு வேறு எண்ணெய்

## தேறையர்

### கலிவிருத்தம்

தாளும் ஈருள்ளிச்சாறு வெள் இண்டின்சாற்..............................*
கேளும் ஆமணக்கெண்ணெய் வகைக்குசேர்..............................*
சூளவே எரித்துப் பலங்கொண்டிடில்..............................*
வாளவேசுழி மாந்தமுநீங்குமே.............................. (௩௧)

இஃதொன்றமொருதொடர்

## வீக்கமாந்தகுணம்

---

அறுசீராசிரியவிருத்தம்

தப்புறு வீக்கமாந்தந் தன்னையேபன்னக்கேளு.........................*
கப்புறு காதுங் கண்ணுங் கனக்கவேவீங்கும் வற்றும்........................*
ஒப்புறு நாவும் புண்ணுப் ஓய்விலாச்சுரம் உண்டாகும் ........................*
வெப்புறு கைகால் நொந்து வெறுத்திடும் அன்னந்தானே ........ (ருாஉ)

மாந்தவீக்கம் வீக்கம் விஷவீக்கம் விஷபாகவீக்கம் சுரம்

நீர்க்கட்டு மலக்கட்டுக்கு

## கியாழம்

எண்சீராசிரியவிருத்தம்

பாடுவோம் பூவரசம்பழுப்பு சங்கம் பட்டைச்சேந்திற் கொடியுந்துளசிசுக்கு, நீடுவோம் வரள்முள்ளிமுருங்கையீர்க்கு நீர்முள்ளிச்சாறுவேளையின்தன் வேரும், சூடுவோம் பிரமியிலே மருள்கிழங்குத் தூதுவளைச் சிறுகுறிஞ்சான் * சத்திமூலம், கோடுவோம் கருஞ்சீரம் இவைவகைக்குக்கொண்டுசமன் எடையாகதூக்கிடாயே.......................................(ருாரு)

* சத்திமூலம் - சத்திச்சாரணைவேர்

இதுவுமது

தூக்கியே கியாழமிட்டு எட்டொன்ருக்கிச் சுகமாகநல்கினுல்மாந்தவீக்சம், வீக்கவிஷ வீக்கவிஷபாகவீக்கம் மீறுசுரம் நீர்க்கட்டு மலக்கட்டும்போம், ஆக்கவேமுறையறிந்து செய்தால் நன்மை அல்லாட்டால் கற்மம்வந்தெய்துமெய்தும், தாக்கவேபண்டிதரோ நூலைத் தேடி சாயுச்ய ரகசியத்திற்சார்ந்திடுமே ........................................ (ருாச)

இக் கியாழம் சிறியவர்க்கும் பெரியவர்க்குமாகும்.

## முக்குமாந்த குணம்

---

அறுசீராசிரியவிருத்தம்

அதுவாமுக்குமாந்தகுணம் அறியக்கேளுதிருக்கறவே ........................*
நிதமுங் * குழவிமுக்கிமுக்கிநின்றேகழியுஞ் சீய் மலமும்.......................*
புதியசுரமுமேலாடிப் பின்கால்வீங்கும் உழலையுமாய்.........................*
சதை தோல் எலும்பு நரம் பிருக்க தழலாயுலர்த்தி உருக்கிடுமே......(ருாகு)

* குழவி - பிள்ளை

முக்குமாந்தத்துக்கு

## கியாழம்

ஓமந்திப்பிலிமிளகுள்ளி * ஒடுங்கி ஓடும் சமனாக ................................ *
நாமச்சிலைதனில்முடிந்து † நாழிநீர்விட் டெட்டொன்றாய் ............ ........ *
வாமக்காப்ச்சிமுன்முடிந்த மருந்தை அவிழ்ந்துத்தான் அனைத்து........ ....... *
தாமமூன்று வேளை நப்கசகலமாந்தமும்போமே.................. ...... (௩௱௬)

* ஒடுங்கியோடு - ஆமையோடு * நாழி - படி) இம் - முக்குமாந்தத்திற்கு - கஸ்தூரி - எண்ணெய்க்கொடுக்க மிகவுநன்மை

## வரள்மாந்த குணம்

தோலுந்திரங்கி உடல்வெளுத்துச் சுழலுமயக்கம் உண்டாகும் ............... *
பாலு * மடுக்கும் மெய்யிளைக்கும் பார்க்கும் போதுபல குணமாம் ........... *
காலுங் கையுந் தான்வற்றிக் கடுப்பும் வலிப்புங் காண்பித்து .................. *
பாலர் தன்னை உருவழிக்கும் வரள்மாந்தத்தின் குணமிதுவே......... (௩௱௭)

* மடுக்கும் - குடிக்கும்

வரள்மாந்தத்திற்குக்குளிர்ச்சி

## எண்ணெய்

* வரட்சுண்டிச் சாறுவேளை மணித்தக்காளிக் கழற்சி ....................... *
கரிசலைத் துளசி † நீலி கண ‡ சதம் சமனாய்க்கூட்டி ...................... *
அரற்றியே இடித்தச்சாறு அழக்கு ஒன்றாவின் நெய்தான் .................... *
ஊற்றிய ஓராழக்கு உண்மையாய்க்கூடச்சேரே.............................(௩௱௮)

* வரட்சுண்டி - ஆடுதின்னாப்பாலை † நீலி - அவுரி ‡ சதம் - இலை

இதுவுமது

கூடகஸ்தூரிமஞ்சள் கோஷ்டமுங்கரியசீரம் ................... ................. *
வாடவே கடுகுரோகணி வகைக் கனாவிருகன்கூட்டிப் ............................ *
போடவே பொடிதான்செய்து புனிதமாகக்கலந்து ................................. *
நாடவே அடுப்பில் ஏற்றி நலமொடு காய்ச்சிக்கொள்ளே... ........... (௩௱௯)

இதுவுமது

கொள்ளவேசர்த்திதன்னில் கொடுமேறுட் டெடை உள்ளுக்குத் ................ *
துள்ளவேசகலதோஷஞ் சுருக்கினில் தீர்ந்து ரத்தம்........................ ..... *
உள்ளவேபரவிப்பிள்ளை உடலதுபருக்கும்பின்பு....................................... *
எள்ளவில் மிக்குளிர்ந்த இன்புடன் வளருந்தானே.......................... (௩௱௰)

உப்பல்மாந்தத்துக்கு

## மருந்து

கட்டளைக்கலிப்பா

குப்பைமேனியும் உப்புங்கசக்கியே கொள்ளச்சாறெருகாசெடைதானுமே...*
செப்பமாகுமே உப்பலின் மாந்தமுஞ்சீக்கிரம் ஒருநாளினில் தீர்ந்திடும்........*
தப்பினலும் முட்காவேளைச்சுக்குடன் தக்க ஓமம் வறுத்துத்தொகையிட......*
ஒப்பிலாதொரு உப்பலின் மாந்தம்போம் ஓதினர்கள் உயர்தொழிலாளியே ... ()

துட்டுமாந்தம் கிருமி சுழிகணைத்துட்காய்ச்சல் நளிர்மாந்தம் புரளிக்கு

## எண்ணெய்

அறுசீராசிரிய விருத்தம்

வெந்தவிந்துாற்றுகின்ற விளக்கெண்ணெய்நாழிதன்னில் ........................*
அந்தகனாயினற்சாறும் அதுபடியே தான் ஒன்று ..................................*
தந்த நாயுருவிவேரும் தைவேளை நாயின்வேளை ....................................*
முந்தவே * கொழுஞ்சிவேரும் முக்கனை சாறணையின்வேரோ.........(ஙாயி ௨)

* கொழுஞ்சி - கொள்ளுக்காட்வேளை

இதுவுமது

வகைசகொரு எலிமிச்சங்காய் அளவுசாந்தனைத்துக்கொண்டு ............... *
பகைப்பிலா வசம்பு ஓமம் பண்புகஸ்துாரிமஞ்சள்... ...................................*
மிகப்புடன் சரி * விளங்கம் மிருவகைக் † கனாயதாக ............................*
திகைத்தவெள்ளுள்ளிதானுஞ் சேர்த்திருபங்குகூட்டே ............... (ஙாயி ௩)

* விளங்கம் - வாய்விளங்கம் † அனாயதாக - பலம்அரையாக

இதுவுமது

கறுத்தசீரகமும்வெந்தயங் கடுகுரோகணிவகைக்கு ....................................*
நிறுத்தொக்க * ஒருபங்காக நீர்விட்டுத்தான் அரைத்து ..............................*
மறுந்தசட்டியிற்கலந்து வகையுடனென்றுயூற்றி .......................................*
பெருத்திடுமெழுகுபாகம் பிழையறவடித்துக்கொள்ளே ................(ஙாயி ௪)

* ஒருபங்கு - ஒருபலம்

இதுவுமது

பிள்ளைக்குதக்கன எண்ணெய்த் தானதுபுகட்ட அந்தப் ..........................*
பிள்ளைத்தாய்தனக்கு உப்புக் கைப்புடன் தவிர்த்திட்டாற்கால்.....................*
தெள்ளிய துட்டுமாந்தம் கிரியும் சுழிகணந்தான் ...........................................*
நள்ளிருவாயுட்காய்ச்சல் நளிர்மாந்தம் புரளிபோமே ................(ஙாயி ௫)

## உளைமாந்த குணம்

எண்சீராசிரியவிருத்தம்

வஞ்சியேகருவாலே அறிந்துபாரு வண்மைபுடன்வாயுகந்துக் குடலைப்ப ற்றி; மிஞ்சியேமலஞ்சிக்கிச்சுருகியேதான் மிகுந்த சலம் மலம் இரண்டுங்கட் டிக்கொண்டு, அஞ்சியே அலறி அழும் தேம்பித்தேம்பி அன்னையமிருதிபெ றதேடுமெத்த; ஒஞ்சிப் பால் உண்ணாது மிரண்டேப்பார்க்கும் உளைமாந்தக்குண மிதென்றுணர்ந்துக்கொள்ளே........................................(நாயசு)

உளைமாந்தத்திற்கு

## எண்ணெய்

கொள்ளவேவியாதியென்றால் கொஞ்சமல்லக் கொடுங்காரம் ஏற்றுத ற்குவகையைக்கேளு, விள்ளவே * நிலவேரு † சிவயோகிவாளம் விளாவான நிம்பவேர் ‡ உள்ளிக் § காயம், கள்ளவேஒன்றுக்குக்கழஞ்சுசேர்த்துக் கருத்துற வேஎண்ணெய் அரைப்படியில்வெந்து; உள்ளதொரு காசெடையாய் உள்ளே வாரு ஒருமித்து உளைமாந்தம் ஓடிப்போமே ............................(நாயஎ)

* நிலவேரு - நாகப்பூச்சி † சிவயோகி - வசம்பு ‡ உள்ளி - வெண் காயம் § காயம் - பெருங்காயம்

உளைமாந்தத்திற்கு வேறு எண்ணெய்

## தன்வந்திரி

வஞ்சித்துறை

உளைமாநதெண்ணெய்......................................*
தள்சிறுநாகம் .......................................*
வள * பெருமருந்து.......................................*
தளினமருந்தே ..............................(நாயஅ)

* பெருமருந்து - ஈசுரமூலி

இதுவுமது

எண்சீராசிரியவிருத்தம்

மருந்தானவசம்புசிரகம் இரண்டும் மானோதாரத்தம்வேர் பூண்டுக் காய ம், விருந்தானதிவைவகைக்குப் பலங்கால்வீதம் வீண்போகா தக்காளிச்சாற்வி ட்டாட்டி, குருந்தான எண்ணெய்சேர் அதில்கலக்கிக் குருவைநிதநித்தியமும் போற்றிப்போற்றி, திருந்தான அடுப்பேற்றிக்காய்ச்சிக்கொண்டுத் திறமையா ய்க்கரண்டிதினாமூன்றுநாளே ...........................................(நாயக)

இதுவுமது

வெண்பா

மூன்றுநாள்வார்த்திடவே மூரியுளைமாந்தம்..................................*
ஊன்றிமுறிந்தோடும் உண்மையே மூன்றுநாள்..................................*
பத்தியந்தான் உப்பு புளி பாவையேயாகா..................................*
இத்தலத்திற்காணும் இது..................................(௩௱௨௰)
இம்மூன்றுமொருதொடர்

உளைமாந்தத்திற்கு வேறு

## கியாழம்

எண்சிராசிரியவிருத்தம்.

சங்கம்வேர்ச்கொடிவேலி ஆடாதோடை தண்கொன்றைவேர் இந்துப்புடனேகாயம், புங்கினுடப்பட்டை இருநாழித்தண்ணீர் புகழ்பெறவேவார்த்துழக்காய்க்காய்ச்சிக்கொண்டு, துங்கமிகுகுழைந்தைகட்குக்கொடுக்சவேதான் தொடர்ந்துநின்ற உளைமாந்தந்திரும் தீரும், பங்கயப்பூவானனவேல் விழிபருத்துப்பணைத்துபுடைத்திறுகுதனப்பாவாய்செய்யே..................................(௩௨௧)

உளைமாந்தம் உட்சுரம் எலும்புருக்கிக்கு வேறு

## மருந்து

அறுசீராசிரியவிருத்தம்

✱ குருவிச்சிலைபுங்கருட்புட்டிக் கூட அரைத் தெள் எண்ணெயிலே.........*
மருவிகுழப்பிவிழுங்க உளை மாந்தம் உட்சுரம் எலும்புருக்கி..................*
உருவிதீருஞ்சொன்னபடியுண்மையிது தான்கண்டாயே......................*
கருவிநிகரளகத்தாளே காலகாலனடிபணியே..................................(௩௨௨)

* குருவிச்சி - புல்லூரி

## அட்சர மாந்தகுணம்

---

எண்சீராசிரியவிருத்தம்

நாடுமே அஸ்தியிலே சூடுகொண்டு நல்லுடம்பு குளிர்ந்து சரங்காயும் ஓயும், ஓடியதோர் சுவாசத்தால் அனல்புடைக்கும் உதடுகளும் வெடித்து வாட்புண்ணும் நெஞ்சு, தேடி அன்னே அழுகவப்பால் துயர மெற்றத் தேம்பி வாய்திறப்பதற்கு அருமையாகி, வாடுமே சிறுவனுக்கு தேகமெல்லாம்வழும்புடனேபேதி யக்ரமாந்தமென்னே..................................(௩௨௩)

அட்சரமார்தத்திற்கு

## எண்ணெய்

மார்கையது * காளி † முனி ‡ குமரிச்சாற்சேர்வாங்குவது எண்ணெய்ச்சேர் உள்ளிச்சாறும், சேர்ந்த காணாப்பூலாதுத்திவேர்த்தோல் செயமெழுகுபோல் அரைப்பாய்பலமதாக, வாய்ந்ததொரு வெந்தயமும் பலமதாக வறுத்திடித்து ஏகமாய்க்கலக்கிக்கொண்டு, சாந்தமாய் தீயெரித்துமெழுகதாக்கிச் சாதகமாப்புண்வாயில் தடவிடாயே..................................(கூஉச)

* காளி - மணித்தக்காளி † முனி - அகத்தி ‡ குமரி - சற்றாழை.

## பேய்மாந்தகுணம்

அறுசிராசிரியவிருத்தம்

இடுப்புடன்கை கால் நெற்றி * இமமுகம் விழியும்மூச்குப்....................*
பிடித்திடும் பிடரிதன்னைப் பின்னித்தாள் நரம்பைப்பற்றி ....................*
வடிப்புடன்வலிப் பிழுப்பு வாயினுல் நுரைநீர்வீழும்.................................*
படத்தகல் அல்குலாளே பாருபேய்மாந்தந்தானே..........................(கூஉரு)

* இமம் - பனி) இப்பேய்மாந்தத்துக்கு வல்லாரைநெய்கொடுக்க மிகநன்மை

பக்ஷித்தோஷம் மாந்தம் சுழிமாந்தம் வயிற்றுப்பிசம் கணம் நாவரட்சி காய்ச்சல் குளிர் தொந்தசுரம் முக்குக்கணம் பால்கிறிச்சினம் இவைகட்கு

## கஸ்தூரி எண்ணெய்

---

கலிவெண்பா

ஏகநாயகன்றன் இணையடியைப் போற்றிசெப்......து
வாருடனே எண்ணெய் வசனிப்பே.................ன் யோகமுள்ள (கூஉசு)
கோரோசினையும் கோஷ்டம் அதிமதூர ...........ம்
சிரந்திப்பிலி தேவதாரமுட .........................ன் பேரான (கூஉஎ)
சந்தனமும் ஏலம் தன்னுடனே மாசிக்கா ......... ப்
வெந்தயமும் சுருக் வெள்ளுள் ......................ளி அந்தமுள்ள (கூஉஅ)
பேரானகஸ்தூரிப் பெருவசம்பு ரோகணியு .........ம்
பாரமுளள மூங்கில் பச்சைத்தோ......... ...........ல் சிராய் (கூஉக)
வகைக்குவிருகனெடை வாடநிறுத்து வறுத்து ......த்
தொகையாய் அரைப்பதற்கு சொல்லக்கே .........ள தகைமையுடன்கூகூய
எருமுட்டைப்பீநாறி இசைந்ததொருச்சாற்றி ...... ல்
வருந்தி அரைத்து வழித்ததனை ...............................த் திரும்ப (கூகூக)

விளக்கெண்ணெய் ஓர்படியும் விட்டெரித்துத்தான் இறுத்த
மலேங்காமல் நோய்க்கெல்லாம் வைப்பாய் ..........க் கலக்கமற (௯௯௨)

பிள்ளேப்பிணிக்குப் போராகதான்கொடுக் ..........க
உள்ளநோய்ப்போரும் ஓதக்கே ....................ள் கள்ள (௯௯௯)

மாந்தவயிற்றுப்பிசமும் வடிவாய் இளந்தேச........ம்
சோர்ந்து கிடசகும் சுழிமா ந்த......................ம் காந்தும் (௯௯௪)

நாவரட்சிக்கணமும் தளிர்காய்ச்சலுங் குளிரு ......ம்
தூவி இரத்த தொந்தகர ............................ம் மேவும் (௯௯௫)

முக்குக்கணமும் முதிர்பால் கிறிச்சினமு..........ம்
*பக்கியின்தோஷம் பழங்காய்ச்ச..................ல் அங்கணமே (௯௯௬)

இந்தநோயெல்லாம் இருப்பிடத்தை விட்டுவிட்டுக்
கத்திவிழுந்தோடுங் காண் ............................* (௯௯௭)

* பக்கி - பட்சி

## பதினெட்டுமாந்தத்துக்கும்

# சாதிக்காய் எண்ணெய்

---

எண்சிராசிரியவிருத்தம்.

**சா**திக்காய்சாதிபத்திரிகிராம்பு ஏலம் தருகோஷ்டம் அதிவிடையம்குங் குமப்பூ, போதிக்கும் அதிமதுரம் * பஞ்சமூலம் பொற்கடுக்காய்த்தான்றிக்காய்மாசிக்காயும், ஒதியநற்கரியசீரகம் † தக்கோலம் உயர்வான குராசானி ஓமத்தோடு, கோதில்லா சதருப்பைச்சித்திரமூலம் கூறுவகைக்கே யிரண்டுவிருகன்கூட்டே ........................................................ (௯௯௮)

* பஞ்சமூலம் - கண்டுபாரங்கி - சித்திரமூலம் - சுக்கு - செவ்வியம்-பேரரத்தை ‡ தக்கோலம் - வால்மிளகு

இதுவுமது

கூட்டியே ஓமமது விருகன் ஐந்துக் குணமானவசம்பதுவும் விருகன் ஆறு, மாட்டியேவசம்பைச்சுட்டுச்சாம்பலாக்கி மற்றமருந்தெல்லாஞ்சூரணமே செய்து, காட்டியே கணப்பூண் டிண்டங்கொழுந்துக்கனத்தபழம்பாசி இலந்தங்கொழுந்து, தாட்டியேநுணு இலேநாவற்கொழுந்து நல்லவிடத்தாளையிலேக்கருவேலாமே. ........................................................ (௯௯௯)

இதுவுமது

கலிவிருத்தம்

ஆமே சங்கிலே ஆங் * கழவின்கொடி..............................................*
தேமே † வட்டத்திருப்பிந் ‡ கரந்தையும் ...........................................*

தோமே பாச்சோற்றிப் பேயின் பாச்சோற்றியும்..............................*
பாமேதல்லப் § பகன்றையும் ஆருமே ..........................................(௩௪௰)

* கழல் - கழற்சி † வட்டத்திருப்பி - பங்கம்பாலை ‡ கரந்தை - விட்ணுக்கரந்தை § பகன்றை - கிலுகிலுப்பை

இதுவுமது

எண்சீராசிரியவிருத்தம்

ஆருமே சடைச்சியிலை குதிரைவாலி அழகுசிறுபுள்ளடியும் கண்டங்கத்ரி, சோகியொடுசெருப்படையும் துளசித்தும்பை சுயகோழி அவரையுடன் ஆடாதோடை, ஏருமேவல்லாரைப்பொடுதலையும் வேளை எடுதவசிமுருங்கைவரப்பூலாபத்ரம், பாருமே இலைகளெலாம் இடித்தச்சாறுப் படியொன்று உப்பிலிவேர்பெருங்கிழங்கே.......................................................... (௩௪௧)

இதுவுமது

கிழங்கானபூதகரப்பான்தன்பட்டைக் கெடியானவாதகரப்பான்தன்பட்டை. முழங்கானதிருநீற்றுப் பச்சைவேரும் முச்யகருவேப்பிலையின் ஈர்க்குதானும், வழங்கான வகைச்ருக்கால்பலமேவாங்கிவகையாய்ச்சூரணித்துமுன் மருந்தில்சேர்த்து, குழம்பான சாறுஞ்சூரணமுமொன்ருய்க் கூட்டியேவிளக்கெண்ணெய்ப்படியில்தாக்கே ........................................................ (௩௪௨)

இதுவுமது

தாக்கியேமுலைப்பால் ஓர் அழக்குவிட்டுத்தண்மையாம்பக்குவமாய்க்காய்ச்சிக்கொண்டு, தேக்கியே சரண்டியளவைந்துநாளுந் திறமையுடன்கொடுத்துபத்தியங்காப்பாகில், நூக்கியே * ஈரொன்பான்மாந்தந்தீரும் துடியானகணம் எட்டுந்திர்ந்துபோகும், நீக்கியேபெரியவர்க்கேழ்நாள் கொடுக்க நீர்மேகம் கிரந்தியெல்லாந்தீருந்தானே........................................................(௩௪௩)

சகலமாந்தத்திற்கும் மாத்திரை

## புலிப்பாணி

நான் இனிதான் இன்னமொன்றுசொல்லக்கேளு நயமானவில்வவேர் விளாவின்வேரு, மானவேநாய்வேளைக்கஞ்சாங்கோரை வண்மையாய்ச்சின்னியொடு காட்டுமொச்சை, தேனனதிருநீற்றுப் பச்சைத்தும்பைத் தெளிவானசிறுதும்பைக்கண்டங்கத்ரி, வானனை அமுக்கராசங்கங்குப்பி வளமானநுணவேலிப்பரித்தியாமே .......................................................... (௩௪௪)

இதுவுமது

ஆமே நீ முடக்கொற்றன் வெண் காய்வேளை அடவானசாறணையுமுடைநாறி, தாமேநீ கொழுஞ்சிப்புன்னைக்குப்பூண்டு தயவான பிரமியொடு

சித்திரமூலம், வாமேநீகொவ்வையுடன் மணித்தக்காளி வகையானக்கையானு ங்கிழ்க்கீர்நெல்லி, போமேநீ இந்தவகைவேர்கள்தானும் புகழாககமுஞ்சு ஙிரைபிலமாய்த்தூக்கே ...........................................(௩௪௫)

இதுவுமது

தூக்கியே வசம்புடனே ஓமம் சுக்கு துன்பமிலாசதகுப்பி * திரிபலாதி, ஆங்குடைய தசபுரம் † அத்திதிப்பிலி அரத்தைகருஞ்சீரகமுங் காட்டுச்சீரம், போக்குடையபுதியவாலுழுவைதானும் பொங்கமுடன் பொஸ்தக்காய்ப் புரசங்கொட்டை, தாக்குவாய்வகைவகைக்குக் கழஞ்சுதூக்கிச் ‡ சாணக்கிச்சாற்றினுல் அரைத்திடாயே...................... (௩௪௬)

* திரிபலாதி - கடுக்காய் - தான்றிக்காய் - நெல்லிக்காய் † அத்திதிப்பிலி - ஆனைத்திப்பிலி ‡ சாணக்கி - ஜனகிபூண்டு

இதுவுமது

அரைத்திடுவாய் * அப்பைச்சாரணையும்வேளை அழகான அகத்திச்சாறிண்டஞ்சாறும், துரைத்திடுவாய் இருசாமம் மயனம்போலே துடியுடனேதான் அரைத்திருபங்காக்கி, விரைத்திடுவாய்த் துவரையைப்போல் உருட்டிப்போடு விதமாக ஒருபங்கில் விபரங்கேளு, இரைத்திடுவாய்ச்சுத்திசெய்த வாளந்தானும் இதமான கடுகுரோகணியும்பாரே ............................... (௩௪௭

* அப்பை - அப்பைக்கொவ்வை

இதுவுமது.

பார்க்கவேவகைவகைக்குக்கழஞ்சுதூக்கிப் பாங்காக முன்மருந்தில்ஒக்கச்சேர்த்து, வார்க்கவே அகத்திசசாற் * நிலவாகைச்சாற் வளமாகவிட்டரைப் பாய்சாமம் மூன்று, வேர்க்கவே துவரையைப்போல் உருட்டிச்சேர்த்து விதமாகநிழல் உலர்த்தி எடுத்துக்கொண்டு, நேர்க்கவே குழைந்தைகள்தன் பிணிகட்செல்லாம் நிஷேயமாய்த்தான்கொடுக்கத்தீரும்பாரே ................ (௩௪௮)

இதுவுமது

பாருநீ அப்பைச்சாற் நாய்வேளைச்சாற் பண்பானதுளசிச்சாற் சிறுதும்பைச்சாற், வீருநீ எருமுட்டைதாறிச்சாறும் விதமானகாட்டுமொச்சையிலையின்சாறும், சேருநீவயிறுகட்டிப் பிணிகட்கண்டால் செயலாகும் முன்குளிகைசெலுத்திப்போட, தீருநீ இச்சாற்றிலெதிலானலும் திறமாகத்தான்கொடுக்கத்தீரும்பாரே .............................................. (௩௪௯)

இதுவுமது

திருமேமாந்தத்தின் வகைகள்யாவும் திறமான தோஷமொடுவெலிப்புக் காய்ச்சல், ஆறுமே அக்கினியின் மந்தந்தானும் அன்பில்லா அநேகவிதநோ

ய்கட்போகும், கூறுமேசிசுவருந்தந் தீர்த்தோர்க்கெல்லாம்குற்றமொன்றும்வா
ராது வறுமைநீங்கும், வீறுமே போகருட கடாக்ஷத்தாலே விதமாக புலிப்பா
ணிப்பாடினேனே.................................................(௱௯)

இஃவேழுமொருதொடர்

உரம்விழுந்தால்

## முடிகு தைலம்

---

தன்வந்திரி

அறுசீராசிரியவிருத்தம்

இல்லாப் * பூண்டுப்பலம்பத்து இனி வனக்கடுகுபலம்பத்து ...............*
கல்லாக் குழிதைலஞ்செப்துக் கடுக எடுத்துப்பதபடுத்தி .........................*
பொல்லாநோய்கட்குடல்வாதம் போதும்போதும் அவாலேயிட ...............*
வல்லாப்பிள்ளை உரம்வீழ்ந்தால் வலேபோல்பூச உரம்விடுமே .........(௱௰௧)

* பூண்டு - வெள்ளைப்பூண்டு.

மாந்தவகுப்பு முற்றிற்று

## இனிகணம் வருமாறு

அகத்தியர்திருவடிகளேசரணம்

---

அகத்தியர் திருவடிகளேசரணம்

இஃது

# கணவகுப்பு.

## கணம்வருமாறு

அறுசீராசிரிய விருத்தம்

* ஐயதுகூடித்தென்றால் அரிவையர் துயரந்தன்னால் ........................*
செப்ய † பற்புனலருந்தி செறிசலதோஷந்தன்னால் ..........................*
பையரவல்குலாளும் பரியுடனிருந்ததாலும் ..........................................*
துய்யதோர்குழவிகெட்டுக் கணங்களுந் தோன்றுமென்றே...............(௱௰௨)

* ஐ - சேஷ்மம் † பற்புனல் - பலநீர்

## கணங்களின் தொகுப்பு

---

எண்சீராசிரிய விருத்தம்.

கணங்கட்பேர் விரித்துறையக்கேளுகேளு கனவாதகணம்பித்தக் கணங் குளிர்ந்த மணமான சேஷ்மகணம் பிள்ளைகட்குமாந்தகணம் அதிற்பிரிவு ஐந்தாம் இப்பால், துணமாநீர்க்கணம்பிரளிக்கணமும் நல்லச் சூலிகணஞ்சுழிக ணமஹாகணந்தான், குணமான ஊதுகணம்வரட்கணந்தால் கொதிப்புகணம் விக்கணம் இன்னங்கேளே ............................................ (கடுரு)

இதுவுமது

கேளேநீபிறங்கணமும் அந்தகன்தன் கிணமும்மந்தாரக்கணம் எரிகணந்தான், மூளேநீராமகணம் ஆமகணமெற்ற முக்குகணம்மூலகணம் போராமத்தில், வாளேநீகணம் இரத்தகணமாம் எல்லாம்வருத்துரைத்த திருபஃதுமூன்றுமாக, கோளேது இதுதானே ஆயுர்வேதக்குறிப்பறிந்தார்க்கல்லாமல்மற்றோர்க்கேதே ............................................ (கடுசு)

## வாதகணத்தின் குணம்

---

அறுசீராசிரியவிருத்தம்.

வாதகணத்தின்குணத்தியல்பை வகுப்போம் உடலும்பாரமதாய் ............ *
போத இளைக்கும்நா வரளும் புகைந்தே இருமுந்தாகமுடன் .................. *
பாதவளைக்கும் சுரங்காயும் பசியும் எடுக்கா மலங்கருகும்.................... *
பேதமாகநீர்ச்சுருக்காம் ) பித்தகணத்தின்குணங்கேளே ................... (கடுரு)

## பித்தகணத்தின் குணம்

---

கேளேபித்தக் கணத்தியல்பைக் கெடியாய் உடலும் எரிச்சலுண்டாம் ...... *
நாளே உலர்த்திமார்பிடிக்கும் நாக்குங் கடைவாய்ப்புண்ணாகும் ............... *
பாளே சுரமுங்காய்ந்தெரிக்கும் பருக்கக்கழியும் மஞ்சட்போல்.................. *
தாளேமயக்கும் தலைகிறுக்கும் ) சாற்றுஞ்சேஷ்மகுணங்கேளே.. ......(கடுசு)

## சேஷ்மகணத்தின் குணம்

---

குணமாஞ் சேஷ்மகணத்தியல்பைக் கூறக்கேளு உடலிமெலாம் ................ *
உணவாய்த் தினவுமெடுத்துசொரி ஊறிக்கரக்கால் வீக்கமதாம் .................. *

மண்வாய்நாறும்வெடிப்புடனே மார்பிற்கோழை இருமலுடன் ................*
* அணமேவெடித்துப் புண்ணாகும் ஆருதவனமிகுத்திடுமே............ (௩௫எ)
* அணம் - கீழ்வாய்மேல்வாய்புறம்

கணத்தின் குணம்

## கூறுகின்றார்

மாந்தமுதிர்ந்து சுழிக்கும் *கோ வயிறநொந்து நா வெந்து ................*
ஏந்தும் எதிரே மூச்செறிந்து இருமலிருமி † சத்திக்கும்.......................*
போந்த உடம்புபலவிதமாப் பொறுத்துப்பொறுத்துச் சுரம் உண்டாம் ......*
காந்தள் மலர்போல் கரமுடையீர் கணத்தின் வகையென்றுணாயீரே (௩௫அ)
* கோ - கண் † சத்தி - உவாநதி

இதுவுமது

விழிநிறம்வேறதாகும் வெறித்தது உருட்டிப்பார்க்கும் ..........................*
குழிவிழுந்துச்சித்தாழ்ந்து குணங்குணம்பலவுஞ்செய்யும் ....................... *
மொழிவது * மிடறுகம்மி முகங்குறுவேர்வை உண்டாம்..........................*
சுழிவதுவயிறுகாய்ந்தால் கணமெனக்கருதுவாயே.......................(௩௫௧)
* மிடறு - தொண்டை.

இதுவுமது

சீதரத்தமாய்க்கழியும் திரும்பக்கெட்டப்பால்போலே ..............................*
பேதங்கறித்தண்ணீரதுபோல் பின்னுங் கழியும் வயிறுப்பும்................*
ஓதங்கைகால் முகங்கருகி எரிந்து குளிர்ந்து வெதுப்புண்டாம்...................*
கோதே இருமலுண்டாகுங் குறிதான அறியுங்கணங்கட்கே ............ (௩௬௰)

எண்சீராசிரிய விருத்தம்

நடுங்கியதோர் பித்தமதுகோபங்கொண்டு நல்லவாயுவைப்பற்றி அழுத்திக்கொளளும், கடிந்திருந்த பிள்ளைக்குக் கதித்தச்சூடு கனகனப்பு எந்நேரங் கைவிடாது, ஒடுங்கியேவாயுலர்ந்து தண்ணீர்கேட்கும் உண்மையாய்மலபேதிவமும்பாய்வீழும், மடங்கியே ஊன்கழனீர் அபாநவாசல்மாருமல் எப்போதும்வருகும்பாரே ............................................................ (௩௬௧)

இதுவுமது

## தன்வந்திரி

அறுசீராசிரிய விருத்தம்

பாரோகணத்தைப்பகரக்கேள் பகரும் உடம்பில்சுரம்வீசும் ...................... *
பாரோ உட்சுரமிதுதானே பகருங்கணம் மலம் உட்சேரும்.......................*
பாரோமார்புகூண்டெழும்பிப் பதமாய் தேகம்மிகவற்றிப் ..... ..................*
பாரோவாயும் மிகநாறும் பதமாய்மலமும் வெட்டையென்றே••.........(௩௬௨)

### இதுவுமது

மலமும் சலமும்மிகத்தீய்ந்து மார்பில் அதிகசுரங்காயும்.............................*
மலமும்வயிறுமிக எரியும் வளமாய்த்தலைபுமிகமயக்கும் ............................*
சலமும்வரள் தீ தான்குறையும் சண்டாளம்போல் உட்சுரமும்.....................*
தலமே பன்னிரண்டாண்டுமட்டும் தனதாய்வருகுங்கணமிதுவே ...... (ரு௬ரு)

* இவ்விரண்டுமொருதொடர்

### கணத்துக்கு
## எண்ணெய்
### எண்சீராசிரியவிருத்தம்

பாருநீ இக்குணத்தால் கணங்களொன்றுப் பரிவாகக்கண்டறிநீபுத்தியாக, சாருதற்குக் குமிழ்வேரு * சித்திரபாலைசார்ந் † தருக்கன் ‡ காந்திவேர் § பொன்னும்பூவேர், பேரான ¶ மதிமயக்கிக் கணப்பூண்டுவேரும் போதரவாய்ப்பட்டைவகைப்பலமேதூக்கு, மீறி அரைமெழுகதுபோல் எண்ணெய்நாழிவெந்தபின்புபீங்கானில் இறுத்துவையே ................................ (ரு௬௪)

* சித்திரபாலை - சிறுஅம்மான்பச்சரிசி † அருக்கன் - எருக்கு ‡ காந்தி * விட்டுணுக்கரந்தை § பொன்னும்பூவேர் - ஆவாரைவேர் ¶ மதிமயக்கி - கொன்றை

### இதுவுமது

இறுத்திட்ட எண்ணெய்க்குப்பொடியைச்சொல்வேன் ஏலம்சீரகம் * மதுரம்பலமேவாங்கி, வறுத்திடித்துப்பொடித்திடுவாய்மயனம்போல வாரி எண்ணெய்மேல்தூவிகுலுக்கிவைப்பாய், நிறுத்து ஒருசாசெடையாய் மூன்றுநாள்தான் நேராகமுலைப்பாவில்கலந்துவாரு, துரத்திவிடும் அபானத்தால்சொரிந்த ரத்தம் தோற்றினதோர் கணமெல்லாந்தூரப்போமே ..................... (ரு௬ரு)

* மதுரம் - அதிமதுரம்

### கணத்துக்கு வேறு
## எண்ணெய்
### தன்வந்திரி

* கிணமானகிணமிதற்கு மருந்துசொல்வேன் கிரியையென்றவல்லாரைமாசிபத்ரி, கணமான வில்வமொடு விளாவின்சாறும் கடியான அத்திப்பால் ஆலம்பாலும், திணமான உள்ளிச்சாற் † நிம்பச்சாறும் திறமான முலைப்பாலும் ஆவின்பாலும், கிணமான ஆவின் நெய் வெள்ளாட்டின் பால் கேள்சிவந்தகொம்புத்தேன் கொவ்வைச்சாறே.................................. (ரு௬௬)

* கிணம் - கணம் - தசவாயு - திசவாயு வென்பது - போன்மருவியது
† நிம்பம் - எலிமிச்சம்பழம்

இதுவுமது

சாறிதெல்லாம் வகைக்குபடி அரைதான்வாங்கிசமர்த்தானதென்னங் காய்ப்பாலுநாழி, சாறிதெல்லாம் ஒருசட்டித்தனிலே ஊற்றிச் சாதிக்காய்சா பத்ரி ஏலக்கிராம்பு, சாறிதிலே * திரிகடுகு † திரிபலாதி சடாமாஞ்சில் அதி விடையம் மாசிக்காயும், சாறிதிலேவகைக்குபலம் ஒன்றுவாங்கிச்சன்னமாய்த் தூளிடித்துவைத்துக் கொள்ளே ........................................ (ருசுஎ)

* திரிகடுகு - சுக்கு - மிளகு - திப்பிலி † திரிபலாதி - கடுக்காய் - தான்றிக்காய் - நெல்லிக்காய் -

இதுவுமது

வைத்ருக்கேள் சந்தனத்தூள் அறுகங்கட்டை வலுவானவெட்டிவேர் விலாமிச்சோடு, கைத்திறமாய் இடித்துவகைப்பலந்தான் வாங்கிச் சால்படி தான் நீர் அதிலே யிதனைப்போட்டு, மைத்துப்பார்க்கியாழமது பாதிவாங்கி ம சுத்தானசாறதிலே யொன்ருய் வார்த்து, வைக்துப்பார் அடுப்பேற்றி எரித் துமேநான் மச்சமாட்நீர்ச்சுண்டி நெய்போலாமே ........................(ருசுஅ)

இதுவுமது

நெய்போலாம்பதத்திலேமருந்தைச்கொட்டி நேசமுடன்பூரணமாய்க் கிண்டிக் கிண்டு, நெய்போலாங்குழம்பாகும் பதத்தைக்கண்டு நேசமாய் இறக் கிவைத்து தேவிதன்னை, நெய்யென்ற வாலையைத்தான்போற்றப் போற்று தினவாகலட்சமுருநீ தான் ஓத, நெயயான நெய்யிது தான்வலுத்துப் போசச் சு நிகரில்லாசஞ்சீவி இதுதான்பாரே.................................. ......(ருசுகூ)

இதுவுமது

பாரோதான்கரண்டிநிறைமண்டலமேகொண்டால் பாழானமுன்சொன் னசனமெல்லாம்போம், பாரோதான்வாதத்தால் எழுந்தநோய்கள் பன்னிபன் னி ஓடுமேபின்பாராமல், பாரோதான்புளிசப்பு வாதபண்டம் பற்றறவுமாகா துதள்ளிப்போடு, பாரோதான்தேனைகணந் தேனைப்போலே பழுதில்லை எட்டா ண்டுமெட்டுண்டாமே .............................................................. (ருஎ௰)

இதுவுமது

உண்டாகும் அந்நோய்க்கு இந்தநெய்யை உற்பனமாய்க் கொடுத்துவி டு பறந்துப்போகும், உண்டாகும்வாதபித்த சேஷ்மமூன்றும் ஒடுங்கியேமூ லத்தில்கணமேயாகி, உண்டாமே உறுதிபற்றிக் கமலமெல்லாம் ஓ ஓ ஓ புண் ணுபுட்சுரமும்விசம், உண்டாமே உடம்பிளைக்கும் பித்தவெட்டை உத்தமமாய் எரிகுன்மம் உயர்ந்துட்போமே.................................................. (ருஎக)

இதுவுமது

உயர்ந்துப்போம்தாதுடைந்து தேகம்பாழாம் உற்பனமாய் அன்னரசம் அற்பமாகும், உயர்ந்துப்போம் * முப்பானிரண்டாண்டுமெட்டும் விட்டுவிடாதித் தகணம் ஓ ஓ பாரு, உயர்ந்துப்போம் ஆருங்டுபிராயமட்டும் உறுதிபடும் முப்பத்திரண்டிற்குள்ளே, உயர்ந்துப்போம் இந்நோய்க்கு இந்நெய்யைந்தான் உட்கொள்ளமண்டலத்தில் ஓடிப்போமே ..............................(௱௭௨)

* முப்பானிரண்டு - முப்பத்திரண்டு

இதுவுமது

ஓடிப்போம் பத்தியந்தான் இச்சாபத்தியம் ஒ ஓ ஒ நெய்யினுட அதீதமெற்ற, ஓடிப்போம் கணரோகம் தேனைக்கூறும் உயர்ந்தகணம் இந்தநெய்யில் அயர்ந்துபோகும், ஓடிப்போம் இந்தவகை ஆருஞ்சொல்லார் ஓங்காரப் பித்தத்தின் அதிதப்போக்கு, ஓடிப்பொம்யான் உரைத்தேன் எவருஞ்சொல்வார் உத்தமியாள் அம்பிகைநன் அதிதம்பாரே ..........(௱௭௩)

A.R.U.N.A.C.H

இவ்வெட்டு மொருதொடர்

கணத்துக்கு வேறு

## குடிநீர்

கலிவிருத்தம்

வில்லப்பத்திரிதுத்தி வெண்காயமும் ........................ *
நல்லவெந்தயம் ஒக்கநஞ்ருப்வறு ........................ *
வலல நல்ல நீர் வார்த்துப்பின்சீரகம் ........................ *
சொல்லக்காய்ச்சிக்கொடுகணஞ்சோருமே........................ (௱௭௪)

கணத்துக்கு வேறு சூரியபுட

## நல்லெண்ணெய்

அறுசீராசிரியவிருத்தம்

சிறுபுள்ளடியுங் கழல் கொழுந்தும் சிறந்த அவுரிசாணக்கி........................*
நறுமென் பொடுதலை ஒருபிடியும் நையநறுக்கி நல்லெண்ணெய் ........*
நிறுமன் அரையாய்க்கதிரோன் முன்னேரோவைத்துநீயருந்த ....................*
நறுமென் குழலாய் மேல்பூச நாதனருளால்கணந்தீரும்............. (௱௭௫)

கணத்துக்கு வேறு

## எண்ணெய்

வெண்பா

விளக்கெண்ணெவில்வம் மீ ) றவுரி ஈருள்ளி ........................ *
அளக்கவகைக் கோர் உழக்காக்கி - விளக்கமுற்றுங்........................*

கடுக்காயுங் கூட்டிக் காய்ச்சிச் சிறுவோர்க்குக் ............................... *
கொடுக்க கணம்போமென்றுங் கூறு ............................................ (௫௭௬)

கணத்துக்கு வேறு

## எண்ணெய்

அறுசீராசிரியவிருத்தம்

பொன்னாங்காணிவேருடனே புளியம் ஈர்க்குவேப்பீர்க்கு .................. *
மின்னே ஒவ்வொருபிடியதனில் விதமாய்க்கோழி அவரையின்வேர் ......... *
சொன்னேம்பலமே அரையாகதுள்ள நறுக்கி எண்ணெயிலிட் .................*
டெண்ணப் * பானுபுடம்வைத்து ஓடுங்கணமும் வாராதே ................ (௫௭௭)

* பானுபுடம் - சூரியபுடம்

கணத்துக்கு வேறு

## எண்ணெய்

கலிவிருத்தம்

* கடுகருஞ்சீரகம் கடுகுரோகணி ...................................................*
விடு † வனமல்லிகை மீறும் இண்டிலை ...........................................*
இடு மூலைப்பாலினில் ஈருள்ளி உசிலையும் ......................................*
சொடுவிளங்கெண்ணெயில் கூறு கணங்களே ...................................... (௫௭௮)

* கடு - கடுக்காய் † வனமல்லிகை - காட்டுமல்லிகை

கணத்துக்கு வேறு

## நெய்

அறுசீராசிரிய விருத்தம்

கோட்டம்நல்லெண்ணெய் நெய்யுங்குறித்த சண்பகப்பூ * கந்தம் .........*
நீட்டிய அவுரிநொய்ய் நிலக்குமிழ் கடுகுரோணி ..........................................*
நாட்டிலாமிச்சைமிக்க நலந்தருகிராம்புபாகம் ...........................................*
ஈட்டியே சாறுகொண்டு எரித்துண்ணகணம்போமின்னே ............... (௫௭௯)

* கந்தம் - வெண்காயம்

கணத்துக்கு வேறு

## மருந்து

கீழ்க்காய் நெல்லிவேர்பட்டைக் கேள் கருவேப்பிலைச் சீரகமும் ...............*
வாழ்க்காய்ப்பச்சை நெல்லுமிதான் வகைக்கு விருகன் ஒன்றாக ................*
மூழ்க்காய்க் * குஜப்பாலிற்போட்டு முழுதும் இரவில் ஊறிடபின் ............*
காழ்க்காய்க் காலமே அரைத்துக் கடுகெப்பிழிந்து முக்காலே ............ (௫௮௰)

*குஜப்பால் - மூலைப்பால்

இதுவுமது

காலைமூன்று மேகொடுத்து கதிக்கசாயங்காலத்தில் ........................ *
ஆலைமிளகுபற்பமதாய் ஆக்கிச்சீரகமுஞ்சற்றே .............................. *
சாலைப்பொரியவேவிட்டுத் தண்ணீர் ஊற்றிகாய்ச்சிகொடு ... .................. *
வேலைப்பழித்த விழியாளேமிருத்தகணமும்போமென்றே.................. (௫௮௧)

கணச்சூடுதணிய

## எண்ணெய்

சிற்றாமணக்கின் எண்ணெய்ப்படி திறமாய் ஒன்றுவல்லாரை .................. *
சற்றுச்சாறுப் படி அரையும் தானேவெந்தயம்பலம் இரண்டு ................*
அற்றுபசும்பால்விட்டரைத்து அந்த எண்ணெயிற்கலந்து.........................*
வற்ற எரித்து * அயிரிட்டு வார்க்ககணச்சூடுப்போமே..................(௫௮௨)

* அயிர் - சர்க்கரை

கணம் இருமல் வாநாற்றத் திற்கு

## கியாழம்

மணித்தக்காளி ஒருபிடியும் மானே வெந்தயம் பலநாலு ......................(
துணித்) தீருள்ளித்தான்மூன்று துட்டெடையெல்லாம் பொன்னிறமாய் ...*
குணித்துவறுத்து இரண்டுபடி * குசம் விட்டெட்டொன்றாய்க் காய்ச்சி......*
கணித்து மூன்றுநேரங்கொள் கணம்வாய் நாற்றம் இருமல்போம்... (௫௮௩)

* குசம் - தண்ணீர்

இங்ஙனமுற்சொல்லிய மாந்தமுதிர்ந்து கணமாகி இரண்டுந்தொந்

தித்து மாந்தகணமாகி) வருதல் கண மாந்தமென்றுங்கூறுப

மாந்தகணத்துக்கு

## பச்சிலைச் சாறு

எண்சீராசிரியவிருத்தம்

நொச்சியிலைத் துளசியிலை மொசுமொசுக்கை நோக்கியேமூன்றுமெருசமனாய்க்கொண்டு, சச்சரூடன்பிட்டவியலாகச் செய்து சாறெடுத்து ஒருசங்குபாலகர்க்கு, இச்சையுடன் தான்கொடுக்க மாந்தமேது எழிலானமாந்தகணமோடிப்போகும், கச்சணிந்தபொற்சயில நகிலத்தாளேகடல் சூழ்ந்தமண்டலத்திற்கருதிப்பாரே ............................................................ (௫௮௪)

மாந்தகணத்திற்கு வேறு

## கியாழம்

வெண்பா

மாந்தகணம் போம் வல்லப்பொருமல் போம் ........................... *
சேர்ந்திருமல் போருஞ் சேஷ்மம்போம் * காந்தி ........................... *
துளசியும் திப்பிலியும் சொல்லும் மா புல்லுரீ இ........................... *
களசி எரித்தருந்தக் கால் ........................... (நடஅரு)

* காந்தி - விட்ணுக்கரந்தை

மாந்தத்துக்கு வேறு மருந்து

கட்டளைக்கலித்துறை

நன்னாறியும்சிறுசினா * வனமல்லி நாவல் இண்டுப் ........................... *
பொன்னாருஞ் சங்கம்வேர் பாவட்டை † நீலிப்பொருந்து கொஞ்சி ........ *
எந்நாளுங் காக்கின்ற வட்டக்கிலுப்பை இவைகளெல்லாம் ................ *
மின்னார்பிள்ளைக்கிய மாந்தகணம்விரண்டோடிடுமே.................. (நடஅசு)

* வனமல்லி - காட்டுமெல்லிகை   † நீலி - அவுரி.

பொருமல்மாந்தகணத்துக்கு வேறு

## மருந்து

இடுமே துளசிச் செம்முள்ளித்தும்மை இலையுடனே ........................... *
வெடுமே நற்சீரகமுங் கஞ்சாங்கோரைதை வேளையுடன் ........................... *
கொடுமேநறுக்கிப்புகட்டிடச்சாற்றைக் குழவிகட்கு ........................... *
விடுமேபொருமல் மாந்தகணங்கள் விட்டோடிடுமே ........................... (நடஅஎ)

மாந்தகணப் பொருமலுக்கு

## லேகியம்

விட்டிடுஞ் சாரணைவேர்ப்பட்டைத் தட்டி விதமுடனே ........................... *
இட்டிடுஞ்தே சாபுறஞ் சமன்கூட்டிக் கிளர்பொடியாய் ........................... *
மட்டிடுந் தேனில் இலேகிய மாக்கி * மதலேக்கிட ........................... *
பொட்டென மாந்தகணத்தின் பொருமலும் போய்விடுமே ............ (நடஅஅ)

* மதலை - பிள்ளை

மாந்தகணத்துக்கு வேறு

## மருந்து

எண்சீராசிரியவிருத்தம்

புங்குபுளிநொச்சில் மாவேம்போடொக்கப் பொடுதலேவேலிச்கருவேப் பிலைதாரத்தை, சங்கவுரி பொன்னவரைப்பிடி ஒவ்வொன்று தானும்இலை ஏர்க்

செடுத்துச்சட்டியிட்டு, தங்குரோகணியுமிந் தோமமுமுடிந்து தான்போட்டுத் தண்ணிரும்நாழிவார்த்து, அங்கெரித்தவற்றமுடிந்தம்மருந்தை அனாத்துகொடுமாந்தகணம் அடங்கிப்போமே.................................................... (௫௮௧)

மாந்தகணத்துக்கு வேறு

## நல்லெண்ணய்

கலிவிருத்தம்

போகவே இன்னம் புகலுவோங்கேளு .................................................. *
ஆக மருளின் கிழங்குடன் உள்ளி ...................................................... *
தாகவே * நிப்பச் சாறவாங்கி .............................................................. *
ஏகவே எண்ணெய் எரித்து நீ உண்ணெ ...........................................(௫௯௰)

* நிம்பம் - எலிமிச்சை

இதுவுமது

உண்ணகணங்கள் ஓடுமேமெய்யா ...................................................... *
மண்ணில்மாந்த கணநோய்ச் சேஷ்மம் .................................................*
கண்ணிற்காணு கதரிடும்பாரு ........................................................... *
எண்ணுமே இந்த எண்ணெயச்செட்திடே ..................................... (௫௯௧)

மார்தகணத்துச்கு வேறு

## எண்ணெய்

அறுசீராசிரியவிருத்தம்

புள்ளடிப் பொடுதலைச்சாற் புசிப்பதோர் தகளைச்சாறு ......................... *
மெள்ள மிளகுத்தக்காளி மிருகருநொச்சில் * பாசி.......................................*
வெள்ளைப்பூண்டும் வசம்புவெண்காயச் சாறு தானும் ............................ *
தெள்ளிதாய்ச்சமன்கொண் டெண்ணைச்சேர்த்தெரிதெரியுங்காலே... (௫௯௨)

* பாசி - பழம்பாசி

இதுவுமதற்கு

## கியாழம்

காலமேஇந்தஎண்ணெய்க் கடியசாயங்காலந்தன்னில் .............................. *
சிலமாஞ்சுக்கோடோமம் சேர்ந்தபொன் முசுட்டைவேளை ........................*
ஏலமாம் நாட்டுமூலம் இதமாய்த்திப்பிலியுங் கூட்டி ......................................*
கோலநீர்க்காய்ச்சிக் கொள்ளக்கொடு மாந்தகணமும்போமே ......... (௫௯௩)

மாந்தகணத்துக்கு வேறு

### என்ணெய்

எண்சீராசிரியவிருத்தம்

வல்லாணாப்பிரமிசெருப்படைநீர்முள்ளிமணக்குமணித்தக்காளி மொசு மொசுக்கை; சொல்லெரு மைத்தக்காளி துளசிதானும் துடிகோழி அவணா நெய்ச்சிட்டி யெல்லாம், நல்லதோர் வகைவகைக்குப் பிடியொன்றாக, நல்வ இல்லா இலைகளெல்லாங் கொண்டுவந்து, கல்லதுவைத்துப்பிழிந்து படிகால் சாறுகணமான எண்ணெய்படி அரையதாமே ......................(ருகச)

இதுவுமது

அரையதாம் துமட்டிக்காய் துவைத்தச்சாறும் அறியவெண் காயச்சாறும் ஒருசெரங்கை நிரையதாம் விட்டெல்லாங்கலந்துக்காய்ச்சி நேர்கடுகு பதமாகும் போதிலேகேள், கரையதாம் கார்போக அரிசிபூண்டு கருஞ்சீரம்வசம் புவகை வகைக்குதானே, விரையதாம் விருகனென்று நறுக்கிபோட்டுமெழுகு பதமானவுடன் இறக்கிடாயே...................................(ருகரு)

இதுவுமது

கலி விருத்தம்

இறக்கியே வடிக்கட்டி இதமுற...............................*
சிறக்கவேகொடு * செம்மலுக்கன்புடன் ...........................*
வறந்கிடும்நல்ல மாந்தகணமுடன் ..............................*
திறக்கும் அட்சரம் தீருமி துண்மையே .........................(ருககா)

* செம்மல் - பிள்ளை

மாந்தகணத்துக்கு வேறு

### நெய்

அறுசீராசிரிய விருத்தம்

* வேலிப்பரித்திச மூலமுடன் வெள்ளைச்சாரணைக்குட்டிவிளா..............*
மூலிவேளைவேர் வசம்பு முதியவெள்ளை வெண்காயம்.......................*
கோலி நறுக்கிச் சாற் † மேதி கொடுத்தவெண்ணெய் தனிலெரித்து..........*
சிலமுலைப்பால் தனில்கொடுக்க சேர்ந்தமாந்தகணம் போமே ......... (ருகஎ)

* வேலிப்பரித்தி - உத்தாமணி † மேதி - எருமை

மாந்தகணத்திற்கு வேறு

### எண்ணெய்

எண்சீராசிரிய விருத்தம்

விளக்கெண்ணெய் ஒருநாழிநுணா இலைச்சாற் விருப்பமுடன் ஒருநாழி தானே ஆகும், இளக்கமாய் எருக்ளிச்சாறுநாழி எழில்வில்வத்தின் கொழுந்

துப்பிடியிரண்டு, தளக்கருஞ் சீரகம் இரண்டு விருகன்சானும் துவர்கடுக்காய் நாலதிவும் பொடியேசெய்து, விளக்கமாம் வெண்காரம் விருகன்ரண்டு விபரமுடனே பொரித்து அதனிற்கூட்டே...................................... (௫௯௮)

இதுவுமது

கூட்டியே கொதிக்கையிலே சரக்கைப் போட்டுக் குணமாகபதம்பார்த்துதான் இறக்கி, ஆட்டியே வடித்து வைத்துக் கொண்டு நீயும் அழகாகசங்கெடையாய்ப் புகட்டிவந்தால், வாட்டியே எழுந்தபொல்லா வியாதியான மாந்தசனஞ் சொல்லாமல் ஓடிப்போகும், காட்டியே கைப்புபுளி கவிச்சிறச்சிக்கருதாமல் பத்தியத்தில் தாயைவையே...................................... (௫௯௯)

விஷமாந்தகண விக்கலுக்கு

## கியாழம்

* முருவிலிநன்னறியொடு வெண்காயந்தான் முதிர்வசம்பு இந்துப்புக் கடுக்காய்முள்ளி, மருவியநாரத்தை எலிமிச்சைவேளை வாகான † மலைதாங்கிக்கிழ்க்காய்நெல்லி, வருவியதோர் பூசணியுமே பாச்சோற்றி வளர் ‡ குறட்டை § மால்கரந்தை வகை ஒன்ருக்கி, பெருகுநல்ல நீர்விட்டுக்காய்ச்சிக்கொள்ளப் பிலத்தவிஷ மாந்தகணம் விக்கல்போமே.................................... (௬௱)

* முருவிலி - வவ்வாலொட்டி † மலைதாங்கி - பங்கம்பாலை ‡ குறட்டை - காக்கணன் § மால்கரந்தை - விட்ணுக்கரந்தை

ஊதுமாந்த கணத்தின் குணம்

## தன்வந்திரி

---

அறுசீராசிரியவிருத்தம்

தானே ஊது மாந்தகணம் தனதாய் உரைப்பேன் மடமயிலே...............*
வானேகாலுங் கண் உடம்பும் வளமாய்வீங்கிநாபுண்ணாய்....... ...............*
ஆனேகேளாய்ச் சுரம் உண்டாய் அன்னந்தண்ணீர்க் கொள்ளாது ............*
கானேகாலுங்கைசோர்ந்துகனத்தசுவாசம் அதிகமென்றே ...............(௬௱௧)

இதுவுமது

அதிகமாய் ஊதுமாந்தகணமதுபனி ரண்டாண்டு..................................*
அதிகமாம் அந்நாள்மட்டும் ஆம் இதுநோயின்காலம்............................*
அதிகமாய் மருந்துகேளாய் அன்புடன் உரைப்பேன்தானே................. *
அதிகமாம் தேவிவாலை அருளினல் உரைப்பேன்கேளே,.................(௬௱௨)

இதுவுமது

ஊதுமாந்த கணத்துக்கு

## எண்ணெய்

உரைப்பேன் எந்தன் குருவருளால் ஓ ஓ முள்ளிநீர் முள்ளி..................*
திரைப்பேன் இண்டுவேர்க்காயம்தேங்காய் நெற்றுப்பாலுடனே..................*
கரைப்பேன் கையான் கரந்தையுடன் கண்டங்கத்திரி வசம்பேலம்...........*
இரைப்பேன் வெட்பாலரிசியொடு திகழுமாதளம் பழச்சாறே........ (சா௩)

இதுவுமது

பழமேவட்டத்திருப்பியுடன் பற்பாடகமும் முத்தமுடன்...................*
தழமே ஓரிதழ் தாமரையும் தண் தாமரையும் செங்கழுநீர்...................*
மழமே சூரத்தாவரை வல்லாரையின் தன்சாறுடனே...................*
வழுமே விளாவின் பிசின் வாகைமருக்காரைப்பிசினுஞ்சேரோ ........ (சா௪)

இதுவுமது

சேரோ இலவம்பிசின்சேரு செங்கத்தாரி முருக்கன்சாற்...................*
மாரோமாசிக்காயுடனே மகிமைகடுக்காய் அதிவிடையம்...................*
சீரோவாலின் மிளகோடு சிவந்தசாதி பத்திரியும்...................*
வாரோ எல்லாம் வகைக்குக்கால் வளமாய்ப்பொடித்து ஒன்றுக்கே.....(சா௫)

இதுவுமது

பொடித்திடு மருந்திதனோடே புகழ்விளக்கெண்ணெய்வார்த்து...................*
அடுத்ததோர் அடுப்பில் ஏற்றி அழகதாய் தீயைமூட்டி...................*
வடித்துகடு குத்திரண்டால் வளமதாய் இறக்கிக்கொண்டு...................*
தடுத்ததோர் தேவிமாதை தயவாய் பூசித்துப்போற்றே...................(சா௬)

இதுவுமது

போற்றிய எண்ணெய்தன்னைப் புகழ்ந்து துட்டெடைதான் ஈய...................*
ஆற்றிய மூன்றுவேளை அழகதாய்க்கொள்ளச்சொல்லு...................*
மாற்றிய புளிப்புதள்ளு வகையுற புகையுமாகா...................*
ஏற்றிய சவிச்சுஎள்ளு இவையெலாம் ஆகாதன்றே...................(சா௭)

இவ்வேழுமொருதொடர்

## கணமாந்த குணம்

மாந்தகணமெனினு மொக்கும்

செடலமாம் கருவிலானசிசுவதற் கின்னங்கேளு...................*
விடலமாம் கணமாந்தந்தான் மிகுங்குறி குணத்தைப்பாரு...................*

அடலம தாகப்பெண்ணுள் அடவதாய் தலைக்கு எண்ணெய் ........................*
தடமதாய்த் தேய்த்துச்சுத்த சலத்தினில் முழுகினாலே.................. (சாஅ)

இதுவுமது

முழுகியே அன்னம்உண்டு முழுங்கென எழுந்தபோது ..........................*
அழகிய மயக்கசோப தாபமு மிகுதியாலே ..........................................*
தழுவியே படுக்கமாது சடுதியில் உறங்கங்காணில்..................................*
விழுகியே * உதானவாய்வால் விரகலாகரிதானுமே............................ (சாக)

* உதானன் - நாபியில் நிற்கும்வாயு

இதுவுமது

நாகுமே அவள் மோகத்தால் நாயகனோடே சேர்ந்து ..................................*
நோகவேதேகமெல்லாம் நுசிதமல்லாடும்போது ......................................*
தாகபோகத்தால் அந்த * சமானனும் வாய்வெழும்பி ..................................*
ஏகிடும் † கமலம்புக்க இறுத்திடுங் குளுமைவந்தே...................................(சாய)

* சமானன் - கந்தரக்குழியிற்சந்திடைநிற்கும்வாயு † கமலம் - பிர
பைசொலிக்கும் ஸ்தானம்

இதுவுமது

குளுமையாய் எழுநாளும் கூறிய தலைஇடிக்கும்........................................*
எளுமையாம் பெண்ணுளுக்கு எழும்பிடுங் கபாலசூலை ..............................*
வளுமையாம் பின் னும் ஏழு வளம்பெற நாள்சென்றுக்கால்.........................*
வெளுமையாய் தேகம்எங்கும் வெளுத்துடன் வயிறுநொந்தே.........(சாயக)

இதுவுமது

நொந்ததால் சூதகத்தில் நோயிது என்றுசொல்வார்.......................................*
பந்துபோல் நாபிதன்னில் பாசிபோல் இருக்கும் என்பார்...............................*
வெந்துதான் பித்தச்சூட்டால் மிகுத்ததோர் நோயிதென்பார் ..........................*
தந்திரவாய்வினாலே சன்னியும் இதுவென்பாரோ.................................(சாயஉ)

இதுவுமது

இதுவென கணமாந்தந்தான் ஏறியேபெண்ணுளுக்கு.......................................*
வதுவெனக்கருவில்பற்றி மஞ்சனும் பிறந்துதானுல்........................................*
பதுவென மாதுக்கேதான் பாலதுமிகுதியாகும்...............................................*
அதுபத்து நாளுந்தானும் அமிர்தமேபெருகுந்தானே.................. (சாயங)

இதுவுமது

பெருகிடும் பத்துநாளும் பின்புநாள் மேலேசென்றால் ..................................*
கருகிடும் மூலச்சூட்டால் கல்லுபோல் கட்டும்பாலும்..................................*

மருகிடும் அதுநாள்சொண்டு மஞ்சனும் இளைக்கும் தேகம்.........................*
தருகிடும் வாந்திவாய்நீர் தலையது சுழற்றலாமே...................... (சாய௪)

இதுவுமது

தலையதுசுழற்றல்காணும் நாஷ்வரும்நாளேகேளு ...................................*
கொலையது தந்தைதாயார் கொடுமைசெய்வினையினாலே .............................*
நிலையதாய்க்கற்மநோய்தான் நிலைத்திடுஞ்சிசுவுக்கேதான்...........................*
அலையுறபிறந்தபிள்ளை அஃதிரண்டாண்டுபின்பே...................... (சாய௫)

இதுவுமது

பின்புமேவருகும்நோய்தான் பிலத்ததோர்வினையைச்கேளு.........................*
தென்புடன்தெங்காய் வாழை தித்திப்பு வடை பாயாசம் ...............................*
அன் பலாச்சுளையும் * மீசு அரிசியின் அடையுந்தானும்..............................*
நன்பதுகுழைந்தைக்கேதான் நாட்டிடில்கணந்தானுமே...............(சாய௬)

* மீசு - மிகுதி

இதுவுமது

கணம்வருமாந்தத்தாலே * காதலன்குணத்தைக்கேளு ...................................*
துணம் எட்டுநாளைதன்னில் துலங்கிடுஞ்சத்திககாணும் ................................ *
பண வயிறிளைச்சலாகிப் பாசிபோல் பேதியாகும் ...................................... *
விண விழிசுழன்றுசோர்ந்து விடவிடென்றுலரும்நாவே...............(சாய௭)

* காதலன் - பிள்ளை

இதுவுமது

நாவதில் சலமிராது நடைமுதல் அசதிகாணும்.........................................*
காவது என்றுபாலன் கதறிடும் எடுக்குந்தாகம் ......................................... *
கூவது என்றுநாலு நாளது * கோஷமாகும் ............................................ *
தாவது கணமாந்தந்தான் தாயினால் அணுகும்வாறே..................(சாய௮)

* கோஷம் - ஒலி

இதுவுமது

அணுகிடுமாந்தத்திற்கு அறைகிறேன் புத்தியாய்க்கேள் .......................... *
வணுகிடும் இதனைப்போக்க வைத்தியர் உலகில் இல்லை ........................... *
நணுகிடுமைந்தனுனா நாடிமுன் தாதுபார்த்து..........................................*
கணுகிடுங்கைவல்யந்தான் தாவி தந்தாதியாமே............................(சாய௯)

இதுவுமது

தாதியைப்பார்த்துமாந்த நோய்தனை அன்னைவத்தேறி ......................*
சேதியை * சாத்தியாசாத்தியச் செயலினை அறிந்துமேவி......................*
தீதுறு கணமாந்தந்தான் தீரவேமருந்துகேளு ......................*
மேதினியோர்களுக்கு விரும்புறேன் எண்ணெய்த்தானே ............... (சஉ0)

* சாத்தியம் - அசாத்தியம், அது - உண்மையும் - சந்தேகமும்

கணமாந்தத்திற்கு

## எண்ணெய்

விரும்பக்கேள்சித்திரமூலி விளங்கவேகுன்றி சங்கு ......................*
திரும்பவே முல்லை முன்னை சிற்றாமல்லிப் பேராமல்லி......................*
அரும்பவே * காட்டகத்தி ஆவாரைப் பொன் ஆவாரை ......................*
குரும்பனை) மணித்தக்காளிக் கொன்னைக்காய்வேளைவேரோ...............(சஉக)

* காட்டகத்தி - வீழி

இதுவுமது

வேரினில்வகை ஒன்றுக்கு விரும்பிடும்பலம்முக்காலாய்ச் ......................*
சேருநீ ஒன்றாய்வாங்கி செயம்பெற ரவியில்மூன்று ......................*
ஆருமே அறியதானும் அடவுடன் தான உலர்த்தி ......................*
பாரினில் உரலில் இட்டுப் பாய்ச்சிடுந் தோண்டிக்கொள்ளே ............(சஉஉ)

இதுவுமது

தோண்டியே தூணிநீரில் தூளினைச்சேருதாக்கி ......................*
ஆண்டியே மருந்துபின்னும் அருளுவோம் புனல்முருங்கை ......................*
நாண்டியே தத்தைச்சூரி நாய்வேளை குறிஞ்சான் இண்டு......................*
வேண்டியே நரிபயற்றம் நன்னாறிப் பிரமியாமே......................(சஉங)

இதுவுமது

பிரமியும் தும்பை பொன்னாங் கண்ணியு மொசுமொசுக்கை ......................*
திறமையாய்வகை ஒன்றுக்கு சிறப்புடன்பலம் ஒன்றாக......................*
நிறமையாம் இதனைச்சாறாய்ப் பிழிந்துடன்முன்புநீரில்......................*
ஒருமையாய் விட்டுத்தானும் உசிதமாஞ்சரக்கைக்கேளே ...............(சஉச)

இதுவுமது

சரக்கில் வால்மிளகு நல்ல சடாமாஞ்சில் அக்ராகாரம் ......................*
திறக்கவேசண்பகப்பூ செவ்வியம் மதுரம் கோஷ்டம் ......................*
புரக்கவே கடகசிங்கி புகலக்கேள் சுக்குதான்றி ......................*
உறக்கவே கடுக்காய் சாதிக்காயுடன்லவங்கப்பூவே......................(சஉரு)

இதுவுமது

பூவதுகடுக்காய்ப்பூவும் புராழுதாய்வகைக்குவீதம் ...................... *
தாவது கழஞ்சிரண்டு தனிதனியாகவாங்கி ...................... *
வாவது இளம்வறுப்பாய் வறுத்துடன் உரலில் காக்கி...................... *
மாவது போலேசாடி தோண்டிமுன் நீரில்தாக்கே...................... (௪௨௬)

இதுவுமது

தாக்கியே பின்புகேளு தாரமும் கெந்திவீரம்...................... *
தோக்கியே வாளம்நாபி வெள்ளை அப்பிரகந்தானும்...................... *
வாக்கியே புழுகுசலா சத்துடனேகஸ்தூரிவாங்கி ...................... *
பாக்கியமாகவீதம் வகைப்வகைப் பலங்காலாமே...................... (௪௨௭)

இதுவுமது

பலமதாய் இடித்துத்தூளாய்ப் பாங்குடன்முன்புநீரில்...................... *
சலமதிற் கொட்டிப்பின்பு சாற்றுறேன் இன்னங்கேளு ...................... *
பிலம்பே ராமணக்கின் எண்ணெய்ப் பிரியமாய்ப்படிரண் டிட்டு...................... *
வலமதாய் அடுப்பிலேற்றி * வன்னியை மூட்டிடாயே...................... (௪௨௮)

* வன்னி - நெருப்பு

இதுவுமது

வன்னியை மூட்டிரண்டு சாமமும் எரிக்கும்போது ...................... *
பன்னியநீர் எல்லாந்தான் பரிவுடன் சுண்டிப் போகும் ...................... *
முன்னியப் படிரண்டாகும்மோசமே வீராது உண்மை...................... *
கன்னியாம் வாலைதன்னைக் கருதிடு சுண்டும்பாரோ...................... (௪௨௯)

இதுவுமது

சுண்டிடும் பாகம்கண்டு சூக்ஷமாப் இறக்கி ஆற்றிக் ...................... *
கண்டிடும் வடியேகட்டிக் கருதிடுங் கலசந்தன்னில்...................... *
பொண்டிடும் வாலைதேவிப் பூசையில் வைத்துப்போற்றி...................... *
தெண்டிணை யோர்களுக்குத் தீவினை யகற்றுமென்றே...................... (௪௩௰)

இதுவு[illegible]து

அகற்றவே கணமாந்தந்தான் அலறியே போவதாக ...................... *
தகற்றவே காலைதன்னில் தாய்தனக் காறுநன்றி ...................... *
நகத்தவே கொடுத்து எண்ணெய் நாடியேபின்பு எழு...................... *
தொகுத்தவே கடிகைசென்று பீறநபத்தியந்தான்சொல்லே...................... (௪௩௰௧

### இதுவுமது

பத்தியம் லவங்கப்பூவும் பண்புநன் மிளகுங்கூட்டிப் .........................*
புத்தியாய் பழங்கொருக்காய் புளியது கூடச்சேர்ந்து ..........................*
மத்தியே படிநீர்க்கூட்டி வன்னியிற் கொதிக்கக்காய்ச்சி .........................*
சித்தியாய் * லவணந் தன்னைச் சிவக்கவும் வறுத்துக்கூட்டே ......... (௪௩௨)

    * லவணம் - உப்பு

### இதுவுமது

கூட்டியே சாறுசெய்துக் கொண்டிட அன்னம்வெந்நீர் ..........................*
காட்டியே கர்ப்பச்சூடுங் கழன்றிடும் பேதியாகும் ..........................*
நாட்டினில் மங்கையர்க்கு உண்டபின் இளைப்பில்லாமல் .........................*
மேட்டியாம் பனநுங்காக விழுந்திடுங்கணைச்சூடாமே .................. (௪௩௩)

### இதுவுமது

சூடதுகழன்றமற்றுநாளையிற் காலை நேரம் ..........................*
நீடதுமிகுத்துபாலன் நேர்மையை உரைக்கக்கேளு ..........................*
வீடதில் உதித்தமாந்த கணமதுவிரண்டுப்போக ..........................*
சாடிது எண்ணெய்தன்னில் சாற்றிடிற் கழஞ்சிரண்டே .................. (௪௩௪)

### இதுவுமது

சாற்றிட எண்ணெய்தந்து சார் ஒரு நாழிச்சென்றால் ..........................*
காத்திடபேதிரண்டு தரமெனக் கழன்று ஓடும் ..........................*
மாற்றிடும் அதன்பின்புக்கேள் * மாத்திரைக்கடிகைசென்றால் ..................*
கோத்திடலாகும் அன்னம் கொடுத்திடு அமுர்தப்பாலே .................. (௪௩௫)

    * மாத்திரை - ஒருநொடி

### இதுவுமது

கொடுத்திட இந்தவீதம் கூறின * நவநாள் எண்ணெய் ..........................*
விடுத்திடும் அதனைத்தள்ளி மிகுத்துடன் நவநாட்சென்றால் ..................*
அடுத்துடன் ஓமம்தேய்த்து அடவுடன் தலைக்குவாரு ..........................*
தொடுத்துடன் சிறுபருப்பும் சோறுமே கூட்டிடாயே .................. (௪௩௬)

    * நவநாள் - ஒன்பதுநாள்

### இதுவுமது

கூட்டிடு இந்தவீதம் கோதை மாதினுக்கே பத்தியம் ..........................*
நாட்டினப் போதே எண்ணெப் நளினமாய் வலுக்குங்காயும் ..........................*
ஊட்டிடு சடலம்விட்டு ஓடிடுங் சணமாந்தந்தான் ..........................*
தேட்டிட இளம்பாலன் தன்தேகமும் சுபலதம் நன்றே .................. (௪௩௭)

கணமாந்தத்திற்கு வேறு

## எண்ணெய்

ஆசிரியவிருத்தம்

திறமான வெள்ளாட்டுப்பாலுமே இருநாழி திகழ்விளக்கெண்ணெய்நாழி ...*
* திருகுகளிபலம் ஒன்றிண்டங்கொழுந் தொருபிடிச்செண்பகப் பூமதுரமும்*
உறமான சாதியங்காய் லவங்கேலம்வெள் ளுள்ளி † பத்திரிப் பூண்டுடன்... *
ஓதும் ‡ இருசீரகம் வசம்பிலாமிச்சையும் உறு § வெட்டிநன்ஞறியும்......... *
சிறுநாக முத்தமொடு பூலாங்கிழங்குடன் திவ்யமிகு கோரோசினை ............*
சேர்க்கடுக்காயு ரோகணிகோஷ்டமும்பச்சைத்திரு‡நாகமுஞ்மசனதாய்......*
சரமாகவே அரைக்காசெடை அரைத்திடு தணலிலெரி பதமதாக............... *
தையலேபால் எண்ணெய் உண்டிடக் கணமாந்தம் தரணிவிட்டோடிவிடுமே *

* திருகுகளி - திருகுகள்ளி † பத்திரி - சாபத்தரி ‡ இருசீரகம் - நற்சீரகம் - கருஞ்சீரகம் § வெட்டி - வெட்டிவேர் ¶ நாகம் - நாகேசரம் - அன்றிபுமிவ் வெண்ணெய்க் கொடுக்கும்போது முலைப்பால் கூட்டிக் கொடுக்கவும்

கணமாந்ததிற்கு வேறு

## மருந்து

வெண்பா

வால் மிளகுப் பூண்) டோமம் வசம்புகருஞ் சீரகமும்..........................
சாலங் கிராம்பு சண்பகப்பூ - மால் சரியாய்..................................*
தூக்கிப்பொடுதலைச்சாற் றிவள அரைத்துக் கொடுக்க............................*
போக்குங் கணமாந்தம் போம்.................................................(௩௩௧)

கணமாந்தம்வயிற்றுளைவு பொருமலுக்கு

## பாலசஞ்சீவி மாத்திரை

ஆசிரிய விருத்தம்

சீர்கொண்ட துத்தம் வெண்காரமொடு * ரோசினைத் !திகழ்கின்றநற் † கொழுஞ்சி, சிக்குமலம் வீழ் கடுகுரோகணி ‡ கழஞ்சுதிரி சேரவேசேர்த்து நன்றாய், வேர்கொண் டகத்தியிலை § நீர்விட்டரைத்துமே மெள்ள ஒருசாமம் மட்டும், விசைகொண்டமுத்தி அரை சிறுபயறுபோலவே மேன்மைபெற உண்டைசெய்து, கார்கொண்டகுழலழகுபெண்ணங்கேயழற் காய்ந்தநீர் அநுபானமாம், கற்கும் அறி நல்லதொரு பந்திரிப் ¶ புட்டிலுங் கன்னி இளமாதுசித்ர வார்கொண்ட மென்முலைப்பாலிலும் இடுவெதிது வல்பிணிச்சகலசுரமும், வயிறுளைவுபொருமல்கணமாந்தமும்வாராது வாலசஞ்சிவியென்றே... ... (௩௩௰)

* ரோசினை - கோரோசினை † கொழுஞ்சி - கொள்ளுக்காய்வேளை- ‡ கழஞ்சுதிரி - மூன்றுகழஞ்சு § நீர் - அகத்தியிலைச்சாறு ¶ புட்டில் - புட்டிவெல்லம்

கணமாந்தத்திற்கு வேறு எண்ணெய்

## தேறையர்

கலிவிருத்தம்

மாற்றிடு பொன்னாங்காணி வல்லாரையோ ............ ... *
டேற்றிடும் புளியாரைக் கீழ்க்காய் நெல்லி............ *
சேர்த்திடுந் துளசிச்சிறு புள்ளடிப்............ *
போற்றிடும் வறட்பூலா தகரையே .... ............(௪௪௧)

இதுவுமது

தகரை ஓரிதழ்த் தாமரைப் புங்கிலை ............*
* அவரைத் தூதுவளையம்மான்பச்சிலை ............ ... *
துவரைப் பீர்க்கிலைச் சூரைவெண்ணொச்சிலை ............ *
அவரைச் செந்நாயுருவிக் காய்வேளையே ............ (௪௪௨)

* அவரை - கோழியவரை

இதுவுமது

வேளை * முத்திருக்கன் செவிஆடுணைப்............*
பாளை † வேலிப்பரித்தி மிளகுதக் ............ *
காளி ஆடாதோடைக் கருநொச்சில்நாய்............ *
வேளைச்சின்னி வேம்பு ‡ வட்டப்புல்விதே... ............ (௪௪௩)

* முத்திருக்கன்செவி - திலக்கடம்பு † வேலிப் பருத்தி - உத்தாமணி
‡ வட்டப்புல் - காவட்டம்புல்

இதுவுமது

புல்லிது கண்பூண்டு நுணைத்துளிர்............*
சொல்லிது * பரிவாலிச் சிறுகீரை ............*
வெல்லிது † மொசுக்கைவேர் முருங்கிலைச் ............*
சொல்லிது பொன் முசுட்டையும் பாங்கிடே............ (௪௪௪)

* பரிவாலி - குதிரைவாலி † மொசுக்கை - மொசுமோசுக்கை

இதுவுமது

பாங்கிடத்தி நரிப்பயற்றங்கொடி ............ *
நீங்கிடத்தி நிலக்குமி ழாவரை ............*
வேங்கிடத்தி சுரைவிட்ணுக்காந்திபும் ............ *
தாங்கிடத்தி சங்கங்குப்பி தாக்கிடே............(௪௪௫)

### இதுவுமது

தாக்கிடாய்ச் சங்குதாளி நாவல் துளிர் ......................................*
மேக்கிடாய் கண்டங் கத்திரிவில்வமும் ......................................*
தேக்கிடாய் சிற்றில் குட்டிவிளாச்சமன் ......................................*
ஓக்கிடாய் இடித்தோர் படிச்சாறுமே......................................(சசசு)

### இதுவுமது

சாறுஞ்சீரகம் கிராம்பு வசம்போடு ......................................*
சேறு உள்ளியுந்திப்பிலி பற்படம் ......................................*
ஊறுமே கடுரோகணி மஞ்சளும் ......................................*
பாரும் * பூவந்திப் பழமும் சுருள்ளியே ......................................(சசஎ)

* பூவந்திப்பழம் - மணிப்புங்குப்பழம்

### இதுவுமது

உள்ளிடாமை ஓடுங் கருஞ்சீரகம் ......................................*
வள்ளி * டாழிநுரை வகைக்கேபலம் ......................................*
தெள்ளிடாட்டிச் சிற்றாமணக் கெண்ணெய்சேர்த்......................................*
துள்ளி டாட்படிதோற்றிரண்டேற்றிடே......................................(சசஅ)

* ஆழிநுரை - கடல்நுரை

### இதுவுமது

ஏற்றிட்டே எரித்தே இறுத்தே உடன் ......................................*
தோற்றிட்டேழ்தினந் துட்டெடை உள்ளுக்கு ......................................*
வார்ற்றிட்டே கணமாந்தம் ஓர் ஏழையும் ......................................*
காற்றிட்டே புளி உப்பில்லைக் கண்டிடே ......................................(சசகூ)

இவ்வொன்பது மொருதொடர்

---

## நீர்க்கணமாந்தகுணம்

---

### அறுசீராசிரியவிருத்தம்

இருமும்மூக்கில் நீர்வடியும் இடையில் இடையில்சுரங்காயும் ......................*
பொருமி வயிறு இரைச்சலுண்டாம் போதப்பலவிதமாய்க்கழியும் ......................*
சொருகுங் கண்ணும் உடம்புமுகம் சோர்ந்துதலைபும்புரட்டலுண்டாம்......................*
மருவிமயக்கம் உண்டாகும் வருகுநீர்க்கணமாந்தமுமே...................... (சருய)

தீர்க்கணமாந்தம் கணமாந்தமெட்டு குடற்படுவன் நீர்ப்பாடு கர்ப்பப்பாடு

நாவ ரக்ஷி சுரம் சூலையெரிவு வெப்பு தோஷத்திற்கு

## அமிர்தாதிக்குளிகை

---

எண்சீராசிரியவிருத்தம்

அருளினர் அமிர்தமெனுங்குளிகைதானும் அதிமதுரஞ்சன்பகப்பூர லமோடு, திருவுகோரோசினையுஞ் சாத்திரபேதி சிறந்தவெட்டிவேர்க்கோஷ்டம் மாசிப்பச்சை, தருவெனவே விலாமிச்சம் வேருங்கூட்டிச் சரியாக ஆதொண் டைச்சாறுவிட்டுப், பருவமதாய் ஒருசாமம் அரைத்துக்குன்றிப் பருமனும் மு லைப்பாலிற்பருகிடவே ......................................................(சருக)

இதுவுமது

பருகிடில் ஓர் உண்டைதனை முலைப்பால்தன்னில் பகைத்துவருங்கண மாந்தம் எட்டுந்தீரும், திருகுகுடல் படுவன்நீர்ப்பாடுந்தீரும் சேர்கர்ப்பப்பாடு நாவரக்ஷித்தீரும், குருவெனவே இக்குளிகைசுரமுந்தீரும் சூலையெரிவு வெப்பு முதல் தோஷந்தீரும், அருளெனவே முனியுரைத்தார் பாரின்மீது அமிர்தாதிக் குளிகைதனை அரைத்திடாயே............ .. ....................................(சருஉ

தியக்கத்தின்கணமாந்தம் போர்மாந்தத்திற்கு

## கோடாசூரி தைலம்

இதை தெற்கத்துகணமாந்தமென்பர்

---

வசம் போமம் வெள்ளுள்ளிக் காயந்தானும் வகைவகைக்குக்கால்பல மாய்நிறுத்துக்கொண்டு, நிசம்பெறவே தூள்செய்துவைத்துமேலும் நினைவாக வேப்பெண்ணெய்ப்படி அரைக்குள், தசம்பெறவே தூள்போட்டு ஒருநாழித் தான் தணலிலேகொதிக்கவைத் தாறுநாளும், கசம்பெறவே ரவிபுடந்தான் வைத்தபின்பு கனத்ததிப்பிபுடன்வேடுக்கட்டிக்கொள்ளே............... (சருந)

இதுவுமது

கொள்ளவே குழந்தை களின் நிதானம்பார்த்துக் கொடுத்து வரதெற் கத்துக் கணந்தானேது, உள்ளவே மாந்தபோர்மாந்தமேது ஊழ்வினையால்வந் தசர்வமாந்தந்தீரும், மெள்ளவேதாய் தன்னைப்பத்தியத்தில் வைத்துமிளகுநீர் ச்சாதமிட்டுண்ணச்சொல்லு, வள்ளியமாம் பொதிகைமுனி அருளினலெ மா ஹாநோய்கட் பறந்து விடும் வன்மைப்பாரே..............................(சருச)

சிங்கிமாந்தகணத்தின்குணம் அதேவிஷமாந்தகணம்

## தன்வந்திரி

பேரானசிங்கி மாந்தகணத்தைக்கேளு பெருமையாய் உந்திதணல்மே லெழும்பி, வாரான ஈரலுமே புண்ணாய்வெந்து வலுமையாய் சுவாசமேல் இழுப்புமாகி, சீரான தேகஞ்சமூலங்காய்ந்து சிவசிவாதழல்போலே சுரமுமவீசும், வீரானசுவாசமது திக்குமுக்காடி வெகுளியாய்மயக்கிவிக்குஞ்சிங்கிகணம் பாரோ ........................................................................ (சடுடு)

இதுவுமது

சிங்கிகணம்பிள்ளைகட்கு சுரமிருந்து சிவசிவாமாந்தசுரமிது தானென்பார், சிங்கிகண மாந்தமிது ஏதென்றூற்கால் சீரகற்றிப்பதின் மூன்றுப்பிராய மட்டும், சிங்கிகணமாந்தமிது இருப்பிடந்தான் சிறுவனென்ற பிள்ளைக்குச்சுரந்தானுகும், சிங்கிசணம் ஒழிவதற்கு அமுர்தாதிதன்னைச்சூதிணமதிலே விள்ளுகிறேன் இதனைப்பாரோ ........................................................ (சடுசு)

சிங்கிமாந்தகணத்துக்கு

## அமுர்தாதி குளிகை

இதனைப்பார் அதிமதுரம்கோஷ்டம் ஏலம் இனியகோரோசினையும் சாஸ்திரபேதி, இதனைப்பார் சண்பகப்பூமாசிக்காயும் இலவங்கப்பூவுடனே வகைக்குக்கால்தான், இதனைப்பார் இவையெல்லாங் கல்வத்திட்டு எழில்வெட்டிவேர் மாசிப்பத்திரிவேரும், இதனைப்பார்க் கருந்துளசி விலாமிச்சோடு இன்பமதாய் நால்வகையுஞ்சாற்பிழிந்தே ........................................................ (சடுஎ)

இதுவுமது

பிழிந்துமேகல்வத்தில் வார்த்தரைத்துப் பிலமாக இருசாமம் விடாமல் ஆட்டு, கழிந்துமே குன்றிப்போல் உண்டைசெய்து கண்மணியே நிழல் உலர்த்திச் செப்பில்வைத்து, வழிந்துமே வாலைமனோமணியைப் போற்றிவகையான மாசிபத்திரிச் கியாழந்தன்னில், அழிந்துமே குளிகையொன்று கொடுத்துப்போடு அர அராமுன்சொன்ன மாந்தம்போமே............(சசஅ)

இதுவுமது

மாந்தம்போம் லவங்கப்பூகியாழந்தன்னில் மகத்தானமாந்தசுரம்வாந்திதீரும், மாந்தம்போம் முலைப்பாலில்கொடுப்பீராகில் வதைத்துவருங்குடல்படுவன்நீர்ப்பாடுதீரும், மாந்தம்போம் கரப்பான் நாவரசூதித்திரும் வயிற்றெரிவு அன்னவிடாய்ச்சுரமுந்திரும், மாந்தம்போம் உப்பிசமும் இருமல்போகும்மகத்துவமாம் அமுர்தமெனுங்குளிகைபாரோ........................................ (சடுக)

இவ்வைந்துமொருதொடர்

## நீர்க்கணத்தின் குணம்

அறுசீராசிரியவிருத்தம்

நீர்க்கணக்குணமேகேளு நீரின்மேல்மன துவைக்கும் ................................*
வேர்க்குங்கண் தாழ்ந்துசற்று வேர்வையில்வெதுப்புதோன்றும் ...............*
நாக்குவரப்வரண்டுக்காணும் நல்லநீர்க்கழிச்சலுண்டாம்...............................*
பார்க்கிலோ நீர்க்கணத்தின்பலபலகுணங்கள்தானே.......................(சசுய)

இதுவுமது

தாகமும் கழிச்சல் உண்டாம் தலையதுசுழற்றல்காணும் ........................*
வேகமாய்ச்சுரமுஞ்சற்று விட்டுவிட்டடனேகாயும்... .................................*
வாகுசேர்கண்ணுந்தாழ்ந்து வாயுடன் நா உலர்ந்து ..................................*
சோகமும்வயிற்றில்நோவாய்ச் சோர்ந்துகைகால்தண்ணீரோ ......... (சசுக)

இதுவுமது

## தன்வந்திரி

முகம் புறங்கால் புறங்கைபு மோதிமினுமினுப்புண்டாகும் ......................*
தலைகசேர் தாகமுண்டாகித் தண்ணீர் உழலை மிகக்குடிக்கும் ....................*
மிகவேமயக்கம் வெதுப்புண்டாய் வெடித்து நாவுந்தான்புண்ணாய் ............*
மகமேர் ஒத்ததனத்தாளே வருநீர்கணத்தின் வகையாமே ............ (சசுக)

இஃதொருதொடர்

## நீர்க்கணத்துக்குக் குடிநீர்

வெண்பா

சாரணைக்காய்மூக்குரட்டைத் தன்காப்பொடுதலைக்காய் ..........................*
பூரணமாந் திரிகடுகு பூந்துளசி வாரணியும் ............................................*
கொங்கையரோசிரகமுங் கூட்டிக் குடிநீராய் ' ...........................................*
உண்கவேநீர்க்கணந்தான் ஓடும்..................................................'(சசுங)

## சுழிகணத்தின் குணம்

அறுசீராசிரிய விருத்தம்

சுழியெனுங்கணமே சொல்லில் சுழியவே சுவாசம்வாங்கும் ...................*
நளிருடன் சுரமும்தோன்றும் * நயனம் பஞ்சடைந்துக்காணும் ...........*
தெளிவுடன் சந்துநொந்து திகைக்கநெஞ் செரிப்புக்காணும் ...................*
குழியுமே உச்சித்தாழிற் குணம் இஃதறிந்து சொல்லே.................. (சசுச)

* நயனம் - கண்

### இதுவுமது

மின்னேகேளாய்ச்சுழிகணந்தான் மேவிசுவாசம் இருமலுண்டாம்............*
பொன்னேமுகமும் மார்புகண்டம் புடைத்துக்காணும் உண்மையிது............*
சொன்னேம் வயிறு ஈரல் நெஞ்சு தொண்டைநாவுமிவைவெந்து ............*
* அன்னைமுலைப்பால்குடியாமல் அலறி அழுதும் அறிவாயே...........(சகரு)

* அன்னை - தாய்

### இதுவுமது

இருமுஞ் செருமும் மேல்மூச்சும் இருகைகாலும் குளிர்ந்திருக்கும்.......... ..*
பொருமும் வயிறுதான் ஊதும் பொல்லாச்சுரமும்மிக உண்டாம்...............*
அரிவைமுலையுங்குடியாது அயர்ந்தவெதும்பி அலறியிடும் ....................*
சொருகும் கண்ணும் நா வரண்டேச் சுழிகணஞ்செய்யுங் குணமிதுவே... (சகசு)

### இதுவுமது

வார்முலையாரேகேளீர் மண்ணில்பிறந்தபாலகர்க்கு .........................*
ஈரல்வெந்து சுழிகணமாய் இருமலுண்டாய் எதிரிளைப்பாய்..................*
நாளைப்போலே அநதுவண்டு நாசி இரண்டும் எடுத்தெறியும்............ .....*
பாரிலுள்ளப்பாலகர்க்குப் பரிந்தே இதனைப்பாரீரோ .................... (சகஎ)

### இதுவுமது

மார்பிலே சுழியாய்வாங்கும் வாயினில் நுரையுங்கோழை .....................*
சேரிலே பிள்ளைவாந்திச் சேப்புமே கழியும் காயும் ..........................*
மூர்யே முகத்தில் மஞ்சள் முன் தலைமயக்கும் நோகும்.........................*
பாரினிற்பாலகர்க்குப் பரிந்துமே பார்த்திடரோ.............................. (சகஅ)

### சுழிகணத்துக்கு

## சஞ்சீவி எண்ணெய்

### கட்டளைக்கலிப்பா

பத்நக்காசெடைசண்பகப்பூவுடன் பகருஞ்சாதியின்பத்திரிக்காசெடை முற்றுங்கே ளைக்காசெடை ஆவினில் மூளைத்தெழுந்த கோரோசினை மூன்று மாய், எத்துங்கேளிவைப் பொடியாய் விளக்கெண்ணெ யான்றில் ஓர்படிதன்னிலே, சற்றுத்தீயிற் கோதிய்ட்டிறக்கியே தனயனுர்க் கிடுந்தான் விதங்கேளுமே;...................................................................(சகக)

இதுவுமது வேறு

## குடி நீர்

கேளுந்துட்டெடை இட்டிடவே சுரம் கிறுகிறென்னவேவாங்குந் சுழிகணம் *
சூழுநோயும் இருமலும் தீர்ந்திடும் சுழிகணச்சஞ்சீவி இநாமென்னே ........*
வாழும் உள்ளிவசம்பும் உசிலேயின் வாய்த்தப்பட்டை இம்மூன் றும்நறுக்கியே *
* தாழிநீரினில் ஊறி இறுத்திடு தணியுமே சுழிதன்கணம் இன்றுமே...(௪௭௰)

* தாழி - மிடா

சுழிகணத்துக்கு வேறு

## எண்ணெய்

இண்டு * காரி † இம்பூரலின்வேர் ‡கடுஇதைபொடித்துழச்செண்ணெ விலேற்றியே, மண்டுபானுபுடம்வைத் தெடுத்ததை மதலேயோர் சுழிமாந்தம் அறுக்கவே, கொண்டகுன்றிமணிவேர் கிலுப்பைவேர் கூர்முசுக்கைத்துளசி நற் § கூவிளே, கண்டுக்கொண்டுமுன்போலேபுடமிட்டுக் கலந்துண்ணச்சுழிகண முதுபாருமே ..........................................................(௪௭௧)

* காரி - கண்டங்கத்திரி † இம்பூரல் - சாயவேர் ‡ கடு - கடுக்காய்
§ கூவிளே - வில்வம்

இதுவுமது வேறுகுடிநீர் வேறு

## எண்ணெய்

பாரும் ஈருள்ளித்துருசுடல்வெந்தநீர் பாலிறச்கி இலுப்பைப்புண்ணாக் கையும், நீரிலேகணாத்தேகுழவிக்கிய நீங்கும் இருமல் இளேப்புசுழிகணம், காரு * தூது துளசி நுணு சங்கு கருதும் இண்டிப்பொடுதலேச்செம்முள்ளிச், சாறும் ஆவின்நெய்சீரக கற்சமும்தணலெரித்திடசுழிகணமாறுமே ......(௪௭௨)

* தூது - தூதுவேளே

சுழிகணம் உப்பிசம் கோழைக்கட்டு இளேப்புக்கு வேறு

## மருந்து

அறுசீராசிரியவிருத்தம்

குப்பைமேனிச்சாற்றில்உப்பைக் கூடக்கலந்துவேப்பெண்ணெய் ............ *
செப்பமாகமத்தித்து தேனேமூன்றுநாட்புகட்ட ................................. *
தப்பில்லாமலே இளேப்புதானே சுழிகணம் உப்பிசமும் ......................... *
துப்பு நெஞ்சிற் கோழையுடன் துயரங்கெட்டு ஓடுமென்றே ............ (௪௭௩)

சுழிகணத்துக்கு வேறு

## எண்ணெய்

முலேப்பால் கடுக்காய்க் காட்டுமல்லிமுதிர்ந்த ஆவின்புல்லுருவி ..............*
இலேப்பால் இண்டு ஈருள்ளி இவையாமணக்கின் எண்ணேயுடன் ............*

துலைப்பாலகருக்கெரித்தநணைச்சொன்னப்படியேகொடுத்திடவே..............*
சொலிப்பாய் வந்த சூழிகணங்கட் சொல்லாதோடிப்போய்விடுமே ...(சஎச)

சுழிகணத்துக்கு வேறு

## எண்ணெய்

கடுங்காய்க்சரட்டு மல்லிகையும் கடியக் * குமரிவெந்தயமும் ..................*
மிடுக்காய் சீரகம் இத்துடனேமேவுஞ்சாறணை ஈருள்ளி ... ........... ........ *
முடுக்காய் ஆமணக்கெண்ணெயுடன் முடுகாதெரித்தூங் கொடுப்பீரோல் ...... *
துடுக்காய் வந்த சுழிகணந்தான் சொல்லாதோடிப்போய்விடுமே......(சஎடு)
* குமரி - சற்றாழை

சுழிகணத்துக்கு வேறு

## நெய்

தாடுந் துளசி * தூதுநுணநல்லச்சங்கும் இண்டோடு...........................*
பூடும் பொடுதலைச்செம் முளிச்சாற் புகழும் ஆவின்நெய்தனிலே ............ *
சாடும் தணலில் இட்டுநன்றாய்த் தானேகொடுக்கவேமாறும்..................*
ஆடுஞ் சுழிகணமானதெலாம் ஆறிப்போகுங்கண்டாயே ...............(சஎசு)
* தூது - தூதுளை

சுழிகணத்துக்கு வேறு

## எண்ணெய்

நந்தியாவட்டவேரு நல்லநாய்த்துளசிவேரு................................ *
கந்தியசிவேதைவேரு காட்டுமல்லிகையின் வேரு ............................ *
அந்தியபுன்னைக்காயின் அளவனாத்திப்பால்கேளு.................................*
சுந்திரகன்டங்கத்திரி தூதுளைசின்னியாமே ...............................(சஎஎ)

இதுவுமது

சின்னியுமணித்தக்காளி செழித்தகொட்டைக் கரந்தை.........................*
கொன்னியக் குப்பைமேனிக் கோழியின் அவரைப் * பத்ரம்.................. *
இன்னிவை சமனதாக இடித்தரைப் படிச்சாறுகும் ..... .........................*
மின்னியமாசிலாத விளக்கெண்ணெய்ப் படியொன்றுமே...............(சஎஅ)
* பத்திரம் - இலை

இதுவுமது

ஒன்றதாய்க்கலத்தெரித்து உண்மையாய்வடித்துவைத்து .....................*
நூன்றியபாலகர்க்கு துட்டெடைப்புகட்டவேதான்........................................*
கொன்றிடுஞ்சுழிகணத்தைக் குலவியதொண்டைக்கட்டு ..........................*
என்றதுந்திரும்பத்யம் இன்பமாய்க்காத்திடாயே ...........................(சஎகூ)

சுழிகணசுவாசகாசத்திற்கு

## கியாழம்

* சிங்கி கர்க்கடம் சிர்தில் சிரகம் வில்வ ஓடு ........................................*
உங்கதிவிடையந்தானும் † உரோகணி ‡ கண்டங்காரி ........................*
பொங்மாமுசுக்கைமுள்ளிப் புகல் தூதுவேளைத்திப்லி ..........................*
கங்கைநீர்க்காய்ச்சிக் கொள்ளக் கணஞ் சுழிசுவாசம்போமே ............(சஅய)

* சிங்கி - கர்க்கடகசிங்கி † உரோகணி - கடுகுரொகணி ‡ கண்டங்காரி - கண்டங்கத்திரி

* சூலிக்கணத்தின்குணம்

## தன்வந்திரி

உண்டாஞ்சூலிக்கணங்கேளு உத்தசுவாசமேல் எழும்பி... .....................*
தண்டா இருமல்மிக உண்டாம் தண்மைநெஞ்சுவாய்மட்டும்......................*
தொண்டைநாவுமேவெந்து சோரும் பொருமிவயிறுப்பும் ....................*
வண்டார் முலையுங்குடியாது வகையாய் முகமும்நாறுமென்றே ...... (சஅக)

* சூலிக்கணம் கர்ப்பக்கணம்

சூலிக்கணத் திற்கு

## எண்ணெய்

முகமாம் எண்ணெய்க்கால்படிதான் முகிழ்சேர் துளசிச்சாற்காலாம் .........*
தகமாய் நிலத்தின் துளசிச்சாற் தண்மை அரைக்தாற் படிகூட்டு...............*
வசமாங் கஞ்சாஞ் கோரையுடன் வண்மை மாசிப்பத்திரியும் ......................*
அகமாம் வில்வம் உள்ளியுடன் அன்பாய் இடித்துச்சாற்பிழியே ...... (சஅஉ)

இதுவுமது

அன்பாய் அரைக்கால் வகைக்குபடி அளந்துநிறுத்து ஒன்றுக்கி ........... *
வன்பாய் திரிகடுகுடனேதான் வறுத்திடித்து சூரணஞ்செய் ..................*
தென்பாய் இரண்டுவிருசனெடைதேனும் வார்த்துக்கலந்துவிடு ........... *
உன்பாய் எண்ணெய் அடுப்பேற்றி உருளுங்கடுகுபதந்தனிலே ......... (சஅங)

இதுவுமது

தனிலே இந்தக்கடைமருந்தைத் தயவாய்ப்போட்டுக்கிண்டிடுநீ ..............*
வனியெ இறக்கிகணபதியை வகையாய்த்தொழுது அடிவணங்கி ..............*
மணியே சூலிக்கணந்தனக்கு மைந்தன் தாயைச்சாந்திசெய்து ..............*
தொனியேமைந்தன் தொண்டைதனில் தொடுநீ காசு எடைரண்டே...சஅச)

இதுவுமது

ஏடையே ஐந்து மாதமென்றால் எண்ணெய் ஐந்துநாள் மட்டும்..................*
தடையாய் இச்சாபத்யமது தனதாய்ப் பிராயம் ஐந்துமட்டும் ... ............... *
இடையாய் இருக்கும் சூலிக்கணம் இதனைக்கண்டுத் தீர்த்திடுங்காண் ......... *
படையாய் வருஷம் ஆனகணம் பலிக்கும் ஒருமண்டலங்கொள்ளே ... (சஅரு)

இவைந்துமொருதொடர்

## மஹாகணத்தின்குணம்

இதை மாக்கணமென்பாருமுளர்

முகம் புறங்காலும் கையும் மோதியேமினுமினுக்கும் ........................*
நகைவிழி * வெளுரிக்காட்டும் நஞ்சுண்டால் போல்மயக்கும் ..... ...........*
மிகமிகவெதுப்பும் உண்டாய் வெடித்துநா உதடுபுண்ணாய் ...................... *
சுகமிலா வருத்தந்தோன்றும் சொல் மஹாகணத்தின்வாறே.............(சஅசு)

* வெளுரி - வெளுப்பு

## மஹாகணத்துக்குக் குடிநீர்

எண்சீராசிரியவிருத்தம்

சிறுகிளைவேர்க்காந்தி கீழ்க்காய்நெல்லிச்சிறுபூளை எருமுட்டைச் சிந்திலத்தோடை, நறுகிளையாகிவித்தினையுமொன்றாய் நறுக்கியேதல்ல தொருபாண்டந்தன்னில், வருகினை இளவறுப்பா கவேதான்வறுத்ததனைக்குடிநீராய்வற்றக்காய்ச்சி, இறக்கியேவைத்திறுத்துக்கொடுப்பீராகில் ஏகுமஹாகணமென்றே இயம்பினரோ ........................................................... (சஅஎ)

பிரளிகணத்தின்

## குணம்

எண்சீராசிரியவிருத்தம்

மிகுத்தபிரளிகுணத்தியல்பை விரிக்கக்கேளுசெருக்குறவே........................*
விகுத்தமாக வயிறுவிம்மி மேலே ஏப்பமுண்டாகும்...............................*
சுளித்த உடல்புண்போல்நொந்து துடித்தே ஏங்கி அழுதலறும் ..............*
பருத்தமலமும் மாப்போலே பரக்கக்கழியும் தவித்திடுமே............ (சஅஅ)

இதுவுமது

## தன்வந்திரி

போதா பிரளி குணங்கேளாய்ப் பொருமிவயிறும் அதைப்புண்டாம் ......*
கோதாமலமும்போகாது குடலைப்புரட்டி தான்வலிக்கும் ...................... *
மாதாமுலையும் உண்ணாது வலுவைக்குலைக்கும் வாயுலரும் ....................*
மீதாமேல்மூச்சுண்டாகும் விழியுஞ்சுழலுமேசித்தம் ......................(சஅக)

இதுவுமது

வெண்பா

சித்தாஇளைக்கும் திட்டுத்திட்டெண முக்கும் .............................*
முத்தாக மூக்கில்நீர் மூண்டோடும் தெத்தாரம் ..........................*
மஞ்சட்படர மணர்க்கும்மதிவதன ... ..............................................*
வஞ்சிப்பிரளிகுண மாம்...... ................................................(சகம்)

இரண்டுமொருதொடர்

பிரளிகணத்திற்கு

## எண்ணெய்

---

எண்சிராசிரியவிருத்தம்

அவித்தசிற்றாமணக்கெண்ணெய்ப் படிதான் ஒன்று அதில்நாலுருமட்டிக்காய் அரிந்துபோட்டு, இவித் தீரவெண்காயம்படியிரண்டு இதமாக அரிந்துபோட்டிலனங்களே, கவித்தகருஞ்சீரகந்தான் பணமாகாணி கடுகுரோகணிபணம் அரைக்கலாகும், நவித்தகஸ்தூரிமஞ்சள பணமாகாணி நறுக்கிப்போட்டடுப்பேற்றிக்காய்ச்சிக்கொள்ளே ........................................... (சகக)

இதுவுமது

கொள்ளவே பதமறிந்து கரண்டிவீதம் கூறுவேன் துட்டெடைதான் குடிக்கும்போது, கள்ளமிலா * விரோசனமாம் இதற்க்குதானே சுதரியேபிரளிகணங்காணுதோடும், தள்ளவே வயிற்று வலிபொருமலோடு சலகழிச்சல் இவையெல்லாஞ்சாந்தமாகும், விள்ளவேபத்தியந்தான்பிடிக்கல்வேண்டும்விரும்பாதேமாங்கிஷந்தான் கிட்டாகாதே. ........................................ (சகஉ)

* விரோசனம் - பேதி

## பிறக்கணத்தின்குணம்

---

தாக்கிடுவாய்முன்போலே மூன்றுநாள்தான் தடவிவிடபுண்குடுதணிந்துபோகும், தூக்கிடுமேமலபேதிபச்சென்றேதான்தோய்ந்ததயிர்போலவுமேவயிறு உப்பி, தூக்கமிகும்பால் * அருந்தும்கக்கும்காயும் சொருகிவிழிகால்கைகள்சில்லென்றேதான், ஏற்கையிலேதலைபுரட்டல்குணங்கட்கண்டால் இயல்பானபிறக்கணமென்றியம்பினேமே................. ............................(சகங)

* அருந்தும் - உண்ணும்

### பிறக்கணத்திற்கு

## எண்ணெய்

இயம் * பாளை † கோழி ‡ குளை § ஜனகிவேளை இலை ¶ வெதுப் பி ௮ மிரட்டி * புலி இடுசொல் † புள்ளு, சுயமாகவகையெல்லாஞ் சாறுவாங் கி சூட்டதிலே எண்ணெய்ச்சேர்சமனதாக, வயம் ‡ உள்ளிக் § கரியமணி இருஷிமூலம் வகைக்கழஞ்சு இடித்திட்டுத்தியைமூட்டு, நயமாகமுன்போல்கா செடையேவாரு நாள்மூன்றில்பிறக்கணமும்நாடாதென்றே ...........(௪௱௪)

* ஆளை - வல்லாளை † கோழி - கோழியவளை ‡ குளை - கஞ்சாங் கோளை § ஜனகி - ஜானகிபூண்டு ¶ வெதுப்பி - ஒற்றைப்பேய்மிரட் டி ௮ மிரட்டி - இரட்டைப்பேய்மிரட்டி * புலி - தூடரி † புளளு- சிறுபுள்ளடி ‡ உள்ளி - வெண்காயம் § கரியமணி - கருஞ்சிரகம் ¶ இருஷிமூலம் - வசம்பு

## வரட்கணத்தின்குணம்

### அறுசீராசிரியவிருத்தம்

நெஞ்சுதுடிக்கும் புகைத்திருமும் நிறமும்வேறே தாகறுர்கும் ..............*
வஞ்சும அறவே ஒருவேளை வந்தேசரீரமெலாம்வெதும்பும்............... .....*
பிஞ்சும் இருமல் வயிற்றிளைச்சல் விட்டுத்திடமாய்துரும்பெடுக்கும் ............*
மஞ்சார்குழலாய்வரட்கணத்தின் வாறுமிதனை அறிவாயே..............(௪௱௫)

### இதுவுமது

* அத்தியில் சுரமும்தோன்றும் அழன்றுநீர்தாகமாகும் .....................*
முற்றியே சிறுநீர்தானும் முறுக்கியே வெண்மைகாணும்.......................*
சற்றுதான் வயிறுநொந்து சதிருடன்சடுப்புமாகும் ............................*
வற்றிடுஞ் சரீரம் எங்கும் வரட்கணம் என்றுசொல்லே ...............(௪௱௬)

* அத்தி - எலும்பு

### இதுவுமது

நாக்கில்மஞ்சள்வெள்ளைமுள்ளு நடுவேவெடிப்பு மூன்றுகும் ..................*
பார்க்கப்பிள்ளை ஈடழியும் பருக்காதுடலும் இளைத்துவிடும்........................*
மூக்கில்சளியும் இருமலுடன் முகமும்மஞ்சள்பூத்திருக்கும்.......................*
தூக்கமிகவேமயக்கமுண்டாஞ் சோரும்வரளின்கணம் இதுவே.........(௪௱௭)

### வரட்கணத்திற்கு

## எண்ணெய்

### கொச்சகம்

ஆமணக்கின்நெய்நாழி ஆனபசும்பால்நாழி ...............................*
தாமளக்குமே அளாக்கால் தான்கிழ்க்காய்நெல்லியின்சாற்........................*

வாய்மணக்கும்மேல் * மதுரம்வாய்த்த † கடு தான்றிசுக்கு ..................*
பூமணக்கும் ‡ வேர்காந்தி பொன் துளசி தூதுவளை... ................(௪௯)
* மதுரம் - அதிமதுரம் † வேர்காந்தி - விட்டுணுக்கரந்தைவேர் ‡ கடு - கடுக்காய்

இதுவுமது

வளையாம் பசளையுடன் வாகுபடவேசேர்த்து ..................................*
இலை நீர்தனில் அரைத்து எண்ணெய்தனில்விட்டெரித்து ..........................*
இளர் * அன்னம் உண்டதன்மேல் கேளுங்குடித்துறங்க .........................*
களையாகவெபேதி காலமே தானுதும்.......................................(௪௬)
* அன்னம் - சோறு

இதுவுமது

ஆகும் இருமல்கணம் * அத்திசுரம் உட்காய்ச்சல் ...... .......................*
வாகுபடவேகமிப்பு வரட்கணமும் மூலகணம் .......................................*
பாகுமொழிமாமயிலே பத்தியாய்த்திருமென்று .............................*
தோகை உமையாள்பாகன் சொன்னார் முனிவோர்க்கே ...... ...............(௫௦
* அத்திசுரம் - எலும்பைப்பற்றியசுரம்

வரட்கணத்துக்கு வேறு

## எண்ணெய்

எண்சீராசிரிய விருத்தம்

முள்ளிவேர் செவ்வள்ளித்தண்ணீர் மீட்டான் முசுமுசுக்கை தூதுவளைக் கண்டங்கத்திரி, தெள்ளுகம்பிப்பிசின்கருஞ்சீரகம்நற்சீரம் திருகுகள்ளிவேருடனேமணித்தக்காளி, வெள்ளுள்ளிவசம்பினோடொவ்வொன்றுக்கு விருகனெடைவிளக்கெண்ணெய்ச்சமன் வடித்து; உள்ளுக்குக்கொடுத்துபின்புமேலும்பூச ஓடிகடல்புக்கும்வரட்கணமதாமே ................ .................... (௫௧)

## ஊதுகணத்தின்குணம்

அறுசீராசிரியவிருத்தம்

காதுடன் கண் உடம்பு கனக்கவேவீங்கும்வற்றும் ...........................*
போதவே நாவும் புண்ணுப் பொருந்திய சுரமும் உண்டாம் .................*
வேது கை காலுஞசோர்ந்து வெறுத்திடும் அன்னந்தன்னே ....................*
ஊதுதற்கணமாம் என்று உரைத்தனர்முனிவர்தானே .................. (௫௨)

ஊ து க ண த் தி ற் கு

## ம ரு ந் து

வெண்பா

நீர்முள்ளிச்சுட்டரைத்துநீள் * கரிப்பான் தன்னுடைய...........................*
சாறதனில்வெந்நீரிடத் தணியும் சாறதனில் .......................................*

நாய்வேளைவேர் அரைத்து நல்லமுலைப்பாலிலிட...............................*
நோய்போகுமென் றுரைத்தார் நூல்.................................(௱௩)

* கரிப்பான் - கையாந்தகரை

## கோதிப்புக்கணத்தின்குணம்

அறுசீராசிரியவிருத்தம்

நெஞ்சுகொதிக்கும் விலாகொதிக்கும் நேரோரெற்றிவேர்வைவிடும்..........*
பஞ்சப்போலக்கண்வெளுக்கும் பார்க்கும்போதுபலவிதமாய் ..................*
துஞ்ச ஒண்ணு இருமல்வந்து துயரப்பட்டுத்தலேநோயாய் ...................*
கோஞ்சுங்குரலும்கம்மிவிடுங் கொதிப்புக்கணத்தின்குணமாமே.........(௱௪)

கொதிப்புக்கணம் (௰௮) கணச்சூடு - அஸ்திசுரம் - அஸ்திவெட்டை
மேகவகை - பித்தவெட்டை - வரண்டதேகத்துக்கு

கற்றாழை எண்ணெய்

## பிரமமுனி

சிற்றாமணக்கெண்ணெய்ப்படியொன்று சிறந்தபழச்சாறிலநதைச்சாற் ......*
வற்று ஈருள்ளியின்சாறு வகைக்குகால்படிதாளுக ..........................*
நற்று மனைமலர்முகமாதே நகிலம்பொற்சைலத்துறமும் ......................*
கற்றைச்குழலே மதர்விழியே கரியசீரகமுங்காலே...........................(௱௫)

இதுவுமது

எண்சீராசிரியவிருத்தம்

காலாகும் இவையெல்லாம் எண்ணெயிலேபோட்டுக் கருங்கற்றாழஞ்சோறுபலமுமொன்று, காலாக ஏழுசுத்திசெய்துப்போடு கனமாக அடுப்பேற்றிமெழுகுபதமாக்கு, காலாங் * குமரிச்சோறுசிவக்கும்போது கண்டிறக்கி ஆறவைத்துநாளொன்றுக்கு, காலாககரண்டிநிறை அந்திசந்தி கருதிகொண்டுவரத்திரும்நோயைக்கேளே ........................................................(௱௬)

* குமரிச்சோறு - கற்றாழஞ்சோறு

இதுவுமது

திருமே பதினெட்டுக்கணச்சூடெல்லாம் செப்பரிய அஸ்திசுரம் அஸ்திவெட்டை, திருமேமேகவகைபித்தவெட்டை தீதாகவரண்ட உடலஉலர்ந்ததேகம், திருமே சிறியோர்க்கும் பெரியோருகக்கும் சின்மயஞ்சேர்பிரமமுனி சொன்மைார்க்கம், திருமே பத்தியமாய் இருந்தால்தன்று * தினகரனைக்கண்டபனிபோல் நோய்பபோமே...............................................(௱௭)

* தினகரன் - சூரியன்

விக்க கணததிற்கு

## எண்ணெய்

அறுசீராசிரிய விருத்தம்

உள்ளியும்வசம்புஓமம் உயரதிமதுரங்கோஷடம்............................ *
வெள்ளியகிராம்புசுக்கு மிளகுடன் ஏலமிப்பால்............................ *
கொள்ளக் * கூத்தன்குதம்பைக் கூறியவேர் வகைக்கு............................*
பொள்ளியவிருகன்ஒன்று பொடிசெய்து பின்புசேளே.................. (ருஅ)

* கூத்தல்குதம்பை - மூக்கொறறிப் பூண்டு

இதுவுமது

கேள்விளக்கெண்ணெய் தன்னில் கிரமமாய்ப் போட்டுமேலும் ...............*
வாள்பெற இரண்டுசாமம் வளர் * ஒளிபுடத்தில்வைத்து .....................*
நாள்சிறுகரண்டி எண்ணெய் நல்கிடில் † மதலைகட்கு..........................*
காள் வினையானவீக்க கணமது தீருமென்றே...............................(ருக)

* ஒளிபுடம் - சூரியபுடம் † மதலை - பிள்ளை

## அந்தகன்கணதின்குணம்

உச்சிமூளைத்தனைப்பற்றி உடலம் எங்கும் வெதுப்புண்டாம்.......................*
மிச்சமாக நா உலரும் விழிகளிரண்டும் வெளுப்பெய்தும் ...................... *
பச்சைமஞ்சளதுபோலே பசும்பொன்னிறமாய் முகமினுக்கும் ............... *
அச்சம்புரியுமுலையாளே அந்தகன் கணமென்றறிந்துணாயே....................(ருய)

அந்தகன் கணத்திற்கு உள்ளுக்கும் தலையில் அப்புதற்கு

## மருந்து

பொன்னுங்காணிசிறுகிளா பூலா அவுரிவேருடனே ............................. *
பன்னும் தேற்றான் கடுக்காயும் பலம் ஒரொன்றாய்த்தான் அளைத்து ............*
பொன்னே ஆவின்வெண்ணெயுடன் புரட்டி * யருந்த அதனுடனே... ......*
† மின்னார் முலைப்பால் கலந்தொக்க வீறு ‡ சிரத்தில் § தப்புவதே (ருயக)

* அருந்தல - சாப்பிடல் † மின்னார் - ஸ்ரீகள் ‡ சிரம் - தலை § தப்புதல் - அப்புதல்

இதுவுமது

தப்புமருந்து உலர்ந்தஉடன் தள்ளிப்பின்னுந் தப்புவிக்க.......................... *
செப்புமருந்து தனைதினமும் தின்னப்பார்த்து தான்கொடுக்க.........................*

கொப்புக்குழையாமிப்படியே கொடுக்கமூன்று தினந்தானும் .................*
தப்புவிதியாலுந்திரும்பும் தயவாயென்னச்சாற்றினரோ.................(௫௱௰௨)

## மந்தாரகணத்தின்குணம்

மந்தாரகணத்தின்வாறு வகையறிந்திடவேகேளு.......................................*
முந்தியேசுணமுமாந்த மூதியே இசைந்தகூடில் .......................................*
சந்தியில்சுரமயக்கும் சார்ந்திடுஞ்சுவாசம்வாங்கும் .................................*
சந்தியேவயிறும் உப்பும் கனத்தில்மந்தாரமாமே ........................ (௫௱௰௩)

மந்தார கணத்திற்கு

## எண்ணெய்

எண்சீராசிரியவிருத்தம்

நாயுருவிசாறுடனே கரிசலாங்கண்ணி நல்லதொருவல்லாரைச்சாறுடனே இன்னம், தூயகவிழ்தும்பை * கண்டங்கரிய நொச்சில் சொற்சாறுழக்கு வகை எண்ணெய்படியொன்று, பாயும்வெள்ளுள்ளி † திரிகடுகு ‡ திரிபலையும் பாகபலம் இலவங்கம் வசம்பிருவிருகன், ஆப்பதக்கு நீர்வற்றிக்கடுகுமது சிவந்தால் ஆம் எட்டுக்கணங்களையும் அடக்குமிதுதானே...............(௫௱௰௪)

* கண்டம் கண்டங்கத்திரி † திரிகடுகு சுக்குமிளகு திப்பிலி ‡ திரிபலை கடுக்காய் - தான்றிக்காய் - நெல்லிக்காய்

எரிகணத்தின் - குணம்

அறுசீராசிரியவிருத்தம்

பாயில்கிடக்க ஒட்டாது பதைத்தே எரிவுமிகஉண்டாம் ..........................*
வாயில்மூச்சுப்பறிந்துவிடும் வாச * உமிழ்நீர் வடிந்துவிழும் ....................*
நோயில்மட்டுமிக அழுநம் நோக்குங்கீழே முகஞ்சாய்க்கும்.........................*
ஆயுள்வேதவைத்தியருரை சுறைந்தோம்இதுவேஎரிகணமே............(௫௱௰௫)

* உமிழ்நீர் - எச்சில்

எரிகணத்திற்கு

## எண்ணெய்

தென்னக்குரும்பைச்சாறுழக்கு சோந்தகரைச்சாறுழக்கு..........................*
வண்ணமூலியிர் பழம்பாசி வகையீருழக்குசாறுள்ளி.................................*
இன்னங்குமரிவேர்ச்சாறுஇனிய அலரி * மஞ்சணத்தி...............................*
கன்னங்கறுத்த எண்ணெய் உறி கலந்தே ஒன்றுய்க் காட்சுவதே...(௫௱௰௬)

* மஞ்சணத்தி - நுணா

இதுவுமது

ஏலமும் அரைகழஞ்சு இலவங்கப்பட்டைக் கோஷ்டம் ......................*
சாலநற்சீரகந்தான் சந்தனம்மதுரந்தாக்கிக் ..................................*
காலமே) வடித்த என்னெயக் காசெடை உள்ளேகொள்ள .....................*
ஆலமாங் கணங்கள் எட்டும் அறுமென்றே ரிஷிசொன்னரே ........(௫ாயஎ)

## ஆமகணத்தின் குணம்

———

இதுவே - சீதகணம்

ஆமகணத்தின் குணங்களை அடைவடைவாக செதும்பாது.......................*
சாமந்தோறும் வெதும்பிநிற்கும் தண்ணீர் உழலே உண்டாகும்............ .....*
சேமத்) துடலமிக இளைக்கும் சிறியபூதம்பசியில்லை ........................ ...*
நாமந் தளரும்இதுநாளும் தடுங்கியிருக்குங்கண்டாயே.............. (௫ாயஅ)

இதுவுமது

சுழிக்கும் பொருமும் வயிறிழியும் சுவாசமிகவும் உண்டாகும் ..................*
கழுத்தைதானிங் கால்குளிர்ந்து கண்ணைமூடி விழியாது ........................*
அழுத்தமான சுரந்தோன்றும் அயர்ந்து சிறிதிடுக்கென்னும் ...................*
சுழிக்கும் ஆமகணமென்றுச் சொன்னார் அரனார் * தோகைக்கே ... (௫ாயக)

* தோகை - உமை

இதுவுமது

## தன்வந்திரி

———

என்றே ஆமகுணங்களை இனிதாய்நெஞ்சுதான்துடிக்கும் ......................*
வண்டேசிறுநீர் மஞ்சள்நிறம் வகையாய்புகையுமேல்கடுப்பு ...... ...........*
கண்டம் உடம்புநிறம்வேறும்கனமாய்வந்துஒருவேளை ..........................*
நன்றாய்வெதும்பும் சர்வாங்கம் நலமாய் இருமல்மிஞ்சுமென்றே .....(௫உய)

இதுவுமது

மிமிஞ்சும் வயிற்றில்இரைச்சலுடன் மிகவும் தாகம் சுரமுண்டாம் ............*
கஞ்சமூச்சுமேலெழும்பும் கனமாய்சுவாசம்புகையெழும்பி ......................*
திஞ்சும் உடம்புமேல் வரண்டுத்துரும்புபோலேவடிவெடுக்கும்.....................*
செஞ்சும் ஆமகணம் இதுதான் கேளாயிந்நோய் ஓ * ராண்டே......... (௫உக)

* ஆண்டு - வருஷம்

### ஆமகணத்திற்கு

## எண்ணெய்

எண்சீராசிரியவிருத்தம்

ஆண்டென்ன இண்டம்வேர் இண்டந்தண்டு அன்பானசாறதிலேதா ழிவாங்கி, பூண்டென்னக் குமிழிநெடு மாசப்பத்ரி புங்கிநெடு திலத்துளசி உள்ளிச்சாறு, தாண்டென்னமுடக்கொற்றான் தூதளஞ்சாற் றனதான நுறு இலையின்சாற்றிநேடு, வாண்டென்ன வல்லாரைக்கஞ்சாங் கோரை வகைக்கு இதுகால் படிச்சாற் வாங்குவாங்கே.......................................(௫௨௨)

இதுவுமது

வாங்கியேஎண்ணெய்படிஒன்று விட்டு வகையான சாதிச்சரிப் ஏலம்கி ராம்பு, வாங்கியே கடுகுரோகணிகடுக்காய் வால்மிளகு ஓமமுடன் வசம்புசுக்கு வாங்கியே வகைக்குபலம் நிறுத்துக்கொண்டு வறுத்துமே தூளிடித்துவகையா ய்ச்சேரு, வாங்கியே அடுப்பேற்றிக்காய்ச்சிக் கொண்டு வற்றியப்பின்கடுதிரண் டால் இறக்கிடாயே.......................................(௫௨௩)

இரவுமது

இறக்கிகிடாய்மனோமணிதன்பூசைசெய்து ஏகாட்சரபூரணத்தை மன தில்போற்றி, இறக்கிடாய் நாளஞ்சு கரண்டிவீதம் இதமாக கொடுத்துவிடு அ ஞ்சவேண்டாம், இறக்கிடாய் முன்சொன்ன நோய்களெல்லாம் எளிதான ஆ மகணம் பறந்தஓடும், இறக்கிடாய் ஆமகணமாந்தமெல்லாம்என்னசொல்வே ன் திருமிந்தவித்தைப்பாரோ....................................... (௫௨௪)

இதுவுமது

வித்தைப்பார்சேஷ்மபண்டம் வாயுபண்டம்விருப்பமுடன்தள்ளிவிடு இ தற்காகாது, வித்தைப்பார் நிலத்துளசி பிட்டவித்து விதமாகபிழிந்*தந்திகொ டுத்துவாநீ, வித்தைப்பார் உதயத்தில் எண்ணெய்வாருவிவரமாய்அந்தியிலே கியாழும் ஏற்று, வித்தைப்பார் பிள்ளைவலி ஆமம்மாந்தம் வீரிட்டு ஓடுமே இத னல்பாரோ....................................... (௫௨௫)

* அந்தி - சாயங்காலம்) இவ்வாறு மொரு தொடர்

### ஆமகணத்திற்கு வேறு

## எண்ணெய்

அறுசீராசிரியவிருத்தம்

* வேலிப்பரித்திங் கோழி அவரை வேரும் கிளுவைப் பொடுதலையும் ....*

பாலிற்பெரிய சிவேதை கள்ளிப் பச்சை வெளிச்சை வசம் * புள்ளி ...... *

சிலக்கடுருரோகணிபும் சிரங்கரியசிரகமும் ! .................................... *
ஏலங்குழலாய் நிரைசமுந்சு இதமாய்க்கூட்டிக்கொள்வாயே............(ருஉகு)

* வேலிப் பரித்தி - உத்தாமணி * வசம்புள்ளி - வசம்பு - உள்ளி

இதுவுமது

நீலசிற்றுமணக்கெண்ணெய் நிகர்வெள்ளாட்டுப் பாலவிட்டு.......................... *
சாலஎரித்து முலைக்காம்பில் சறறேதடவி முலைகொடுக்க..............................*
ஆலித்) துண்ணுப்பிள்ளைதனக்) காமம்வாராதசிபுமே.....................................*
சூலிக்கெண்ணெய்க் கொடுத்தாலும் தோஷருதாமந்தோஷருதே... (ருஉ௰எ)

நீராமகணத்தின்

## குணம்

தண்ணீருஞ்சீதத்தோடே தான்பச்சை மஞ்சளாகி ............................ *
கண்ணீரும் பீளைப்பாய்ந்து கடுப்புடன்வலித்து சோரும் .................................*
உண்ணீரும் முத்துப்போலே ஓடவேகழிந்துதாகித் .......... ................. *
தெண்ணீரும் நீராமத்தை எவருளார்நீக்கவல்லோர்...... .......... (ருஉ௰அ)

நீராமகணத்திற்குஞ் சிதகணத்திற்கு

## நெய்

சட்டியைக் காயவைத்து தவளமாம் வெண்ணெய்தானும் ......................*
அட்டெலி மிச்சங்காயின் அளவது போட்டுருக்கி ..........................................*
கொட்டிய மணிக்தக்காளிச் கொட்டைப்பாக் களவனைத்து ................... *
இட்ட அந்நெய்யிற்போட்டு எரித்திளம் பதத்திறக்கே..................(ருஉ௰கூ)

இதுவுமது

இறக்கியே ஆறவைத்து எழில்சிறுபிள்ளைகட்கு ........................................*
அறக்கிகாசளவு தானும் ஐந்துநாள் கொடுக்கமற்ற ................................. *
உறக்கியபெரியபிள்ளைக்கொருநல் துட்டெடைகொடுக்க ............................ *
கறுக்கிய வெள்ளைச்சிதகணமது தீருந்தானே ............................ (ருங௰)

அன்றியும் (ருஙங) ம்பாட்டிற்சொன்னமருந்துங்கொடுக்கஒருமருங்கினன்மை

பேராமகணத்தின்

## குணம்

கைகபுமே கால்குளிர்ந்து கண்ணுமே வளையமாகும் ............................. *
குட்யவேசுரமுந்தோன்றும் குடித்தபால் சர்த்திப்பண்ணும்.......................*
துய்யவே திடுக்கிட்டேங்கும் சோர்ந்துதான் வயிறுபோகும்.......................*
பொய்யல்லக் கேளாயிந்த பேராமகணத்தின்வாறே.....................(ருங௰க)

இதுவுமது

போராமகுணமேகேளு பொருமிடும் வயிறுதள்ளும்........................ *
நேராகவயிறுபோகும் நெற்றியில் வலிப்புதோன்றும் ................................*
சிராகமுலைஉண்ணுது சீறியேவெருவிபார்க்கும்... ..................................*
கார்குழல் கனத்திருளே கண்டதிக்குணங்கள்தானே..................(௫௯௰௨)

போராமகணத்திற்கு

## மருந்து

கொச்சகம்

தும்பைப்பொடுதலைவேர் துய்யவேலிப்பருத்தி ..................................... *
கும்பமதிக்கக்கொட்டியந்த சட்டியிலே............................................*
சொம், பெருமைமோர் நாழி கொஞ்சிவேர் திப்பிலியும் ..........................*
உம்பாதிசீரகமும் ஓமம் இந்துப்போடெடை யே........................ (௫௯௩)

இதுவுமது

எடைசேர் மருந்தனைத்தும் இயல்பாகவே சேர்த்து ...................................*
அடவாய் அரைத்துகளைத் தனலிலதுகாய்ச்சியபின்..................................*
குடையிற்குழவிகட்குக் கொள்ளக்கொடுத்திடவே.......... ............................*
புடைபோலே வாயுவதுப்போராமம் போய்விடுமே.....................(௫௯௰௪)

முக்குக்கணத்தின்

## குணம்

சோகமாய் நாக்குவெந்து சுரமுடன் தலையுநாணித் ...................................*
தாகமாட்வயிற்றைப்பற்றித் தான்சீதம் ரத்தப்வீழும் ...................................*
மாகமாய் உறுப்புதள்ளி மாருட்டப்படுமேயாகில்........................................*
தோகையே கேளாய்முக்குக் கணமெனச் சொல்லுவாயே..........(௫௯௰௫)

இதுவுமது

கக்குமுலையும்உண்ணுது காலுங்கையுங் குளிர்ந்திருக்கும்..........................*
* சொக்கும்உடலும் கண்சோரும் சொரிந்து மலத்தில் ரத்தம்வீழும்......... *
நிற்குங்கடுக்கும் ஆசனவாய் நெருப்புப்பட்டால் போல்எரியும்.................*
முக்குகணத்தின் குணமிதென்று மொழிந்தோம்இதனைப்பாராயெ...(௫௯௰௬)

* சொக்கும் - மயக்கும்

இதுவுமது

உதிரமாய்க் கழிவதன்றி உவாந்தியுஞ் சுரமுங்காணும் ..........................*
சதிரமெல்லாம் நடுக்கும் சந்துகால் வலிபுண்டாகும் ..............................*

முதிரவேசிதங்காணும் முக்கியே அடியுந்தன்ஞம் ............................*
மதிபுடன் அறியவல்லோர் வைத்திய ரென்னலாமே .................. (ருகூஎ)

இதுவுமது

## தன்வந்திரி

கொள்ளமுர்குக்கணங்களு குழைந்தைநாவு மிகவெந்து .................. *
தள்ளாச்சுரமுந் தலைவலியுந் தாகமுடனே நாவரண்டு........................*
மெள்ள வயிற்றுக்கடுப்புடனே மேனிக்கறுந்து ஆசனமும்..................... *
விள்ள இரத்தமாய்விழுந்து வீணில்தேகம் வற்றுமென்றே............ (ருகூ௰அ)

முக்குகணத்திற்கு

## எண்ணெய்

வற்ற) வில்வம் விலாமிச்சு வகையாய் விட்ணுக்காந்தியுடன்.................*
* முத்தம் ஒரிதழ் தாமரையும் முருங்கைவித்துத்துளசிவிரை.......................*
கற்றங்கோங்குப்பிசினோடே கனத்காவாளைப்பிசில் கூட்டி ...................... *
அத்தங் கோஷ்ட † மதுரமுடன் அக்கராகாரந்தாளிசமே...............(ருகூஅ)
* முத்தம் - கோரைக்கிழங்கு † மதுரம் - அதிமதுரம்

இதுவுமது

தாளிசம்எண்ணெய்நாழி தளர்பெறு மருந்தெல்லாந்தான் .................*
வாளிசம் வறுத்திடித்து வகைக்கி ஓர்பலமேசேரு .............................*
மாளிசம் * குமரிச்சாற்கால் வகைமுலைப்பால்காலாகும்........................*
ஆளிசம்படி அரைக்கால் அழகுள † நிம்பச்சாறே ...................... (ருசய)
* குமரி - கற்றாழை † நிம்பம் - எலுமிச்சம்பழம்

இதுவுமது

சாறிது எண்ணெய் ஒன்ருய் சமரசங்கலந்துக்கொண்டு ........................*
வாரிது அடுப்பில் ஏற்றி வகையதாய்தீபை மூட்டி ........................... *
காரிதுகடுகுகண்டால் கடுசநீ இறக்கிக்கொண்டு ............................ *
மாரிது வடுகன்பூசை மனேமணிப்பூசைசெய்யே.............................. (ருசக)

இதுவுமது

## கியாழம்

செய்துநீஎடுத்துக்கொண்டு செயம்பெறதுட்டெடைத்தான்.........................*
வைதுநீ வைத்து வாயில் வகைமூன் றுநாள் தான்வாரு ........................
கைதுநீ இண்டந்தண்டைக் கண்டமாய் நறுக்கிக்கொண்டு .......................*
மைதுநீ சிரசத்தை மலர்ந்திடப் பொரித்துக்கொள்ளே...............(ருசய௨)

இதுவுமது

பொரித்துநீ இண்டந்தண்டைப் பொறுமையாய் ஊதிப்போட்டு ............*
தரித்துநீ அதனிற்போட்டு தண்ணீர்காற்படிதான்வார்த்து ....................*
வறுத்துநீ எட்டொன்றாக்கி வார்ப்பது மூன்றுவேளை ..........................*
நெறிக்குமே கணமுள்சொன்னநெல்லாந்தான் ஓடிப்போமே ........(௫௪௩)

இதுவுமது

ஓடிடும் ஐந்துவேளை உறுதிபாய்க் குடிக்கச்சொல்லு ..........................*
வாடிடும் உதயவேளை வசனித்த எண்ணெய் ஈநீ..................................*
ஆடிடும் ஔழ்தந்தன்றால் அடங்கிடும் நோயெல்லாந்தான் ....................*
தேடிடும் தருமம்வந்துசிக்கென எய்துந்தானே............................(௫௪௪)

இவ்வேழுமொருதொடர்

முக்குக்கணத் திற்கு - வேறு

மருந்து

கூற்றாழைக்கொண்டுவந்து கழுவினசோறெடுத்து.................................*
எற்றனவெந்தயத்தோடெலிமிச்சம் பழச்சாற்விட்டு ..........................*
சுத்தமாய்க்காய்ச்சிப்பின்னைச் சுகம்பெற பாலகர்க்கு ...........................*
சுற்றுநீ கொடுத்தால் முக்குக்கணமதுதரியாதென்றே.................. (௫௪௫)

மூலம்வருமாறு

தன்வந்திரி

கலி விருத்தம்

பாருஞ்சிசுவதை பாவத்தைசெய்தபேர் ........................................*
ஆருமறியவே யாஞ்சொல்வோங்கேளீர்...........................................*
நீரும் அபானத்தில் நின்று * பொறிகொண்டு ...................................*
சோருமூலத்தில் சூடுண்டாகுமே ..........................................(௫௪௬)

* பொறி - புலப்பொறி

இதுவுமது

உண்டானவிந்து ஒடுங்கி ஒளித்துபோம் ........................................*
திண்டான * மூவரும் திகைத்திட்டுநிற்பார்கள் ...................................*
கண்டோமதுவென்றால்காட்சி அதிகமாம் .......................................*
தன்றனமூலம்தாசமதாகுமே.................................................... (௫௪௭)

* மூவரும் - வாதபித்தசேஷ்மநாடி

மூலம் (க) க்கும்

## குளிகை

ஆக்கியமூலம்ஒன்பதும் ஒடிட ........................................ *
பாக்கியமொன்றுபண்பாய் உரைக்கக்கேள் ........................................*
தாங்கிய பூரம் * தாள் † சிலை ‡ காரம்........................................*
தேக்கிய கல்நார்சேரநீ ஐந்துமே ........................................ (ருசஅ)

* தாள் - தாளகம் † சிலை - மனோசிலை ‡ காரம்வெண்காரம்இவ்வை ந்தையுஞ் சுத்திசெய்துகூட்டவும்

இதுவுமது

ஐந்தும் ஒருபலம் ஆகநிறுத்து ........................................*
பந்துங்கொடிக்கள்ளிப்பாலைவிட்டாட்டிடு........................................*
வந்துநாட்சென்றபின் வழித்துக்குகையினில் ........................................*
சந்துவாய்ச்சீலை தடித்துமண்போட்டிடே. ........................................ (ருசக)

இதுவுமது

போட்டெடு * குக்குடம் பொருமுஞ் சரக்கது........................................ *
ஆட்டிடு கல்வத்தில் ஆவின்பால் † கள்ளிப்பால். ........................................*
வாட்டிடுசாமம் ‡ மயனமதாகவே ........................................*
சாட்டிய § நிம்பழச் சாறுவார்த்தாட்டிடே ........................................ (ருரு௰)

* குக்குடம் -கோழிப்புடம் † கள்ளி-கொடிக்கள்ளி ‡ மயனம் மெழுகு போல் § நிம்பழம் - எலிமிச்சம்பழம்

இதுவுமது

சாறுங் * குமரி கையாந்தகரைச்சாற்........................................*
தூறுஞ்அரைத்துநூதளங்காய் போல் ........................................ *
மாறுஉலாத்தி மண்டலங்கொண்டிடத்........................................*
தாறுஒன்பதும் தாண்டிடும் பாருமே ........................................(ருருக)

* குமரி -கற்றாழை) (அஞ்சுபிராயத்திற்கு மேலிட்டபிள்ளை கட்கும்பெ ரியவர்கட்குமாகும்

இவ்வாறுமொருதொடர்

மூலகணத்தின்

## குணம்

அறுசீராசிரியவிருத்தம்

சீதரத்தமுமேகழிந்துதினமும் ஆசனங்கடுத் * துளையும் ........................................*
பீதுகாய்ச்சல் வயிற்றிரைச்சல் விடாததலைநோய்அதிகமுமாம்........................................*

காதப்படவே மூகமினுக்கும் கறுக்கும் சிவக்கும் பலவிதமாய்.................*
ஓதும்உறுப்புமிகதள்ளும் உளைத்தேய் மூலகணமெனறே...............(௫௫௨)

* உளையும் - நோகும்

இதுவுமது

## தன் வந்திரி

எஞ்சீராசிரியவிருத்தம்

அநீதம்பார் மூலகணம்ஏதென்றக்கால் அஸ்திபிலேவாதபித்தம் அதிகமாகிஅநீதம்பார்சிசமுடல்இரத்தம்ஊற்றும் அதில்உளைச்சல்ஆசனத்தில்காற்றுமோங்கும், அநீதம்பார் சுரமுட்னே வயிற்றிளைச்சல் அதிகதலை நோயவரும் விடாது பாரு, அநீதம்பார் சண்டாள மூலரோகம் அதட்டுமே பத்தாண்டு மட்டும்பாரே........................................................ (௫௫௩

மூலகணத் திற்கு

## கிருதம்

பார்க்கவே அதிவிடையம் கடுக்காய்சுக்கு பரங்கிசக்கை கசகசாவிலாமிச்சோடு, பார்க்கவேசந்தனத்தூள் சாதிபத்திரி பண்பானநெல்லிமியோடு சிற்றுமுட்டி, பார்க்கவேசெம்பரத்தி வில்வவேரும் பதமாகவகைக்குபலம் நிறுத்திடித்து, பார்க்கவே குறாணித்து வைத்துக்கொண்டு பண்பான கறகண்டுப்பலம் இரண்டே ........................................................ (௫௫௪)

இதுவுமது

பலமிரண்டாம் ஐந்துபலம் ஆவின்நெய் * சோபாலிகையிலேற்றிசட்டிநெய்யைவார்த்து, பலமிரண்டாகொதிக்கையிலேமருந்தைப்போடு பதமாக சீரகமும் பலந்தான்போடு பலமிரண்டாங்கற்கண்டுபொடித்துதூவு பதம்பார்த்துக்கிண்டிவரில்கிருதமாகும், பலமிரண்டாம் இம்மருந்தை இறக்கிக்கொண்டு பரிவுடனேபூசித்துப்பணிந்துபோற்றே........................................ (௫௫௫)

* சோபாலிகை - அடுப்பு

இதுவுமது

பணிந்துமே பாக்களவு உள்ளேகொள்ளு பண்பாக ஏழுநாள்உண்ணும்போது, பணிந்துமேஓடிவிடும் மூலகணமெல்லாம் பதராதே பத்தியந்தான் இச்சாபத்தியம், பணிந்துமேமுன்சொன்ன ரோகமெல்லாம்பஞ்சுபோல்பறந்துவிடும் பாருபாரு, பணிந்துமே இந்நூலைப்பணியவேணும் பார்ப்பதுவும் இந்நூலைப்பாருபாரே ........................................................ (௫௫௬)

இந்நான்குமொருநேரர்

மூலகணத்திற்கு வேறு

## மருந்து

பழம்பாசிசமூலம்வெள்ளாட்டுப்பாலில் பாங்குடனே நன்றாகப் போட்டுக்காய்ச்சி, செழும்மாக வெந்தபின்புகோதுநீக்கி * தேசியெனும் பழச்சாற்றைக் கூடவிட்டு, குழம்பாகவிழுந்தபிறைக்குடிக்கும்போது குணமாகு மூலகணங்கோதா கேளாய், அழங்குகருவேல் பட்டைத்தண்ணீரோடே அதிமதுரஞ்சீரகமும் ஏலங்கூட்டே ........................................ (௫௫௭)

* தேசியெனும்பழச்சாறு - எலிமிச்சம்பழச்சாறு

மூலகணத்திற்கு வேறு

## மருந்துக்கள்

பெருமரத்துப்பட்டைதனை வெள்ளாட்டுத்தயிரில் பிறகரைத்து கரைத்துமே கொடுக்கதீரும், திருவானபசும்பாலில் பரித்திப்பிஞ்சு சீரகமும் அரைத்துமே கொடுக்கதீரும், பரிவான சாறதனிற் சீரகமும்கூட்டிப் பண்புடனேவழுங்கிடவே தீரும்பின்னர், பெரும்ஒதியம் பட்டைப்பாலினிலே ஈயபிறங்குமாதளம் பிஞ்சுந் தயிருமீயே........................................ (௫௫௮)

மூலகணத்திற்கு வேறு

## மருந்து

வெண்பா

தின்னேலம் * நிம்பவிரை சேர்ந்தசிறு மாச்சுக்கு ..............................*
மின்னே கேள்வெற்றிலைபின்மேற்காம்பு - நன்றாய்நீ..............................*
† தேசிப்பழச்சாற்றில் செப்பமுடன்அரைத்துக்..............................*
காசளவு வில்லைசெய்யுங் காண் .. .............................. (௫௫௯)

* நிம்பம் - வேம்பு † தேசிப்பழம் - எலிமிச்சம்பழம்

இதுவுமது

செய்யும்படி அரைத்து சேர்ந்தவிதம் ஏழுதரம் ..............................*
நெய்யிற்புடம் போட்டு நேர்த்தியாய் - தையலே..............................*
பாலில்உண்ணவே கடுப்புபாலகர்க்கு சீதரத்தம்..............................*
மூலகணம் ஓடுமென்றார் முன் .............................. (௫௬௰)

மூலகணத்திற்கு வேறு

## மருந்து

வெளி விருத்தம்

ஆலாவாரை விடத்தேர் நாவல் ஆகியகருவேலும் ஆனக்கொழுந்தும் பட்டையும் நல்ல அத்திப்பட்டையுடன், சேலாதென்னம் மொக்குடனே சம

ன் தேடிக்குடிநீராய் சிரகம்விடையம் * மாசிக்கிராம்பு தின்னுஞ்சாதிக்காய்
மேலாந்தீயில் வாட்டிவிளாவின் மேவுர்தன் பிசினும் மேலும் இதைப் பொடி
யாகியநீரில் மெத்தெனவே கரையாய், பாலாய் பேதிமூலகணத்துடன் பாரிய
க்கல் சுரம் † பாறிடுமே மறுசட்டியில் மாற்றிதைபாலர்க்கீந்திடவே...(௫௱௧)

* மாசி - மாசிக்காய் † பாறிடும் - ஓடிவிடும்

மூலரத்தகண விஷகணமாந்தத்திற்கு

## எண்ணெய்

---

அறுசீராசிரிய விருத்தம்

இதுவேகேளுவிளக்கெண்ணெய் ஏற்கப்படிதான் ஒன்றாக.....................*
மெதுவாங் * குமரி † நிம்பமுடன் வேண்டும் சுருள்ளியின்சாறு ............*
அதுவேவகைக்குச் சால்படிதான் ஆவின்பாலும் படிஅனைதான் ...............*
மிதுவேஇவைகள் ஒன்றாக்கி மீறுங் கற்கந்தனைக்கேளே .................(௫௱௨)

* குமரி - கற்றாழை † நிம்பம் - எலிமிச்சம்பழம்

இதுவுமது

கேளேகோஷ்டம் அதிமதுரம் கிளருஞ்சண்பகப்பூ ஏலம் ......................*
நாளேசன்னலவங்கமுடன் நன்றாய் வகைக்குக்கால்பலமாய் .....................*
தூளேயாக்கி கலந்துவிடு சொன்னோம் வெந்தயம் ஓர்பலத்தை ..................*
ஆளே இதனைமுழுதாகஅரைத்தே அதிலேகலக்கிடுமே ........ ........(௫௱௩)

இதுவுமது

இடுமே அதனை அடுப்பேற்றி இறக்குமெழுகுபதமானால் .........................*
அடுமே எண்ணெய் ஆறியபின் அடவாய்ஒருசிறுகரண்டிநிறை......................*
கொடுமேமூலரத்தகணம் கூறும்விஷகணமாந்தமுடன் ............................*
விடுமேதோஷமுதலாக வேறேமருந்துவேண்டாமே ......................(௫௱௪)

கணக்கடுப்புக்கு

## எண்ணெய்

---

போக்கியகணந்திராமல் பொங்கிய கடுப்புக்கண்டால் ..........................*
தாக்கிஆமணக்கின் எண்ணெய் தனில் * நிம்பச்சாறு விட்டு ...................*
நீக்கிய வெந்தயத்தை நிரைத்தைத் ததனிற்போட்டு ............................*
சீக்கிரமாகப்பண்ணிச் செலுத்திடச் சிலுகாவென்றே ....................(௫௱௫)

முக்கல் வயிற்றுக்கடுப்பின்

## குணம்

(கலிவிருத்தம்)

சிதரத்தசிலேட்டுமம்போலவே..............................*
தாதுவற்றியேதாகமிகுத்திடும் ..............................*
ஓதுகண்டமலத்தில் உறுங்குறி..............................*
வாதமுக்கு வயிற்றுக் கடுப்பதே ..............................(ரு௬௫)

முக்கல்வயிற்றுக் கடுப்புக்கு

## ம ரு ந் து

அறுசீராசிரியவிருத்தம்

பிரித்திப்பிஞ்சுஞ்சாதிக்காய் பகருங்கிராம்பு அதிவிடையம் ..............................*
அரத்தை * அசமதாகமுடன் அப்பாய் இலந்தைப்பலமு மவை ..............................*
கருத்தாய்சமனுய்திக அரைத்துக் கட்டித்தயிரில் கலந்துண்ண..............................*
வருந்தமானகுழ விகட்கு வயிற்றுக்கடுப்பு தீர்ந்திடுமே ..............................(ரு௬௭)

* அசமதாகம் - ஓமம்

மூலக்கடுப்புக்கு

## எண்ணெய்

வெந்தயம்பலமும்பத்துவிளக்கெண்ணெய்ப் படியில்போட்டு ..............................*
அந்தமாய்நிலக்குமிழ்வேர்ப்பட்டையை அரைத்துக்கூட்டி ..............................*
விந்தையாய் அடுப்பில்வைத்து வெந்தபின் இறக்கிக்கொள்ளப் ..............................*
பந்தமாம் உறுப்புமூலக் கடுப்புபோம் பாலகர்க்கே ..............................(ரு௬அ)

இரத்தக்கடுப்பு - மூக்கல்கடுப்பு கிராணிமுலத் திற்கு

## ம ரு ந் து

வெல்லமுங் கவிழ்தல்தும்பைவீரைசூழ்புடவிமீது ..............................*
அல்லில்லா புழுங்கல்அரிசியும் வகைவகைக்கு ..............................*
சொல்லநாரத்தங்காய்நேர் சுகமுடன் அரைத்துமூன்றும் ..............................*
நல்லெண்ணெய் அரைஅழாக்கு நற்சட்டித் தன்னிலூற்றே ..............................(ரு௬௯)

இதுவுமது

ஊற்றியே காயவைத்து உடன் அதில்மருந்தையிட்டு ..............................*
மாற்றியேதுழாவிமேலும் வளமுடன் எரித்திறக்கி..............................*
ஆற்றியே அந்திசந்தி அன்புடன் மூன்றுநாள்தின் ..............................*
தீற்றுதிரக்கடுப்புக் கிராணிமுக்கலுந் தான்போமே ..............................(ரு௭௰)

இரத்தக்கடுப்பு அடிபிறப்பட்டதற்கும்

## வெந்தயக்களி

எண்சீராசிரியவிருத்தம்

வெந்தய மோர்பலமதைதான் படியாவின் பால் வெந்திறக்கி மேன்மையதாய் வெல்லங்கூட்டிச், கந்தமலர் பூங்குழலாய்பசுவின் நெய்யால் கருகாமல்கும்பாமல் களியாய்க்கிண்டி, உந்திவயிற்றெரிகடுப்போ (டுதிரந்தானும் ஓடும் அடிபிறப்பட்டதுள்ளோவாங்கும், அர்திசந்தி இருபோதுட் கொள்வீரானால் அதிசாரவகையனைத்துமகலுந்தானே..........................(௫௭௧)

இரத்தசீதக்கடுப்புக்கு

## மருந்து

அறுசீராசிரியவிருத்தம்

ஓர் எடைவிருகம்பட்டை உள்ளியும் பரித்திப்பிஞ்சும் ..........................*
சாறுகட்சுரசஞ்செய்து சாற்றினில் * மதுரம்குப்பைக் ..........................*
கீரையின்வேரும் வெள்ளைக் கெருடன் மாதளையின் பிஞ்சும் ..........................*
சிரகம் சரிவெள்ளாட்டின் சிறந்தபால் கலந்தபோதே ..........................(௫௭௨)

* மதுரம் - அதிமதுரம்

இதுவுமது

கலந்தபால் குழைந்தைக்கிய கடுப்புள ரத்தசீதம் ..........................*
மலங்கழிந்திடு தல்பச்சை மஞ்சள தென்னவீழ்தல் ..........................*
உலர்ந்துடல் வரட்சிக்காய்ச்சல் உள்ளரோசங்கட்கெல்லாம் ..........................*
சலசமாந்தளிர் போல்மேனி தருகுஞ்சஞ்சீவிதானே ..........................(௫௭௩)

சீதக்கடுப்பு - நீர்ச்சுருக்கிற்கு - மருந்து

## தேறையர்

கலிவிருத்தம்

தீரவேஇளம் தென்னையின் பாளையைப் ..........................*
பூரவே * மடல்போக்கி மலர்இடிச் ..........................*
சாறுஓர் அழாக்குச் சமன்தயிர் ..........................*
நேரவே † பழம்நீள் பலம்ஏற்றிடே ..........................(௫௭௪)

* மடல் - ஏடு - பாளையை நீக்கி - உள்ளிருக்கும் கொத்து சேர்க்க.

† பழம் - எலிமிச்சம் பழச்சாறு

இதுவுமது

ஏற்றிடாய் தினமுன்றிருநேரமும் ..........................*
மாற்றிரத்தஞ்சீத வயிற்றுககடுப் ..........................*
பாற்றிடாய் பெரும்நீர்ச்சுருக்காறிடும் ..........................*
காத்திடாய் புளிப்பாகாதருந்திடே ..........................(௫௭௫)

இஃதிரண்டு மொருதொடர்

இராணிகடுப் பிற்கு

## மருந்து

வெண்பா

வெந்தயந்தான் கூட்டி மிருந்த * நிம்பச்சாறுவிட்டு........................*
இந்தாஇதனை எரித்துண்ண - பந்தாகும் ..........................*
மெய்யாங்கிராணி வெகுகடுப்புமே கழுதல் .........................*
டொய்யாதுமானேபுகல்................................. (ருஎசு)

* நிம்பச்சாறு - எலிமிச்சம்பழச்சாறு

ஆமக்கடுப்பிற்கு

## மருந்து.

இதேசிதக்கடுப்பு

அறுசீராசிரியவிருத்தம்

என்றுநீபரித்திவித்து இயலும் சாதிக்காய்கூட்டி..........................*
நன்று நன்னுறிவேரும் நல்வட்டத்திருப்பி மேலும் ........................*
குன்றுசீரகங்கிராம்பு குருகுபுள்ளடிச்சாறோடு ..........................*
ஒன்றுமேவறுத்து சாற்றில் உகந்திடக்கடுப்புபோமே ...................(ருஎஎ)

சகலவிதகடுப் பிற்கும்

## குளிகை

ஆசிரிய விருத்தம்

மதுரமதிவிடையமுடன் பெருமரப்பட்டையும் மாதளம்பிஞ்சினுடனே......*
மா விளா வில்வ தன்பிசினுடன்சீரகம் மான்குராசானி ஓமம் ..............*
முதிர இளநீர்தனிற் பூவும் வேர் காய்சாதி முகிழ்காளா வேரினுடனே ......*
முன்னேஉரைத்தவித மெல்லாமும்ஒருகூறு மொழி * குல்லை இலைபாதியாய்*
சதிர்பரவு கஞ்சாவின் சாற்வார்த்தரைத்ததை சந்ததமெடுத்துருட்டி .........*
† சாதிப்பழத்தளவு தயிரிற்கொடுக்கவே சகலக்கடுப்பு மகலும்.............. *
உதிர்விளாம்பிசினுடனே உள்ளியும் அரைத்ததனை உறுதயிரிலே அருந்த ...*
உண்டான ரத்தசீதக் கடுப்பானதும் ஓடிவிடும் உண்மையிதுவே...... (ருஎஅ)

* குல்லை - துளசி † சாதிபழம் - சாதிக்காய்

சீப்மூலத்திற்கு

## மருந்து

வெண்பா

செந்நாயுருவியிலைச் சிறுகஒருபிடியாய்................................ *
உண்ண நல்வெண்ணெய்தனில் ஒருமுர்கு - மின்னே ......................*

* வரிர்குமரியன்னம் வாங்கி † பஞ்சதாரை......................................*
பெருக்கியுண்ணச் சிப்மூலம்போம் ...................................... (௫௭௯)

* வரிக்குமரியன்னம் - வரிக்கற்றாழஞ் சோறு † பஞ்சதாரை - சர்க்கரை

இரத்த கணத்தின்

## குணம்

அறுசீராசிரியவிருத்தம்

இடைவிடாமுக்கிமுக்கி இருமலுங்கழிச்சலுமுண்டாம் ..............................*
அடைப்படா கழிச்சலாகிஅடிக்கடி யிரத்தங்காணும் ..............................*
தொடையிடை வலிக்குந்தாகஞ் சொல்லொணா சுரமுங்காயும் ..... ..........*
துடைப்படாவியாதியென்று சாற்றினர் முனிவோர்தானே ........... (௫௮௰)

இதுவுமது

கட்டளைக்கலித்துறை

நாடிஅயர்ந்து உளம்வாடிமெற்ற நாசபசி ..............................*
கூடி * அசனம் புசிக்கவொட்டாது குழைந்தைகட்கு ..............................*
ஓடியரத்த மலந்தனிற் சேர்ந்துள் மூலமதால் .............................. *
சாடிக்கும் ரத்தகணமெனவே முனிசாற்றினரே ......................(௫௮௧)

இரத்தகணம்மூலகணம் அதிசாரத்திற்கு

## மருந்து

வெண்பா

ஓடும்வில்வபத்திரிவேர் உத்தகநவேல் கொழுந்து ..............................*
நாடுதனில் நிம்பவிரை நற்சீரம் - காடுவளர்..............................*
ஆவாரம்பூ * அரிசி அஞ்சாதிபத்திரிக் † காய்.............................*
தேவார் கிராம்புடனே சேர் ... .......................................(௫௮௨)

* அரிசி - ஏலரிசி † காய் - சதிக்காய்

இதுவுமது

சேருமின்னார் பாலில் சிறுகொட்டைப் பாக்களவு ..............................*
கூறும்படியரைத்துட் கொண்டாற்கால் - ஆறும். ....................... ......*
இரத்தகணமூலகணம் எப்துமதி சாரம் ..............................*
பெற்றசிறுவோர்க்குப் பேசு ... .. ........................................ (௫௮௩)

இரத்தகணத்திற்கு வேறு

## மருந்து

அறுசீராசிரியவிருத்தம்

செங்கழுநீர்சீரகமேலம் செண்பகமலரு மதிமதுரம் ..............................*
தங்குறுகோஷ்டந் தூதுளைவேர் நன்னாறிபின் வேர்சமமாக ......................*

கொங்குபால்விட்டரைநெய்யிற் குழைத்து உள்ளங்கையில் விட்டு ............*
நங்க * நக்கிட ரத்தகணந் தானே ஓடிப்போ மென்றே ...... ..... (௫௮௪)

* நக்கிட - உண்ப - தின்ப - நக்குவ - பருகுவ - நால்வகையுணவில் - சோறுமுதலிய - உண்டல் கறிமுதலிய - மென்றுதின்னல் - தேன்முதலிய - நக்கல் சலமுதலிய - பருகல்

இரத்தகணந்திற்கு வேறு எண்ணெய்

## தேறையர்

கலிவிருத்தம்

கண்டிடுஞ் சாதிக்காய் சாதிபத்திரி ........................................*
உண்டிடு லவங்கம் லவங்கப்பட்டை... ..... ...... ..............................*
கொண்டிடுமெல்லி கோஷ்டங் கோரோசினை ..........................................*
சென்றிடுஞ் செண்பகமலர் சேர்த்திடே ........................ ........ (௫௮௫)

இதுவுமது

சேர்த்துக்கார் போகரிசிமதுரமும் .............. ...........................*
பார்த்துமே லவங்க) பத்திரி சீரகம்.............. ................ ............*
ஏர்த்துசெங்கழுநீர்க்கிழங் கேலமும் ............................................*
கார்த்துஓர்வகைக்கால்பலம் ஆட்டிடே .......................... (௫௮௬)

இதுவுமது

ஆட்டிடாமணக்கெண்ணெயீராற்பலம்..... ............................................*
சூட்டிடா நற்பசுவெண்ணெய் ஆற்பலம் ................................................*
மூட்டிடா எள்ளெண்ணெயில் மூன்று நான் ................ ..........................*
காட்டிடா முருங்கையிலைச்சாற்றிடே ...............................,.............(௫௮௭)

இதுவுமது

சாற்றிடா எடைதான் ஈரெட்டேப்பலம் ..................................................
சேர்த்திடா எரித்தே மெழுகாம்பதம் ........................ .......................*
வார்த்திடாப் பலமாமுறை மூன்றுநாள் ............................................*
காத்திடா உதிரக்கணந்தாளுமே............................................. (௫௮௮)

இரத்தகணத்திற்கு வேறு

## எண்ணெய

எண்சீராசிரியவிருத்தம்

எண்ணெய்ப்படிகால் குமரிசோறுதானும் எழில்விளாங்காயளவுகழுவிக் கொண்டு, அன்ன இரண்டுதுமட்டிக்காய் சோறுங்கூட்டி அதில் * ஈரகாயம்பத் தரிந்துபோட்டு, கண்ணவேமெழுகுபதமா யெரித்துகனமானதுட்டளவு எண் ணெய்தானும், நண்ணவே நாலுநாட்கொருபோதீய நாடாது ரத்தகணந்தீரு ந்தானே........................................ .................. ..................... (௫௮௯)

* ஈரகாயம் - ஈரவெண்காயம்

இரத்தமூலவரட்கணைப் வூறுமாந்தத்திற்கு

## மாத்திரை

வெளிவிருத்தம்

சாதிக்காயுடன் மாசிக்காயுந் தண்கிராம்புக்கோரோசினை * சீரம் ............*
பூதிக்காயுடனேதிப்பிலியும் பொருந்த அரைத்துமிளகள்வாய் ................*
நீதிக்காமெனநிழலிலுலர்த்திநிகர் † மூலையமுதிவிட..............................*
வூறுக்கணமாந்தக்கணமூலவரட்கணம் ஓடிடுமே ..........................(௫௱)

*சீரம் - எரகம் † மூலையமுது - மூலைப்பால்

ஆறுவகைமூலம் - வாயு - விஷக்கடி - குன்மம் - சூலை - பிரமியம்ஐந்து
மலக்கட்டு - எரிகுன்மம் - க்ஷயத் திற்கும்

## சஞ்சீவிகுளிகை

அறுசீராசிரிய விருத்தம்

* இருநாபி அரிதாரமுடன் * இரதம் கெந்தி வெண்காரம் ..................*
வருமேசுக்கு தான்றிக்காய் வருத்த மிளகுதிப் பிலியும் ...... ...... ........*
தருமேவகைக்கு கழஞ்சாகும் தானேவாளம் † ஐங்கழஞ்சு ........ ........*
அருமையென்று நினையாதே அல்லாங் கழஞ்சு பதினைந்தே ........... (௫௱௧)

* இருநாவி - நாவி - கருநாவி † இரதம் - பாதரசம்

இதுவுமது

கையாந்தகரைச்சாறதனல் கணக்கஏழுநாளரைத்து .........................*
மெய்யா நாளுக்கொருசாமம் விடாமற்குணமாய் அரைத்ததனை ..............*
உய்யக்குன்றிப் பிரமாணம் உண்டைசெய்து நிழல்உலர்த்தி.....................*
ஐயாசஞ்சீவிக் குளிகையென அடவாய்ச் சொன்னர் அகத்தியனர்...... (௫௱௨)

இதுவுமது

## அதற்க நுபானம்

---

மூலவாய்வுக்கு சாதிக்காய் முனிர்த * பல்வாயுக்கு சிறுநீரில்.................*
† ஆலந்தரித்த பாம்புகடிக்கறிந்தே ‡ தேசிப்பழச்சாற்றில் ....................*
மூலவியாதி வலிகுன்மம் முளைத்தநொச்சில் சாற்றிவிட .......................*
சூலைவ லி கு முருங்கைபுட சுகித்த பட்டைச் சாற்றிவிடே ............ (௫௱௩)

* பல்வாயு - பலவாயு † ஆலம் - விஷம் ‡ தேசிப்பழம் - எலிமிச்சம்பழம்

இதுவுமது - அநுபானம்

சயத்துவகைகள் பத்துக்குத்தான் வெள்ளாட்டுப்பாலிவிடு ......................*
வயத்த வியாதிதான் தீர வருந்திபத்தியமாகக்கொள் ......................*
மயத்துசாமபல் பூசிநின்று மகிழ்ந்தே ஆடும் அரன்பாதம் .................... ........*
முயர் சஞ்சீவிக்குளிகைக்குமுதலநுபான மிவ்வையென்றே............... (ருகச)

அக்கிறியும் - ஐவகைப்பிரமிய திற்கு - மரு தான்றிச் சாற்றில்
மலக்கட்டுக்கு - விளக்கெண்ணெயில்
எரி குன்மத்திற்கு-சீந்தில் சாற்றி விடவும்

அடித்தள்ளின தற்கு

## மருந்து

கரிசலாங்கண்ணிப் பழப்புளியுங் சதிக்க அதனை நிகவாைத்து ...............*
சரியாய்ப்புன்னைக்காயளவு * சத்தம்வெட்டுநாட் கொடுக்க ..........................*
பிரியாதுள் அடித்தள்ளினதும் பேசாதோடு மடமயிலே ..............................*
பரிவாய் நாஞ்சொன்னோம் இச்சாபத்திய மானது நன்றென்றே ......(ருகரு)

* சத்தம் - ஏழு

அடித்தள்ளினதற்கு வேறு

## மாத்திரை

எண்சீராசிரியவிருத்தம்

* கோரக்கர் மூலிபொரு துட்டுதானும் குளிர்நீரால் ஏழுதரங் கழுவிப்போட்டு, தாரக்க மிளகிருபத்தொன்றும் பூண்டு தான் இருபத் தொன்று குழிக்கல்விட்டு, ஆரக்கஅரைத்து குன்றி அளவுருட்டி அரிதானபரித்தி இலைச் சாற்றிலாதல், வேரக்கமாதளம்பிஞ்சதை வெதுப்பிவிடு சாற்றிலிட அடித்தள்ளினது போமே........ ....................................................(ருகசா)

* கோரக்கர்மூலி - கஞ்சா

அடித்தள்ளினதற்குவேறு

## எண்ணெய்

அறுசீராசிரிய விருத்தம்

ஒருதலை வெள்ளைப்பூண்டு ஒன்றது வசம்புநேராய் ..............................*
விருதுடன் நறுக்கிமேலும் * வீழியின் இலையும்நல்ல ........................ *
திருபொடு தலையும்நீண்ட சிறியபுள்ளடிவகைச்கு ................................ *
ஒருபிடி பாண்டத்திட்டு உடனதை வறுத்திடாபே ..........................(ருகஎ)

* வீழி - விழுதி

இதுவுமது

வறுத்து பொன்னிறமதாக மருவுமுன் மருந்துகூட்டி ........................ *
சறுத்திடும் படிகால்எண்ணெய்க் கலந்து காய்ச்சிறக்கிக்கொண்டு ............*
அறுந்துமுட்பொழுது வார்க்க அடிஉள்ளே வாங்குமற்ற ..........................*
வெறுத்திடுகணங்களெல்லாம் வீறிட்டு ஓடிப்போமே .................. (ருகஅ)

அடித்தள்ளி - இரத்தங்கண்டால்

## மருந்து

இஞ்சிமேற் புறணிசீவி எழிலுடன் துவாரமிட்டு ............................. *
மிஞ்சிய பெருங்காயந்தான் விருகனேழ்ற தற்குள்வைத்து... ............ .....*
தஞ்சியே மேலேமூடி தயிரினில் வேகவைத்து ..................................... *
அஞ்சியப் * பெருகுவேறில் அனாத்துண்ணத் திருமன்றே ............(ருகக)
* பெருகுவேறில் - வேறு தயிரில்

* அஷ்டக்கணத்திற்கும் - பாலசஞ்சீவி மாத்திரை

* அஷ்டகணம் - எட்டுக்கணம்

## தன்வந்திரி

எண்சீராசிரியவிருத்தம்

செயலானகல்நாரு * கிராப்புபத்ரிசெவியந்திப்பிலிவிடையந்தான்றியோடு*
முயலான கருஞ்சீரம் அக்கரகாரம் முருகடுகு ரோகணியும் சாதிக்காயும்......*
வயலான பத்திரியும் கடகசிங்கி வசனித்த குராசானி கஸ்தூரிபூரம் .........*
மயலாஞ்சீரங்கோரோசினையோடொக்கமதித்திட்டக்குங்குமப்பூசமனதாமே *
* கிராம்பு பத்ரி - இலவங்கப்பத்திரி

இதுவுமது

சமன் இஞ்சிச்சாறனைப்பு சாமம் ஒன்று தனிகையான் சாறனைப்பு சாமமொன்று, கமல் நாரத்தங் கனிச்சாற் * கடிகை மூன்று கல்வி லனைப்ப யறளவாய் நோய்கட்கிய, நமனில்லை எட்சி நீர்ப்புள் பறவை தோஷம் நளிர்சுரமுங் கழிச்சலொடு இருமலிளை, எமனில்லைக் காசம்எட்டுக் கணமுமாந்தம் ஏகுமிது பாலசஞ்சீவி யென்றே..............................................(சுாக)

இவ்விரண்டுமொருதொடர்

அஷ்டக்கணத்திற்கும் வேறு

## அமிர்தசஞ்சீவிகுளிகை

அறுசீராசிரியவிருத்தம்

சாத்திரபேதிக்கோஷ்டமுடன் தானே ஏலம் இலவங்கம் ........................*
காத்திரமான சந்தனமும் கடுகுரோகணி இலுப்பைப்பூ ........................ *

தோத்திர மானநன்னறி துய்யவிலாமிச் * சிருவேலி .......................*
மாத்திரையாக அரைப்பதற்கு மருந்து இன்னஞ்சொல்வோமே ...... (௱௨)
 * இருவேலி - வெட்டிவேர்

### இதுவுமது

சொல்லியதிப்பிலி அதிமதுரம் தூலங்குமுத்தக்காசுடனே ...................*
வல்லமுந் திரிகைப்பழமும் வளர்பேரீந்துப்பழமுடனே .........................*
எல்லாம் எடுத்துசமன்கொண்டு இதமாய்க்கருப்பஞ்சாறுவிட்டு ..............*
நல்லாய் அரைத்துக்கடலைநிறை நல்மாய்நிழலில் உலர்த்திடுமே ...... (௱௩)

### இதுவுமது

உலர்ந்ததோர் மருந்துதன்னை உற்றதோர் வியாதிக்கெல்லாம் ...............*
நலம்பெறு முலைப்பால்வெந்நீர் தன்னிலோர் உண்டைநல்கில் ...............*
கலந்திடு மாந்தம்அஷடக் கணங்களும் சுரந்தாகம்போம் .......................*
அலங் * குறு முனியுரைத்த அமிர்த சஞ்சீவியாமே .......................(௱௪)
 * குறுமுனி - அகத்தியர்

அஷ்டகணத்திற்கும் வேறு

## பூபதிமாத்திரை

### ஆசிரியவிருத்தம்

சந்தனம் நன்னறிபுளியம்வித்தோட்டுடன் சாத்திரபேதியும் * முத்தமும் ...*
† தாமரைசிறுகி ரைநாயுருவிவல்லாரை சாதிக்காயும் பத்திரி ................ *
இந்தவகைசண்பகம் கல்நாருதிப்பிலி இருவாட்சி வேருமதனில்... ...........*
‡ இருசிரகத்தோடு இலவங்கப்பட்டையும் ஏலம் உருத்திராக்ஷமுதலாய் ......*
விந்தைகோரோசினைக் § காணிவேர் ¶ திருமேனி விரிகலங்கொம்புசமனாய் *
விடுநீரும்வல்லாரைக்காணியில்னீர் தனில் விதமாகவேயரைத்து..............*
அந்தமுளதேற்றுவித்தென்னவும் உலர்த்தியே அநுபானமீதிலிய ............*
அஷ்டகணமுதலாக விட்டோடுமென முனிவரருளினார் பூபதியிதே... (௱௫)
 * முத்தம் - கோரைக்கிழங்கு † தாமரை - ஓரிதழ்த்தாமரை ‡ இருசிரகம் - நற்சீரகம் - கருஞ்சீரகம் § காணி - பொன்னாங்காணி ¶ திருமேனி - குப்பைமேனி

அஷ்டகணத்திற்கு வேறு

## எண்ணெய்

### அறுசிராசிரியவிருத்தம்

வேண்டும்விளக்கெண்ணெய்படி வெள்ளாட்டுப்பால் அவ்வளவு ............*
நீண்டக்கிருவைக் கருவேலும் நினைவாய்ப் பட்டை ஈருள்ளி ...................*
ஈண்டங் கொழுந்து ஒருபிடிதான் இவைகளெல்லாம் ஓரளவாய்..............*
தூண்டும்பலமே சீரகமும் துதிகால் காசுக்கட்டியதே.................. (௱௬)

## இதுவுமது

### கொச்சகம்

கட்டிப்பொடி மற்றவையே கடியதட்டி எண்ணெயிற்குள் ........................*
கெட்டி அனலேற்றிச் சேர்மெழுகுபதமாக ....................................*
பொட்டெனவே பாலகர்க்குப் பொங்கக் கரண்டியிட ............................*
அஷ்டகண தோஷமுதல் அணுகாது மாந்தமுமே.......................(௯௱௭)

அஷ்டகணத்திற்கு ஒன்பதுமாந்தத்திற்கும்

## வல்லாரைநெய்

### ஆநந்தக்களிப்பு

தானந்தனித்தவனாண்டி - நல்ல - நயவாகதனயர்க்குபிணிதீரநாடி ........ *
ஆநந்தக்களிப்பையே பாடி - பெற்ற - அன்னைப்பிதாவுக்கறைகிறேன்கோடி *

சித்திரமானப்புதுமை - நல்லச் - சீரானவல்லாரைநெய் இஃதருமை ...... *
நத்தினபேருக்குரிமை - அந்த - நாதாக்களறிந்தாற்கா லறிவார்கள்பெருமை*

பத்திரமாம் பச்சைமூலி - நல்லப் - பாங்கானவல்லாரைப் பலநூறுசாலில் *
வைத்திடுநீ ரொட்டுப்படியாய் - இதை - வகையாகவிட்டெரி எட்டொன்றதாக

சுத்தாவின்நெய்யொன்றுவிட்டு - இதில் - சூட்டவேகடைசரக்கவைகளைமூட்டு
வித்தானசுக்குடன்தீட்டு - நல்ல - விதமான ஏலம்கலங்கொம்புமாட்டு ......*

சத்தானசாதிக்காய்நீட்டு - நல்லச் - சாதகமானதோர் தாளிசப்கூட்டு ......*
எத்தானபத்திரிப்போட்டு - நல்ல - இதமானகோஷ்டம்விலாம் வெட்டிநாட்டு

சிங்காரமானநற்சீரம் - நல்லச் - சீரானதான்றித்தக்கோலம்பொன்னாரம்...*
வெங்காரம்வில்வையகாரம் - நல்ல - வீறானசண்பகப்பூவுமகோரம் .........*

சங்காரகுங்கங்கஸ்தூரி - மஞ்சட் - சாதகமானதோர் இர்பூறல்வேரும்.........*
நங்கார்குளிக்குங்கச்சோலம் - நல்ல - நலமானமல்லியும் ரோகணிசேரும்...*

இத்தனையான சரக்கும் - இதில் - ஏற்றக்குறைச்சலிலாமலெவர்க்கும் .........*
கத்தனைப்போற்றிநினைக்கும் - வகைக் - கண்டுவிருகனென்டையதுதூக்கும் ...*

அத்தனைபும்படி ஆவின் - பாலி - லாட்டியே அம்மியிலரைத்திடுவீரோ......... *
வற்றினவல்லாரைநீர்க்குள் - வகை - யாகவேசேர்த்தசரக்கைக்கரைத்து .....*

கண்டித்து பாண்டத்திலூற்றி - சொன்ன - கருதாவினெய்யதை ஒருபடியூற்றி
விண்டித்துநீயனலேற்றி - நல்ல - விதமாகமொண்டதைதிரள்பதந்தூற்றி...*

கிண்டித்துதான்பதம்பார்த்து - நல்லக் - கெடிபானபீங்கானில்துடியாகவடித்து
சண்டித்தநோய்களுக்கேற்று - இந்த - சதிரானவல்லாரைநெய்தினங்குடித்து*

இட்டிடும்புல்லாணாநெய்க்கு - விட்டு - ஏகும்வியாதியையிதமுடன் சொல்வேன்
மட்டுப்படாதொந்தமாந்தம் - இன்னம் - மாருட்டமாய்வந்தவல்லப்போர்மாந்தம்
கட்டுக்கடங்காதமேகம் - பொல்லா - காசரோகமென்ற வருவிஷநோயும்.....*
முற்றின ஈளை இறைப்பு - காந்தும் - மூலசணங்களும் உட்சுரமேலும்......*
கத்திடுங் சர்த்தி இருமல் - கொடுங் - காசப்போல்கர்குந் சுவாசசுரமும் சார்ந்*
பற்றிடும்நெய்யென்றதெல்லாம் - நல்லப் - பாங்காகவேரண்டுநேரமருந்தே*
(௬௨௧)

இவ்வலாணாநெய் - சிறுபவர்கட்கும் பெரியவர்கட்குமாகும்

---

பதினெட்டுக்கணம்கணவெட்டைசுரம்உலர்ந்ததேகத்திற்கு

## பிரமமுனிசொன்ன எண்ணெய்

---

சந்தவிருத்தம்

ஆட்டிய எண்ணெய் அநுபடியொன்று .....................................*
கூட்டெமுசுத்திக் * குமரிச்சோறது .....................................*
மீட்டுத்தெங்காயளவு வெந்தயம் .....................................*
ஊட்டுதுட்டெடையூறப்போட்டிடே.....................................(௬௨௨)

* குமரி - கற்றாழை

இதுவுமது

எண்சீராசிரியவிருத்தம்

ஊறியதோர் சலத்தோடே வெந்தயமுங் கூட ஊற்றிவிடு எண்ணெயி லே கலநதொன்றாக, கூறியீருள்ளிபலம் அரிந்துபோடு குமுறவேயடுப்பேற்றி மெழுகதாக, ஆறியபின் வடித்தெடுத்து வைத்துக்கொணடு அழகாக நேரமொரு கரண்டிவீதம், கோறிகொடு பதினெட்டுக் கணமுந்தானே குணமாகுங் கணவெட்டெச் சுரங்கட்போமே.....................................(௬௨௩

தோஷம்(௩) மாந்தம்(௩) தெற்கத்துக்கணமுதலாகிய(௰அ) கணத்திற்கும்

## எண்ணெய்

வெள்ளீண்டுதூதுவளை சங்கம்குப்பி * வேலியொடுபூவரசுகுப்பைமேனி, நள்ளாடாதோடை சாரணை பூலாவும் நரிபயற்றங்கொடிபிரமி வேளைக் † கன்னி,பள்ளவேபதின்மூன்றுவேர்களியாவும் பரிந்திடித்தசாறுபடி யொன்றதாகும், கள்ளமிலா விளக்கெண்ணெய்ப் படியிரண்டு கருஞ்சீரம் புனுகோமம்பூண்டுதானே.....................................(௬௨௪)

* வேலி - உத்தாமணி † கன்னி - கற்றாழை

### இதுவுமது

பூண்டுங்கோரோசினையுஞ் சண்பகப்பூ புகழ் வசம்பு சாதிக்காய் தான் தீ[illegible]நாயும், தாண்டுடனே வகைக்குபலம் அளாய நாக சமரசமாயனைத் தெண் ணெ[illegible]ழ்கலந்து, நீண்டுடனேகாய்ச்சியொரு கரண்டிவீதம் நினைவாக கொடு த்துவ[illegible]தீரும்நோய்க்கேள், கூண்டுடனே மாந்தமொன்பதுவுந்தீரும் கொடிய ம[illegible] தோஷமொன்பதுவும்போமே ............................(௬௨௫)

### இதுவுமது

#### வெண்பா

போமேதுமைந்தைகட்குப் பொல்லாபதினெண் கணமும் .................. *
தாமேவியாதியெல்லாந் தான்றீரும் - தேமே.............................. *
மலரளகமாதேமாடதெற்கத்துகணம் ........................................ *
தலமீதுதிருமுண்மைதான் ...............................................(௬௨௬)

(௧௮)கணத்திற்கும் - அட்சரம் - காய்ச்சலுக்கும்

## பாலசஞ்சீவி எண்ணெய்

---

#### எண்சீராசிரியவிருத்தம்

இம்பூரல் சிறுகிளை முசுக்கைக் கொவ்வை எலிசெவியுங்குரும்பைபொ ன்னுங்காணி இண்டு, அப்பானகுப்பைபுடமேனிதானும் அவுரியுடன்பொடுத லைநல்லாடாதோடை, வம்பானவல்லாரைத்துளசி * வாலிவளர் தூதுவளைகோ ழியவரைக்கொன்றை, முன்பான தகரைகையாந்தகரையோடு முருங்கையிலை ப்பட்டை[illegible]விட்டுணுகாந்திகூட்டே.........................................(௬௨௭)

* வாலி - குதிரைவாலி

### இதுவுமது

கூட்டும் * ஓரிதழ் வனசம் † படகந் நிம்பம் கொள்ளானை நெருஞ்சி ல் நரிப்பயறீருள்ளி, வாட்டுநறு விலியினிலைச் சுரச மெல்லாம் வாங்கியெண் ணெய்க் கொற்றைநட்டிவகையாய்ச்சேர்த்து, பூட்டுகற்கம் ‡ பஞ்சமூலஞ் சா திக்காய் புழுகருஞ் சிரக மும் சாதி பத்ரி நாட்டு § பஞ்சதிர வியமோடுள்ளி [illegible]ந்தம் நற்கோரோசினைங் காசுக்கட்டிதானே ............................(௬௨௮)

* ஓரிதழ்வனசம் - ஓரிதழ்தாமரை † படகம் - பற்படகம் ‡ பஞ்சமூலம் - சுக்கு - செவ்வியம் - பேரரத்தை - சித்திரமூலம் - கண்டுபாரங்கி § பஞ்சதிரவியம் - ஏலம் - சண்பகப்பூ - சீரகம் - கிராம்பு - கோஷ்டம்.

இதுவுமது

கட்டிக்கம்பிப் பிசினியொரு சழஞ்சகூட்டிக் கலந்தரைத்து மெழுகுபத ங் வடித்துங்கொண்டு, திட்டமுடன் அருந்திட அட்சரங்கட் காய்ச்சல் சேர்ந்த பதி னொன்கணமுந் திசைக்கெட்டோடும், வட்டதனப் பெண்ணரசே பத்திய ங்கேள் வகையான சருள்ளி முருங்கைக்கீரை, சட்டமுடனே உண்ணச்சொன் னேன் பாலசுஞ்சீவிஇந்த எண்ணெய் சபலந்தானே......................(௬௨௧)

(௰௮) கணத்திற்கும் வேறு

## நந்தீஸ்வரர்சொன்ன நெய்

தேறவேயின்னமொரு கருவைக்சேரு சிவனெனக்கு சொன் னபடி சொல்லுகின்றேன், ஆறவேமாதனை தான் சமூலம்வாங்கி * அமுதசர்க்கரை சேர்த்துங்குழம்பதாக்கி, ஊறவே † ஆவெண்ணெய்ச்கூடச் சேர்த்து உறடபா சப்பருவமாய்க்கிண்டிவைத்து, கூறவேசாதிக்காய் சாதிபத்திக்குணமுடனே ஏ லரிசிக்கூடப்போடே ....................................................(௬௩௰)

* அமுதசர்க்கரை - சீந்தில்சர்க்கரை † ஆவின்வெண்ணெய் [illegible] ணெய்

ARUNACHALA ... UVAMA

இதுவுமது

போட்டதனை அனலில்வைத்து வெதுப்பி நீ நான் [illegible] மெழு குபதம் வடித்துங்கொண்டு, நாட்டதனை குழைந்தைகட்கு சரண்டி யிட்டால் ந கருமேநோய்களெல்லாம் நாற்பத்தொன்றில், பூட்டதனை இருபூட்டு கணங்க ட்கெல்லாம் புகழாக சொல்லிவிட்டேன் அறிந்துபாரு,தேட்டதனைத்தேடாதே நெய்யைத்தேடிதிறந்துவிட்டேன் குழைந்தைகட்கு இதுநெய்யாமே....(௬௩௧)

இதுவுமது

நெய்யதனைக்குழைந்தைகள்தான் கொண்டுதானால் நேரானகணரோ கம்பதினெட்டும்போம், பொய்யதனைச்சொல்லவில்லை தோஷம்போகும்புது மையுள்ளவயிறறிரைச்சல் கழிச்சல்போகும், பையதனைப்பயல்களுக்குங்கொடு க்கலாகும் பருவமுள்ள க்குழைந்தைகட்குங் கொடுக்கலாகும், உய்யதனை ஒளி யாமல் சொல்லிவிட்டேன் ஒருவருக்குஞ்சொல்லாமல் ஒளித்துவைய்யே......*

இம்மூன்று மொருதொடர்

மாந்தம்(௰௮)க்கும் - கணம்(௨௰௧)க்கும்- வேறு

## எண்ணெய்

அறுசீராசிரிய விருத்தம்

பொன்னுங்காணீ யிலையுடனே புகழுந்துளசித் தகரையிலை ............*
மின்னூர்க்கீழ்வாய் நெல்லியிலை வெண்ணொச்சிலையும் சின்னியிலை ............*

பன்ஞர் தாயுரிவிபினிலையும் பகரம்மான பச்சரிசியிலே ........................ *
நன்ஞர்க்கருநொச்சிபினிலையும் நாடும் இலைகளெட்டொன்றே ..... (௬௫௩)

இதுவுமது

ஒன்றேநாவலின் கொழுந்துஉயராவாரையின்கொழுந்து ..... .................... *
வென்றேவேப்பங்கொழுந்துடனேவிளங்குஞ் சூரையில்கொழுந்து ............ *
மொன்றேமுடக்கொற்றான் கொழுந்து முருங்கைத்துளிர் புங்கன் கொழுந்து *
குன்றேரனையதனத்தாளே கோதில்லாதகொழுந்துகளே.. ............ (௬௫௪)

இதுவுமது

கொழுந்துவகைகள் ஒரேமுகூறும் ஓரிதழ்தாமரையும் .......................... *
வழும் புளியாரை வல்லாரை வாசர்கசிறுபுள்ளடியும் ............................ *
எழுந்த நரிபயற்றங் கொடிதான் இண்டநதண்டுமுசுமுசுக்கை........................ *
விழுந்த அகத்திப்பமுப்புடனேவிறுசிந்தில்கொடியாமே........................(௬௫௫)

இதுவுமது

ஆமே ஆடாதோடை செழும் ஆடுதின்ஞப்பாலையொடு ........................ *
காமேவிட்ணுக்கரந்தையுடன்சதித்தமுட்காவேளையுமே ........................ *
தாமே இவைகட் பதின்மூன்று தரும் ஆவாரைதன்வேரும்........................ *
நாமேசொன்னேம் விடதலைவேர் நல்லநிலக்குமிழின்வேரோ........ (௬௫௬)

இதுவுமது

வேரோசிறுநெரையில்வேரும் வில்வவேர் உத்தாமணிவேர் .................... *
தாரோமிளகுதக் காளிவேர் தைவேளையின்வேர் சங்கன்வேர் ................ *
காரோகண்டங்கத்திரிவேர் களத்தநாய் வேளையின்வேரும் .................... *
பாரோகுட்டிவிளாவில்வேர் பருசங்கங் குப்பியின்வேரோ ............... (௬௫௭)

இதுவுமது

குப்பிபதின் மூன்றும்வகைக்குக் கொள்ளும் ஒவ்வொரு பிடியாக ............ *
வைப்ப வேர்வகைக்கியாழமிட்டு மற்றவையெல்லாஞ்சாற்வாங்கி ............ *
தப்பிசிற்றுமணக்கெண்ணெய் தானேபடியொன்றதில்சொன்ன ............... *
ஒப்பிசகியாழம் சாறுகளும் ஊற்றிக்கடை சரக்கைக்கேளே............. (௬௫௮)

இதுவுமது

கேளே * கமடத்தோடோமம்கிளருங் கடல்நுரை சீரகமும்................ *
தாளேதிப்பிலி ரோகணியும் சார்ந்தகிராம்புகருஞ்சீரம் ........................ *

நாளேதிகழ்பற்படகமொடு நல்லப் * பூவந்திப்பழமும் ........................*
ஆளேவசம்பு பெருங்காயம் ஆனசெங்கதாரிப்பட்டை .................. (சூ௩௯)

* கமடம் - ஆமை † பூவந்தி - மணிப்புங்கு

இதுவுமது

பட்டையிவை வகைபதின்மூன்று பகரும்வகைக்குக் கழஞ்சொன்று .........*
இட்டவஸ்திரகாயஞ் செய்தெண்ணெயிலிட்டு அடுப்பேற்றி ......................*
வட்டமெழுகுபதத்திறங்கி வடிந்தே அந்திச்சந்தியுமே... .........................*
துட்டெடைஎண்ணெய்உட்கொள்ளத்தலையும்நோய்கட்சொல்வோமே (சூ௪0)

இதுவுமது

சொல்வோம்அட்சரகணமுடனே துடுக்காய்விடாமலே வலிக்கும் ............*
வல்லக்குமரித்தலைநோயும் வரட்கணமுடனே சுழிகணமும் ...................*
வெல்வோமாந்தகணமோடு மீறுநீர்க்கணம் இசுவுகணம் .........................*
புல்வோம் கோட்டாவிக்கணமும் போராடியமுக்குக்கணமே ............(சூ௪௧)

இதுவுமது

மூக்குக்கணமுமுறுக்குகணம் மூலகணமும்வலிகணமும்.........................*
சொக்குஞ்சொருகு கணத்தோடே துஷ்டச்சயித்தியக் கணமும் ............... *
ஓச்கும்பொருமல் மலக்கணமும் ஊதுக்கணமும் விக்கல்கணம் ...............*
தொக்குமிகுத்த தூங்குகணம் சொல்லிவையெல்லாந்தீர்ந்திடுமே...... (சூ௪௨)

இதுவுமது

தீருந் * தசநாட்கொருதரந்தான் சேர ரண்டுதுட்டெடைகொடுத்து .........*
பாருஞ்சகல வியாதியுமே பதரியோடும் பத்தியங்கேள............................*
காருங்கவிச்சுப் புளியிறைச்சிக் கரப்பான் பண்டந்தள்ளிவிடு...................*
சாருமிளகுநீருஞ்சோறும்சாப்பிடகைவல்லியமாமே.......................... (சூ௪௩)

* தசநாள் - பத்துநாள்

சகலகணத்திற்கும் - வேறு

## கியாழம்

எண்சீராசிரிய விருத்தம்

நீர்முள்ளி சுருள்ளித் * திரிபலாதி † நேராக பசு மோரிற்கியாழஞ் செய்து, ஏரெட்டொன்றுய்க் காய்ச்சியிறக்கிக்கொண்டு இருப்புமொந்தைதன்னிலே வார்த்துவைத்து, சீராகஒருசங்கு இரண்டுசங்கு தினவ கொடுக்க தீராத

கணமுந்தீரும், சார்ந்தலருங்குழல்மடவாய் மருந்திஞேடு சங்கம் வேர் ஒச்சுச் சாரித்துக் கொள்ளே ............................................(௬௪௪)

* திரிபலாதி - கடுக்காய் - தான்றிக்காய் - நெல்லிககாய் † நேராக - சரிநிரையாக

சகலகணந்திற்கும் வேறு

## நெய்

அறுசீராசிரிய விருத்தம்

கார்ாதற்கனியின்சாறு கரும்பினிற் * பஞ்சதாரை..............................*
ஓரொருவகைக்குநாழிஉடனேநானுழி † ஆப்பால் .................................*
சேரவேவிட்டுப்பாகாய்த் திரளநெய்யுழக்குவிட்டு ...............................*
சாரநாளொரித்துட்கொள்ள சகலமாகணமும்போமே .................... (௬௪௫)

* பஞ்சதாரை - சர்க்கரை † ஆப்பால் - பசுவின்பால்

சகலகணத்திற்கும் வேறு

## எண்ணெய்

எண்சீராசிரிய விருத்தம்

விளக்கெண்ணெய்ப்படியொன்றுதுமட்டிக்காய்தான் வெள்வைக்கோல் சுட்டதன்சாற்படிதான்காலும், முளக்கமெனுந் தக்காளிச்சாறுகாலும் முதிர்ந்தவெண்காயச்சாறுபடிதான்காலும்,இளங்கிஎண்ணெய்தனில்போட்டுக்கடைமருந்து இயம்புகிறேன் வால்மிளகு பணம் அரைக்கால், அளக்கோரோசினையும்பணம்அரைக்கால்அறையுங்கஸ்தூரிமஞ்சள்வெந்தயமாமே......... (௬௪௬)

இதுவுமது

வெந்தயந்தான்சிற்றரத்தைப்பேரரத்தை விதமானகருஞ்சீரம் லவங்கப்பட்டை, சிந்தனையில்லாபெரிய லவங்கப்பட்டைத் திறமானமா காணிப்பணந்தான்நாக்கு, முந்தவே இடித்தெண்ணெய்யதனிற்போட்டு முச்யமாய்பதத்திறக்கிச்சரண்டிக்கொள்ள, வந்தகணஞ்சகல முந்தான்போகுமென்று வசனித்தார் மிளகுநீர்ச்சாறுஞ்சோறே,....................................... (௬௪௭)

சகலகணத்திற்கும் வேறு

## எண்ணெய்

அறுசீராசிரியவிருத்தம்

செப்புநெஞ்சில் சிறுபுளடிசிறிய அம்மான்பச்சரிசி ..........................*
கொப்புத்தகரைவேருடனே கூறும்நரிப்பயற்றங் கொடியும் .................*
அப்பும் அகத்திப்பட்டையினம் அருவெண்காயம் இவைவகைக்கு ...........*
நட்பக்கழற்சிக்காயளவு நறுக்கிவிளக்கெண்ணெயுமாமே.............(௬௪௮)

இதுவுமது

ஆமே அரைக்கால்படிதனிலே அன்பாய் போட்டுத்தான்கலக்கி ..........*
தாமேசூரியபுடமாகசாமம் இரண்டு தான்வைத்து ..........*
தோமேதுட்டெடையீந்தாற்கால் தோகாய்சகல கணந்தீரும் ..........*
பாமேமுக்கல்நின்றுவிடும் பத்தியமாகவைப்பாயே .......... (௩௪௩)

## கணவகுப்புமுற்றிற்று

இங்ஙனஞ்சொல்லிய கணங்கள் பாலகர்க்குபதினறு
பிராயமட்டும் இருக்கு மென்பர்
அகத்தியர் திருவடிகளே
சரணம்

இஃது

# கரப்பான் வகுப்பு.

## பதினெட்டுக்கரப்பான்களின் பெயர்கூறுகின்றார்

எண்சீராசிரியவிருத்தம்

செங்கரப்பான்அனல் கரப்பான் தானும் மண்டைச் சிரங்குபண்ணும் அரிகரப் பான் பொரிகரப்பான், அங்கமதிலெழுகரப்பான் தானுமிக்க அளரா ம் உதிரக்கரப் பான் கட்டியோடு, பொங்கமாய் வீங்கியகரப்பானுந்தான் புகல ரிய சட்டைதடிவெடிகரப்பான், சிங்கமுக எரிகரப்பான் வாதபித்தச் சேஷ்மத் தோடே கரப்பான் பதினெட்டாமே.......... (௩௫௰)

## வாதகரப்பான்குணம்

வெண்பா

இயம்பு திமிர்க்காய்ச்சல் இயங்குவிக்குந் திரக்ஷி..........*
தயங்குகணந்தோன்றுந் தான்கரப்பான் - நயம்படவே ..........*
வந்துறுமாக்கணத்தில் வாதக்கரப்பான் ..........*
செந்தாமரையாளேசெப்பு ..........(௩௫௧)

## பித்தக்கரப்பான் குணம்

செப்புந்தலைநெறித்து சேருங்காய்ச்சல்தினவு ..........*
ஒப்பச்சிவந்தெரித் துட்டணமுந் - தப்பாமல் .......... *

வாந்திவரும் நீர்ச்சிவக்கும் வந்துமலஞ் சிக்கிவிடும்..................................*
சேர்ந்தபீத்தச் செங்கரப்பான் திண்ணம்.......................................(௬௫௨)

## சேஷ்மகரப்பான் குணம்

திண்ணஞ் சேஷ்மக் கரப்பான் செய்யும்வகைகேளு ......................................*
பண்ணும் வாயிற் கிரந்திப்பற்றிவிடும் எண்ணரிய ......................................*
மண்டைவலிக்கும் மணிப்புடைய வாளகத்திற்....................................*
கெண்டைவிழியாளே நீகேள் ...................................................(௬௫௩)

## கரப்பான்குணம்

அறுசீராசிரியவிருதம்

பிள்ளையுங் கனத்திருக்கும் பிரண்டைபோல் தடித்துக்கட்டும் ................... *
உள்ளமுஞ்சிவந்து கண்ணில் உடல்தனில் வெளுத்திருக்கும்.........................*
தள்ளவேமேனிவாடித் தலைவெடுத் திராதுகண்டாப் ...................................... *
கள்ளவிழ் கோதைமாதே கரப்பானின்குணமிதாமே ..........................(௬௫௪)

கரப்பானுக்கு - மேற் பூச்சு

## எண்ணெய்

எண்சீராசிரிய விருத்தம்

மிளகுள்ளி வசம்புவகை விருகன்ரண்டு வெண்காயம் பலம் அரை தான் நெல்விமுள்ளி, இளகபூவரசம்பூச் சுட்டச்சாம்பல் இதமாகஒருபிடியும் இவையெல்லாந்தான், விளராக ஆடுதின்னுப் பாலைச் சாறு விட்டரைத்து காலரைக்கால்படிதான் எண்ணெய், உளமகிழ மருந்தையதி விழைத்துதீயில் உண்மையுடன் கொதிக்கவைத் திறக்கிஆற்றே ........................................(௬௫௫)

இதுவுமது

அறுராசிரியவிருத்தம்

ஆற்றிக்கோழி இறகதனல் * அள்ளுள்வார்த்து கரப்பான்மேல் ...............*
தூற்றித்தடவகரப்பானுந் துலைந்தேபோகும் இப்பாலே................................*
ஏற்றிஇறைச்சிக் கவிச்சுடனே இனியகரப்பான் பண்டமெலாம் ...............*
சாற்றஆகா வெனமுனிவர் சகசமாக மொழிந்தனரோ ..........................(௬௫௬)

* அள் - காது

கரப்பானுக்கு - வேறு மேற் பூச்சு

## எண்ணெய்

பூதகரப்பான்பட்டைப்பூ வரசம்பட்டை நுணப்பட்டை.................................*
ஏதமில்கரப்பான் பட்டை இலுப்பைக்கட்டிச் சரியாக ......................................

சாறுஇவையெல்லாஞ்சுட்டுச் சாம்பலாக்கி நல்லெண்ணெய்ப் ............... *
போதகுழைத்து கரப்பான்மேல் போடத்தீரும் பொற்கொடியே ...... (௬௫௭)

கரப்பான்பிரந் திக்கு - வேறு

## ஆதண்டை எண்ணெய்

ஆசிரிய விருத்தம்

புங்குடன் ஆதொண்டைநர்ய் வேளைசங்குடன் போத ஓர்பிடிபிடியதாய், புதுவசம்புள்ளிஇருசீரகம் வெளிச்சைசெயொடு பொடுதலை கஸ்தூரி நிசியும், பொங்கமுள * அரிதகியோடளவுதான் அரைபோடிபெடி வெண்காயமும், பொழிலாய் விளக்கெண்ணெய் இருநாழிதன்னுடன் போட்டிடித்திவைகளெல்லாம், சங்கநற்குப்பியிலையின்சாறு கூடவேதானு மொரு நாழிவிட்டு, தையலேபானுபுட மேற்றியொரு காசளவுதான் பாலகர்க்கீயவே, அங்கமதிலெழுகரப்பானோடு கர்ப்பத்தில் ஆமிருகிரந்தி முதலாய், ஆருங்குடித்துவிட வேறெண்ணெய்தேடாத ஆதொண்டை எண்ணெய்யிதுவே ...(௬௫௮)

* கஸ்தூரி நிசி - கஸ்தூரிமஞ்சள் † அரிதகி - கடுக்காய்

கரப்பானுக்கு - வேறு - எண்ணெய்

## தன் வந்திரி

எண்சீராசிரிய விருத்தம்

வளமாய்பார்சிற்றே ரண்டெண்ணெய் கால்தான் வகையுடனே பூவரசம் பூவுங்காயும், இளமாய்பார்இடித்ததனைச் சாற்கால்கூட்டிஇனிசிவந்த * மணிக்காளிச் சாறுகாலும், தளமாய்பார் † கருவாயின் பட்டைஏலம்தண்மையென்றசிவேதை யொடுகரப்பான்பட்டை, குளமாய்பார் குமரிச்சாறனைக்கால் சேர்த்துகுஞ்சரமே கடைசரக்கு விருகனென்றே ........................(௬௫௯)

* மணிக்காளி - மணித்தக்காளி † கருவாபட்டை - இவங்கப் பட்டை

இதுவுமது

ஒன்றாக இவையெல்லாங் கலந்துக்கொண்டு உத்தமமாய் கடைசரக்கை சூரணித்து. தென்றாகதெளிந்து நன்றாய் அடுப்பிலேற்றி தேவிமனோமணி தன்னை தியானம் பண்ணி, கன்றானக்கணபதியைவணங்கிபோற்றிக் கடுகெடுத்து பதம்பார்த்து இறக்கிக்கொள்ளு, துன்றாகதுட்டெடைதான் மூன்றுவேளைதொட்டெடுத்து நாவுதனில் புகட்டிப்போடே.............................. (௬௬௰)

இதுவுமது

புகட்டியேமேலெங்குங்கடுகைபூசு பொல்லாதமுன் சொன்ன நோய்களோடும்-மகட்டியேதாய்தனக்குகவிச்சாகாதுவையகத்தில்பூசனிக்காய்எள்கொள்ஆகா அகட்டியே எருமைப்பால் நெய்யாகாது அன்பாகமற்றதெல்லாங்கூட்

டச்சொல்லு, தகட்டியே பதினறு பிராயமட்டும் தன்மையுடன் மங்கையினுல் நோயுண்டாமே........................................................(சூசூக)

இம்மூன்று - மொருதொடர்

## செங்கரப்பான்குணம்

அறுசீராசிரியவிருத்தம்

சித்தால் கேளீர் செங்கரப்பான் சிரசுவலிக்கு மேல்சிவக்கும்..................*
அத்தால் வெடிக்கும் நீரோடும் அணங்கேமூத்திரமலங்கட்டும்.... ............*
மத்தால் அங்கமிகமெலியும் மரணக்குறிகளது கண்டால் ... .................*
ஒத்தக் கிரிஙயைவகைதானும் உனைப்பேன் ஓ ஓ ஒண்ணுநலே .........(சூசூஉ)

செங்ககரப்பானுக்கு

## நெய்

பத்துஞ் செங்கரப்பான்தீர பசுவிற்நெய் உழக்காதொன்னடை.....................*
முத்துநன் முதியார்கூந்தல்முருக்கிலே நெருஞ்சில்கொத்தான் ..............*
இத்துபூ வரசுசின்னி ஈருள்ளி தன்னை கொண்டு ..................................*
எத்துடன் அடுப்பிலேற்றி இருபதஞ் சிவந்தபோதே .................... (சூசூஙு)

இதவுமது

போதநீ கேளாய்முன்பு புகன்றதைவடித்துக்கொண்டு .......................*
தீதகல் காண்டிவீதந் திகழ்ந்த நெய் தன்னிற்சொள்ள .........................*
மாதாவுந்தந்தைசெய்த வகையெலாங் கழிந்துபிள்ளை..........................*
பேதைசெங் கரப்பான்தீரும் பின்வேறுகுணம்சொல்வாமே..........., (சூசூச)

கருங்கரப்பான்

## குணம்

அரியக்கேளு கருங்கப்பான் அழுகுங் * குழவிஉடல்வெதும்பும் ............*
செறியுமுலையும் உண்ணது தேகநிறமும் வெவ்வேறுயக்.......................*
கரியமேனி பசுநரம்பு † கதித்தேகாட்டும் பறபறத்து ...........................*
முறுக்கிமிகவுந் துள்ளிவிடும் முகமும் ‡ பதங்கள் ஊதிடுமே .........(சூசூரு)

* குழவி - பிள்ளை † கதித்தல் - எழும்புதல் ‡ பதங்கள் - கால்கள்

கருங்கரப்பான் முதலிய பதினெட்டுக்கரப்பானுக்கும்

## எண்ணெய்

அரியமிளகு திருகு * கடுகுரவுங்கோஷ்டந்திப்பிலியும் ........................*
கரியசீரகமும் ஓமம் சுக்குசாங்கோனைக் † குழிமிட்டான் ........................*
சிறியாவாளைப் பெரியாவாளைச்சிவனர்வேம் ‡ புத்தமதாளி ....................*

பெரிய எண்ணெய்க்கொதிப்பித்து பிள்ளைகட்கு கொடுப்பீரேல் ...............*
வரியகரப்பீரன் பதினெட்டும் மறந்துபறந்து ஓடிடுமே ..................(கூகூகூ)

* கடு - கடுக்காய் † குழிமிட்டான் - நத்தைச்சூரி ‡ உத்தமதாளி - உத்தாமணி இஃதைந்தடியான்வந்தசெய்யுள்

அரி கரப்பான்

## குணம்

வெண்பா

உத்தஅரிகரப்பான் ஓதக்கேள் ஒண்டொடியீர்..............................*
மறறி லிங்கயோனிப்புற்று வந்திடும்புண் சத்தமாய்..............................*
ஆறுமல் புண்கனைக்கும் ஆஆ உருவழிக்கும் ..............................*
மாறுது இக்குணத்தின் வாறு...... ..............................(கூகூஎ)

## அரிகரப்பானுக்கு எண்ணெய்

தன்வந்திரி

எண்சீராசிரிய விருத்தம்

குறியானகழிச்சல்வகை யெல்லாந் தீரும் குணமுண்டா மிவ்வகையிற் கூர்ந்துபாரு, அரிகரப்பான் எண்ணெய்தனை வருஷிப்பேன்கேள் அரியகொட்டைக் கரநதைவேர் * படையின்வேரு, முரியானபசரியிலே † நீலிப்பட்டை முற்றக் ‡ கோடகசாலைவேரின்பட்டை, கரியான மிளகருணை § வேலிநல்ல கரிசாலைப் பெருங்களா பட்டைவேரோ .............................. (கூகூஅ)

படை - செருப்படை † நீலி - அவுரி ‡ கோடக்சாலை - சதைகரண்டி § வேலி - உத்தாமணி

இதுவுமது

வேரான ஆனைவேர் * காணிவேர்த்தோல் வீறு † பிரமட்டைசிறுகீரையின்வேர், சீரான ‡ வட்டத்திருப்பியின்வேர் சிவசிவா § புலி தொடக்கி வேரின்பட்டை, காரானபலம் அரையாய்நிறுத்துவாங்கி கணவசும்புபலம் அரையும் அதனோடொக்க, ஆரான ¶ ஏரண்டம் படிகாலாக அவ்வைகையும் இடித்துநீ யதனிற்சேரோ .............................. (கூகூக)

* காணி - பொன்னுங்காணி † பிரமட்டை - பேய்மிரட்டி ‡ வட்டத்திருப்பி - ஆடுதின்னுபாலை § புலிதொடக்கி - தொடரி ¶ ஏரண்டம் - ஆமணக்கு

இதுவுமது

அதனிற்சேர் அடுப்பேற்றிக் கொதிக்கக்காய்ச்சி அச்சமறவடிக்கட்டி இறுத்துக்கொண்டு, அதனிற்சேர் நாளேழு கரண்டிகொள்ள அரிகரப்பான் செரிகரப்பான் உமிகரப்பான், அதனிற்சேர் செங்கரப்பான் கருங்கரப்பான்

அவைகதிரி யோடுமேசுண்பாராமல், அதனிற்சேர் மண்டைப்புண்கரப்பான் சூடு அரியவெட்டைக் கரப்பானுமயங்கிப்போமே ....................(௬௭௰)

அரிகரப்பானுக்கு - வேறு

## மேல்பூச்சு தைலம்

**போ**மென்ற மேலுக்குதைலஞ்சொல்வேன் புகலான் உள்ளி * கடு எருக்கன் பட்டை, வாமென்ற மருக்காரை வேரின்பட்டை வட்டச்கிலு கிலுப்பை உத்தாமணியின் வேர்த்தோல், காமென்ற நல்லெண்ணெய்அதனிலிட்டுக் காய்ச்சியே துவளேயிட கருகிப்போகும், நாமென்ற இரு மூன்று வேளைபோதும் நல்லதுவாலைத்தைலம் நல்குவீரோ.................................(௬௭௧)

* கடு - கடுக்காய் - † இருமூன்று-ஆறு - இந்நான்கு - மொரு தொடர்

பாலகரப்பான்

## சூரணம்

அறுசீராசிரியவிருத்தம்

**கா**லதுகடுக்குஞ்சந்து * கண்டமும்வெடித்து புண்ணுய்..........................*
ஏலவேகடிவிஷம்போல் இருந்துபன்னீர்போல் பாய்ந்து..........................*
கோலமாய்வற்றிதாறும் குழவியுமொடுங்குமாயில் ..............................*
மாலருங்குழலாய்வால கரப்பன் செய்வாறுதானே ..................... (௬௭௨)

* கண்டங் - கழுத்து

இதுவுமது

## தன்வந்திரி

எண்சீராசிரியவிருத்தம்

**பி**னியான் விகாரமுற்ற நீகங்கூருப் பறபறத்து தேகமெலலாஞ் சொரி போலாகி, பினியான சாரையுடல் போலேகாணும் பிணிவாயில் விஷ சலந்தான் உதிரம்போல, தினியான சூலேவற்றித் திருவழிந்து * திசதாது பீடமெல்லாம் நடுநடுங்கி, வனியான இச்குணங்கட்கண்டுதானல் வால கரப்பானிது வென்றியம்பலாமே .................................................(௬௭௩)

* திசதாது - தசநாடி

பாலகரப்பானுக்கு

## நெய்

இயம்பவே இந்நோய்க்குநெய்தானென்று இன்பமாய் சொல்லுவோங்கேளுகேளு, இயம்பவேபூவரசம் பட்டைச்சாறு இன்பமுடன் தானே ஓர் படியுமெய்யா, இயம்பவே * சிற்றேரண்டெண்ணெய் † ஒன்று இயல்பாக இவ்விரண்டுஞ்சேர்த்தெரித்து, இயம்பவேகசகசா பால்படிதான் ஒன்று ‡ இருசீரகத்தினெடைகார்கோல்காலே.............................................(௬௭௪)

* சிற்றேரண்டம் - சிற்றுமணக்கு † ஒன்று - படியொன்று ‡ இருசீரகம் - நற்சீரகம் - கருஞ்சீரகம்

இதுவுமது

காலானஏலமுடன் லவங்கம்மாஞ்சில் கரிசாலே நறுவேரும் வகைப லந்தான், நீலானநிழலுலர்த்திச் சூரணஞ்செப் நெடுஞ்சினி பலம்ஐந்து நிறுத்தொன்றாக்கி, வாலான சாறெண்ணெய் அடுப்பிலேற்றி வகையுடனே கடு திரண்டால் சூரணம்போட், டேலான கிண்டி நெய்ப்பாகமாக்கி இறக்கியந்த நெய்யதனை வடித்துக்கொள்ளே............................................(சுஎரு)

இதுவுமது

வடித்துமேகரண்டிநிறை உள்ளுக்கேற்ற வாலகரப்பான்ரோகம் வகை கெட்டோடும், தடித்துமே ஏழுநாட்கொள்ளும்போது தவறானபுளிகசப்பிறைச்சிமீன்கள், மடித்துமேஎள்கொள் பாகற்காய் தள்ளு மற்றவெல்லாம் நோய்க்காகு மருவிர்கூட்டு, அடித்துமே மேலுக்குக்கடுகுபூசு அசாத்திய செவ்வாப்பு செங்கரப்பான்போமே ............................................(சுஎசு)

## சூலேக்கரப்பான் குணம்

வெண்பா

பிள்ளேமுகம்வாடிப் பேதவெடி மேனியெல்லாம் ..............................*
சள்ளேப்பொருந்திதவிக்குமே - மெள்ளக்கேள்..............................*
வள்ளல்முழங்கால்கையுமருவியுண்ணக் கூடாது ..............................*
தள்ளுமெனறசூலேயதுதான் ..............................(சுஎஎ)

சூலேக்கரப்பானுக்கு

### எண்ணெய்

எண்சீராசிரியவிருத்தம்

விடக்குவரும் புங்குசங்காதண்டம்வேர் வலுவனைத்து மூன்றும் விரைவாக சேர்த்து, அடக்கமுள்ள விளக்கெண்ணெய்ப் படியீடாக ஆனதின் பீருள்ளி உழக்கரிந்து, விடக்கடுகுரோகணி கால்ப்பலம் * சமுத்திரா விதம்பாதிதுளாக்கிஅதனிற்போட்டு, முடக்கிவிடுஞ்சூலேப்புண்கரப்பானேடு முன் † பானு புடம்வைத்துஉண்ணநன்றே..............................(சுஎஅ)

☞ * சமுத்திரா - முடக்கற்றான் † பானு - சூரியன்

☞ மேற்கோள் உதாரணம்

வெண்பா

சூலேப்பிடிப்பு சொரிசிரங்கு வன்கரப்பான்......... *
காலேத்தொடு வாயுகன்மல மூஞ் - சாலக்......... *
கடக்கத்தா னேடிவிடுங் காசினியை விட்டு......... *
முடக்கற்றான் றன்னேமொழி..............................*

## ஊதுகரப்பான்குணம்

---

கேளாய்குளிர்காய்ச்சல் கிளருங்கடுங் * கழலே.........................*
மூளாவிதால் போல் முயன்றுதிர்க்கும் - நாள்தோறும்..........................*
பூதம்போல்வீங்குவிக்கும் புண்ணுகி மூக்கரிக்கும்...................................*
ஊதுகரப்பான் தோஷம் உற்று.................................................(சுஎக)

* கழலே - கழலேக்கட்டி

ஊதுகரப்பான் முதலாகிய பதினெட்டுக் கரப்பானுக்கும்

## எண்ணெய்

### அறுசீராசிரியவிருத்தம்

அகத்திக்கர்ப்பூரவள்ளி அவுரிவெள்ளறுகுசங்கு..................................*
மகத்துவ ஆடாதோடை மஞ்சித்தங்காளிபும் ஆவாரை.............................*
சுகத்தொடு சங்கங்குப்பி சொன்னதோர் நிலக்கடம்பு.................................*
முகத்தி * நாயகங்கறுத்தநொச்சியு முருக்குகூட்டே..........................(சுஅம)

* நாயகம் - இரந்திநாயகம்

### இதுவுமது

பாரினில் ஈரவுள்ளிப் பலவகையுந் தூவைத்து.................................*
சீர்பெற வகைக்குழக்காய் சிறக்கவே பிழிந்துக்கொண்டு............................*
ஏர்பெற ஆமணக்கின்எண்ணெயும் அளர்துகூட்டி....................................*
வாரணி மாதேமஞ்சள் மரமஞ்சள் கஸ்தூரிமஞ்சள்.............................(சுஅக)

### இதுவுமது

சிவதைகடுகு ரோகணியும் சீரக மானதிருவகையும்.................................*
நவதிரி கடுகுடனேதான் நல்லத்திரிபலேயுங்கூட்டி....................................*
இவைவகைவிருகஞென்றக எல்லாஞ்சரியாய் நீநிறுத்து.................................*
தவமாயரைத்து முன்சொன்ன சாற்றில் கரைத்துகலக்கிடுமே........ (சுஅஉ)

### இதுவுமது

எல்லாம் ஒன்ருய்தான்கலந்து இதமாயடுப்பில்வைத்தெரித்து ..............*
மெல்லமெழுகுபதத்திறக்கி வேறேகலசமதில்வடித்து...................................*
நல்லாய்கரண்டியெண்ணெயுமே நல்க இப்படிமூன்றுநாள்..........................*
சொல்லாகரப்பான் பதினெட்டுந் துயரப்பட்டு ஓடிடுமே.............. (சுஅந)

வாயுகரப்பான் வீக்கத்திற்கு

## குடிநீர்

வெண்பா

ஓடுகின்றசாரணையும் உப்பும் * அரிதகியும்.....................*
வாடுகின்றமாச்சுக்கும் மாக்கூட்டி - நாடி ...........................*
மருகிக்குடிக்க வாயுகரப்பான்வீக்கம்.................................*
பருகபருகக்கழியும் பார்.......................................(௬௮௪)

* அரிதகி - கடுக்காய்

செவ்வாப்புகரப்பானுக்கு - விழுங்குமாத்திரை

## தன்வந்திரி

எண்சீராசிரியவிருத்தம்

மயங்கிப்போம்விழுங்குமாத்திரைதான் சொல்வேன் மாதரசேசாதிலிங்கம்பூரம் ஏலம், மயங்கிப்போம் பூங்காவி வகைக்குகாலாய் வண்மையாய்கல்வத்தில் போட்டுக் கொண்டு, மயங்கிப்போம் கோதும்பைக் கஞ்சிவார்த்து மைபோலே சாமம்ரண்டோயாதாட்டி, மயங்கிப்போம் பயறுபோல் உண்டை செய்து மரச்செப்பில்வைத்தடைத்து மகத்வங்கேளே ...................(௬௮௫)

இதுவுமது

மகத்துவங்கேள் ஓராண்டுபிள்ளைக்கெல்லாம் * வல்சிதனில்பிடித்துண்ணமாந்தமேது, மகத்துவங்கேள் சிறுகுழைந்தை யானதற்கு மாசிபத்ரிக்கியாழத்தில் உரைத்திடாப்நீ, மகத்துவங்கேள் செவ்வாப்புகரப்பான் போகும் வரிசையாய் மாத்திரையின்மகத்துவம்பார், மகத்துவந்தான் என்ன சொல்வேன் இந்நூல்போக்கு மஹாரத்நச்சுருக்கமெனமருவிப்பூணே ................(௬௮௬)

* வல்சி - சோறு - இவ்விரண்டுமொருதொடர்

கால்கடுவன் மண்டைக்கடுவனுக்கு

## மருந்து மேற்கட்டு

எண்சீராசிரியவிருத்தம்

ஆமணக்கின் இலையதனைத்தலைக்கால் கட்டி * ஆதித்தன் உதயத்தில் அவிழ்த்துபோட்டு, காமணக்கும் சலம்விட்டுக்கழுவிப்பின்பு கனத்த ஈசங்கினிலைக்கொண்டுவந்து, பூமணக்கும் சட்டியிலிட்டே கருக்கிப் பொடியாகசெய்து புண்மேல் தேங்காயெண்ணெய், மாமணக் கத்தடவிபந்ததுளேப்போட மண்டைக்கால் கடுவனுமே தீர்ந்துபோமே.................................. (௬௮௭)

* ஆதித்தன் - சூரியன்

கால்கடுவனுக்கு வேறு

## எண்ணெய்

அறுசீராசிரியவிருத்தம்

இலுப்பைப்பட்டைப் பாவட்டை எழில்சதுரக்கள்ளிப்பட்டை ............... *
சலிப்பில்லா ஈருள்ளிபுழ்வ-சம்பும் நறுக்கி யெல்லாந்தான் ................ *
குலிக்கியெண்ணெயிற்காய்ச்சிக் கொடுக்கப் பாலர்கால்கடுவன் ............... *
அலுப்புப்பட்டு ஓடிவிடும் அயில்கூர்மதர்விழிமா மயிலே ...... ..... (சூ௮௮)

எண்வகைகரப்பானுக்கும்

## எண்ணெய்

எழுசீராசிரியவிருத்தம்

எண்வகைக்கரப்பான் இழந்திடக்கேளு ஈருள்ளிக்கரியசீரகமும் ........... *
இயம்பியபூதகரப்பனும்வட்டக் கிலுப்பைவேர்காட்டினிற்பாகல்............... *
ஒண்டிய * மூலமுடன்சதகுப்பை உயர்வெள்ளைக்காக்கணன் † மூலம் ..... *
ஓதியதேவதாரமும்வசம்பு உண்சங்குவெள்ளறுகுடனே ....................... *
நண்புள ‡ சீனப்பட்டையுஞ்சுத்தி நவின்றிடும்வகைவகைப்பலங்கால் ..... *
நாடுநேர்வாளவிரை இருபதுபின் நற்சங்கங்குப்பிச்சாற்நாழி ......... ....... *
அண்டாத்ததில்சிற் றாமணக்கெண்ணெய் அது ஒருநாழிவிட்டருந்த ......... *
ஆமொருகாசெடை உடல்தனில்பூச அவையெட்டும் அகலுமாமென்றே (சூ௮௯)

* மூலம் - வேர் † மூலம் - வேர் ‡ சீனப்பட்டை - பரங்கிப்பட்டை.

பதினெட்டுக்கரப்பானுக்கும்

## எண்ணெய்

அறுசீராசிரியவிருத்தம்

புங்கம்பூவும் புளிநடலைப் புனிதமானவசம்புள்ளி ............................... *
கங்குலாதிசீரகமும் கதித்தபாலை நன்னாறி ....................................... *
பொங்குபசுவின்பால்வார்த்து போத எண்ணெயெரித்திடவே, ................... *
எங்குமுள்ளக் கரப்பான்போம் எரிக்கும் விளக்கினெண்ணெயிதே......(சூ௯௰)

பதினெட்டுக்கரப்பானுக்கும் வேறு

## எண்ணெய்

வெண்பா

செருப்பினடியிண்டு சேர்கிரந்திநாயகமும் ........................................ *
வெருங்கில் * நிலக்கிழங்குவெண்ணொச்சில் - நெருக்கசங்கம்......................... *

குப்பியிலைச்சங்கு கொட்டக்கரந்தை.....................*
செப்பும் † கழல்துளசிசேர் ........................(௬௧௧)

* நிலக்கிழங்கு - நிலப்பனைக்கிழங்கு † கழல் - கழற்சி

இதுவுமது

சேருங்கரு நொச்சில் * செங்கரிப்பான் † பெருங்கிழக்கு ......*
கூர்முருக்கம்பட்டைக் ‡ கொடிவேலி - சேருகின்ற.............*
கோழியவரை § உள்ளிக் கோதையேதூதுவளை.......................*
¶ கோளி யுந்தாந் தேட்கொடுக்குகொள் ...........(௬௧௨)

* செங்கரிப்பான் - கையாந்தகரை † பெருங்கிழங்கு - சீனப்பா ‡ கொடிவேலி - சித்திரமூலம் § உள்ளி - வெண்காயம் ¶ கோளி - அத்தி

இதுவுமது

கொள்ளக்கரிசாலைக் கூறுஞ்சங்கம்பட்டை .....................*
அள்ளல் அவுரி அழகுசுவர் - முள்ளங்கிச......................*
சேளமுக்கருவின் கிழங்கிலையுமாகப் * பா ....................*
தாளமூலிக்கூடத்தான்....................(௬௧௩)

* பாதாளமூலி - ஆடுதின்னாபாலை

இதுவுமது

* வத்தகப்பட்டை பிராய் வளர் பூவரசம்பட்டைச்....................*
செத்தப்பழுப்பு சிறுசின்னி - ஒத்தநீர்..............................*
முள்ளிமுடக்கற்றான் முதிரபுங்கம் பட்டை † தண்டை ...........*
தள்ளவொண்ணுசாணுக்கி தான்......................(௬௧௪)

* வத்தகம் - வெட்பாலை † தண்டை - ஆதண்டை

இதுவுமது

சிறுகுறட்டைச்சீந்தில் சேரும்பழுபாகல் ........................*
முறுகு கண்டங்கத்திரி முள்ளி- அறுகுடனே ........................*
தன்னெச்சுச்சாறு தனியே வடித்துக்கொள் ..........................*
இன்னங்கேள் சொல்வாம் இசைநது ...........................(௬௧௫)

இதுவுமது

* பெருவாயன் லத்திப்பால் பேரானை லத்திப்பால்...................*
† குருவாம்பசுவினுடக்கோமயமும் - கருகாத......................*
நிம்பழச்சாறும் நிறைவெண்காயச்சாறும் ............................*
இன்பமுடன் எல்லாம்பதக்கு.......................(௬௧௬)

* பெருவாயன் - கழுதை † குருவாம் - நிறமாம்

### இதுவுமது

ஏண்ணெய்க்குறுணிசலந் திவையேவெயில்வைத்து ........................*
பண்ணும் படிசுற்கம் பகரக்கேள் - நண்ணும் .............................*
மரமஞ்சட் * குப்பைவளர் † பூதப்பட்டை .............................*
தெரிபரங் கிப்பட்டையுடன்சேர் ......................................(௬௧௭)

* குப்பை - சதகுப்பை † பூதப்பட்டை = பூதகரப்பான்பட்டை

### இதுவுமது

சேர் செங்கதாரித் திகழும் வெம்பாடனுடன் .............................*
கார்போகரிசிகனவாளம் - பாரில் .............................*
வசம்புவகைக்கு இரண்டு விருக்கொண்டை .............................*
நிசம்பெறவே காய்ச்சிவிடுநீ .............................(௬௧௮)

### இதுவுமது

நீகேள்கரண்டிதா னேராகக்கொள்ள .............................*
வாகாய்கரப்பான்வகைதீரும் - தோகாய் .............................*
சூலிக்குந்தான்கொடுக்கச் சொன்னாரறிந்து .............................*
பாவிக்கும்பத்தியஞ்செய் பார் .............................(௬௧௯)

ஷை இதில் கருஞ்சீரகமுங் காட்டுச்சீரகமுஞ் சேர்க்கவும்
இவ்வெண்ணெய்கர்ப்பஸ்திரீகட்கும் குழைந்தைகட்கும் பெரியவர்கட்குமாகும்

### பதினெட்டுக்கரப்பானுக்கும் வேறு எண்ணெய்

## தன்வந்திரி

### எண்சீராசிரிய விருத்தம்

பார்த்திடாய்இருவேளை செம்பருந்திப் பரிமணித்தக் காளியுடன் பொன்னாங்காணி, பார்த்திடாய் சூரியந்த நத்தைச்சூரி பகரம்மான் பச்சரிசி தகரைபாசி, வார்த்திடாட்குட்டிவிளாம் பட்டைப்பாகல் வண்மைசருந்துளசிச்செம்முள்ளி இண்டு, கார்த்திடாய் பாவட்டைப் பொடுதலைத்தான் கருங்காலிக் கழிலிலை புள்ளடியதாமே .............................(௭௰)

### இதுவுமது

ஆமேதான்சுரைதூவரைக் கொன்றைப்பட்டை அழகான தவமுருங்கை * சாலைமேலும், வாமேதான் அகத்திக் கற்றாழஞ்சோறும் வகையானசின்னி சிறுள்ளிப் பூணடு, காமேதான் இவ்வகைக்குதனிச்சாற்வாங்கிக் கடுப்பாண்டம் ஆசுணிற்கால்படிதான் ஊற்று, தாமேதான் ரவியில்வைத்து கடைமருந்து தாரணியில்நல் ஓமம் சா திர்காயே .............................(௭௰௧)

* சாலை - கோட்கசாலை

### இதுவுமது

கா்யோடுபத்திரியும்வசம்புகோஷ்டம் கண்மணியேகொத்தமல்லிக்காட்டுச்சீரம், வாயோடுதிப்பிலியும் இஞ்சிச்சூட்டு வகைவகைக்குவிருகனெடை அஞ்சதாச, தாயோடு ஆமணக்கின்எண்ணெய்தானும் தப்பாமல்துலுணியதாய் அளந்து ஊற்றி, மாயோடுசரக்கையெல்லாமெழுகாய் ஆட்டிவண்மையாய்ச்சகக்கிட்டுமேகிமைபாரோ ........................................(௭௱௨)

### இதுவுமது

மகிமையாய் எரித்திட்டு எண்ணெயாக்கி வளமாகசிறுதழைந்தை * ஆண்டூரொட்டு, மகிமைபாரிதுவயதில் கரப்பான்கண்டால் வகையுடனேபதினெட்டுக் கரப்பானும்போம், செகமகிழும் இந்தஎண்ணெய் செப்பக்கூடாதேயத்தில் உண்மையென்ற பண்டிதர்க்கு, அகமகிழும் நூலீந்த தர்மத்தோனை அங்கரத்தால்அவர்பதத்தை தெண்டஞ்செய்யே ................................(௭௱௩)

* ஆண்டூரொட்டு - பதினாறுவருஷம் - இந்நான்கு மொருதொடர்

பதினெட்டுக்கரப்பானுக்கு வேறு

## எண்ணெய்

---

### அறுசீராசிரியவிருத்தம்

பூவரசு செங்கத்தாரி பூதகரப்பான்கண்டங்காரி ................................*
மேவுநிலவாகைவகைக்கு விளங்கும்பத்துப்பலமாக ................................*
ஏவநறுக்கிச்சியாழமிட்டு இறத் * தாட்டுப்பால்படியொன்று ................................*
ஆவமிளகுசதகுப்பை அரியவசம்புவலம்புரிக்காய் ................................(௭௱௪)

* ஆட்டுப்பால் - காராட்டுப்பால்

### இதுவுமது

கார்ப்வெள்ளுள்ளிப் பரங்கிப்பட்டைக்கார்கோலரிசிகருஞ்சீரம் ................................*
மூயவகைக்குகழஞ்சிரண்டு முலைப்பால்விட்டுத்தான் அரைத்து ................................*
பாய்முற்கியாழத்திற்கரைத்து பாய்வெள்ளாட்டுப்பால்விட்டு ................................*
தோயும் எண்ணெயிற்கலந்து சுகமாய்மெழுகுபதமிறக்கே ................................(௭௱௫)

### இதுவுமது

இறக்கிப்பிள்ளைக்குள்ளுக்கு ஈந்துமேலுக்கும்பூச ................................*
திறக்கும்பதினெண்கரப்பானும் தீர்ந்துபோகும் உண்மையிது ................................*
பற குமின் னம்பத்தியக்கார் பவளவதரபயோதரபூ ................................*
சிறக்குமம்மழுடையாளே செய்தேபரி இக்கைப்பார்த்துவிடே ................................(௭௱௬)

தொன்னூற்றுறுகரப்பானுக்கும்

## எண்ணெய்

கீரிசாலே * கம்பந்திராய்வேரு கனத்தக்கருடக்கொடியுடனே ...................*
பொரிச்சால்பொரியும்பொரிகாரம் பூதகரப்பான்பட்டையுடன்......................*
எரிச்சாறெண்ணெய்வசம்புள்ளி எனவே கெட்டக்கரப்பான்கள் ...............*
மறுத்தால்தொன்னூற்றறுகரப்பான் மாட்டோமெனவேபோய்விடுமே(௱௭)

* கம்பந்திராய் - திராயந்தி

முந்நூற்றிருபது கரப்பானுக்கும்

## எண்ணெய்

எழுசீராசிரிய விருத்தம்

சிறுசூறிஞ்சான் மிளகருணைக்காட்டுமல்லி செப்பியிடு * பாலொடுவை நிலவிளாவும், அறிவாய்கேள் இவைவேர்கள் வசம்போடுள்ளிஆகாசகருடனு டக்கிழங்குஎல்லாம், தருகாமல்சமன்கூட்டி அதில் ஏாண்டம் தந்திடுமே எண்ணெயதுசமனுப்க் கொண்டு, முருவவேகாட்ச்சிவடிததருந்தநித்தம் முந்நூற்றிருபதுகரபான் கிரந்திபோமே. ..........................................(௱௮)

* பாலொடுவை - கொடிப்பாலே

சகலகரப்பானுக்கும்மேற் பூச்சு

## நல்லெண்ணெய்

என்சீராசிரிய விருத்தம்

வீங்கியகரப்பான்விடத்தலே * யிலேயின்கள்ளியுந் † திருகியகள்ளி .........*
விளம்பிய ‡ வஜ்ரம் மாவிலிங்குடனே ¶ முத்தமுந்தாழைக்கொம்மட்டி......*
ஓங்குறுகுப்பைமேனியும் அவுரி உயர்பொடுதலேநிலக்கடம்பு.................*
உறும்எருமையின் ஆட்டாங்கொடிநொச்சில் ஒப்பும்ஆமணக்கு கிண்டினிலேயும்*
ஆங்கிவைவகைக்குசாறுழக்கதனில் அதிகநல்லெண்ணெயும் உழக்கு .........*
அவையினிற்கற்கம் சீரசம்கடுகு அடர் * குருவிந்தம் குந்திரிக்கம் ............*
பாங்குள † குக்கில் ‡ திரிகடு § காசியம்பகர்தேவதாரமிவ்வெடைதான்... *
பலம்புலம் எரித்துபூசிக்கொள்கரப்பான் ¶ பானுமுன்பனியெனப்படுமே ( )

* இலேயின்கள்ளி - இலேக்கள்ளி † திருகியகள்ளி - திருகுகள்ளி ‡ வஜ்ரம் - சதுரக்கள்ளி § முத்தம் - சங்கன் ¶ இண்டு - ஈயச்செடி ௵ குருவிந்தம் - கோரைக்கிழங்கு * குக்கில் - மைசாட்சி † திரிகடுகு - சுக்கு - மிளகு - திப்பிலி ‡ ஆசியம் - கருஞ்சீரகம் ¶ பானு- சூரியன்

தீராதகொள்ளிக் கரப்பான்

## குணம்

அறுசீராசிரியவிருத்தம்

கொற்றக்கள்ளியின் கரப்பான் குணத்தைக் கேளு கோகிலமே ............*
மற்று வயிறு நாவ்வீக்கி மலமுட்டடைக்கும் இளைப்புண்டாம் ..................*
கத்துந்தூரலும் அனையுண்டாங் கனைத்தவிக்கல் உண்டானல் ..................*
பத்துப்பதியும் ஒதுவதேன் பாலன்பிழைப்ப தரிதாமே.................... (எாய)

சிறுசிரங்கு கிரந்திசூலை சொரிக்கு

## சாறு

அறுசீராசிரியவிருத்தம்

கொடிக்கள்ளி தன்னைவாடடி குறுகவே பிழிந்துக்கொண்டு ..................*
முடுக்குடன் தின * முளைக்கு மூன்றுநாள் உள்ளேவார்க்க.......................*
திடத்துடன் கிரந்திசூலை சிரங்கொடு சொரியுந்தாளே.......................*
நடுக்கறதீருமென்று நாதனாருள் செய்தாரோ ..........................(எாயக)

* முளை - குழைந்தை

சிரங்குக்கு

## தேங்கா யெண்ணெய்

கலி விருத்தம்

காட்டுச்சீரகங்கார்போகரிசியும் ..................................................*
மாட்டுங் (கஸ்தூரிமஞ்சளும் ஏலமும்...................................................*
நீட் * டரிதகி. நீரடிமுத்துடன் ................................................... *
ஈட்டஆறுஞ் சமனெடையா யெடே........................................ (எாயஉ

* அரிதகி - கடுக்காய்

### இதுவுமது

எடுத்தவை பொடிசெய் வெண்மிளகினி ...........................................*
அடுத்தலொடையா * மத்தங்காயினுள் ............................................*
தொடுத்தடைத் தொன்றனா எருமிட்டைசூழ் ......................................*
பொடுத்தமசப்புடம் போட்டெடுத்தாற்றிடே.............................(எாயங)

* மத்தங்காய் - ஊமத்தங்காய்

### இதுவுமது

ஆற்றிமுற்பொடி கூட்டியகண்டமும் ..............................................*
நாற்றிமி * நாளி கேரத்தினெண்ணெய் விட்.........................................*

ஏற்றிடு குழிக்கல்லில் அரைத்தற ..............................................*
மாற்றிடெண்ணெய் பின்வார்த்து நீயாட்டிடே ..............................(௯௰௪)
* நாளிகேரம் - தேங்காய்

## இதுவுமது

ஆட்டி * பானுமுன் அப்படிமூன்றுநாள் ..............................................*
காட்டிவைத்துக் † கடத்தினில்வந்ததோர் ..............................................*
சாட்டியசிரங்கின்மேல் தடவிட..............................................*
நாட்டித்தினவு நமைச்சலும்போகுமே .............................. (௯௰௫)
* பானு - சூரியன் † கடம் - சரீரம்

## சொரிக்கு மருந்து

## தேரையர்

### கலிவிருத்தம்

பார்த்து பூவரசம் பட்டை ஓர்பலம்..............................................*
தார்த்து நீராகாரத்தில் அழாக்கிட ..............................................*
எற்று மூன்றுநாள் இவ்விதங் கொண்டிடில் ..............................................*
போற்றுமே சொரிபோம் உப்புவிட்டிடே..............................(௯௰௬)
* இஃதொருதொடர்

## பேய்ச்சொரிக்கு மருந்து

### எண்சீராசிரியவிருத்தம்

நோக்கமில்லாபேய்ச்சொரிக்கு மருந்துகேளு நுண்மையுடன் இந்துப் புபொடியாச்செய்து, தாக்கவேநெய்தனிலே பொடியைக்கொட்டி தண்மை யுடன்கிண்டியதைரவிபில்வைத்து, தீர்க்கமுடன் தலைக்கிட்டுமேலும்பூசி திறமா கமறுநாள்தான்முழுகிப்போடு, தூக்கமில்லாபேய்ச்சொரிதான் ஓடிப்போகும் சுருக்கானமருந்திதுதான் சூக்ஷம்பாரோ..............................(௯௰௭)

## கரப்பான்வகுப்பு முற்றிற்று

அகத்தியர் திருவடிகளே

சரணம்

இஃது

# சுர வகுப்பு.

இஃது

## வாத பித்த சேஷ்ம சுரத்தின் குணம்

அறுசீராசிரியவிருத்தம்

மாங்கிஷந்னில்வாத மதுபித்தந் தானுந்தோலில் ........................*
தூங்கிய எலும்பில் * ஐயம் சுகமறந்தோன்றும் பின்னர் ........................*
சாங்கியமாகநின்று சரீரத்தில் நோயும் பண்ணும் ........................*
ஆங்கிதைச்சொல்லவொண்ணாதநீகமாம்உரோகந்தானே ..............(௭௱௰௮)

* ஐயம் - சேஷ்மம்

வாதபித்த சேஷ்ம சுரத்திற்கு கோடாசமி

## மாத்திரை

கோரோசினையிருவிருகனெடை கூறுமுரோகணி விருகனென்று ......... *
நேவாளந்தான் விருகனென்று நிகழுமுலைப்பால் தான்விட்டு ............... *
ஊராய் அரைத்து பயறளவு உண்டைசெய்து நிழல்உலர்த்தி ................*
ஏரோ வாதசுரத்திற்கு இஞ்சிச்சாற்றில் இட்டிடுமே ....................(௭௱௰௬)

இதுவுமது

இடுமேபித்தசுரத்திற்கு இதுமுலைப்பாலில் இடதீரும் ...........................*
அடுமேசேஷ்மசுரத்திற்கு ஆடாதோடையுங் * காரி...............................*
பெ[illegible]டுமேதூதளைபிட்டவியல் பொருந்த அவித்தசாற்றிவிட...................*
படுமேசன்னியெலாந்தீரும் பகருமிச்சாபத்தியமே ..................... (௭௨௰)

* காரி - கண்டங்கத்திரி

மாந்தசுரத்திற்கு

## கியாழம்

சீந்தில் தண்டுங் களிப்பாக்கும் * சிவேதைவேருங்கடுக்காயும் ..................*
காய்ந்த சுக்குரோகணியும் காயும்நீரில் தகர்த்திட்டு ........ ........................*
எந்துமுலையாய் இந்நீரை எட்டொன்றுக்கிக்கொடுப்பீரேல் .....................*
மாந்தமானசுரமும்போம் வயிறுங்கழியுங்கண்டீரே ..................... (௭௨௧)

* சிவேதை (௰௮) நஞ்சிலொன்றுகையின் பசும்பாலிற் பத்துதரஞ்சுத்திசெய்துகொள்க இச் சிவேதைக்குமுறிவு - வெள்வேல் பத்து - மிளகுகையிலிருந்தால் - பகையா[illegible]ல்சாப்பிடலாம்.

மாந்தசுரகணத்திற்கு வேறு

## எண்ணெய்

எண்சீராசிரியவிருத்தம்

கடுக்காய்தான் பதினாறு விளைகட்போசகி கஸ்த்தூரிமஞ்சள் கருடக்கி ழங்கு, முடிக்காக மூன்றுமவைசரியாய்க்கொண்டு முறைபுடனேபொடிசெய்து * தைலநதானும், அடுக்காக நாழியதில் பொடியைப்போட்டு † அனலிமுகம் வைத்துள்ளுக்கருங்கொடுத்து, சடுக்கென உச்சியினிலிடப் பொருமலோடு தணி யாதமாந்தசுரந் தணியுமென்றே................................................(எ௨௨)

* தைலம் - ஆமணக்குநெய் † அனலிமுகம் - சூரியபுடம்

மாந்தசுரத்திற்கு வேறு

## கியாழம்

நெல்லியுடன் வேம்புபுளி * கரந்தைதானும் நேயம் † இருமுட்டிதி னை நினையொன்றாக, சொல்லுமொரிதழின்தாமரையுங்கூட்டி சுகமாகவே நறு க்கித்தோகாய் நீகேள், உள்ளபடிசிரகம் கிரம்பு திப்லி ஒன்றாகக்கூட்டியே உழ க்காய்க்காய்ச்சி, மெல்லவேசிறுவோர்க்குகொடுக்கவேதான் வெதும்பாதுமாந் தசுரம் விட்டுப்போமே ..................................................(எ௨௨)

* கரந்தை - விட்ணுக்கரந்தை † இருமுட்டி - சிற்றாமுட்டி - பேரா முட்டி

மாந்தசுரத்திற்கு வேறு

## கியாழம்

அறுசீராசிரிய விருதம்

போமேசருள்ளிப்பத்து பொடியாய் அரிந்துவில்வமொடு ......................*
ஆமே அவுரி * பூமிவிளா அரிந்துசிவக்க வறுத்ததனே ..............................*
வேமேகாய்ச்சிசிறுவோர்க்கு விதமாய் மூன்று நாள்கொடுக்க .................*
தாமேயணுகுமாந்தசுரந் தணியுங்கணமுந் தரியாதே .................. (எ௨௪)

* பூமிவிளா - நிலவிளா

மாந்தகணசுரத்திற்கு வேறு

## கியாழம்

ஆசிரியவிருத்தம்

புளிநுணாநெல்லி ஒதி வேம்போடுதகரையும் பொடுதலை அம்மானரிசியும் ...*
புகழ் எட்டு எர்க்கு * கூவிள இலையும் † அவ் வோடுபொங்குசிறுபுள்ளடியிலை*
நளிர்கோழி அவரையிலை நிலவிளாதன்னிலை நரிபயற்றங்கொடியுடன்.........*
நற்பழம்பாசியிலை விட்ணுக்கரந்தைநன் னறிகோரைக்கிழங்கும் ...............*

தளிர்செருப்படைமணித் தக்காளியல்லாரை தான்சீந்தில்பேய்ப்புடலெலாம்*
தனிவகைக்கொருபிடிக் கொடுவந்தரிந்துமே தக்கபொன்னிறம்வறுத்து ......*
தளிக்கொருபடிசலம்விட்டுசொல்படியாக காய்ந்தக்கியாழமதிலே..............*
சமழ்கின்றகோஷ்டம் விளாம்பிசின் வில்வத்தின்களபிசினிலவம்பிசினுமே.()

* கூவிளம் - வில்வம் † அங்வோடு - வில்வ ஓடு

இதுவுமது

அறுசீராசிரியவிருத்தம்

பிசின்மாசிக்சாய் சாதிக்காய் பெருகும் வெந்தயம் இவைவகைக்கு...........*
விசித விருகன்எடையாக வெதுப்பிப் பொன்னிறமாய் வறுத்து................*
புசியப்பொடியாய் செய்தந்தப் பொடியைக் கியாழத்தில் தூவி ..............*
உசிதஆறுவேளை * துய்க்க ஓடுமாந்தகண சுரமே...... ........ ........(எஉசு)

* துய்க்க - சாப்பிட

நாட்பட்டமாந்தசுரம் வாதபித்தசேஷ்மங்கடந்தசுரம் கனல்சுரத்திற்கும்

வில்வாதிமாத்திரை

## தன்வந்திரி

எண்சீராசிரியவிருத்தம்

நவின்றசுரவில்வாதிகுளிகைகேளு நற் * பச்சைப்பூரங்கால் இலவங்கங்கால், நவின்றிட்டோம் வால்மிளகுசிறுதாகப்பூ நன்றூனரோகணியும் ஏலம் மாஞ்சி, நவின்றிட்டோம் சுக்குமேசிரகங்கால் நளின † செவ்வாலம்பருப்பு நிகர்க்கு ஒன்று, நவின்றிட்டோம் ‡ பொற்றலையின்சாற்றூலாட்டி § நவநாளுஞ்சென்றபின்புமிளகுபோலே.............................................(எஉஎ)

* பச்சைப்பூரம் - பச்சைக்கர்ப்பூரம் † செவ்வாலம்பருப்பு - வாளம்
‡ பொற்றலை - பொற்றலைகையாந்தகரை § நவநாள - ஒன்பதுநாள்.

இதுவுமது

மிளகுபோல் உண்டைசெய்துசெப்பில்வைத்துவிளங்குகிற இஞ்சிதேன் முலைப்பால்தன்னில், மிளகுபோல் இழைத்துண்ண என்ன சொல்வேன் இனியநாட்சென்ற சுரமாந்தம்போகும், களகுபோல் வாதபித்த சேஷ்மமுன்றுங்கடந்தசுரங் கனல்சுரமுங் கழன்று ஓடும், மளகுபோல் இந்தமுறை இந்த போக்குமகத்தான நந்தீசா செயலாங்காணே...................................(எஉஅ)

இவ்விரண்டு - மொருதொடர்

அட்சரமாந்தசுரத்திற்கு

## எண்ணெய்

அறுசிராசிரிய விருத்தம்

பூவர சிலையுங்காய்ப்பூ புகழ்பெற மூன்றுந்தானே ..................................*
தாவரசமனதாக தயவுடன் அரைத்துநல்லாய்.......................................*

ஆவர பலமொன்றாக அடையதைதட்டிக் கொண்டு ..............................*
தேவர்கள் மகிழுஞ்சிற்று மணக்குநெய் அரைசேர்கூட்டே...............(௭௨௯)

இதுவுமது

கூட்டியே காயவைத்து கூறதில் அடையைப்போட்டு ..........................*
திட்டிடுசிவக்கச்சரப்சி இசமுடை எடுத்துப்போட்டு................................*
காட்டிய ஏலஞ்சாதிக் காய்சாதி பத்ரிமூன்றும்........................... *
ஆட்டியவகைவகைக்கு அரைவிருகன்தான் தூக்கே .......................(௭௩௰)

இதுவுமது

தூக்கிநீபொடியாய்ச்செய்து துசளிலா எண்ணெய்தன்னில் ...................*
ஊக்கமாய்க் கலந்துபின்பு உள்ளுக்கு எடைதான் துட்டு ........................*
பாக்கியமாகவார்க்கப் பாலரை மயக்கவந்த.........................................*
ஆக்கிய காய்ச்சல்மற்ற அட்சரமாந்தம்போமே...........................(௭௩௧)

மாந்தகணசுரம் வயிற்றுப்பல் வார்திக்கு இரதசிந்துரமாத்திரை

## தன் வந்திரி

---

எண்சீராசிரிய விருத்தம்

தாமேரசச்சிந்தூரம் * திரிபலாதி தருகுங்குமப்பூகஸ்தூரிஏலம் ......* வாமேதான் † திரிகடுகு ‡ ரோசினைத்தான் வளமாகபலங்காலரய்நிறுத்துக் கொண்டு, காமேதான்கிராம்பெடையும்விருகனென்று கருநொச்சில்சாறுவிட் டோமம் ஆட்டி, நாமேசிறுபயறுபோல் உண்டைசெயது நல்துளசிச்சாற்றிலி டநயந்துக்கேளே...............................................................(௭௩௨)

* திரிபலாதி - கடுக்காய் - தான்றிக்காய் - நெல்லிக்காய் † திரிகடுகு சுக்கு - மிளகு - திப்பிலி ‡ ரோசினை - கோரோசினை

இதுவுமது

நயந்துக்கேள் கணமாந்தம் கணசுரங்கள் நற்பெரியவயிற்றுப்பல் மாந்தம்போகும், நயந்துக்கேள் வாந்திவயிற்றுப் பிசங்கள் நாடாது இவ்வுண்டை நாளினமெற்ற, நயந்துக்கேள் என்குருவின் செயலால் சொன்னேன் நமசிவய மென்றருளே நாவில்போற்று, நயந்துக்கேள் இருஷியென்றும் பெயருண்டாகி நாங்கண்ட பலனெல்லாம் நவின்றிட்டோமே ........ ...............(௭௩௩)

இவ்விரண்டு - மொருதொடர்

மாந்தகணசுரதோஷத்திற்கு

## எண்ணெய்

கும்மி

ஆமணக்கெண்ணெய் யதுநாழி - தான் - அதேத்தநுணச்சாறனைநாழி ......*
பூமணக் கிருள்ளிக் கால்நாழிப்........................................*
போதரவாய்க்கும்மி யடியுங்களேடி - மன ...........................*
தாதரவாய்க்கும்மி யடியுங்களேடி ...................................(௭௩௪)

இதுவுமது

வெந்தயம் அரைப்பலங்கூட்டி - பெணே - மிகுத்திடும் நற்பதத்திறக்கி......*
பந்தயம் எண்ணெயும் பேதிக்க உள்ளுக்குப்.........................*
பழுக்கக்கும்மியடியுங்களேடி - நீங்கட் ................................*
களிக்கக்கும்மி யடியுங்களேடி..........................................(௭௩௫)

இதுவுமது

பாருமாந்தசுரகணமுந் - தோஷம் - பாலகர்க்கெண்ணெய்க்கொடுத்திட்டே*
தேறுமேபிள்ளைதான் ஊறுமேபிணி.........................................*
மாறுங் கும்மியடியுங்களேடி - மனத் ......................................*
தேறுமென்றேகும்மியடியுங்களேடி.........................................(௭௩௬)

மாந்தகணசுரதோஷம் வயிறுகழிச்சல் பித்தம் இருமல் வாந்திக்கு

## பாலசஞ்சீவி மாத்திரை

எண்சீராசிரிய விருத்தம்

திரிகடுகு வெண்காரஞ் சாதிலிங்கம் சிறந்திடவே * ஐம்மருந்துஞ்சமனதாக, நெறிபடவே எலிமிச்சம் பழத்தின்சாற்றால் நிகவரைத்து ஒருசாமம் நிரையதாக, குறியுடனே உண்டைதனை பயற்றிற்பாதி குளிர்ந்தநிழல்தனில் உலர்த்திக்குழுவிக்கிய, மதிபடவே பாலசஞ்சீவி யென்றுவகுத்துரைத்தார் மலையின்முனிமண்ணுள்ளோர்க்கே ..................(௭௩௭)

* ஐம்மருந்து - ஐந்துவகைமருந்து

இதுவுமது

மலையின் முனிதானுரைத்தவகையே தென்னில் மாந்தகண சுரதோஷம் வயிற்றிழேட்டம், கொலைசெய்யும் பித்தமுதிர் இருமல் வாந்திகுலைந்திடு நோயுள்ள துவுங் குடிதான்போக, நிலைபெறவே பத்திரியை பிட்ட தாக்கி நீர் வாங்கி திரிகடுகு கற்கமாக்கி, உலைபுயர்ந்த கியாழமதில் கற்கமோடு உண்டையொன்று தானெடுத்து உரைத்திடாயே ......................(௭௩௮)

இதுவுமது

உனாத்திடுமேசுரமிருமல்கணா நாமுள்ளு உகந்தகோரோசினையும் ஒக்கக்கூட்டி, கனாத்திடுங்காலிரத்த கணமூலங்கண்டால் கடுகவேசாதிக்காய்புளிவித்தோடு, அனாத்திடுமே உன்னடையொன்றுசசகுங்கூட்டி அருந்திடவேவில்வபழச்சதைக்குள்வைத்து, வனாத்திடுமென்றருள் முனிவல் விபரஞ்சொன்னவால்சஞ்சீவியென்றே வகுக்கலாமே ........................................(எருகூ)

இதுவுமது

வகுக்குங்கால் * பத்திரிதன்வகையைச்சேரு மணித்துளசிசெம்முள்ளிஆடாதோடை பகுத்திடுவாய்தூதுவளைவிட்ணுக்காந்தி பண்புசெறிகண்டங்கத்திரியினோடு, நிகழ்த்திடுமே வெதுப்படக்கிப்பேட்ப்புடோலும் நின்றசங்கிலை இலைநொச்சில்நிளாதான்கூட்டி, செகுத்திடுமேசுவாசசுரகணதோஷங்கள் தெரிந்துனாத்தார்மாமுனிசஞ்சீவியென்றே .................................... (எசய)

* பத்திரி - இலைவகை

## கணக்காய்ச்சலின் குணம்

*உந்திதனைப்பற்றி யீரலளவும்புண்ணுப்ஒருக்காலேசுவாசந்தான்உண்டாமெற்ற, வந்துசுரம்பூகிறாற்போலேகாய்ந்து வருத்தமாய்திட்டுமுட்டாய்மயக்கங்காணும், இந்தவகை கணக்காய்ச்சலென்றே நாளும் இயம்புவார்புவிமீதுநூல்வல்லோர்கேள், சுந்திரியாள் உமைபாகன்முனிக்குசொன்னசூக்ஷமிது தானறிவீருண்மைதானே ................................................(எசக)

* உந்தி - மணிபூரகமாகியநாபி

கணக்காயச்சலுக்கு கலியாணபூசினி

## நெய்

ஆசிரியவிருத்தம்

சீராரும்பூசினிச்சாற்றின் இளநீருடன்சொல் ஆவின்நெய்பாலுமாய் .........*
திகழுரு * சதாவேரியின்கிழங்கிவையுடன் செய்வகைக்கோர்நாழியாய் ...*
காராருரோசணிச்சண்பகம்வெட்டிவேர் கடல்பச்சை அதிமதூரமும் .........*
காடுவளர் இலவங்கம் † இருமுட்டிதிப்பிலிக் கருதுசந்தனம் ஏலமும்.........*
பாராரிலாமிச்சு ‡ மாவிதைக்கோஷ்டமும்பருவிளாம்பிசினியுடனே .........*
பண் பிலவுதன்பிசின் வில்வபிசினோடுயர்பகருமொருபொன்முசுட்டை ......*
நேராருமோர்வகைக்காசெடைநிதானமாய்நிலவரமதாயனாத்து...............*
நேசமுடனெய்யிற்கலந்தெரிவடித்ததைநித்தங்கொடுத்துவிடுமே ......(எசஉ)

* சதாவேரி - தண்ணீர்மீட்டான் † இருமட்டி - சிற்றுமுட்டி - பேராமுட்டி ‡ மாவிதை - மாம்பருப்பு

இதுவுமது

வெண்பா

விடுமேகணக்காய்ச்சல் மேல்வெதுப்பும் உட்சுரமும் ...........................*
நடுமெலிருமலுடன் சாந்தமாங் - கொடுமேதான் ..................................*
பூசினிக்காய்நெய்தனக்குப் பூரிக்குமேயுடலம் ....................................*
காசினியிலுள்ளவர்க்கு காண்....................................................(எசக)

கணக் காய்ச்சலுக்கு வேறு

## எண்ணெய்

கட்டளைக்கலித்துறை

புள்ளடி செப்புநெருஞ்சில் வல்லாரைப் * பூலாவுடனே ..........................*
தெள்ளடிக்கோழியவரையின்சாறொடு சேர்ஒருகால்....................................*
தள்ளடி ஆமணக்கெண்ணெயுஞ்சேர்குராசானியுடன்....................................*
துள்ளடிக்கடுகு ரோகணி வெளிச்சையுஞ் சொல்விடுமே ...... ........(எசச)

* பூலா - வரட்பூலா

இதுவுமது

சொல்விடுமாவின்புல்லுரீ இமாஞ்சியுஞ் சொன்னவகை ..........................*
எல்லைஅளவு இரண்டுபேபணவெடை இதில்கலந்து .................................*
துள்ளஎரித்துப் பதமாயிறக்கி நல்துட்டளவாய் ......................................*
பிள்ளைகட்கேயிட கணங்களுங் காய்ச்சலும்போய்விடுமே............... (எசகு)

கணக்காய்ச்சலுக்கு வேறுஏலாதிமாத்திரை

## தன்வந்திரி

---

எண்சீராசிரியவிருத்தம்

ஏலாதிமாசிக்காய் திப்பிலி ஏலம் இனியகோரோசினையுங் கோஷ்டமாஞ்சில், ஏலாதிசிரகந்தான் * இரண்டு † அக்ரா இனத்தோடேகால்பலமாய்நிறுத்துக்கொண்டு, ஏலாதிகல்லிலிட்டு முலைப்பால்வார்த்து இருசாமந்தானரைத்து உண்டைசெய்து, ஏலாதிகணசுரங்கள் கண்டசேயற் கெடுத்திடுநீ முலைப்பாலிலீந்திடாயே. ........................................................ (உசசு)

* இரணடு - நற்சீரகம் - கருஞ்சீரகம் † அக்ரா - அக்கராகாரம்

கணக்காய்ச்சலுக்கு வேறு

## நெய்

சிங்குடனே செருப்படையுந்துளசி * பூலாதருகழற்சிநரிபயற்றஞ்சாறு வெவ்வே, றங்கதொரு படியதனில் அப்பைக்கோவ்வை அடர் நெருஞ்சில் துாதுவளைவேர் கிராம்பு, இங்கிததிப்பிலி சாதிக்காய் † இம்பூரல் இயல்வசம் புள்ளிச்சுக்கு கடுக்காய்தேக்கு, துங்கநெய் தான்படியி லெரித்தருந்தி பூசச்சொல்லில் இதுகணங்கள் உட்சுரமும் போமே ................................(௭௪௭)

* பூலா - வரட்பூலா † இம்பூரல் = சாயவேர்

கணவெதுப்புக்கு

## கியாழம்

பழம்பாசி கணப்பூண்டு * வெதுப்படக்கி பசியநல்லவல்லாரைத் தகரைக்கூட்டி, குழம்பாகக்காய்ச்சியநீர்த்தன்னிலேதான்கூட்டி † இருசீரகம்ரோகினியைப்போட்டு, விழும்பாலர்கணந்தனக்கு விரும்பிக்கொள்ள விட்டோடுங்கணமெல்லாம் வெதுப்புமாறும், கெழும்பாலர்தங்களுக்கு ஏலாதென்று சேவலமாயுரைக்கவினி சேளுந்தானே. .........................................(௭௪௮)

* வெதுப்படக்கி - பேய்மிரட்டி † இருசீரகம் - நற்சீரகம் - கருஞ்சீரகம்

கணக்காய்ச்சல்மாறலுக்கு

## சூரணம்

அதிமதுரம் ஏலமுடன் லவங்கப்பட்டை ஆனசண்பகமொக்கு கோஷ்டந்தானும், விதியுடனே சுக்குஞ்சீரகமுமுத்தம் விதவிதமாய் வறுத்திடித்துப் பொடித்துக்கொண்டு, சதிருடனே சர்க்கரையுங்கூடச்சேர்த்து சகலபிள்ளையருந்திடவேசபலமாகும், மதிநுதல் சேர்பெண்ணரசேகணமும் போகும் மாறிவருங்காய்ச்சலெலா மாறுந்தானே........................................ (௭௪௯)

கணக்காய்ச்சல் * மசக்கைக்கு மருந்து)

* மசக்கை - மயக்கம்

ஆசிரிய விருத்தம்

உத்தபுளி வேம்புமாதெல்வி நாரத்தையும் ஒதிநுணா தகைரை * நிம்பம்... *
ஓதுவசையீர்க்கில் வல்லாரைப்பழம்பாசி உசிதபுள்ளடிமுத்தமும் ..........*
பத்திதரும் ஈருள்ளி † வன் அத்தி ‡ இருமுட்டி பகர்மிளகு தக்காளியும்...*
பகர்முசுக்கைக் காந்திநரிப்பயற்றங்கொடிப் பற்படகம் மூக்கொற்றியும்......*
சத்திவளர் ⸹ முனி ¶ அமான்பச்சரிசி சிந்திலும் சமனுக இருசீரகம் ......*

தகர்சுக்குவெந்தயம் அரைபலமதாய்வறுத் தாதண்டைக் கியாழகற்கம் ......*
வைத்துகோரோசினை அக்கரா அதிமதுரம்வரிகலங்கொம்புகோஷ்டம் ...... *
வாகாக ஒவ்வொருபணவெடையதாகவே வளமாக நிகழஅரையே......(எ௫ம)

* நிம்பம் - வேப்பீர்க்கில் † வண் - மிகுதி ‡ இருமுட்டி - சிற்றுமுட்டி - பேராமுட்டி § அமான் - அம்மான்

இருவுமரு

அறுசீராசிரியவிருத்தம்

அரைத்ததைகுழவிக்கீய ஆனதோரிரண்டுநேரம் ............................ *
உரைத்திடும் பத்துநாள்தான் உட்சுரம் உள்ளவெல்லாம் ......................*
கரைத்திடுங்கணமும்பொல்லா காய்ச்சலுங்கணமுந்தீரும் ..................... *
வரைத்திடும் சுரமசக்கை மாறுமென் றருள்செய்தாரோ ................... (எ௬க)

உடம்புநோய்க்காய்ச்சலின்

## குணம்

வெண்பா

உதட்டைக்கடிக்கும் உறகை முஷ்டியாய்பிடிக்கும் ........................... *
மிதட்டநட்டக்கண்ணுப்விழிக்கும் - பதட்டமுடன் ......... ..................... *
* குஜத்தைக்கடித்திழுக்கும் கூறுடம்புநோயாம் .......... .....................*
நிஜத்தைவிளக்கினோம்நேர் ...............................................(எ௬உ)

* குஜம் - கொங்கை

உடம்புநோய்க் காச்சலுக்கு

## மருந்து

* சீதேவி பூடிடித்து செய்யபிட்டாயவித்து.................................... *
ஓதே அச்சாற்றில் † உரோகணியை - மாதே.............. ... ...............*
அரைத்துநீதான்வெள்ளாட்டுப்பாவிற்புகட்ட ......................................*
புரைத்துடம்புகாய்ச்சல் நோய்ப்போம்.................. ................ (எ௬௩)

* சீதேவிப்பூடு - சாணுக்கிப்பூண்டு † உரோசணி - கடுகுரோகணி

கணசுரம் கணபாண்டு அஸ்திவெட்டை இருமல் இரத்தத்திற்கு

எண்ணெய்

## தன்வந்திரி

ஆவாரைவேரு அழகுசரக்கொன்றைவேர் ......................................*
காவாத விட்டுணுக்கரந்தைவேர் - பூவா ..........................................*
கலக்கமில்லாமல் கமழ்தந்துவீசும் ................................................ *
திலக்குமிழின் வேரதனைநேர் ..............................................(எ௬௪)

இதுவுமது

எண்சீராசிரிய விருத்தம்

வேருசிறு அம்மான்பச்சரிசி ஏலம் * விளாசிரம் † யானைக்கால் வணக்கிப்பூடு, தாருடனேவகைக்கு அரைபலமும்வாங்கிதனியாஞ் ‡ சிற்றேரண்டத்தெண்ணெய் † ஒன்றில், கூருடனே ஆவின்பால் விட்டரைத்துக் குழிசொல்வேன்கலக்கி எண்ணெய் எரித்துவாங்கி, சீருடனேமண்டலங்கால்கரண்டிவீதம் சிறு இச்சாபத்தியமாய்க்கொள்ளச்சொல்லே......................(எருசு)

* விளாசிரம் - வாசனையானசிரகம் † யானைக்கால்வணங்கிப்பூடு - நெருஞ்சில் ‡ சிற்றேரண்டம் - சிற்று மணக்கு § ஒன்றில் - எண்ணெய்ப்படி ஒன்றில்

இதுவுமது

கொள்ளவேசணபாண்டு கணசுரங்கள்கொடிதான அஸ்திவெட்டை இருமல் ரத்தம், கொள்ளவே பறந்தோடும் எண்ணெய்மார்க்கம் குறியாகசிறுபிள்ளைக்கழிச்சல்தோஷம், கொள்ளவே உப்பிலியின் பூண்டுவாங்கி குணமாக நறுக்கி * ஆநெய்யுஞ்சேர்த்து, கொள்ளவே ரவிகாய சாமம் நாலு குருவருளால் பிள்ளைதனக் கீந்திடாயே.......................................... (எருசு)

* ஆநெய் - பசுவின்நெய் - இம்மூன்றுமொருதொடர்

காய்ச்சல் அதிசாரசுவாசகாசத்திற்கு

## மருந்து

* அஞ்சனவேர்நெற்பொரியும் † மாஞ்சிலோடு அதிமதுரஞ்சர்க்கரை தேன் ‡ அளாவிபுண்ண, கொஞ்சினவேகொஞ்சுபிள்ளைக் காய்ச்சல்தீரும் குயில்மொழியாய் இன்னமொன்றுகூறக்கேளு, தஞ்சமென்ற அதிவிடையந் தேனிற்கொள்ளதாகமுடன் அதிசாரஞ்சுவாசம்போகும், மஞ்செனவுங்குழல்மடவாய்பிள்ளைக்கென்று வைத்திய நூல்சிவன் உரைத்தவாறுதானே ... (எருஎ)

* அஞ்சனவேர் - அவுரிவேர் † மாஞ்சில் - சடாமாஞ்சில் ‡ அளாவல்-கலத்தல்

உட்காய்ச்சலின்குணம்

## தன்வந்திரி

அறுசீராசிரியவிருத்தம்

மலமும்சலமும் மிகநீய்ந்து மார்பிலதிகசுரங்காயும் ...............................*
மலமும் வயிறுமிக எரியும் வளமாய் தலையுமிகமயக்கும் ..........................*
சலமும் வற்றித்தான் குறையும் சண்டாளம்போல் உட்காய்ச்சல்...............*
நிலமாம் பனிரண்டாட்டுமெட்டுந் தனதாய்வருகுங்கணமித்வே ......... (எருஅ)

இஃதொன்றுமொருதொடர்

சவலை - குளிதோஷம் - வரட்கணம் - உளம்பிளைத்தல் மாந்தகணம் - உட்காய்ச்சல் - அட்சரக்காய்ச்சலுக்கு

## எண்ணெய்

எண்சீராசிரியவிருத்தம்

கற்ருழஞ்சாறு இளநீர் ஆவின்பால் கருதுவகை படியொன்று அளந்துக்கொண்டு, பற்ருஞ்சிற்ருமணக்கின் எண்ணெய்மூன்றுப் படியளந் தொன்ருய்க் கலந்துசொல்லக்கேளு, சற்ருனகணப்பூண்டு கலமான்கொம்பு சந்தனமும் * கச்சபத்தின் ஓடிந்நாலும், மற்ருனவகைக்கு பலம் ஒன்றதாக மருவிளநீர் விட்டரைத்து மருந்திற்சேரோ ..........................................(எ௬௧)

* கச்சபம் - ஆமை

இதுவுமது

சேர்க்கவேசண்பகப்பூசாதிக்காயும் சீரகமும் அதிமதுரம்சிறுநாகப்பூ ...... *
வார்க்கவேகரியசீரகம்வகைக்கு வளமானகால்பலமாய்நிறுத்துக்கொண்டு ... *
பார்க்கவேசாபத்ரிபலம் அரைக்கால் பகர்சொத்தமல்லிபலம் அரையதாக ...*
மார்க்கமாய்பசும்பால்விட்டாட்டியேமுன் மருந்தில்சேர்த்துக்கலக்கிக் காயச்சிக்கொள்ளே..........................................(எ௬௰)

இதுவுமது

காய்ச்சியே மெழுகுபதந்தனில்வடித்து காலேயிலுமாலேயில்துட்டெடையேவாரு,பாய்ச்சியே இவ்வண்ணம் எழுநாள் ஈந்தால் படர்மாந்தகணஞ்சவலை குளியின்தோஷம், ஆய்ச்சியேவரட்சணமும் உடம்பிளைத்தல் அட்சரத்தின்காய்ச்சலுடன் உட்காய்ச்சற்போம், ஓய்ச்சியேசிறுவருச்குவந்தநோய்கள் உண்மையுடன்தீருமிது திண்ணந்தானே ..........................................(எ௬க)

காய்ச்சல் உட்காய்ச்சல் மாந்தம் உடம்புவற்றலுக்கு

## எண்ணெய்

கொச்சகம்

முனிவோர்சிற்ருமணக்கு முதலிளநீர்தனிலவித்து ..............................*
செனிவாகும் எண்ணெய்ப்படி சேர்பசும்பால்ரண்டுபடி..............................*
தனியா * குமரியினீர் தானரைப்படியாக..............................*
தொனியுாய்மெழுகுபதஞ்சொல்லும்படிகாய்ச்சே .............................. (எ௬உ)

* குமரி - கற்ருழை

இதுவுமது

காய்ச்சி இறுத்தெண்ணெயினிற் கற்கமினி சீரகமும்.............................. *
* மாச்சிக்காய்கோஷ்டம் மதுரம்கிராம்பேலம் .............................. *

தாழ்ச்சியில்லா சுக்கு சரிவகைக்கு காசெடையாய் ................................ *
கூச்சமின்றி வெந்தயமும் கூறும்பலங்காணே ......... ................(௭௬௩)
* மாச்சிக்காய் - மாசிக்காய்

இதுவுமது

எண்சீராசிரியவிருத்தம்

காணவேயிவையெல்லாம் வறுத்திடித்து கற்கமதை எண்ணெயிலேகலந்தபின்பு, பூணவேசூரியன்தன் புடத்திலவைத்து பிள்ளைதனக்கீந்திடவேபோந்நோயெல்லாம், தோணவேகாய்ச்சல் உட்காடச்சல்மாந்தம் தோற்றுகின்ற உடம்புவற்றல் வகைகள் யாவும், நாணவேவாய்வரண்டுகுலை நடுங்கி நாடாதென்றேபெரியோர் நவின்றிட்டாரே. ..................... ......................(௭௬௪)

## ஆமசுரத்தின்குணம்

அறுசீராசிரியவிருத்தம்

ஆமசுரத்தின்குணங்கேளு அதிகமாகவெதும்பாது ...... ........................*
சாமந்தோறும்வெதும்பிவிக்குந்தண்ணீர் உழலை உண்டாக்கும் ..................*
சேமமான உடம்பிளைக்கும் சிறிடமுகும் பசியில்லை ..................................*
நாமங் * காரி உடல் ஓயும் நடுங்கியிருக்குங்கண்டாயே.......................(௭௬௫)
* காரி - உடல்கறுக்கும்

இதுவமது

ஆமசுரத்தின்குணங்கேளாய் அடவாய்கைகால்குளிர்ந்துவிடும் ................*
சாமந்தோறும் எழுந்திருக்கும் தாயின்முலைப்பால் அருந்தாது....................*
* தூமவாயிலெடுத்துவிடுஞ் சோர்ந்துகிடக்கும்வாய் † அரற்றும் ............ *
காமனம்புங்கயற்கண்ணாய் கண் தலைமிகநோங்கண்டாயே ...............(௭௬௬)
* தூமம் - புகை † அரற்றும் - கூவும்

ஆமசுரத்திற்கு

## மருந்து

உத்தாமணியும்பாவட்டை உகந்த * சங்குகாவட்டை................................*
சித்தமுருங்கைநுணா ஈர்க்குஞ் சேரக்கூட்டுப்பொடுதலையும் ..............................*
ஒத்த ஓமம்திப்பிலியும் உத்தவசம்பு † துளி ஓமம் ....................... ...........*
சத்தமாககறுஞ்சீரம் சுகமாய்முடிந்து கூட்டிடுமே........................ (...௭௬௭)
* காவட்டை - மாந்தபுல் † துளி - ஆமை

இதுவுமது

ஆவின்வெண்ணெய் விளாங்காய் போல் அதனில் உத்தாமணிக்கொழுந்து *
ஆவிபத்து வசம்புள்ளி துணித்திட்டோமம் சுனா ஓடு ................................ *

தாவும் ஆமை ஓடுமுண்டு தானேவறுத்திட்டிருகழஞ்சு ........................*
மேவீர் ஒன்றாய் அருந்திடவேமிக்க ஆம சுரம்போமே........................(எ௬அ)

ஆமசுரத்திற்குவேறு

## மருந்து

உத்தாமணியும்பாவட்டை உகந்தசங்குதூதுவளை..................................*
மெத்தக் * கொடிப்பைப்பொடுதலையும் வேண்டும் ஓமந்திப்பிலியும்...........*
ஒத்தமிளகுவசம்புள்ளி ஒடித்து ஆமை ஓட்டுடனே ....................................*
குற்றமறவே முடிந்திட்டுக் கொடுப்பீராமசுரம்போமே ........................(எ௬௯)

* கொடிப்பை = பொன்னாங்காணி

ஆமசுரத்திற்குவேறு

## கியாழம்

வெண்பா

கூறுகின்றபாவட்டைக் கொன்றைசிற்றாமுட்டியின்வேர் ........................*
வீறுடன் வேலிப்பரித்தி வேருடனே - நாறுகின்ற..................................*
நன்மிளகுகூட்டி நலமாய்க் கியாழமிட ..............................................*
சென்மமில்லை ஆமசுரம்செப்பு....................................................(எ௭0)

ஆமசுரமாறலுக்குவேறு

## கியாழம்

எண்சீராசிரியவிருத்தம்

வேப்பிலுப்பைமாவிலிங்கு பாவட்டை * சிக்குரு விருப்பமுடன் இலையீர்க்குபிடிகள்சேர்த்து, கோப்பில் ஒதிநுண † வேலிவேளைத்தண்டுகொடியசாரணை வேரும் பேய்ப்பாச்சோற்றி; காப்பிலே வறுத்து இருநாழிநீரிற் கற்கந்திப்பிலிமிளகு ஆமையோடு, வாய்ப்பசுக்குவசம்போமம்முடிந்திட்டாற்கால்வகையாக ஆமசுரமாறல் போமே.......................................... (எ௭௧)

* சிக்குரு = முருங்கை † வேலி = உத்தாமணி

ஆமங்குளிர்சுரங் கபேப்புக்குவேறு

## குளிகை

அறுசீராசிரியவிருத்தம்

உள்ளியைத் தைலம்வாங்கி ஒக்கவே தராயின்வேரும்...............................*
தள்ளிய பொன்னாங்காணி சாரணைவேருங்கூட்டி..................................*

ஒள்ளியமாய் அரைத்து உண்டை ஓர் சுழஞ்சுதாக்கி.............................*
கொள்ளவே ஆமம்மற்றக்குளிர் சுரங்கடுப்புபோமே ..............................(எஎஉ)

போராமம் அஸ்திசுரத்திற்கு

## எண்ணெய்

வெண்பா

நீறுவேளைநாய் வேளை நற்செம்பரித்தி .................................................*
சிறிய மணித்தக்காளிசெவ்வவரை - சிறிய ..............................................*
தகரைப்பழம்பாசி சமுத்திரா சோஷி..........................................................*
பகரம்மான் பச்சரிசிபார்.............................................................(எஎ௩)

இதுவுமது

பாரில் * விளா † அடிம்பு பட்டை இலைவேலி .......................................*
சேரும் பரித்தியிண்டு செம்முள்ளி ‡ காரி § மால். ...................................*
¶ துளபந்தராயிலையும் சொல்லும்பரித்திவிரை .......................................*
பிளையாய் பாவட்டைப் பறி ..........................................................(எஎச)

* விளா - நிலாவிளா † அடிம்பு - சிவதை ‡ வேலி - உத்தாமணி §
காரி - கண்டங்கத்திரி ¶ மால் - விட்டுணுக்கரந்தை ஒ துளபம் - துளசி

இதுவுமது

பரிவாம் பொடுதலையும் பச்சைக் கழற்சியிலை ...........................................*
நரியாம்பயறுசிறுபுள்ளடியும் - அரிதான ...............................................*
கோழி அவரைசுரைக் கொன்றையுடப்பட்டை ..............................................*
வாழ்முருங்கையும் அகத்திவை......................................................(எஎரு)

இதுவுமது

கற்றாழஞ் சோறும் சணபூண்டும் ஈர உள்ளி..........................................*
* சிற்றாகும் பீர்க்குசிறுசின்னி - பற்றானக் ............................................*
† கோடகசாலைக் கொண்டு தனிச் சாறுசமன் .......................................*
சாடிதனில் வார்பதக்குதான் ..........................................................(எஎசு)

* சிற்றாகும்பீர்கரு-பேய்ப்பீர்க்கு † கோடகசாலை -சதைகரண்டி

இதுவுமது

ஆமணக்கெண்ணெய் அளந்துகுறுணிவிட்டு ............................................*
தாமணக்கும் வெயிலிலேதான்வைத்து - ஓமமுடன்......................................*
சாதிக்காய் சாதிபத்திரி தன்வசம்பு கொத்தமல்லிக் .....................................*
கோதில்லா வெள்ளுள்ளிக்கூட்டு ...................................................(எஎஎ)

இதுவுமது

* பஞ்சதிரவியமும் பண்பானதிப்பிலியும்.........................................*
எஞ்சாவிருக னெடைரண்டாம் - அஞ்சா..............................................*
தனைத்துங்கனைத்துமெழு கானபதம் பார்த்.........................................*
துனைத்த படியிருந்துட்கொள்...........................................................(எஎஅ)

* பஞ்சதிரவியம்-மிளகு-கோஷ்டம் - அகில்-தக்கோலம்-குங்குமம்.

இதுவுமது

உள்ளே தான்கொள்வ தொருகரண்டி யெண்ணெய்.........................................*
விள்ளாத * ஆமம்விழுவிக்கும் - மெள்ளமெள்ளப்.......................................*
போராமம் அஸ்திசுரம் போக்கும் இதற்குநல்ல...........................................*
சிரானபத்தியமேசெய்.........................................................................(எஎக)

* ஆமம் - சீதம்

திராதஆமசுரத்தின்

## குணம்

அறுசீராசிரியவிருத்தம்

பிறகுமதலைதலைநடுக்கும் பேசுந்தொண்டையில் சேஷ்மந்தான்..................*
அறுதியாக தொட்டுநிற்கும் அரிதாய் கண்ணும் விரிந் திருக்கும்..................*
* கரியவிழிகள் வெளுத்துவிடும் காயுங்குளிர்ந்து † கண்ணுறங்கும்.........*
யரிவாய் குணங்களிதுகண்டால் பார்க்கத்திராதென் றுனாயே.............(எஅ0)

* கரிய - கறுத்த † கண்ணுறங்கும் - தூங்கும்

இரத்தசுரத்தின்

## குணம்

தாகமுங்கழிச்சலாகும் தலையநுசுழற்றல்காணும்........................................*
வேகமாய்சுரமுஞ்சற்றே விட்டுவிட்டேகுங்காயும்.........................................*
வாகுசேர் கண்ணுந்தாழ்ந்து வாயுடன் நா உலர்ந்து.....................................*
சோகமும் வயிற்றில்நோயும் சோர்ந்துகைகால் தண்ணீரோ.....................(எஅக)

இரத்தசுரமுதலாகிய பலசுரம் வெதுப்பு

தாகம் பழசுரத்திற்கும்

## பாலசஞ்சீவிமாத்திரை

நாவிதிப்பிலிவெண்காரம் நல்லக்காசெடை மூவைந்து.................................*
மேவுஞ்சாதிலிங்கமது வீசுங்காசெடை பத்தாகும்......................................*
தூவுநிம்பழத்தின் சாற்றில் சுகமாயரைத்து ஒருசாமம்...............................*
காவியங்கயற்கண்ணுளே கடலைதிரை உண்டைசெய்யே.........................(எஅஉ)

இருவுமது

சுக்குநீர்த்தன்னில்கொள்ள சுகமுடன் வெதுப்புதீரும்...........................*
தக்கசிரசங்கிராம்பு தனிலிட தாகந்தீரும்... .........................................*
* பக்காலின் விழுதிற்கொள்ள † பண்டையின்சுரங்கள்தீரும்...... ..........*
மைக்கண்ணாய் குளிகையின்பேர் பாலசஞ்சீவியாமே........ ............(௭௮௩)

* பக்காலின் - பக்கஆலின் † பண்டை - பழய

ஷ - இரத்தசுரத்திற்கு - (௯௨௬)ஞ் செய்யுளிற்சொல்லிய

கஸ்தூரி எண்ணெய்க்கொடுக்க - மஹாநன்மை

## அன்பனாதிசுரத்தின் குணம்

ஆர்க்குங்காயும் அன்பனாதி ஆனசுரத்தை அறியக்கேள் ......................... *
வேர்க்கும்வெதும்புங் கண்சிவக்கும் வெந்நீர்வேண்டும் பலகாலும்............*
பார்க்கப்பயமாயிருக்குதெனப் பதரிஅலறிக்கதரியழும்......... ................*
சேர்க்கவயிறு சிக்கிவிடுந் தெருவிற்பிறப்பட்டோடிடுமே........ .........(௭௮௪)

அன்பனாதிசுரமுதலாகிய குன்மம் இருமல் என்வகைசுரஞ்

சீதபேதி கணமிருமலுக்கு

## எண்ணெய்

எண்சீராசிரியவிருத்தம்

கிற்றாழஞ்சோறு * கடுகரிப்பாச்கோடு சருவேலும்பிரமியுடன் சுக்குங் கூட்டி, பற்றாமல்நாலிலொன்றாய்க் காய்ச்சிக்கொண்டுபதராமல் எண்ணெயுடன் பருகுவீரேல், வற்றாத கடல்வற்றும் சீதம்போகும் வலுவான குன்மமுடன் இருமல்போக்கும், பெற்றாரோ்எண்சுரமுஞ் சீதபேதி பேருலகில் நாடாது பேசுவீரோ..............................................................................(௭௮௫)

* கடு - கடுக்காய்

மாங்கிஷ சுரத்தின்

## குணம்

அதிகமாய் சரீரமெல்லாம் அனல் போலேசுரமுங்காயும் .......................*
சதிரமெல்லாம்நடுக்கும் தான்மூச்சுமெற்றலும்..................................*
உதிரம்போய்உடல்வெளுத்து உருகியே கருகுமேனி ..............................*
* மதியுமே மயங்கிமூர்ச்சை † மயிர்க்குச்சு மாங்கிஷவெப்பே.........(௭௮௬)

* மதி - புத்தி † மயிர்க்குச்சு - உரோமங்கள் சிலிர்த்தல்

மாங்கிஷசுரமுதலாகிய - சகலசுரத்திற்கும்

## கர்ப்பூராதிமாத்திரை

எண்சீராசிரியவிருத்தம்

* கர்ப்பூரஞ்செந்திரிந்து லவங்கத்தோடு களமானசாதிக்காய் சாதிபத்ரி, செப்பமுடனொருசழஞ்சு † தேசிச்சாற்றில்திறமாகவொருசாமமரைத்துக் கொண்டு, ஒப்புடனே உழுந்தளவு உண்டைசெய்து உகந் திஞ்சி சர்க்கரையிற் சுக்கில்லூட்ட, நட்புடனே ‡ எச்சுரமும் மூல்றேழுக்கால் நாழி கையில் விட்டகலும் நாட்செல்லாதே ........................................(எஅள)

* கர்ப்பூரம் - பச்சைக்கர்ப்பூரம் † தேசி - எலிமிச்சம்பழம் ‡ எச்சுரமும் - எந்தசுரமும்

அஸ்திசுரத்தின்

## குணம்

---

அறுசீராசிரியவிருத்தம்

அஸ்திசுரத்தின்குணஞ்சொல்லில் அலைவெதும்பி முலைஉண்ணு ........*
புத்திகலங்கு மூள்ளுளையும் போதவெள்ளோக்காளமிகும்......................*
சத்திஎடுக்கும் நீர்ச்சிவக்கும் சாமந்தனிலேதான்காயும்......................*
வற்றி * வீங் கிருமற்சோகைவருமேகடுப்புசுரந்தானே ...............(எஅஅ)

* வீங்கி - இருமல்

அஸ்திசுரம் வரட்கணத்திற்கு

## நெய்

எழுசீராசிரியவிருத்தம்

சாஸ்திரபேதிக் கோஷ்டம்மதுரம் சந்தனம்ஏலம் சீரகமும் ...................*
தானுங்கொன்றைக் காய்ப்பிசினோடு * சங்கர ருத்திராட்சம்...................*
காத்திரமான் கொம்புடனெல்விக் காய்வற்றல் சண்பகமும் ................... *
கனிகொத்தமலி விலாமிச்சைக்காசள வெனவே ஆட்டி ....................*
பாத்திரமதனில் நெய்யொருநாழிப் பரித்திக்காயின் சாற் ....................*
பகருங் † காணிச்சாற் வகைக்காலும் பதமாய்வடியிட்டுத் ...................*
தோத்திரமாக பலங்கால்சர்க்கரை துவளகரண்டியிட ..........................*
தோன்றிய அஸ்திசுரம் வரட்கணமுஞ்சொல்லாதோடிடுமே...........(எஅக)

* சங்கரருத்திராட்சம் - சிவனுக்குரியஉருத்திராக்கமென்றூர் † காணி - பொன்னுங்காணி

வாந்திசுரம் இருமலுக்கு

## சூரணம்

வெண்பா

* காரிவிளா † அசுவம் காருசிறுதிப்பிலியும்............................*
கூறுசமன் பொடித்துக்கொடுக்க - ஆறுமே..............................*
வாந்திவிக்கல்சுரம்இருமல் வாராதுசாணும்.............................*
சேர்ந்துதணிபுசிது தின்...................................................(௭௮௯௰)

* காரிவிளா - கண்டங்கத்திரிவித்து † அசுவம் - அமுக்கரா

சீதசுரத்திற்கு

## ஔஷதம்

அறுசீராசிரியவிருத்தம்

* வழுதலைசிந்தில்தண்டு தாமரைவளையத்தோடு.............................*
முழுதுளசுக்கு † முத்தக் காசுடன் ஒன்றதாக..............................*
பொழுதுடன் கூட்டிமேலே பொடிதூவிக் கொள்வீராகில்.....................*
எழுபது லட்சசீத சுரமது இல்லைதானே...........................................(௭௯௧)

* வழுதலை - கண்டங்கத்திரி † முத்தக்காசு - கோரைக்கிழங்கு

சுரம்இருமல் சீதசுரத்திற்கு

## கியாழம்

நாட்டு * மூலம் தூதுவளை நல்லக்கண்டங் கத்திரிவேர்...........................*
கோஷ்டம் சிங்கிமுசுச்சைமுள்ளிச் கொடியஅரத்தைதிரிகடுகு.....................*
எட்டின் படியேகியாழம் வைத் திதமாய் ஆறுபோதருந்த...........................*
ஓட்டமோடுஞ் சுரமிருமல் ஒடுங்கிசீதசுரம் போமே..............................(௭௯௨)

* மூலம் - சித்திரமூலம்

விஷசுரத்திற்கு

## கியாழம்

கலிவிருத்தம்

* கடுகமூன்றுடன் கானவசம்பொடு...................................................*
எடுபடுகியாழம் எட்டொன்றாக்கியே................................................*
விடுவிடுதேனுடன் விளாவிக்கொள்ளவே.........................................*
எடுபடு விஷசுர சீதம் இல்லையே......................................................(௭௯௨)

* கடுகமூன்று - சுக்கு - மிளகு - திப்பிலி

சுரத்திற்கு

## ஏலாதிமாத்திரை

எண்சீராசிரியவிருத்தம்

அரிய * ரோசினையெடைவிருகன்மூன்று அதனுடனே அதி மதுரங் கோஷ்டம் † இந்து, பெரியஇருப்பைக் கொட்டைசாஸ்திரபேதி ‡ பெருஞ்சீரகங் கருஞ்சீரகமுங்கூட்டி, சரியாகவிருகனெடை ஒன்றுகூட்டி தண்மை § குமரிச்சாற் வார்த்தரைத்துபின்பு, உரியமுலைப்பாலிலரை குன்றிப் போல உன்ன முலைப்பால் தன்னிவிட சுரமோடும்மே ....................(௭௯௪)

* ரோசினை - கோரோசினை † இந்து - இந்துப்பு ‡ இருப்பை - இலுப்பை § பெருஞ்சீரம் - சோம்பு - குமரி - கற்றாழை

சுரம் வரட்கணம் இரத்தகணம் குளித்தோஷம் சவலைக்கு

## கற்றாழைஎண்ணெய்

அறுசீராசிரியவிருத்தம்

கற்றாழஞ்சாறுபாலுடனே காந்திஇளநீர் அவ்வகையும் ....................*
வற்றுவகைக்கு படியாகவாகாய் நிம்பம் இதிற்பாதி.................... *
* சிற்றுமணக்குபடிமூன்று திறமையாக கலந்திட்டு....................*
சற்றேசந்தனங் கணப்பூண்டு தானே † சிங்கிஓர்பலமே ...............(௭௯௫)

* சிற்றுமணக்குபடிமூன்று - சிற்றுமணக்குநெய் படிமூன்று † சிங்கி - கலைமான்கொம்பு

இதுவுமது

பலமேஅரைதான் சண்பகமும் * பச்சைப் பூலாஏலமுடன் ....................*
நலமாய் † இரண்டு வாசவேர் ‡ நாறிசாதிக்காய் பத்ரி....................*
நிலமேவளருங் கொத்தமலி நீகேள் மதுரங்கோஷ்டமுடன் .................... *
பிலமேகடுகுரோகணியும் பெண்ணே கிராம்பு § முத்தமுமே .........(௭௯௬)

* பச்சை - பச்சிலை † இரண்டுவாசவேர் - வெட்டிவேர் - விலாமிச்சவேர் ‡ நாறி - நன்னாறி § முத்தம் - கோரைக்கிழங்கு

இதுவுமது

முத்தஞ்சன்னலவங்கமுடன் மொழியுஞ்சீரகம் இருவகையும் ....................*
சுத்தநாகம் சிறுநாகம் சொல்லுங்காசெடை ஓரளவாய் ....................*
வைத்தே அரைத்து எண்ணெய்தனில் வகையாய்கலந்தே எரியிட்டு............*
அத்தைவடித்துப் புல்லுருவி ஆனக்காசெடைதூவிவிடே ..............(௭௯௭)

இதுவுமது

தாவுமெண்ணெய்க்காசெடைதான்சுகமாய் இரண்டுவேளையுமே ..........*
மேவிகுழவிக்கிடும்போது மிருத்தகாய்ச்சல்வரட்கணமும் .................... *

கூவியோடும் இரத்தகணம் குளித்தோஷங் கட்சவலையுடன் ..................
பாவாய்பாலர்க்கிடவேதான் பகர்கற்றாழை எண்ணெயிதே ........... (எகஅ

பழஞ் சுரத்திற்கு

## கியாழம்

அரிய * தூதுகாஞ்சோரிவேர் ஆனைசிந்தில் பற்படகம் ........................*
பெரியநொச்சில் பேராமுட்டி பின்னுஞ் சிற்றாமுட்டி யுடன் ................*
கிரியசடுங்காய தான்கூட்டிக் கியாழம்வைத்து தான்இறுத்து .................*
உரிய திப்பிலி பொடிதூவி உகந்துகொள் பழஞ்சுரம்போமே...........(எகூக)

* தூது - தூதுவேளை

பழஞ்சுரம்விடாக்காய்ச்சல் - ஆமசுரம் - விஷதோஷம் (ரு) சன்னிக்

கு - ஏலாதிமாத்திரை

## தன்வந்திரி

எண்சீராசிரியவிருத்தம்

நல்குவீர் நல் ஏலம்கிராம்புமுத்தம் நல் மதுரம் * இருவேலி கடுகுசுக்கு, அல்குவீர் † மதுரம் ‡ ரோசினைநன்றாறி அரியநிலப்பனையின்வேர்தாளீசந்தான், வல்குவீர்சடாமாஞ்சில்சந்தனத்தூள் வகையிலுப்பைப்பூவுடனேதேவதாரம், மல்குவீ திப்பிலிரோகணிவகைக்கு வரிசையாய்க்கால்கழஞ்சுநிறுத்துக்கொள்ளே............................................................(அா)

* இருவேலி - வெட்டிவேர் † மதுரம் - கொடிமுந்திரிகைப்பழம் ‡ ரோசினை - கோரோசினை.

இதுவுமது

நிறுத்துமேகல்வத்தில் போட்டபின்பு நிலையான செவ்விளநீர் தன்னை வார்த்து, வறுத்துமே இருசாமம் விடாமல்ஆட்டி வழிமைபோல் ஆகுமிந்தவரிசைபாரு, குறித்துமேமுலைப்பாலால் சாமம்)ரண்டுக் கூசாமல் அரைத்துமே வழித்தெடுத்து, பருந்த குன்றிபளவாக உண்டைசெய்து * பக்ஷமொன்று நிழல்உலர்த்தி பதனம்பண்ணே. .............................................. (அா க)

* பக்ஷம்ஒன்று - பதினைந்து நாள்

இதுவுமது

பதனமாய் முலைப்பாலில் உண்டை ஈய பறக்குமேபழஞ்சுரம்விடாதகாய்ச்சல், விதனமாய் * அம்மையார்க்கூந்தல்கொண்டுவிருப்பமாய்க்கியாழமிட்டு அதனில்ஈய, மதனமந்தபதின்மூன்று சன்னியோடு மகத்தான விஷதோஷங்கெதிகெட்டோடும், அதனமாய் ஆமசுரம் சுனைச்சுரங்கள் அச்சமுற்றகலும் ஏலாதி என்றே ...................................................... (அா உ)

* அம்மையார்க்கூந்தல் - முதியார்க்கூந்தல்

இம்மூன்றுமொருதொடர்

அதிசாரசுரகாசசுவாசவார்த்தி - சுரதாபவிக்கல்தாகத்திற்கு

## மருந்துங்கியாழமும்

* சிங்கியுடன்திப்பிலியும் † விடையங்கூட்டிதேனோடேனைமுத்தமேகு
மைந்தைந்தியே, இங்கிதமாய் சுரகாசவார்த்தியோடு இன்பமுடன் தீரு ‡ மினே
சொல்லக்கேளு, தங்கிய ஆல் மா நாவல் தளிர்தன்னோடே தான்காய்ச்சி அந்
திசந்திகொடுப்பீராகில், § அங்கியெனுஞ் சுரதாபவிக்கலோடு அதிசாரதாக
மவை அகலுந்தானே........................................................... (ஆங)

* சிங்கி - கலைமான்கொம்பு † மினே - மின்னே ‡ அங்கி - நெருப்பு

பித்தசுரம் தாபசுரம் பழவெதுப்புக்கு மேல்பூச்சு

## கோஷ்டஎண்ணெய்

எழுசீராசிரியவிருத்தம்

சுரமதுதணியபசுவின் நெய்நாழிச்சொல்லிடும் பால் இருநாழி................*
தோன்றும் ஓர்ஆறு நாழிநல்லெண்ணெய்தொகையது சேர்த்ததிக்கற்கம் ...*
விரும்பெருங் குரும்பைமதுர நன்னாறி வளர்கருவேலிலை *-ரோணி ........*
வாருசெவ்வள்ளிக் கொடிஅமுக்கராவேர்வருமரமஞ்சள் சந்தனமும் ......... *
திருவுளசுக்குக் † காசுடன்அரக்கு திமர்ந்திடுங் கோஷ்ட மிவ்வகைக்கு ......*
திகழ்ஒருகழஞ்சரைத் தெரித்திதைசேய்கட் ‡ சிரத்திலும் உடம்பினிற்பூச...*
பரவியபித்தசுரம் பரிதாபப்பல் வலசுரம் பழவெதுப்பும் ........................*
§ பானுமுன்பனிபோற் பறந்திடுமிதன்பேர் பாருநற் கோஷ்டெண் ணெய்ப்ப
கரோ.................................................................................(ஆசு)

* ரோணி - கடுகுரோகணி † காசு - காசுக்கட்டி ‡ சிரத்திலும் - த
லையிலும் § பானு - சூரியன்

சகலசுரங்களுமூன்றேமுக்கால் நாழிகையில்விட

## பச்சைக்கர்ப்பூரமாத்திரை

அறுசீராசிரியவிருத்தம்

பச்சைக்கர்ப்பூரந்தான் * பூ-பட்டைசாதிக்காய் [வகைக்கு .............. ...*
மச்சைச்சழஞ்சு இரண்டாக வாளம் ஆறுகழஞ்சுடனே ..........................*
அச்சக் † குமரிச்சாற்றதனால் அரைத்து உழுந்து பிரமாணம்.....................*
சச்சத்துடனே உலரவைந்து சர்க்கரை தனிலோர் குளிகையிடே ...... (ஆறு)

* பூபட்டை - லவங்கப்பட்டை † குமரி - சற்றாழை

இதுவுமது

இடநாழிகைமூன்றேமுக்கால் இவ்விரோசனந்தானுகும்..............................*
படுமேசுரமுந்தான் தீரும் பண்பாய்வந்தகுளிருக்கு ............................*

தொடுமேகுப்பைமேனியிலை சொற்கொடிவேலி மிளகனைத்து ............... *
கொடுமே * விழுதுசரிகூட்டிக் குளிர்வரும் பேதுகுணமாமே ........ (அாசு)
*விழுது - நிசழுவனைத்தல்

சகலகாப்ச்சலுக்கும்

## மாத்திரை

ஆடுதின்னுபாலைப்பட்டை அதைநிழல் உலர்த்திக்கொண்டு.....................*
சாடிய * கருவாப்பட்டை சமனதாய் இடித்துதூளாய் ........................ *
வாடியவஸ்திரகாயம் வண்மையாய்செய்து அத்தை ...............................*
பாடியபுளித்த † நிம்பப்பழச்சாறுவிட்டு ஆட்டே ........................(அாஎ)
* கருவாபட்டை - லவங்கப்பட்டை † நிம்பழம் - எலிமிச்சம்பழம்

இதுவுமது

ஆட்டியேபரித்திக்கொட்டை அளவதாய் உண்டைசெய்து ...................*
கூட்டிய அநுபானத்தில் கொடுசவகாய்ச்சல்தீரும்..................................*
பூட்டிய புளிப்புகைப்பு புகலவே சற்றும்ஆகா ......................................... *
நாட்டியவிஷமும்போகும் நளினமதறிந்திடாயே .......................... (அாஅ)

(௬௪) சுரத்திற்கு

## மருந்து

விட்ணுவின்காந்திசுக்கு விளம்பிய கடுக்காய் இண்டு ..............................*
வட்ட * வாலுடனேகூட்டி வளம்பெறக் கொள்வீராகில் ...........................*
எட்சுரம் அறுபத்துநாலும் இடாது இல்லை இல்லை ................................. *
விட்டது போகவென்று விளம்பினர்புவியுள்ளோர்க்கே.....................(அாகூ)
* வாலுடன் - வாலுழுவையரிசியுடன்

மீளாத ஐயசுரத்தின்

## குணம்

* ஐயசுரத்தின்குணங்கேளு † அகடுபொருமி கன்வெளுக்கும்...............*
கையுங்காலுஞ் சோர்ந்துவிழும் கண்கள்உள்ளே தான்வீழும் ...................*
‡ தொய்யல்சுரமுங் விடாததுவுஞ்சொல்லுந் தோஷம் ஆனற்போல்............*
மெய்யும்நாக்குமேவரண்டு விக்கலெடுக்க மீளாதே..........................(அாம)
* ஐயம் - சேஷ்மம் † அகடு - வயிறு ‡ தொய்யல் - துன்பம்

இதுவுமது

மெய்யில்வந்திளைஞ்சுரர்தான் விட்டுவிட்டேவெதும்பி..............................*
கையுடன்கால்வெதும்பி கன்னங்காயும் நெஞ்சிடிக்கும் ..........................*
உய்யும் உழலை வாந்திபுண்டாம் ஓடி ஒடிக்கட்டுமது ....................................*
ஐயம் பிழைப்பதரிதுகண்டாய அதிகமாகுஞ்சுரந்தானே ...............(அாமக)

சுரத்திற்குஆகா

## பதார்த்தங்கள்

பால் எண்ணெய் இளநீர்போகம் பருகிடுங்குளிர்ந்தசோறு..........................*
கால்நடை தயிர் புளிப்புக் கடுகேலே இனிப்பு பாகு..........................*
மால்தரும் மடமான்கன்றே வந்திடுஞ்சுரத்திற்காகா..........................*
* ஞாலமேல் மனிதர்பேரில் நாட்டிடில்சன்னியாமே ..................(அ௱௰௨)

* ஞாலமேல் - பூலோகத்தின்மேல்

இதுவுமது

பச்சைமீன் இறைச்சிக் கோழி பழங்கறி தேங்காய்மாங்காய் ..........................*
இச்சைநெய்ப் பருப்பு முட்டை எழிலுளபுனுகு * சந்தம் ..........................*
† நச்சுள இவைகள் எல்லாம் நாட்டியசுரத்திற் காகா ..........................*
கொச்சைமானிடர்கட்கொண்டால் கொடியமரணம் வந்திடுமே ......(அ௱௰௩)

* சந்தம் - சந்தனம் † நச்சுள - ஆசையுள்ள.

இதுவுமது

தோசைப்பிட்டுப் பணிபாரம் சொல்லும்பயறு அவல்பொரிகள் ..........................*
வேசை உறக்கம் மஞ்சள்வாழை வேண்டாம்பழங்கறிபழங்கஞ்சி ..........................*
ஆசையுடனே பொருள்தேடல்யாச்சைபுறக்கம் இவை ஆகா..........................*
தோஷமிருந்து பலபிணியாய்ச் சொல்லில் மரணம்வந்திடுமே...... (அ௱௰௪)

ஒருமருந்திற்பெரியவர்கட்காயினும் (௰அ) பிராய பாலியர்கட்கும்

ஒக்கும் ஆகையின் குழந்தையின் தாய்க்கொள்ளலாகா

## சுரவகுப்புமுற்றிற்று

அகத்தியர் திருவடிகளே

**சரணம்**

# சன்னிவகுப்பு.

## சன்னிவருவிதங் கூறுகின்றார்

### மாந்தசன்னியின் குணம்

பத்தியத்தாழ்வால்மாந்தம் பகைசெயும் விதங்கள்மெற்ற ……………*
சுற்றியமயக்கமுண்டாய்ச் சொல்லொணு சன்னி எய்தும் ……………*
முற்றிய சுரமுந்தாக முதிர்ந்திடும் நாவின்முள்ளு …………………*
புத்தியுங் கலங்கிக்கண்ணும்போதவே தாழுந்தானே ……………(ஆயரு)

### இதுவுமது

மாந்தமேகோபித்தாற்கால்வயிறுபோம் உப்பிக்கொள்ளும் ……………*
காந்தள்போல்மேனிதானும் கருகியேவெருவிச்சோரும் ……………*
சேர்ந்தநோர்பச்சைவெள்ளைச் சிறந்துமென்மலமுந்தீயும் ……………*
வாந்தியேபண்ணுங்கண்டாய் வலிப்புடன்சன்னிதானே ……………(ஆயகூ)

### இதுவுமது

மாந்தமேகோபித்தாற்கால் வயிறுபோம் உப்பிக்கொள்ளும் ……………*
மாந்தமேகோபித்தாற்கால் வாய்தனைவெருவிச்சீறும் ……………*
மாந்தமேகோபித்தாற்கால் மயங்கியேகுளிர்ந்துகாணும் ……………*
மாந்தமேகோபித்தாற்கால் வலிப்புடன்சன்னிதானே ……………(ஆயஎ)

### இதுவுமது

உருக்குஞ் சன்னிமாந்தகுணம் ஓயாதலறும் வாய்ப்பிதற்றும் ……………*
ஒருக்கண்திறந்து ஒருக்கண்ணை உருட்டி விழித்துபார்த்தழுகும் ……………*
திருக்கும் ஊசிப்போல்கழுத்து துவளநொந்து உடலமெலாம் ……………*
பெருக்கநரம்புந்தான் தெறித்துப் பிழியும்பாசிப்போல்விழியே …..(ஆயஅ)

## மாந்தசன்னிக்குபுகை

கிஞ்சாவேரும் ஊமத்தைக் சடிய நராயின்தன்வேரு ……………*
* பஞசாய் இவைகள் வேப்பெண்ணெய்ப் பையவறுத்துப் பொடியாக்கி …..*
† துஞ்சாநெருபபு புகைகாட்ட தோற்றுஞ் சன்னி அத்தனையும் ……………*
மஞ்சார் குழலாய் அடிதொழுது ‡ மாய்ந்தே போகுங்கண்டாயே…(ஆயக)

* பஞ்சாய் - கோரைக்கிழங்கு † துஞ்சா - சாவாத ‡ மாய்ந்தே-பொ
…ி

மாந்தசன்னிக்கு வேறு மருந்து

## தேரையர்

கலிவிருத்தம்

ஓடும்வேளைவேர் * உத்தாமணியின்வேர் ...............*
மூடுமாவிலிங்கை முருங்கைப்பட்டை ......................*
யோடுநால்வகைக் கோர்பலமே ரசத் ... ....................*
தோடுவாங்கி முறித்து சூடாற்றிடே............... (௮௨௰)

* உத்தாமணி - வேலிப்பரித்தி

இதுவுமது

ஆற்றிடாய்பின் அரிசியின் திப்பிலி ........................*
கோற்றிடாய் மிளகோடு சுக்கான து ......................*
ளேற்றிடாய் * நவலோகம் இழைத்துடன் ...... ........*
வார்த்திடாய் சன்னிமாந்தம் போம்பாரிதே...... (௮௨௧)

* நவலோகம் - நவலோக பூபதிமாத்திரை யிழைத்துக் - கொடுக்கவென்றார்

பதினெட்டு மாந்தசன்னிக்கு மருந்து

## பிரமமுனி

அறுசீராசிரியவிருத்தம்

சிறு காளா இலையும் * வெள்ளுள்ளி சேர்ந்தவசம்பு ஓமமுடன் ............... *
அறிவாய் இடித்து சாற்வாங்கி அரிய) துவளையிட் (டுள்ளுக்கும் ...............*
தெறியாய்கொடுக்கநாள்மூன்று நிகழ்பதினெட்டுமாந்தசன்னி .............. *
தெறிப்பட்டோடும்நோயெல்லாம் சிரசுமுதல்தோஷம்போமே.........(௮௨௨)

* வெள்ளுள்ளி - வெள்ளைப்பூண்டு.

தோஷசன்னி மாந்தசன்னிபித்தசுரம்வாந்திக்கு

## கஸ்தூரிமாத்திரை

வெண்பா

கஸ்தூரி ஒன்றுக் கடமும் * ஞாழல் பூ இரண்டு ......................................*
சித்தாவின் கோரோசினை மூன்று - முத்தான ....................................*
மெல்லியர் தன்முலைப்பால் விட்டரைத்துக் குன்றி எடை.........................*
சொல் உருண்டை செய்வாய் துணிந்து.......................................... (௮௨௩)

* ஞாழல்பூ - குங்குமப்பூ

### இதுவுமது

அணிந்துண்டைவைத்திட்டால் தோஷசன்னி மாந்தசன்னி ................*
மணிமாந்த பித்தசுரம்வாந்தி - தணிந்தோடும்...............................*
முத்தாரம் பூண்டமுகிழ் முலையாயிப்பேர் ...............................*
கஸ்தூரிமாத்திரையாங் காண் ............................................(௮௨௪)

மாந்தகணசன்னிக்கு கோரோசனை

## மாத்திரை

சீர்சிறந்தமாசிக்காய் திப்பிலிகோரோசினையும் ............................ *
கார்சிறந்தகோஷ்டங் கருஞ்சீரம் பேர்சிறந்த ..................................*
அக்கராகாரம் அரைத்துமுலைப் பாலிலிட ..........................................*
இக்கணமேதீரும் இது.......................................................(௮௨௫)

மாந்தகணசன்னி பலசன்னிக்கு

## ஏலாதிமாத்திரை

ஆசிரிய விருத்தம்

ஏலாதி உண்டைக்கு நல் ஏலம் இலவங்கம் எழில் மதுரம் * இருவேலிவேர்...*
இடுசுக்கு நன்னாறி முந்திரிகை பேரீந் திலாமிச்சு கோரோசினை ............*
தாளி சப்பத்திரி நிலப்பனை சடாமாஞ்சில் சந்தனந் தேவதாரம் ...............*
தன்னுடன் திப்பிலி இலுப்பையின் பூவுந் † தனித்தக் கழஞ்சாகவே.........*
மேலான கடுகுரோகணி கழஞ்சொக்கு மதை மீறுநீர்வார்த்திவைகளை ...*
விழுதாய் அரைத்துண்டை குன்றியளவாகவே வெய்யிற்படாதவகைசெய் ...*
பாலானமொழிமங்கை பாலதனிலேகொடு பார்மாந்த கணமகலுமே ......*
பண்பான ‡ கூந்தற்கியாழத்திலிட்டிடப் பலசன்னிசயுந்தீருமே .....(௮௨௬)

* இருவேலிவேர் - வெட்டிவேர் † தனித்தக்கழஞ்சு - வகைவகைக்கு ஒவ்வொருகழஞ்சு ‡ கூந்தல் - முதியார்கூந்தல்

சன்னிசுரகபத்திற்கு

## வேப்பெண்ணெய்

எண்சீராசிரியவிருத்தம்

வேப்பெண்ணெய்ப்படி அரைதான் சங்கிலைச்சாற் விதமானபடி அரைக்கால் பாவட்டைச்சாற், ஆப்பட்ட * முசுறுமுட்டைப்படி அரைக்கால் அடவாக எண்ணெயிட்டுக் கடைமருந்து, மாப்பட்ட சுக்குதிப்பிவசம்பு வளமான மிளகு † இருசீரகந்தான், தாப்பட்டக்கஸ்தூரிமஞ்சட்பூண்டு தான் தனித்துவிருகனெடை வாங்கிக் கொள்ளே ............................................(௮௨௭)

* முசுறுமுட்டை - ஓர்வித எறும்பின்முட்டை † இருசீரகம் - நற்சீரகம் - கருஞ்சீரகம்

இதுவுமது

வாங்கியேபொடியாக்கி எண்ணெயிட்டு வளமானமெழுகுபதம்வடித்து க்கொண்டு, தாங்கியேதுட்டெடைதான் ஒருவேளைக்கு நயவாகக்கொடுத்துவர திரும்வியாதி, தூங்கிவிழுஞசன்னிசுரங் கபமுந்தானே சொல்லுகிறேன்பறக்கு மேமெய்தான் ஈது, சாங்கமுள்ள எண்ணெயிதுகைவிடாதே தப்பாதேவெந்நீ ர்ச்சோற்சாப்பிடாயே.................................................... (௮௨௮)

சன்னிசுரகபத்திற்குவேறு

## வேப்பெண்ணெய்

சாப்பிடவேவேப்பெண்ணெய் அரைபடிதானுநற தன்னேடுதனிக்குட்டி விளாவின்வேரு, தாப்பிட்டதூதுளைநாட்வேளைவேரும் தருஞ்சீரங்கஸ்தூரிமஞ் ளோடு, மாப்பிட்ட வென்காயம் சிற்றரத்தை மரமஞ்சள் இவை யெல்லாம் எண்ணெயிட்டு, காப்பிட்டே எரித்துபசமாய் இறக்கிங்கரண்டிகொள்ளவியாதி போம் காணுதென்றே.................................................(௮௨௯)

சன்னிமாந்தத்திற்கு

## புகை

அறுசீராசிரியவித்ருதம்

குக்கிலும் அகிலுங்கூட்டிக் குருசன்னிநாயகந்தான்..............................*
சிககெனசாம்புராணி திகழ்புகைகூட்டிப்பின்னர் .............................*
தசகதோர் வேளைவேரும் சாரணை தானுங்கொண்டு..............................*
அங்கணம் புகைக்கசன்னி மாந்தமும் அகலுந்தானே .................... (௮௩௰)

குளிர்சன்னிசுரத்திற்கு இராமபாண

## குளிகை

மஞ்சளும் சாதிக்காயும் வருந் * திரிகடுகெங்கிராம்பு ...............................*
மிஞ்சிய கடுகுரோணி மிகுமரமஞ்சள் நாபி........................................*
அஞ்சிய † நிம்பம் ஓர்நாள்சாறுவார்த்தரைத்துருட்டி... ...........................*
கொஞ்சியராமபாணங் குளிர்சன்னிசுரங்கள்போமே ........ ..........(௮௩௧)

* திரிகடுகம் - சுக்கு - மிளகு - திப்பிலி † நிம்பம் - எலிமிச்சம் பழச் சாறு

விஷசன்னிசுரம்விக்கல் குளிர்சன்னிக்கு ஏலாதி மாத்திரை

## தன்வந்திரி

எண்சீராசிரியவிருத்தம்

ஈந்திட்டால் ஏலாதி உண்டைக்கேளு இனிதான * திரிகடுகு சாதிக்காயு ம், ஈந்திட்ட † கிராம்பேலம் ‡ ரோணிமஞ்சள் ஏழில் நாபிசரக்குவகைக்கழ

ஞ்சதாக, ஈந்திட்ட கல்வத்திற் பொடியாய்செய்து இருசாமம் பழச்சாறு தன்னுலாட்டி, ஈந்திட்டப் பயற்றளவு உண்டைசெய்து இனிமாசிப்பத்திரிபின் கியாழத்தூட்டே..........................................................(அகூஉ)

* திரிகடுகு - சுக்கு - மிளகு - திப்பிலி † கிரம்பு - ஏலம் ‡ ரோணி கடுகுரோகணி

### இதுவுமது

ஊட்டவே விஷசன்னி சுரமும் விக்கல் உறவானகுளிர்சன்னி ஊர்விட்டோடும், நீட்டவே இந்நூலை முந்நூறுக்கி நிகழ்த்தினேன் குழைந்தைகளின் இரக்கத்தாலே, கூட்டவேசிசுவில்நோய்த் தீர்ப்பாராகிற் குருமுள்ள பிறப்பதுவும் அற்றுப்போகும், தாட்டவே இந்நூல் ஆர்கொடுக்கப்போறுர் சண்டாளர்தங்களுக்கு எய்தாதன்றே..........................................................(அகூ௩)

### விஷதோஷசன்னிமாந்தம்பித்தசுரம் வாந்திக்கு

## கஸ்தூரிமாத்திரை

எய்தாமல் கஸ்தூரி கழஞ்சு ஒன்று இதமானகுங்குமப்பூ கழஞ்சிரண்டு, எய்தாமல் * ரோசினையுங் கழஞ்சுமூன்று இவைமூன்றுங் கல்வத்தில் இட்டுக்கொண்டு, எய்தாமல் அமுர்தமெனு முலைப்பால்விட்டு இனிதான சாமம் ஒன்றைத்துக்கொண்டு, எய்தாமல் குன்றிபோல் நிழல் உலர்த்தி எடுத்துநீ செப்புதனில் அடைத்திடாயே.......................................................... (அகூச)

* ரோசினை - கோரோசினை

### இதுவுமது

அடைத்திட்ட மாத்திரைதான் ஒன்றெடுத்து அந்தெடைக்கு முலைப்பால் விட்டிழைத்துக்கொண்டு, விடைத்திட்ட முனைநாவில் தீட்டிட்டாற்கால் விஷதோஷ சன்னிமாந்தம் வீரிட்டோடும், * கடத்தெழுந்த பித்தசுரம் வாந்தி தீரும் கடைமருந்தின் போக்கறியா கழுதைமாண்பர், குடைத்தெழுந்த குடதகில மானேகேளாய் குருவருளால் கஸ்தூரி குளிகையாமே ......... (அகூரு)

* கடத்தெழுந்த - உடலிலெழுந்த) இந்நான்குமொருதொடர்

## ஆமசன்னியின்குணம்

### அறுசீராசிரியவிருத்தம்

மூலை உண்ணுதழுகும்பார்க்கும் முகமதுவேறதாகும்..........................................*
பலபலவலிப்புண்டாகும் பாலகன்குரலுங் கம்மும் ..........................................*
மலமது கட்டிமெய்யில் வர்த்திசேர் சுரமுமீதே ..........................................*
அலமதுவல்லமின்னே ஆமத்தின் சன்னிதானே ..........................................(அகூ௬)

இதவுமது

தாகமேமிக உண்டாகும் சரீரத்தில் சுரம்உண்டாகும்.......................*
வாகிலாமலமுந்திப்ந்து * வன்னமாம் கறுப்புண்டாகும் .....................*
நோகுமேவயிற்றூதும் † நோக்காமல்சுழிக்கும்நெற்றி.......................*
ஆகுமே ‡ பிரமைபோல ஆமத்தின் சன்னிதானே ...................... (௮௰௬)

* வன்னம் - நிறம் † நோக்காமல் - கண்விழித்து பாராமல் ‡ பிரமை - மயக்கம்

ஆமசன்னிக்கு கியாழமும் உள்ளுக்கும் மேலுக்கும்பூச

## * அண்டத்தைலம்

கடுக்காய்ச்சுடுகுரோசணியும் கடியசிவேதை † திரிகடுகு .......................*
முடுக்காய் இடித்துக்காய்ச்சியதை மூரிச்குழவிக்கிந்திடவே .......................*
துடுக்காய்க்கன்னிக்கோழிமுட்டை திப்பத்தைலம்வேப்பெண்ணெய் ........*
அடுக்காய் உள்ளும் மேல் இடவும் ஆமசன்னி அகன்றிடுமே ...........(௮௰௭)

* அண்டம் - முட்டை † திரிகடுகு - சுக்கு - மிளகு - திப்பிலி.

ஆமசன்னிக்கு வேறு

## குடிநீர்

வெண்பா

சாரணைக்காய் மூக்குரட்டைத் தன்காட்பொடுதலையும் .......................*
பூரணமாந்திரிகடுகு பூந்துளசி - வாரணியும் .......................*
* கொங்கையரோசிரகமும் கூட்டிக்குடிநீர் .......................*
† உண்கவே ஆமசன்னி ஓடும் ....................................... (௮௰௮)

* கொங்கை † உண்கவே - என்பது - மெல்லினமறுதலைப்படதொடுத்துவந்தது

ஆமசன்னிக்கு வேறு

## துவாலை

எண்சீராசிரியவிருத்தம்

* கொடிவேலிவேர்ப்பட்டைச்சங்கம்வேரும் குறுந்தெருக்கு வேர்ப்பட்டை முடக்கற்றானும், வடிவாக † அஞ்செண்ணெய் விட்டுக்காய்ச்சி வந்த சன்னி யானதற்கு வாகாய்க்கேளு; தடியாக ‡ அண்டம் வெள்ளுள்ளித்தைலம் தருசாக இறக்கி எங்குந்துவாலைசெய்ய; தடிவான ஆமசன்னி ஓடுமென்று சாற்றினர் பொதிகைமுனி சாற்றினாரே...............................(௮௰௯)

* கொடிவேலி - சித்திரமூலம் † அஞ்செண்ணெய் - எள்ளெண்ணெய் - ஆமணக்கெண்ணெய் - இலுப்பையெண்ணெய் - புங்கெண்ணெய் - வேப்பெண்ணெய் ‡ அண்டம் - முட்டை

## கோராமசன்னியின்குணம்

ஓடுமேவாயுமிகும் நாவிப்பற்றி உடலெங்கும் கனகனத்து சூடுண்டாகும். நாடுமே சதைகளெள்ளாங்குலிக்கிக்காட்டும் நல்லவிழிகால்கைகட் பதைபதைக்கும், தேடுநீ பார்ப்பதற்கு மாந்தமென்று செப்பவே வாதநீர்க் கலந்துக்கொண்டு, பாடுதற்குவாயில்லேத்தாளேப்பற்றும் பருத்துடம்புநெருப்பதுபோல் மிகவுங்காயும், கூடுமே அசைந்தசைந்து வலிக்கும்பாரு கோராம சன்னிமாந்கொடுமைதானே ......................................................(அசய)

இஃதைந்தடியான் வந்தச்செய்யுள்

### கோராமசன்னிக்கு

## எண்ணெய்

கொடுமையென்றுசொல்லாதேவலிகட்கெல்லாம் கோதில்லாநூருண்டின்வேப்பம்பட்டை, தடுமையில்லா * கார்த்திகையின்கிழங்கும்முள்ளித் தருகருடன் † தவசிவேர்சிவமூலிவேரு, படுமைபடா ‡ சிற்றண்டம் § மூசுறண்டங்கட்பதமரனநெய்கள்வகைபலமேதூக்கு, கடுமையுள்ள ¶ முட்டிக்காய்ச்சாறுநாழிகனவேம்பின்கியாழமதுநாழிகூட்டே ......................................(அசுக)

* கார்த்திகைக்கிழங்கு - வெந்தோன்றி † தவசிவேர் - தவசுமுருங்கைவேர் ‡ சிற்றண்டம் - கோழிமுட்டை § முசுறண்டம் - ஓர்வித எறும்பின்முட்டை ¶ முட்டிக்காய் - தமுட்டிக்காய்.

### இதிவுமது

கூட்டுவெள்ளைச்சாரணைவேர் கொத்தான் வேர்தான் கோதையே ஏழுவகை பலம்இரண்டாய், ஈட்டு நறுவிளக்கெண்ணெய நாழிசேர்த்து ஏலம்சீரகம் இரணடு * ரோணி † காயம், தீட்டுவகை பலம்இரண்டு பொடித்துப்போட்டுத் தீயெரித்து மெழுகாக்கி காசெடையே வாரு' மூட்டோடே யோடுமே வலியஞ்சுந்தான் மூன்றுநாள் பத்தியமாய் முனைந்துபாரே ...............(அசுஉ)

* ரோணி - கடுகுரோகணி † காயம் - பெருக்காயம்

### தாந்திரீக சன்னியின்

## குணம்

அறுசீராசிரியவிருத்தம்

வேகமாய்ச்சுரம்உண்டாகும் மேனியும் பதைப்புண்டாகும் .......................*
* மோகமாய்மூலேஉண்ணுது மூர்ச்சையாய்க்கண்ணுறங்கும்.......................*
† ஆகமே பசலேக்காட்டி அரையினிற் குளிர்ந்துகாணும் .......................*
தாகமே மிகஉண்டாகும் தாந்திரீக சன்னிதானே ......................(அசுங)

* மோகமாய் - ஆசையாய் † ஆகம் - உடம்பு

தாந்திரீகசன்னிக்கு

## புகை

வாய்ந்த வேப்பெண்ணெய் வேளை வளரும் ஊமத்தைகஞ்சா ................ *
சேர்ந்திடு முருங்கையோடு சித்திரமூலவேரும்....................................*
காந்து * வெள்ளுளி வசம்பு † கம்பளம் ‡ மஞ்ஞையீர்கரு.............................*
போந்துநீசளாய் § அண்டம் புகைக்க தாந்திரீகம்போமே..............(அசச)

* வெள்ளுள்ளி - வெள்ளைப்பூண்டு † கம்பளம் - கம்பளி ‡ மஞ்ஞையீர்சகு - மயிலிறகு § அண்டம் - கோழிமுட்டை

தீராதசன்னியின்

## குணம்

கண்ணை நாக்கைப்புருவத்தைக்காலைகையை வலித்துமிக...............................
* விண்ணைப் பார்க்கும் பெருமூச்சு விட்டுப்பின்னும வலிப்புண்டாம்........
உண்ணமுலையும் ஒவ்வாது உறங்கா உடலு மஞ்சனிக்கும்.............................
தண்ணு மிதுவே சன்னியென நவின்ருர் முனிவோர்உலகோர்க்கே...(அச...)

விண்ணைப்பார்க்கும் - ஆகாயத்தைப்பார்க்கும்

இதுவுமது

எண்சீராசிரிய விருத்தம்

மாந்தகணைப்போராமம் ஒன்ருய்க் கூடிவயிறு விடுந்தான் உப்பும் வாந்திப்பண்ணும், சேர்ந்தசுரம் கால்கையுங் குளிர்ந்திரத்தா  மிகபற்றி நின்று வாயுதள்ளும், போந்தகண் நரவெந்து புண்ணுப்த் தோஷமுற்றுப் போகாமல் சன்னியாய் வலித்துவேர்க்கும், சாந்தமுடன் இதுதீரமாதம் ஒன்று தப்பினுல் நோய்ஆறுதிங்கள்மூன்றே,......................................................(அசசு)

இவ்விரண்டு செய்யுளிற் சொல்லியப்பிரகாரம் தீராத சன்னியின் நிதானம் அறிக இங்ஙனம் நோயுறின் உடனே வடவாமுகாக்கினி போன்ற மருந்திட்டு நீங்கச்செய்யின் தெய்வதசித்தந்தான் அங்ஙனமவ்வியாதியை விட்டால் ஒருமாதத்திற் கொல்லும் அதுதப்பினுல் மூன்று மாதற்திற் கொல்லும் அதுவுந்தப்பினுல் ஆருமாதம் அகத்தியங்கொல்லு மென்பர். அன்றியும் குழைந்தைகட்கு (க) சனனியும் பெரியவர்கட்கு (௰ங) சன்னியுமாம்

## சன்னிவகுப்புமுற்றிற்று

அகத்தியர் திருவடிகளே

**சரணம்**

# வலிப்பின்வகுப்பு.

மாந்தவலிப்பு வருவிதங் கூறுகின்றார்

## தன்வந்திரி

தன்னிமையால்நோய் உதிக்கும்வாறே தென்னில் தன்வயது பதினெட்டு இந்நாட்குள்ளே, உன்னிமைக்குள் தீனியினால் கற்மத்தாலும் உடம்பிலுள்ளச் சூட்டாலும்வினையினாலும், வென்னிமையாய் நோய்உதித்தவாறிதாகும்விபரமென்ன காந்தாதிக் கியாழுத்தேற்று, சொன்னிமைக்குள் ஓடிவிடும் இக்குணந்தான் சூதில்லா நூலிதுவாம் முந்நூறென்றே......................(அசஎ)

## மாந்தவலிப்பின்குணம்

அறுசீராசிரியவிருத்தம்

வயிறுங்கழியும் விதவிதமாய் மார்பைவலிக்கும்பற்கிட்டும்.......................*
பயறுகடித்தாற்போல் * தந்தம்பற்றிக் கடிக்கும் இசிப் பெடுக்கும்...... ......*
கயிறு முறுக்கி விட்டாற்போல் காலுங்கையுந்தான் இழுக்கும்..................*
† எயிறுதிறக்கவொட்டாது இறங்கா தன்னந்தண்ணீரே ...........(அசஅ)

* தந்தம் - பல் † எயிறு - பல் இவ்விரண்டுமொருதொடர்

மாந்தவலிப்புக்கு

## புகை

சேட்டைப் * பரி † உகிர் மயிலிறகு தின்னுமிளகு வசம்புசுக்கு...... ........*
கூட்டக் கருப்பேயத்திக் கூறும்அழிஞ்சில் வேப்பெண்ணெய்.................*
போட்டங் ‡ கம்பளமுஞ் சமனாப் புகழ் § செம்மறியின் ¶ கோட்டுடனே ...*
வாட்டிய புகைக்கவே பிணியும் மாறுதிசிவுமாறிடுமே..... ................(அசக)

* பரி - குதிரை † உகிர் நகம் ‡ கம்பளம் - கம்பளி § செம்மறி - செம்மறிஆடு ¶ கோடு - கொம்பு

மாந்தவலிபபு சரக்கைவலிப்புக்கு

## மருந்து

எண்சீராசிரியவிருத்தம்

கொடிவேலிவேர்ப்பட்டை சங்கன்வேர்த்தோல் குன்றெருக்கன் வேர்ப்பட்டை இவைதான்மூன்றும், வடிவான விருகனெண்டை தூக்கிக்கொண்டுவளமான வெந்நீரைவிட்டு நன்றாய், பொடியாக நறுக்கிவடிக்கட்டியந்த * புனலதனில் விருகனெண்டை குங்குமப்பூ, துடியாக அரைத்துகொடுவலிப்பு மாந்தத்தொடுகாக்கை வலிப்புமது தலைந்துபோமே ..........................(அடுய)

* புனல் - சலம்

காக்கைவலிப்புக்கு

## மருந்து

காக்கைபிச்சியுங் கொழுப்பும் அதனின் முட்டைக் கனவசப்பு திப்பிலி யின் கட்டைதானும், நீக்கமறுங் கொஞ்சிதமுதாழைவேரும் நிலவேம்பின் வேரு மிளகருணை வேரும், போக்குடனே பொடிசெய்தெண்ணெயினிற் போட்டுப் புழாகக்காயச்சே வறுந்த ஓமம், தாக்குவாய் பொடித்து வெண்காரம் உள்ளித் தானறுக்கிப்போட்டிறக்கி வைத்துக்கொள்ளே ... .......... (௮௱௧)

இதுவுமது

வெண்பா

கொள்ளவே காக்கைக்கொடுமை வலித்தப்போது ..........................*
கொள்ள ஒருகரண்டியே கொடுக்க - மெள்ளவே..... ....................*
இப்படிக்காறுதரம் ஏந்திழை யீர்நல்கின்.. ...............................*
தப்பில்லா காக்கைவலி யோடும்........ ............................(௮௱௨)

அள்ளுவலிப்புக்கு

## குளிகை

எண்சீராசிரியவிருத்தம்

பார்க்கவே இன்னமொருகுளிகைகேளு பாங்கான சாதிக்காய் கிராம்பு ஓமம், கார்க்கவே கரியசீரகமுஞ் சுக்கு கனமானதிப்பிலி கஸ்தூரி மஞ்சள், சார்க்கவே வசம்புடனே காயமொக்க சரியெடையாய் ஒன்பதுக்குஞ் சமன்தான்கேளு, வேர்க்கவேவெள்ளைக்காக்கணன் வேர்ப்பட்டைவிதமாகதான்கூட்டிவெந்நீராலே .................................................(௮௱௩)

இதுவுமது

வெந்நீரால் தான் அரைத்து சுண்டைக்காய்போல் விதமாகதான் உலர்த்திவைத்துக்கொண்டு, வெந்நீரில் குழைந்தைகட்கு ஏழுநாள் தான் வினைவாகவே கொடுக்க உப்பாகாது, வெந்நீரில்சாதமிட்டுஉண்பீராலுல்வேண்டியதோர் நோய்தீரும் விளம்பக்கேளு, வெந்நீரால் சளிஇருமல் கக்கல் காய்ச்சல் மீறிவருஞ் சுரிகுண விச்சுழியும்போமே ...................................(௮௱௪)

இதுவுமது

போகுமேஅள்ளுடனே சன்னிதோஷம் பொல்லா,தவலியுடனே விஷசுரங்கள், போகுமேமந்தமுடன் வயிற்றுநோயும் பொருமலுடன் இளைச்சலுமே போகுஞ்சொன்னேன். போகுமே வசம்புதனைச்சுட்டுக்கொள்ளுபோக்கோடே பச்சையென்றால் பேதிரம்ப. போகுமே சுட்டதனல் மட்டாம்பேதி போகுமேமற்ற நோய்ப் புனிதமாமே .............................................(௮௱௫)

### பிற இசிவுக்கு

## மருந்து

### அறுசீராசிரியவிருத்தம்

திம்பையிலையுந்துளசி யிலை தூய்யஇஞ்சியிலை மூன்றும் ... .....................*
சிம்பைஇடையாய் வகைவகைக்கு சரியெடை யாகவே நிறுத்தி ..............*
பம்பரம்போலதனத்தாளே பகரும்பூண்டோர் ஆறெடையாய் ...............*
நம்பிநிசழதான்அரைத்து நல்லசிற்று மண்க்கிலையே .................. (அருசு)

### இதுவுமது

இலையில்வைத்து தான்சுருட்டி இளகவெதுப்பிச்சாறுபிழி.....................*
விலையாய் மூன்றுவேளைக்கும் விரும்பிக் காசளவாய் கொடுக்க .............*
தலையுஞ் சேயற் பிறஇசிவு சொல்லாதோடிப் போய்விடும்பின்...................*
மலையுஞ் சிலையுங்கலையாயே மனதிற்பயமாய்ச் செய்வாயே..................... *

சகலவலிப்புகட்கும், சன்னிட்குகம்

## சோதிருஷி தைலம்

### கலிவெண்பா

ஆதிமறைவிளங்கும் ஆயுர்வேதத்துணர்ந்த.............................. ........*
சோதிருஷிதைலம் சொல்லக்கேள்..........................நீதியாய்... (அருஅ)
அவுரிவேர் முன்னைவேர் அழிஞ்சில்வேர் சாரணைவேர் .......................*
சிவனார்வேம்பின்வேர் சிறுபுளடி..............................துவரான......... *
சங்கன்வேர் செங்கத் தாரிவேர் வாகைவேர் ....................................*
புங்கன்வேர் நொச்சில்வேர் பூவரசு.............................திங்கமுள்ள ...... *
குட்டிக்களாவேரும் குட்டிக்குமிழ்வேரும் ......................................*
குட்டிவிளாவேர் பெருங்கு தம்பைவேர்............................திட்டமுடன் ......*
முருங்கை மிளகருணைவேர் முட்காவேளைவேர்....................................*
அரியபாவட்டைவேர் ஆதொண்டை..............................விரும்புகிற........*
வெட்பாலைவேர் எருக்கன்வேர்க் கண்டங்கத்தரிவேர் .........................*
தப்புகொடிவேலிவேர் தூதுளைவேர் ............................தப்பில்லா........*
கூத்தன்குதம்பைவேர் கூறும் * வனமணாவேர் ......................................*
காத்த † வேலிவிட்டனுக் காந்திவேர் ............................சீர்த்தியுள...... *
சந்தியின்சாரணைவேர் தளிர்த்தநல்லூறிவேர் ......................................*
அத்தம்போலாகும் எலியாவின்வேர் ............................சுத்த............. *
முகைக்கின்றவேர்வகைகள் முப்பத்துமூன்றும்........................................*
வகைக்கு விருகனெடைவாங்குபத்து ............................அகைக்கும்.........*
நல்லப்பாகல்சாறும் நாப்பாகல்சாறும் ................................................*
செல் ஆடாதோடைச்சாற் சின்னிச்சாற் ......................வல்ல................*
எருக்கிலைச்சாற் புங்கிலைச்சாற் எலிமிச்சம்பழச்சாற்...............................*
பெருக்கமுடக்கற்றான்சாற் பின்னும்............................திருக்குடைய ......*
காட்டுக் குறிஞ்சான்சாற் கனமாவிலிங்கைச்சாற்.......................................*

பாட்டில் வருஞ்சாற் வகைகள்பத்தும் ....................கூட்டி ............*
வகைவகைக்கு கால்படியாய் வளமாகவே அளந்து..............................*
தொகையுடனே சேர்த்து துடியாக ........................பகையில்லா ......*
வௌவால் இரண்டு ‡ வாயசமும்தான் ஒன்று ..............................*
ஒவ்வாபெரும் ஓணான் ஒன்று ................................கவ்வா ............*
மூயல் ஒன்றுசிற்றேணன் மூன்றுடும்பு ஒன்று..............................*
கயல்விழியே § சர்ப்பக் ¶ கண்டம் ஒன்று ....................வயமானப்..........*
பச்சைமயிலிறகுபண்பாகஐந்து ..............................................*
சச்சமாய் நல்ல வடம் தானைந்து ..............................இச்சைப்............*
பசுவினுட நீரும் டகர் ௭ மேதியின்நீரும்..........................................*
விசயவெள்ளாட்டின்நீர் மேற் * சிறுநீர் ....................அசையா..........*
வகைவகைக்குகால்படியாய் வண்மையுடன் அளந்து ........................*
தொகையாய்க்கடைசரக்கு சொல்லக்கேள் ....................தகைமைச்......*
கருஞ்சீரகத்துடனே கஸ்தூரியின்மஞ்சள்.......................................*
உரிமையுடன் பூதகரப்பானும்மே..........................வரஞ்சிறந்த......*
மஞ்சள் மரமஞ்சள் வாய்விளங்கங்கடுக்காய் ..................................*
தஞ்சைநகர் † கிட்டம் சதகுப்பி..........................மிஞ்சும்நற்..........*
சிற்றரத்தைப்பேரரத்தை செண்பகப்பூதிப்பிலியுங் ...........................*
சற்றும்பெருங்காயம் சாதிக்காய் ..........................பற்றுடைய...... *
செவ்வியங் ‡ குக்கில் சிறு § தேக்கரைப்பொடியும்................................*
வெவ்வகைக் ¶ காறு விருகனெடைக்...........................கவ்வும்.......... *
வசம்புவிருகனெடை வரிசையுடன்பத்த ........................................*
இசை உள்ளிவிருகன் எடைப்பத்தும் ..........................நிசம்பெறவே ... *
வீசும்வலம்புரிக்காய் விருகனெடையீரெட்டு ..................................*
வாசமுறக்கொண்டுவந்துவைத்துமே.............................ஆசையுடன் ...... *
செய்யும்வகைவிபரம் தெளிவாகசொல்லக்கேள் ...............................*
மைவிழ்சேர் திவ்ய மடமயிலே ......................... ........பையவே.......... *
காட்டுவேர் எல்லாம் சதிக்கக்கிடாமுமிட்டு ....................................*
மாட்டிக்கடைச்சரக்கில் வார்த்தரைத்து ...................... ஊட்டியே.......... *
பச்சிலைகட்சாற்றைவிட்டுப் பரிவாகதான் அரைத்து ............................*
மிச்சமுள்ளங் கோமியங்கள் விட்டரைத்து ................. .. சச்சுடையாய்......*
சாணிபதம் ஆனால் சரியெனவே பாண்டத்தில்........................................*
பேணிநீயிட்டப் பிற்பாடு .......................................வாணியே.......... *
வேப்பெண்ணெய் ஓர் நாழி விளக்கெண்ணெய் 'ஓர் நாழி ..........................*
கோப்பாகமுன்மருந்திற் கூடவிட்டுப் ..........................பூப்பாக் ............*
கலக்கிஅடுப்பேற்றும் போதில் காக்காய் ஒணான் ..............................*
துலக்கமுள்ள வெளவாலும் சொல்முயலும் ...............பிலக்க ............*
உடும்போடு சிற்றேணன் உக்ரதல்லப்பாய்பும்........................................*
இடும்பொன் றுஞ்செய்யா தெடுத்து ................. ...............திடமாய்............*
௭ அறுத்துதிரம் பாண்டத் தம்மருந்திற்பிடித்து ....................................*
மறுத்துத் தோல் இறகு குடல்வாங்கி ........... ............ குறித்ததோர்......*

எண்ணெயிலேதான்விட் டெரித்திரண்டுசாமம் ............ *
வண்மையுடன்தான் இறக்கிவைத்து ............ தண்மை ......... *
மறுநாள் அம்பெற்றி வளமாகத்தான் எரித்து ............ *
வெறுவாமெழுகு பத மேபார்த்து ............ அறிவாக ......... *
இறைச்சிகளையெல்லாம் எடுத்தெறிந்துபோட்டு ............ *
மறைத்துவடிக்கட்டி வைத்து ............ நிறைந்துமே ...... *
உள்ளுக்குகாசெடைதான் உண்மையுடன்கொடுத்து ............ *
தெள்ளுதலைமுழுதுந் தேய்த்து ............ மெள்ளவே ......... *
சர்வாங்கமுந்துவளைதானிடவேயிதற்கு ............ *
விரைவாகதீரும்வியாதிகேள் ............ பரவியெழும் ...... *
கோணவலிப்புடனே குமரக்கண்டவலிப்பும் ............ *
காணப்பிறவலிப்புங்காக்கைவலி ............ பூணுகிற ......... *
சன்னிவலிப்பு தங்காத ஊள்வலிப்பும் ............ *
பன்னும் ரணவலிப்பும் பார்மீது ............ இன்னம் ......... *
முகவாதத்தின்வலிப்பு முகசன்னியின்வலிப்பு ............ *
இசலும் * இமையிடிப்பு ஏளனஞ்செய் ............ புகலும் ......... *
குதிரைவலிப்பும் கொள்ளைநடுக்கின்வலிப்பு ............ *
சதிராய்முசல்வலிப்பு † சசவாதம் ............ பதறிமெடுழும் ...... *
பாரிசவாதம் படருஞ்சந்தின்வாதம் ............ *
மாரிசமாம் முடக்குவாதம் ............ வாரிச ......... *
ஊள்ளங்கால்வாதம் உச்சிவாதத்தோடு ............ *
கள்ளமில்லாதக் கணுவாதம் ............ மெள்ளவே ...... *
வாதமென்னப்பட்டவையும் வலிப்பென்னப்பட்டவையும் ............ *
பாதகசன்னியென்னப் பட்டவையும் ............ ஆதரையில் ...... *
மெய்யாகதீரும் வினவும் இதற்குபத்யம் ............ *
பொய்யாயப் புகையிலையும் புளியும் ............ வெய்யக் ......... *
கருவாடுமீன் இறைச்சிக் கரப்பான்பண்டந்தள்ளி ............ *
பரிவாயிருந்தால் பலிக்குமே ............ பெரியவர் ......... *
சிறியவர்க்கும் ‡ வைஸவர்க்கும் சேய்களுக்கும் ஆமென்று ............ *
நெறி சோதிருஷிசொன்ன ............ நேர் ...... (கூாசு)

* வனமனை - ஓரிதழ்த்தாமரை † வேலி - உத்தாமணி ‡ வாயசம் - காகம் § சர்ப்பம் - பாம்பு ¶ கண்டம் - துண்டம் ஒ மேதி - எருமை * சிறுநீர் - மூத்திரம் † கிட்டம் - சிட்டம் ‡ குக்கில் - மைசாட்சி § காறு - வகைக்குஆறு ¶ அருந்திரம் - அறுந்தஉதிரம் ஒ இமை - கண்ணிமை * சசவாதம் - முயல்வாதம் † வைஸவர் - பாலியர்

வலிப்பின்வகுப்பு முற்றிற்று.

அகதியர் திருவடிகளே

சரணம்

இஃது

# கழிச்சல்வகுப்பு

## மாந்தக்கழிச்சலின்குணம்

அறுசீராசிரியவிருத்தம்

வாந்தி * பிராந்தி மூர்ச்சையதாய் வாயுங்குரலுஞ் சிரணித்து..................*
காய்ந்துமேனி வெதவெதுப்பாய் கைகால்குளிர்ந்து வலியுண்டாம்............*
சேர்ந்துகழியு மலந்தானும் சீர்க்கெட்டிருக்கும் பலவிதமாய் ..................*
போந்தமாந்தக்கழிச்சலிது பொல்லாதெனவே புகன்றனரே............(௩௫)

* பிராந்தி - மயக்கம்

## மாந்தக்கழிச்சலுக்கு பச்சிலைச்

### சாறு

நல்லவேளைநாய்வேளை நாறும் வேலிப்பரித்தியுடன் ..............................*
சொல்லுங்குப்பைமேனியிலை துதிக்கும் அசத்திப்பழுப்புடனே.................*
வெல்லும்வசம்பு * வெள்ளுள்ளி வேண்டும்படியே சாற்வாங்கி ..................*
உள்ளுங்கொடுத்து துவாலையிட ஒடுங்கழி மாந்தந்தானே ...............(௩௬)

* வெள்ளுள்ளி - வெள்ளைப் பூண்டு

## கழிச்சல்தோஷத்திற்கு உப்பிலிநெய்

### தன்வந்திரி

வெண்பா

உப்பிலியின் பூண்டை உறநறுக்கி ஆவின் நெய் ......................................*
நட்புடனே சேர்த்துதான் நாற்சாமம் - செப்பக் .......................................*
குலரவியில்வைத்துக்கொடுக்ககழிச்சல் தோஷம் ....................................*
அலறியேயோடு மென்றறி...........................................................(௩௭)

## மாந்தக்கழிச்சல் மாந்த சன்னிக்கு இயாழம்

### பிரமமுனி

நல்வேளை ஓர்பிடியும் நாட்டமாய்க்கொண்டுவந்து ....................................*
செல்லவே மூன்றறுப்பாய்ச்செய்து - வல்லக் ..........................................*
கனலதனிற்சட்டியைக் காயவைத்து * உப்பு ............................................*
புனிதமா யொரு † சேனைப் போடு.................................................(௩௮)

* உப்பு - சோற்றுப்பு † சேனை - செரங்கை

## இதுவுமது

### எண்சீராசிரியவிருத்தம்

போட்டதொரு உப்பதுவுஞ்சாம்பலாக புகட்டியேவறுத்துநீ துடைத்துக்கொட்டி, காட்டவேவசம்பதனைத்தட்டிப்போட்டுக் கருகியேதீப்பற்றி வேகும்போது, ஆட்டவேமுன்னறுத்த வேளைதன்னை அதிலிட்டுப்பொன்னிறமாய்வறுத்துக்கொள்ளு, தாட்டவே அனாசெரங்கை நீர்தெளித்து தானதுவுஞ்சுண்டமட்டும்வறுத்துககேளே .................................................... (கூாக

## இதுவுமது

வறுத்துமறுபடிகொஞ்சம் நீர்தெளித்து மருவியதுசுண்டமட்டும்வறுத்துக்கொள்ளு, வறுத்துமே இன்னமொருபடிதான் நீரை வார்க்குமுன்னே ஓமங்கா செடைதான்போடு,வறுத்துபொரிபும்போது சலத்தைவார்த்து மகத்தான கணபதிக்குப்பூசைப்பண்ணு, வறுத்து நீ* எட்டொன்றாய்வற்றக்காய்ச்சி வர இறக்கிக்கியாழமொருசங்குபோடே .............................. .. (கூாய)

* எட்டொன்றாய் - எட்டழாக்குசலத்தை ஒருஅழாக்காககாய்ச்சல்.

## இதுவுமது

### வெண்பா

போடவேமாந்தத்தின்பொல்லாக் கழிச்சலுமே ...............................*
ஏடவில்மாந்தசன்னியெங்கேவே - ரோடிவிடும் ..................................*
பேர்ச்சொன்னால்நில்லாது பேழ்விற்புருநீண்ட..................................*
காரளகப்பெண்ணரசேகாண் ..............................................(காயக)

இந்நான்குமொருதொடர்

### கழிச்சலுக்கு வேறு

## மருந்து

கீழ்க்காயின்நெல்லிவேர்க் * கேழ்முலைப்பால்விட்டரைத்தே ....................*
வாழ்க் † காமர்ச்சங்களவுவார்க்கவே ‡ காழ்க்கூறும் .................................*
பொல்லாக்கழிச்சற்பூவுலகைவிட்டிங்கு...................................................*
நிலலேனென்றோடிவிடும்நேர்..................................... ....................(கூாயஉ)

* கேழ் - ஒளி † காமர் - அழகு ‡ காழ்க்கூறும் - வயிரமாகசொல்லும்.

### கழிச்சலுக்கு வேறு அபினி

## மாத்திரை

### எண்சீராசிரியவிருத்தம்

அதிவிடையஞ்சாதிக்காய்சாதிபத்ரி அபினிகடுக்காய்த்தான் றிமிளகு * சீரம், மதிய கருஞ்சீரகமும்வகைவகைக்கு வளமாகவிருகன் அனையாகக்கூட்டி, சதியில்லா ஏலமதுவிருகன் ஒன்று தழைத்தமாதளந்துளிரும் அத்திப்பட்டை, கெதியான இவையிரண்டுங்கியாழம்வைத்துக் கிருபையாய்வார்த்தரைத்து அடையாய்த்தட்டே ..........................................................(கூாயங)

இதுவுமது

திட்டியே சட்டிதனைக்காயவைத்து தான் அரசம் இலையில் கட்டிப்புடத்தைப்போடு; அட்டியின்றிக்கியாழமது வார்த்துவார்த்து அரசிலைகாந்தப்புடத்தைப்போட்டுப்போட்டு, இட்டியே இப்படி ஐந்தேழுபத்துஇயல்புடம்போட்டேயெடுத்து அரைத்துமைபோல், கொட்டியே குன்றியளவுண்டைசெய்து குணமாகநிழல் உலர்த்திக் கழிச்சலுக்கே..................................... (காயசு)

இதுவுமது

கழிச்சலுக்கு எருமைதயிர்வடியிட்டேதான் கண்மணியே ஒரு உண்டைக்கொடுக்கத்தீரும்; பழிச்சலாஞ்சுரமாகில் வெந்நீர்த்தன்னில்பரிந்துநீஇட்டாற்கால் பறந்துபோகும், அழிச்சலாங்கழிச்சலுக்கு தரும்பிரகாரம் அநுபானம் அறிந்திட்டால் தீராதுண்டோ, தெழித்தலாம் பதுமாபாங்கம்போற் கண்ணுந் திருவளரும்பொதிகைமுனிசெயலாங்காணே.............. .......(காயடு)

கணக்கழிச்சலின்

## குணம்

அறுசீராசிரியவிருத்தம்

சீதங்கழியுமலங்கழியும் திரும்பிக்கெட்டப்பால்போலே ....................... *
போதக்கழியுங்கறித்தண்ணீர்ப் போலுங்கையுங்கால்குளிர்ந்து .................*
காதை அடைக்கும்வெதுப்புண்டாம் கையிற்பின்னைத்தங்காது ..................*
கோதாய் இந்தகுணங்கண்டால்குலவும் இதன்பேர்கழிகணமே...... (காயசு)

கணக்கழிச்சலுக்கு

## கியாழம்

உண்ணும் * ஈருள்ளிப்பத்து ஒருபிடி கருவேல் ஈர்க்கு ...........................*
எண்ணுஞ்சீரகம் ஓர்காசு † இருகூறு வெந்தயந்தான் ..............................*
வண்ணமாயிவைநிறுத்து வறுத்துநீர்விட்டுக்காய்ச்சி ................................*
‡ திண்ணமாய்க் கொடுக்கபேதி கழிகணந்தீருமென்றே...............(காயஎ)

† ஈருள்ளி - வெண்காயம் † இருகூறு - இரண்டுபங்கு ‡ திண்ணம் - பலம்

கழிகணம் காய்ச்சல் தாகம் வரகூதிக்கு

## கியாழம்

வெண்பா

இலந்தைநாரத்தை புளி இனியகணப்பூண்டும் ................................*
கலந்துநெல்லி ஈர்க்குடனேகாய்ச்சியுண்ண - நலமா .......................*
கழிகணம் உள்வரகூதிக் காய்ச்சலுடன் தாகம் ..............................*
பழிவருமென்றேடும்பார்.............................................(காயஅ)

கழிகணத்திற்குவேறு

## எண்ணெய்

எழுசீராசிரியவிருத்தம்

மூக்குரட்டைச் சாரணையும் முடக்கற்றானும் * முத்தெருக்கன்செவியுடனேமுயலக்கேளு, பார்க்க † இதழ்த்தாமரைச்சாறுடனே கூட்டிப் பகர்செப்புநெருஞ்சிலோர்படிதானென்று, வார்க்கவிளக்கெண்ணெய் ஓர்படிதானுகும்மயிலிறகு பலம் ஒன்று கலந்து காய்ச்சி, ஆர்க்கும் இடமலவாதம்நீங்கியேதான் அநதரக்கழி கணங்கள் நீங்கிப்போமே ..................................(௬௱௰௬)

* முத்தெருக்கன் - நிலக்கடம்பு † இதழ் - ஓரிதழ்த்தாமரை

கழிச்சல் இருமலுக்கு

## நெய்

அறுசீராசிரியவிருத்தம்

* வட்டத்திருப்பி சிறுதேக்கு † மதுரம் வசம்பு சுக்கோடே..................*
இட்டமிளகு ‡ திரிபலையும் இசைந்த § விடையம் கோஷ்டம் ¶ முத்தம்...*
திட்டங்கழஞ்சு ௐ இம்பூறல் சேர்ந்தச்சாற்படி * ஆ நெய்யும்.................*
மட்டப்படியாய் எரித்தருந்த மாறுங்கழிச்சல் இருமலுமே..................(௬௨௰)

* வட்டத்திருப்பி - பங்கம்பாலை † மதுரம் - அதிமதுரம் ‡ திரிபலை - கடுக்காய் - நெல்லிக்காய் - தான்றிக்காய் § விடையம் - அதிவிடையம் ¶ முத்தம் - கோரைக்கிழங்கு ௐ இம்பூறல் = சாயவேர் * ஆ - பசு.

வாந்திக்கழிச்சலுக்கு

## கியாழம்

நெல்லிப்பட்டை மாம்பட்டை நிசமும் அரசம்பட்டையுடன் ..................*
வெல்லும் பரித்தியின் கொட்டைமேவும் பரித்தியின் பிஞ்சும் ..................*
அல்லும் அத்திப்பட்டையொடு அதன்றன் துளிரும் வகைவகைக்கு .........*
சொல்லும் விருகன் எடையொன்றுநூக்கிக்குறுணிதண்ணீரோ.........(௬௨௧)

இதுவுமது

தண்ணீரதனிலேபோட்டுத் தழலிற்காய்ச்சித்தான் இறக்கி ..................*
வெண்ணீர் இரண்டுவேளையிலும் மேவியதனைப்பாலர்க்கு ..................*
எண்ணீர்வார்த்துக்கொடுத்திடவே ஏகும்வாந்திக்கழிச்சலுமே..................*
பெண்ணீர் உலகில்தருமமுடன் பேணிச்செய்வீர் நலமாமே ............(௬௨௨)

வாய்மூக்கால்பாலெடுத்தல் வாந்திக்கழிச்சல் இருமலுக்கு

## நெய்

* வேலிப்பரித்திச் சாறுழக்கு † மேதிவெண்ணெய்த்தான் உழக்கு.........*
ஆலித்தெழுந்த கருஞ்சீரம்அதுவுங் கழஞ்சு அரைத்திட்டு........................*

பாலித்திருந்து பொன்னிறமாய் பதத்தில்வடித்து நெய் ‡ அருந்த.........*
வாலப்பிள்ளை வாட்டூமக்கால் வரும்பால் கழிச்சல் மாறிடுமே...........(கூஉரு)

* வேலிப்பரித்தி - உத்தாமணி † மேதி - எருமை ‡ அருந்த - சாப்பிட

சலக்கழிச்சலுக்கு

## மருந்து

வெண்பா

வீதவெண்குன்றி விளைத்தோலின் உப்பருப்பு.................................*
ஆதபுளிவிளைத்தோல் அத்திப்பால் * மேதிபின்றன் ..........................*
வெண்ணெயினில் ஓர்சுழற்சு † வெள்ளமிடும் நீர்க்கழிச்சல்....................*
திண்ணுவிடுந்தேன்மொழியாய்நேர் .........................................(கூஉச)

* மேதி - எருமை † வெள்ளம் - பிரளயம்.

வெப்புக்கழிச்சலுக்கு அதிமதூர

## மாத்திரை

எண்சீராசிரியவிருத்தம்

அதிமதுரம்அதிவிடையம்சாதிக்காயும் அழகானமாதளம்பூ சீரகந்தான் ...*
புதியசமன்கூட்டிமாதளஞ்சாறுதல் புளிப்பானபுளியாரைச்சாற்றிலாதல் ...*
பதியாக அரைத்துதூதளங்காப்போல பக்குவமாய்க்கொடுத்திடவெப் புக்கழி
ச்சல்,நிதிபோலதீரும் இச்சாபத்தியந்தான் நீலவிழிமாதரசே நீதந்தானே...()

இரத்தக்கழிச்சலுக்கு

## மருந்து

வெண்பா

தாழை விழுதின்றன் சாறும் இளநீரும் ........................................*
சூழெலிமிச்சஞ் சாறும்சுக்கும் - பேழ்மயிலே ..................................*
சீரகமுந்தான்பொடியாய் இட்டமுடனருந்த......................................*
போரிடும் * கறைகழிச்சல்போம் ............................................(கூஉசு)

* கறை - ரத்தம்

இரத்தக்கழிச்சலுக்கு வேறு

## மருந்து

அறுசீராசிரியவிருத்தம்

சீரகங்கொத்தமல்லித் திகழுமாதுளையின் பிஞ்சும்..............................*
மீரகங்கீழ்க்காய்நெல்லி வேரிவைசமனதாக......................................*
ஆரமாவெந்நீர்விட்டு அரைத்துகாலையினிலீய ...................................*
பார ரத்தக்கழிச்சல் * பாறிடுந் † தயிருஞ்சோறே .........................(கூஉஎ)

* பாறிடும் - ஓடிவிடும் † தயிருஞ்சோறுமதற்குப்பத்தியம்.

ஆமக்கழிச்சலின்

## குணம்

அதேசிதபேதி

உண்டப்பால் எதிரெடுக்கும் உடல்பலமுழக்கங்காட்டும் ......................*
சுண்டுமே ரத்தஞ்சாலசுரமி குந்திருக்குமேனி ..............................*
* கண்டுசேர் மொழியுந் தாழ்ந்து காலொடு கையுநீத்து ......................*
விண்டிடில் ஆமமென்று விளம்பினர் முனிவர்தானே ...... ..........(௯௨௮)

* கண்டு - கரும்பின்கட்டி

ஆமக்கழிச்சலுக்கு

## சாதிக்காயெண்ணெய்

சிற்றுமணக்கின் எணணெணப்பலம் * திரிநற்பூரம்விருகனென்று ............ *
சற்றேசோற்றிற் றுன் அவித்த சாதிக்காயும் ஒன்றுகும்........ *
எற்றே இவை எல்லாந்தானே எண்ணெப் விட்டுத்தான் அரைத்து............*
கொற்றேவேளைக்கொருகரண்டி கொடுசீதபெதிப்போமே..............(௯௨௯)

* திரி - மூன்று

பொருமல்கழிச்சலுக்கு

## குளிகை

இதுவே * கூனன்முதுகோடு இகழா † விடையம் ‡ அசமதாகம்..........*
மிதமாப் § திருப்பிப் பாவட்டை மிளகுசுக்கோடரைத்ததனே...................*
கொதிவெந்நீரில் முலைப்பாவில் குன்றிபோல இழைத்திடவே..... ............*
துதிக்கும் பொருமல் கழிச்சலது தூரப்போகுங் குளிகையிதே .........(௯௩௰)

* கூனன்முதுகு - ஆமைஓடு † விடையம் - அதிவிடையம் ‡ அசமதாகம் - ஓமம் § திருப்பி - வட்டத்திருப்பி

அதிசாரக்கழிச்சலுக்கு

## கியாழம்

கோரைக்கிழங்குங் கொத்தமல்லிக் கோதாய் வில்வக்காட்ஓடு ............... *
ஏராய்த்திப்பிலி * லொத்திரமும் இனிதாய் † நாகேசரத்துடனே ...........*
சீராய்க்காய்ச்சி நறுந்தேனைச்சேர்த்து கொடுக்கச்சேப்கட்கு ................ ..*
வாராக்கழிச்சல் அதிசாரம் மயங்கிஇயங்கியோடிடுமே .................(௯௩௧)

* லொத்திரம் - விளாம்பட்டை † நாகேசரம் - சிறுநாகப்பூ

அதிசாரக்கழிச்சலுக்கு வேறு

## கியாழம்

வெண்பா

கிராட்டாத்திப்பூவும் கருங்காலி வேர்த்தோலும் .............................. *
கோட்டானைத்திப்பிலியும் * கூவிளமும் - கூட்டியே.............................*
சாய்ச்சிதேன் விட்டருந்த காணுஞ்சிறுவோர்க்குப் ........................... *
போச்சென்றதிசாரம் போம்.......................................... (௯௩௨)

* கூவிளம் - வில்வம்

அதிசாரக்கழிச்சல் கபசுரத்திற்கு வேறு

## மருந்து

அறுசீராசிரியவிருத்தம்

அத்திக்காயின்சாறேமம் அறியும் எருமைத்தயிருடனே ......................*
பத்தியாகக் கலந்தருந்த பண்பாய் பிறந்த குழைந்தைகட்கு ...............*
தத்திக்கழியும் அதிசாரம் தானேஅகலுங் கபசுரமும் .........................*
மெற்றபயந்து விட்டுவிடும் மீன்போற்குவளைப் பெண்மயிலே .........(கூ௩௩)

மூலக்கடுப்புக் கழிச்சலுக்கு

## மாத்திரை

கட்டளைக்கலித்துறை

மானே * விடையங் கோஷ்டமுங்கிராம்பு † மதுரமுடன் .........................*
தானே ‡ இலவுவிளாம்பிசன் தன்னொடு சாதியங்காய் .........................*
தேனே § இதழ்ச்சிறு இலவங்க ¶ மாஞ்சில் தெரிந்துநல்லக்.....................*
கோனேசிவந்தநல் மாதளங்காயினிற் கொண்டடைத்தே ............(கூ௩௪)

* விடையம் - அதிவிடையம் † மதுரம் - அதிமதுரம் ‡ இலவு - இல வம்பிசின் § இதழ் - சாதிபத்திரி ¶ மாஞ்சில் - சடாமாஞ்சில்

இதுவுமது

அடைத்தாடைச்சுற்றிமேற்சாணம்பூசி அடர்இரவி .............................*
புடத்தால் எரித்துவிடும் போது அந்தப்புடம் * அணைத்து .......................*
சுடத்தான் அரைத்து கஞ்சா † ரசந்தனில்துடரிபழத்.........................*
தெடுத்தான் அளவிது மாத்திரை தன்னை இயம்பிடுமே.....................(கூ௩௫)

* அணைத்து - ஆற்றி † ரசம் - சாறு

இதுவுமது

## அதற்கநுபானம்

இடுமே * மதுவிற் கஞ்சாவின் சாற்றில் எழில் † குரும்பைக் ...............*
கொடுமே தயிரில் ‡ மலர்த்தெங்கு § வாழைக்குணமறிந்து ....................*
விடுமே கழிகண மூலக்கடுப்பு ¶ மேடிஎாச்சல்.......... ...........................*
கெடுமே விஷமூலம் போகும்விசாரக் கிலேசங்களே .....................(கூ௩௬)

* மது - தேன் † குரும்பை - தென்னம்பிஞ்சு ‡ மலர்த்தெங்கு - தென்னம்பாளையின்பூ § வாழை - வாழைப்பூ ¶ மேடிஎாச்சல் - வயிற்றுஇரைச்சல்

கடுப்புக்கழிச்சலுக்கு

## மருந்து

வெண்பா

திகழ்புனலி வேரும் சீரகமும் தான்சமனுப்...................................*
புகழ்பெறவேகூட்டிப் பொடியாய் - மகிழச்செய் ................................*

தேனிற்கொடுக்கவே சீதகடுப்புக் கழிச்சல் ..............................*
வானிற்பறந்தோடும் வார் ..............................(௧௬௭)

பச்சிலைபோல்கழிதலுக்கு

## மருந்து

அறுசீராசிரியவிருத்தம்

ஏலமுடன் சாத்திரபேதி எழிலாய் * மதுரம் வகைவகைக்கு...............*
பாலவிருகன் அரையாகப் † பழந்தண்ணீர் விட்டேஅரைத்து ...............*
சோலமூன்று நாட்கொடுக்கக் குழைந்தை பச்சிலைப்போல் கழிதல்...........*
ஓல்மிட்டே தான்தீரும் ஒளிர்கலை யிடையுடைமடமயிலே ..............(௧௬௮)

* மதுரம் - அதிமதுரம் † பழந்தண்ணீர் - நீராகாரம்

முட்டையுடைத்தால்போலும் கெட்டப்பால் போலுங்கழிதலுக்கு

## மருந்து

உத்தாமணியிலைஓர் ஐந்து உயர்சிற்றவரையிலைஐந்து..............................*
ஒத்தாப்பரும்பூண் டோர்உள்ளி ஓது * மேதிநவ நீதம் ........... ...........*
கத்தாகரண்டி தனிலிட்டுக் காண்முன் மருந்தையும் போட்டு ...... ...........*
சத்தாய் இலைமுறியக் காய்ச்சி இறுத்து முலைப்பா லொடுகுலுக்கே ...(௧௬௯

* மேதிநவநீதம் - எருமைவெண்ணெய்

இதுவுமது

கலிவிருத்தம்

குலுக்கிசெய்க்குகொடுததிட மூன்றுநாள் ..............................*
இலுக்கிடாகெட்டப்பால் போற்கழிதலும்..............................*
ஒலுக் * கண்டம் உடைத்தாற்போற்கழிதலும் ..............................*
பலிக்கதிர் நதிடும் பத்தியங்காத்திடே ..............................(௧௭௦)

* கணடம் - அண்டம் - அதேமுட்டை

விடாகழிச்சலுக்கு

## மருந்து

அறுசீராசிரியவிருத்தம்

சாதிக்காயும் அதிவிடையம் சாதிப்பத்ரி யோடபினி ....................*
மாதர்க்கரசே சரியாக வைத்துநல்லெண்ணெயில் தோய்த்து..................*
சேதப்படாமலே அரைத்து தினமொரு பணவெடை * பெண்பாலில்.........*
தீதப்படியே தான்கொடுக்க நிசமாய்க் கழிச்சல் அடைப்படுமே.........(௧௭௧)

* பெண்பால் - பெண்ணின்முலைப்பால்

கழிச்சல்கட்கெல்லாம்

## கட்டுவாதிமாத்திரை

எண்சீராசிரியவிருத்தம்

கொள்ளவேகட்டுவாதி குளிக்கைசேரு குணமானசாதிக்காய் சாதிபத்ரி; அள்ளவே இலவங்கம் எலத்தோடு அதிமதுரம் அதிவிடயம் அபினிசஞ்சா, விள்ளவே குராசானி முத்தக்காசு வெந்தயமும் சீரகமும் சிறுநாகப்பூ. வள்ளவேபுளியாரைக்காட்டாதிப்பூமாதளம்பிஞ் * சரம்பைப்பூசமனுய் தூக்கே...........................................................................(௧௪௨)

* அரம்பைப்பூ - வாழைப்பூ

இதுவுமது

தூக்கியேகூட்டியிடித் * தாவின்பாலில் துருசாக்பிட்டவியலாகவேதான்; ஆக்கியே வாழைப்பூ சாறறிலாதல் அழகு மாதளம்பழத்தின் சாற்றிலாதல், தாக்கியேவிட்டரைத்து மிளகுபோல தான் உண்டைசெய்துசர்க்கரையில் ஈந்தால்; நோக்கியே கழிச்சலதை தடைப்படுத்தும் நோயெல்லாம் ஓடிவிடும் நுணுக்கம்பாரே... ...................................................................(௧௪௩)

* ஆவின்பால் - பசுவின்பால்.

கழிச்சல்கட்கெல்லாம் வேறு கட்டுவாதி

## மருந்து

நாட்டமுடன்குழைந்தைகட்கு பேதிகண்டால் நல்லபுளியாரை யுடன் வாழைப்பூவும், தேட்டமுடன் இவையிரண்டும்பிட்டவித்து திறமாகபிழிந்ததிலேதுளிதேன்விட்டு. வாட்டமுடன் மருந்திதுதான் கொடுத்துப்பாருமகத்தானகழிச்சலெல்லாம் வாங்கிப்போகும்; தாஷ்டிகமாய்சற்குருவைதியானம்பண்ணிதண்மையுடன் புருவமதில் சார்ந்துநில்லே. ..............................(௧௪௪)

அதிசாரபேதி * ஊழிபேதி கழிச்சல் இரத்தக்கழிச்சல் மாந்தம்மாந்தசன்னி காய்ச்சல் நாலாமுறைக்காய்ச்சல் க்ஷயத்துக்கும் கட்டுவாதி

## வஜ்ரகண்டிலேகியம்

நொண்டிச்சிந்து

உச்சிதவேலாயுதனைப்போற்றி- நல்ல - உண்மைமனோன்மணியைநித்தமும்போற்றி, வச்சிரகண்டிலேகியத்தை சொல்ல - நல்ல - வாகாய்சரக்கு வகை எத்தனைநீ சேரு, கொச்சிதேச மதனகாமப்பூவும் - நல்லக் - கோட்டான் புசிக்கின்றக்காட்டாத்திப்பூவும், அச்சிதேசவால்மிளகுசுக்கு - நல்ல - அதிவிடையங் கசகசா கிராம்புடனே ஏலம், செஞ்சிதேச கஞ்சாஅபினி - நல்ல - சேலத்து பனைவெல்லஞ் சாதிக்காய்கூட்டி, சட்டியைஅடுப்புதனில் ஏற்றி - நல்ல - சரக்கைஅதில்வாட்டி உரலதனிற்போட்டு, பூணிலாஉலக்கைக் கொண்டிடித்து - நல்லப் - புகழான பனவெல்லப் பாகுதனைக் காய்ச்சி, இடித்ததொரு

தாளதனைப்போட்டு - நல்ல - இதமாகவேகிளரி லேகியமாய்செய்து; அந்தி சந்தி ரண்டுவேளைத்தின்றால் - நல்ல - அலறியே ஓடுமந்த மாந்தசன்னிக்காய்ச்சல், ஏந்திய குழைந்தைகளின்மாந்தம் - நல்ல - ஏங்குவலி அதிசாரபேதியைக்கேட்கும்; விந்தையுடன் நாலாமுறைங்காய்ச்சல் - நல்ல - வீரிட்டுஓடுமந்த க்ஷபங்களைக்கேட்கும்; * பந்தஞ்செயும் † மாதவனைப்போலே - நல்லப் - பாங்கானபோகமதுஒருசாமஞ்செலுமே......................(௧௪௫)

* பந்தஞ்செய்யும் - சுக்கிலத்தைக்கட்டும் † மாதவனைப்போலே ஸ்ரீ கிருஷ்ணனைப்போல

அன்றியும் - இவைசரக்குகள் - வகைக்குபலம் ......................(௧)
பனவெல்லம் - புலம் ......................(௫)

## கழிச்சல்வகுப்புமுற்றிற்று

அகத்தியர் திருவடிகளே

சரணம்

இஃது

# அட்சரவகுப்பு.

## அட்சரங்கள் - ஏழுவிதமெனகூறுகின்றார்

எண்சீராசிரியவிருத்தம்

ஒன்றான அட்சரங்கள்ஏழுஞ் சொல்வோம் உயர்சூலிஅக்கரமுடன்நீதிஅக்ரம் மன்றானசோதி அக்கரம் வீமி அக்ரம் மகத்தான குண்டியக்ரம் கபாலியக்ரம் தன்றான குமரி அக்ரம் ஏழுஞ்செய்யும் சதிபான விவரத்தை சாத்தக்கேளு குன்றானசூலி அக்கரத்தைச்சொல்வோம் கொடியதலைநோயாகிச்சுரம் உண்டாமே......................(௧௪௬)

## சூலியட்சரத்தின்குணம்

சுரம் உண்டாம் இடைகடுக்கும் நா வேக்காடாம் துடிநாவும்வெளுப்பேறிமா போலாகும், திறமானவெள்ளாவிப்போல் வாய்நாறும் திரண்டு அடைவெளுத்திரசம்வாய்நீர் ஊறும், உறமானவாந்தியும் வெள்ளோக்காளந்தான் ஒழியாமல்தண்ணீர்மேல்தவனங்கொள்ளும், * கரபாதம் உடலமெல்லாங்கருக்குமேதோன்றும் கழல் நீதியக்கரததைக்கருதிக்கேளே......................(௧௪௭)

* கரபாதம் கையுங்காலும்

நீதிஅட்சரத்தின்குணமும் - சோதிஅட்சரத்தின்குணமும்

கருவென்ன குளிர்ந்துதலைவலித்துக்காணும் கதித்துசுரம் மேல்வீசும் வாய்க்கசக்கும், உருவென்ன நாவதுவுஞ்சிவந்து மாபோல் உலர்ந்து நிற்கும் தேனுசெரித்து வரளும்வாயும், துருவென்ன சோதி அட்சரத்தைச்சொல்வோம் துடிதுடிக்கும் இடியுமே தலைவலிக்கும், பருவேன்னசனுசகால் * நோம்சுரமும்வீசும் பகர் நாக்குப் பல்லழுக்குநிறமுண்டாமே..................(௬௪௮)

* நோம் - நோகும்

## வீமிஅட்சரத்தின்குணம்

அறுசீராசிரியவிருத்தம்

நிறமுந்தோன்றிவேக்காடாய் நின்றேகழியும்மிக * எடுக்கும்..................*
† புறமும்வயிறுதான் எரியும் புகல்வோம்வீமி அட்சரத்தை........................*
திறமதாகசொல்லக்கேள் தியங்கக்குளிர்ந்துதலைநோவாம் ......................*
‡ மறமுமிருத்தநாக்கதுதான் மடலின் தாழைங்குருத்தெனவே.........(௬௬௯)

* எடுக்கும் - வாயால்கக்கும் † புறம் - முதுகு ‡ மறம் - பலம்.

இதுவுமது

தாழங்குருத்தைத்தின்றதுபோல் தானேதோன்றும் வாயதனில்..............*
சூழமேனிகறுப்பேறும் துருத்துநெஞ்சில் இருப்புருத்தும் .......................*
நீழல்மிகுத்ததாகமுமாம் நெருங்கும் ஈரல்நொந்துவிடும்..........................*
ஈழமிகுத்தகுண்டியக்ரம் என்னும் இயல்பு நா சிவப்பே......................(௬௭௰)

குண்டிஅட்சரத்தின்

## குணம்

நாவுஞ்சிவந்து வாய்க்கசும் நலியாய்க் கலிக்கும் உடலமெலாம்..............*
மேவும் வயிறுதான்கழியும் * மிடுக்காய் நெஞ்சுங் கரித்தெடுக்கும் ............*
தாவும் இருமும் ஈரல்விலா தளர்வாய் நோகுந் தாகமிகும் ........................*
நீவுங் கபாலிஅட்சரத்தை நிகழ்த்தக் கேளு உடல்கனமே ....................(௬௭௧)

* மிடுக்காய் - பெலப்பாய்

கபாலிஅட்சரத்தின்

## குணம்

உடலுங்கனக்கும் வலிப்பெடுக்கும் ஓழியாசுரமுந் தோன்றிநிற்கும் .........*
திடலும் நெஞ்சு தலைநோயாம் சிறந்தநாவும் வேக்காடாம்........................*
குடலும் ஈரல் நொந்துவிடும் குழரி வயிறு பேதியுமாம் ........................... *
* மிடறுங்காடிச்சோறதுபோல் வேகும்விதங்கள் பார்த்தறியே ......(௬௭௨)

* மிடறு - தொண்டை

(ந) ம் அடி குமரிஅட்சரத்தின்

## குணம்

அழியக்கேளு ஐந்தாநாள் அழன்றேநாவும்வெடிப்புற்று ......................*
* செறியும் ரத்தமாய்வயிறு தெறித்தே போகும் குமரி அக்ரம்................*
நெறியாய்க் கேளு நாவதுதான் † நிறுவக்கூசும் தடிப்பேறும் ........ .....*
சுழியும்நொந்து விதனமுறும் கதித்த இருகண் நொந்திடுமே......... (கருந)
* செறியும் - நெருங்கும் † நிறுவல் - நிறுத்தல்

நொந்தே சுரமும் மேற்காயும் நுவலும் வாயுங் கசப்புருத்தும் ..............*
தந்தேவாந்திமிக பெருகும்தாங்கிவளரும் உண்ணுக்கும் .......................*
தந்தே * எயிறு † பசுமை உறும் தயங்குமூக்கு கபாலமதால்.. ...............*
வந்தே இரத்தங் ‡ கொப்பளிக்கும் மருவுமூன்று நாள் ஆறே.........(கருச)
* எயிறு - பல் † பசுமை - பச்சை ‡ கொப்பளிக்கும் - உமிழும்

இவை - (க) செய்புளும் அந்தாதியாய் வந்தமையால் வர்க்க வரி
சையின் குணமறியும்படி முன்னரிப்படியும் பின்னர்சிலகுண
மும் ஒளழ்தமுஞ் சேர்க்கலாயிற்று
அட்சரத்தின்குணம்

## பொது

தலையில்வலியும் தான்உண்டாம் தாதுமிக வுந்துடித்துநிற்கும்.......................*
குலையும் வெந்துநாவெந்து குளிர்ந்து தானே வரும்பிள்ளை ..................*
* கலையும்புசியநாவெளுத்துக்கலங்கி † கண்டந்தான்வெந்து ...............*
மலையில்மிளகு கொள்ளவொண்ணு வருத்து சொன்னேம் அக்சரமே (கருரு)
* கலையும்புசிய - வாயுமிழ்நீர்ப்பெருக்கால் - சீலைநனையும் † கண்டம் - கழுத்து.

அட்சரத்துக்கு

## மருந்து

கருஞ்சீரப்ரோகணிகடுக்காய் காட்டுமல்லிகைவேர்வகைக்கு ..................*
ஒருவிருகன் இண்டங்கொழுந்து ஒருபிடி உள்ளிப்பலம் இரண்டு ..............*
முருவிளக்கெண்ணெய்ப்படி அரைக்கால் முலைப்பால்வீசப்படியாக..............*
மருந்தை இடித்து எண்ணெயினில் * மயனபதங்கோரோசினையே... (கருசா)
* மயனபதம் - மெழுகுபதம்

இதுவுமது

சினையே இரண்டுவிருகனெடைசேரபொடித்தெண்ணெயிலிட்டு ...............*
தினையேவடித்துண்ணக்கேளு சதிராவயிற்று வேக்காடும்... ...................*
வினையமாகவே நாக்கு வெந்தபுண்ணுயிருக்கிறதும்.................................*
பனியக்காய்ச்சலுந்தீரும் பத்திய மிதற்குநலமாமே ......................(கருஎ)

குண்டி அட்சரத்தின்

## குணம்

அட்சரத்தின்குணங்கேளீர் அரைக்குமேலேசுரங்காணும் ..........................*
* மற்சம்போல்வெளுத்தேதேகம் மஞ்சள்நிறம் சிறுநீர்வீழும்..................*
† எச்சல்வாயில்சுருக்கென்னும் இளைத்தே உடம்புகடுப்பாகும் ............... *
கொச்சைக்குரலுங்கடுப்பெய்தும் குண்டியட்சரங்குணமாமே............(௧௫அ)

* மற்சம்போல் - மீன்போல் † எச்சல்வாய் - ஆசனவாய்.

குண்டிஅட்சரத்துக்கு

## மருந்துக்கள்

எண்சீராசிரியவிருத்தம்

சுண்டைவேர் நிம்பக்காய் அவ்வளைத்து தலங் * காவின்வெண்ணெயுடன் அருந்ததீரும், கொண்ட கரிப்பான் அரைப்பாக்களவரைத்து குறுகவே † சீரமுடன் அருந்ததீரும். வண்டணியுங் குழலாய் பச்சரிசிச்சோறும் வயங்காவின் பாலும்பத்தியமாய்க்கூட்ட,குண்டியட்சரமானவியாதிவிட்டுக்குடிபோகுமென்றுசிவன்கூறினரே.......................................................(௧௫௯)

* ஆவின் - பசுவின் † சீரம் - சீரகம்

உள்அட்சரத்தின்

## குணம்

அறுசீராசிரியவிருத்தம்

மூக்குநீர்ப்பாய்ச்சலாகும் முகமிக வெளுரிப்போகும் ...............................*
நாக்குமே வெளுத்துப்பூக்கும் நாவிவாய் ஆவிதோன்றும் ......................*
தூக்கமும சுரமுமெற்றத் துணுக்கென தண்ணீர்வாங்கும் ........................*
தீர்க்க இக்குணங்கட்கண்டால் சிறந்த உள்ளட் சரமுமாமே............(௧௬0)

உள்அட்சரத்திற்கு

## நெய்

எண்சீராசிரிய விருத்தம்

அதிமதுரம்* பூவந்திப்பழம் இரண்டும் அவைவகைக்கு விருகன் ஒன்றறிந்துமேலும், நிதிமுலைப்பால் வார்த்தரைத்து முலைப்பால் தன்னில் நினைவாக கரைத்து பசுநெய் உழக்கு, சதிபாகவே கலந்தொன்றாய் எரித்து † கடுகுமெழுகுப் பதத்தில் இறக்கிவைத்து, துதியாகவிருகனெடை நெய்க்கொடுக்க ‡ சூர் § அக்ரம் உட்காய்ச்சல் கணமும்போமே .....................(௧௬௧)

* பூவந்தி - மணிப்புங்கு † கடுகு - அதிமதுரமும் - மணிப்புங்கும் - முலைப்பாலுஞ்சேர்ந்துதிரண்டக்கடுகு ‡ சூர் -நோய் § அக்ரம் அட்சரம்.

நாமுள்தோஷக் குணம்

## தன்வந்திரி

பாரோதீ * அரிவையர்தன் துயரத்தாலும் பாலனதுமுன்னுளிற் † சனிக்கும்போது, ஆரேதான் அந்நாளில் தோஷத்தாலும் ‡ அன்னையுட பசியா

லும் வருத்தத்தாலும், வாரோதான் § குழவிக்கெட்டு நாமுள் தோஷம் வலுத்துதே இந்தநோய் வலுமைமெற்ற, மாரோதான் இருமிமிகமேல்மூச் சுண்டாம் மாசற்ற இருகண்ணீர்ச் ¶ சொரியும்பாரோ ...................... (௬௬௨)

* அரிவையர் - பெண்கள் † சனிக்கும்போது - கர்ப்பத்திலுண்டாகும் போது ‡ அன்னை - தாய் § குழவி - பிள்ளை ¶ சொரியும் - ஒழுகும்

இதுவுமது

சொரியும்பார் தலைவலியும் சுரம்உண்டாகும் சொற்பனமாய் * பொறிகலங்கி முலையுண்ணாது, அரியும்பார் விலாவிரண்டும் அள்ளெடுக்கும் † ஆ ஆ ஆ வாயெல்லாம் நாமுள்ளாகும், வரியும்பார் தொண்டைபற்றி மிகமுள்ளாகிவலுத்துதே விதியினுட வலுமைதன்னால், மரியும்பார் தலைநடுக்கும்பேசொட்டாமல்மா தொண்டைச் சேஷ்மந்தரன் மருவிப்பாரோ................ (௬௬௩)

* பொறி - மெய் - வாய் - கண் - மூக்கு செவி † ஆ ஆ ஆ - இரக்கமானச்சொல்

இதுவுமது

மருவிப்பார் இருகண்ணும் விழித்திருக்கும் மாபாவசண்டாள நாமுள் தோஷம், மருவிப்பார் இக்குணத்தை அறிந்துகொண்டு மகத்தான நோயிதென்று மனதிலெண்ணி, மருவிப்பார் மனதடங்கிப் பொறுமையாக வண்மையுடன் நோய்களைநீசோதித்தேறி, மருவிப்பார் நாமுள்ளின் தோஷங்கண்டு வருங்குணத்தில் இந்நோய்தான் தீராதென்றே.............................. (௬௬௪)

இம்மூன்றுமொருதொடர்

இதுவும் நாமுள் தோஷக்குணம்

அறுசீராசிரியவிருத்தம்

திடமாமுலையும் உண்ணாது சிறிமிகவே * சர்த்திக்கும் .................... *
அடவாய் கையில் நில்லாது அனல்போல்மிகவும் வெச்சென்று ............... *
† விடமேயனையவிழியாளே வேப்பம்பூப்போல்வயிறூடும் ................. *
நடமேபுரிவார் உரைசெய்தார் நாவின்முள்ளின்குணமிதுவே ......... (௬௬௫)

* சர்த்திக்கும் - வாந்திக்கும் † விடமேயனைய - விஷம்போலொத்த

நாமுள்ளுக்கு

## மருந்து

கடுக்காய் ஒன்று பொடிசெய்து கற்றுழஞ்சாறு சிரசமும் ............... *
இடுவோர் சங்கினளவாக இதுபோல் மூன்றுநாளதுதான்..................... *
கோடுமே இனிதாய் நாமுள்ளுக்குலைந்தேயோடிவிடுங்கையால் ............... *
விடுவேல்விழியாய் செய்யென்று வேதமுனிவர் உரைத்தனரே ...... (௬௬௬)

நாமுள்ளுக்கு வேறு

## மருந்து

வெண்பா

சங்கன்கொழுந்து தனிநெருஞ்சில் முள்ளுக் * காய்.......................... *
கங்குமிளகுதக் காளியிலைப் - பொங்கும் ................................. *

பழமஞ்சள் உள்ளிப் பரிவாய்நறுக்கி......................................*
பொழியும் ஒர் சங்கிடவேபோம் .............................................(௬௬எ)

* காய் - மிளகு

இவைமருந்தெல்லாம் நறுக்கிச்சாறெடுத் தொவ்வொரு சங்கிட
த்தீரும் பாலனைக்காத்தவளென்ற மணித்தக்காளியிருக்கபயமென்ன

ஷை அந்திப்பாலும் ஆலம்பாலுங் கொடுக்க தீராதநோய்த் திணையிலுண்டோ

கெந்தக * தாலுவில்குணம் இதை கெர்த்தகதாளியெனப்பர்

* தாலு - நாவு

அறுசீராசிரியவிருத்தம்

வஞ்சிக்கொடியே நீகேளாய் வாயில் கெர்தகதாளிதனை .......................*
மிஞ்சி * மிடறு முலை உண்ணு மிகபுண்ணாக † கந்திக்கும் ......................*
‡ குஞ்சி தன்னுடல் வெதுப்புற்றுக் கோழைநீர் வெந்நீராகும்.....................*
§ துஞ்சி மலமூர்திப்பந்துவிடும் தொகுத்த இர்தகுணந்தானே .........(௬௬அ)

* மிடறு - தொண்டை † கந்திக்கும் - நாறும் ‡ குஞ்சி - குழைந்தை § துஞ்சி - தூங்கி

கெந்தகதாளிக்கு

மருந்து

கெந்தகதாளிதான் தீர கேளாய் * பாசிவல்லாரை....................................*
வந்திருள்ளித்தன்னோடு வளமாய் இடித்து சுரசஞ்செய் ..........................*
குந்துப்வெள்ளாட்டுப்பாலும் கூட்டிச்சீரகமும் வெதுப்பி...........................*
தொந்தமாக அரைத்துகொடு சுணையும்புண்ணும்போமென்றே........(௬௬௯)

* பாசி - பழம்பாசி

அட்சரவகுப்பு முற்றிற்று

அகத்தியர் திருவடிகளேசரணம்

இஃது

# சோகை வகுப்பு.

## வாதசோகையின்குணம்

ஆமெனும்வாதசோகை அணுகிடுங்குணத்தைகேளு ..............................*
பாமெனும் * பழயதுண்டு † பைங்கிளியோடுதானும் .. ...........................*
வாமெனும்புணர்ச்சிசெய்து ‡ மல்லுசெய்தநுபோகித்து ........................*
நாமெனும் § ரவியில் ௶ ஏகி நடந்துதான்சென்றபின்பே ............(௬௭௰)

* பழயதுண்டு - பழயதுசாப்பிட்டு † பைங்கிளி - பச்சைக்கிளிபோல்சொல்லையுடையப்பெண்ணோடே ‡ மல் - மல்லயுத்தம்போல் § ரவியில் - வெயிலில் ௶ ஏகி - சென்று

### இதுவுமது

பின்புமே ராக்காலத்தில் புசித்துடன்புணர்ச்சிசெய்தால் ........ *
அன்புமேவைத்து பித்தராசனும் எழும்பிமேலே ........ *
துன்பமாய் * மூலம்புக்கித் தோன்றிடும் † வன்னிதானும் ........ *
இன்பமாய்வாதங்கூடி இணைபிரியாதுபாரோ ........ (௧௭௧)

* மூலம்புக்கி - மூலத்திற்புகுந்து † வன்னி - நெருப்பு.

### இதுவுமது

இணைபிரியாதிரண்டும் இருந்ததால் குணத்தைக்கேளு ........ *
கன * தனம் வற்றிப்போகும் கபாலமே சூடதாகும் ........ *
மூளை † சடம் பொங்கிப்போகும் மூலமே கருகிப்பின்னும் ........ *
துணைவிந்து மோகத்தாலே துன்பமே அணுகுந்தானே ........ (௧௭௨)

* தனம் - கொங்கை † சடம் - உடல்

### இதுவுமது

அணுகுமேவாதசூட்டால் ஆத்துமம் அழிந்துபோகும் ........ *
இணுகுமே * மாதரோடு இயர்பியேபுணர்ச்சிசெய்தால் ........ *
வணுருவிந்தூறிகர்ப்ப வயிற்றினிற் † சனிக்கும்பாலன் ........ *
முணங்கெனபிறந்தபின்பு மூன்றாண்டிற்சோகையாமே ........ (௧௭௩)

* மாதரோடு - ஸ்திரீகளோடு † சனிக்கும் - உண்டாகும்

### இதுவுமது

சோகைதான் அணுகும்போது திடிக்கவே சுரம்வந்தெய்தும் ........ *
தாகமே அதிகமாகும் சலமது சிரசிற்கோர்க்கும் ........ *
* தோகையாள் தனக்குபாலு சுண்டியே சலமதாகும் ........ *
வேகமாய் மலத்தில்வாயு புக்கினால் வினைதான்பாரோ ........ (௧௭௪)

* தோகையாள் – பெண்

### இதுவுமது

வினையதுவருகும்நேர்மை விபரமாய் உரைக்கக்கேளு ........ *
அனையதுவாகதானும் * அபானனும்வாயுகூடில் ........ *
புனையதுகீழ்மூலத்திற் † புக்கினால்திடிக்குந் தேகம் ........ *
‡ கனலதுமெற்றக்காணும் கண்ணதுவெளுக்குந்தானே ........ (௧௭௫)

* அபானன் - குதத்திற்கீழ்நோக்குகிறதசவாயுவிலொன்று † புக்கினால் - புகுந்தால் ‡ கனல் - சூடு.

### இதுவுமது

வெளுத்திடும் உதடுதானும் வெடிக்குமே தலைதான்நோகும் ........ *
களைத்திடுஞ் சோபமாகி கைகால்கள் அசதிகாணும் ........ *
பழுத்திடும் முகம்வேரூதும் பாரமாய் பசியெடாது ........ *
உளுத்திடுஞ் * சிசுவுக்கேதான் † உட்டணம் அதிகமாமே ........ (௧௭௬)

* சிசு - குழைந்தை † உட்டணம் - வெப்பம்

இதுவுமது

உட்டணம் அதிகமானால் ஒடுங்கிடுந்தாதுநாடி *
உட்டணம் அதிகந்தன்னால் உடலதுவற்றிக்காணும் *
உட்டணம் அதிகத்தாலே மூலமேகடுப்புண்டாகும் *
உட்டணக் குறியேகண்டால் மோசமேவருகுந்தானே (௬௭௭)

வாதசோகைக்கு

## எண்ணெய்

மோசமேவராமலுந்தான் * மூர்த்தந்தின் சோகைதீர *
தோசமாம்வாதசோகை துலேர்திட எண்ணெய்க்கேளு *
நாசமாய்ப் போகுநோய்தான் ரத்தனதேகமாகும் *
பேசவே இந்தநூலின் பேதமே அறிந்திடாயே (௬௭௮)

* மூர்த்தம் - உடல்

இதுவுமது

அறிந்திடுமுக்கத்தாரி அரசம்வேர் அத்திப்பட்டை *
வறிந்திடுமுசுமுசுக்கை * வாடிவேர்க் † கருந்துழாவும் *
துறிந்திடு அமுக்கருவேர் தூதளைப்பொன்னுங்காணி *
வெறிந்திடுவில்வவேரு விளாவுடன்தத்திவேரோ (௬௭௯)

* வாடி - தொட்டால்வாடி † கருந்துழாய் - கருந்துளசி

இதுவுமது

அத்திபுந் * சரக்கொன்றைத்தூர் துடரியுந் தகரைவேரு *
மித்தரு † மேனிசங்கு மிகுத்ததோர் முகிழம்வேரும் *
பத்தியாய் வகை ஒன்றுக்கு பலமது நிறுத்துவாங்கி *
நத்தியே மூன்றுநாளும் ரவிசனில் உலர்த்திடாயே (௬௮௦)

* சரக்கொன்றைத்தூர் - சரக்கொன்றைவேர் † மேனி - குப்பை மேனி

இதுவுமது

உலர்த்தியே உரலிலிட்டு ஓரிடியாகச்செய்து *
வலர்த்தியே இதனைதோண்டி வளம்பெறதுணிநீரில் *
மலர்த்தியே இதனைத்தாக்கு மறுபடிவனமூலிச்சாற் *
குலர்த்தியேசொல்லக்கேளாய் கூறுவோம் அழிஞ்சில்சாறே (௬௮௧)

இதுவுமது

அழிஞ்சியும் நத்தைச்சூரி ஆதொண்டைக்கிழ்க்காய்நெல்லி *
வழிஞ்சி ஆமணக்குபுங்கு மாதுளைபரித்தி * மேனி *
விழிஞ்சி ஆவாரை † நீலி விடத்தலைபொன்னுங்காணி *
புழிஞ்சியே வகைவகைக்குப்புசழிதுபலஞ்சாறுமே (௬௮௨)

* மேனி குப்பைமேனி † நீலி - அவுரி

### இதுவுமது

சாறது வீதங்கொண்டு சாற்றுவாய் முன்புநீரில்........ ........................*
பாரதுகடைசரக்கு பலவிதஞ்சொல்லக்கேளு ......................................*
நேரது பரங்கிப்பட்டை * நிம்பத்தோல் சாதிக்காயும் ................................*
சேரது தேவதாரம் செண்பகப் பூவுமாமே .................. ............(௩௮௩)

* நிம்பத்தோல் - வேப்பம்பட்டை

### இதுவுமது

பூவதுலவங்கப்பூவும் புகழ்வலம்புரிச்காட்கோஷ்டம் .............................*
ஆவதுதான்றிக்காயும் அரிசிதிப்பிலியும் * மாஞ்சில் ..... .........................*
தாவதிசெவ்வியந்தான் சந்தனத்தூளும் ஏலம் .................... .....................*
பாவதுகடுக்காய்ப்பூவும் பரிவுடன்திருந்தவாங்கே .........................(௩௮௪)

* மாஞ்சில் - சடாமாஞ்சில்

### இதுவுமது

வாங்குசீரகம் அவ்வீதம் வகைவகைப் பலங்காலாகும்..........................*
வாங்குடன்இளம்வறுப்பாய் வறுத்துமே இடித்துதூளாய்...........................*
திங்சது வராமல் தானும் செலமதிலிதனைச்சேர்த்து ...............................*
தாங்கவே இன்னங்கேளு சரக்கதன் வகையைதானே .................(௩௮௫)

### இதுவுமது

சரக்கதில் லிங்கம் பூரம் தாரமும்வீரங் கெந்தி ..................... ....................*
குரக்கவே வெள்ளை வாளம் கோரோசினைபுனுகுதானும் ........................*
நிரக்ககஸ்தூரிவீதம் நிலைபெறவகை ஒன்றுக்கு ..........................................*
வரக்ககால்கழஞ்சியாகும் வாங்கியேபொடியாய்ச்செய்யே................(௩௮௬)

### இதுவுமது

செய்துமுன் நீரில் தாக்கி * சேர் இரு கூட எண்ணெய்..............................*
நெய்துடன் வடுத்துவிட்டு நிகழ்பெற அடுப்பிலேற்றி ......... ......................*
மூய்து சாமந்தான்மூன்று மூலமாம் † வன்னிமூட்டி ..................................*
வய்துடன் எரிக்கும்போது ‡ இச்சலம் சுண்டிப்போமே ............... (௩௮௭)

* சேர்இரு - இரண்டுசேர்எண்ணெய் † வன்னி - நெருப்பு ‡ இச்சலம் - இந்ததண்ணீர்

### இதுவுமது

சுண்டிடுங்கியாழமெல்லாம் சூக்ஷசமாய் அடிநீராளுல்................................*
கண்டிடு இறங்கிநீதான் கனலதுவற்றினற்கால் ...........................................*
இண்டிடுங்கற்கந்தன்னில் இதனையேவடித்திட்டேதான்...............................*
அண்டிடுவாலைபூசை அம்பிகைபதத்தைப்போற்றே ....................... (௩௮௮)

### இதுவுமது

பொற்றியே உலகத்தோரில் புண்ணியர்க்கில்லை நோய்தான்...................*
பார்த்திடும் பாவத்தாலே பழிவரும் வினைவந்தெய்தும்.........................*
காத்திடுந் தேகத்தன்னில் கற்மநோய்ச்சூழும்பாரு .............................*
மாற்றிடாய்ப் பிணிகளெல்லாம் மரணமாங் குணத்தைக்காணே ......(கூஅக)

### இதுவுமது

காணவேவாதசோகை * காயத்தைவிட்டுப்போகும் ..............................*
ஆணவே அதிகாலத்தில் அருள்பெற எண்ணெய்தன்னில் ......................*
பூணவேநோயாளிக்குப் போடுநீ கழஞ்சுமூன்று ...................................*
தோணவே † நவநாள்மட்டும் துதிபெறகொடுத்துப்பாரோ ...........,. (கூகூ௰)

* காயத்தை - உடலை † நவநாள் - ஒன்பதுநாள்.

### இதுவுமது

கொடுத்திட இதற்குபத்தியம் கொள்ளுமே புகையும்போகம் ...................*
கடுதிடும் புளியும் பாகல் காயுடன் இறைச்சி மற்சம்.................................*
விடுத்திடு பூசினிக்காய் வெந்தயங் கடுகோடுள்ளி.......................... ·· ......*
மடுத்திடும் அகத்திகீரை மழை ரவி காற்றுகாதே .............................(கூகூக)

### இதுவுமது

காற்றுடன் நடை ஓட்டந்தான் கடுங்குரல் காரம் ஆகா .........................*
பார்த்துடன் வெந்நீர்ச்சாதம் பாங்குடன் வறுத்த உப்பாம் .............. .....*
போற்றுடனே கொறுக்காய்ப் புளிதனைக் கூட்டலாகும் ...........................*
மாற்றுடன் எண்ணெய் உண்டு மறுநவநாளுந்தள்ளே ..................(கூகூஉ)

### இதுவுமது

தள்ளியேநவநாளுந்தான் தலைக்குவார் ஒமந்தேய்த்து ...........................*
வள்ளல்தான் எனக்குசொன்னூர் அகத்தியன்தமிழால்செய்தோம் -..........*
கள்ளமே இல்லையிந்த கைவல்லியந்தாதி உண்மை ...............................*
உள்ளமேசுபஸ்தமாகும் உத்தமர்மொழிந்தநூலே..........................(கூகூங)

## பித்தசோகையின்குணம்

நன்றேன அந்தாதிகைவல்லியநானூறுதன்னில்.......... .......................*
இன்றெனபொருள்களெல்லாங்கூறுவோம் இன்னங்கேளு .......................*
தென்றெனகுழைந்தைநோயைத் திருத்தமாயானுஞ்செப்ப........................*
வன்றெனவாலைமாதே வந்தெனக்கருளுவாயே,.............................(கூகூச)

இதுவுமது

அருள்பெறும்பித்தவாயு ஆண்மையின்குற்றத்தாலே ............................*
மருவளர் சிசுவுக்கேதான் வல்பிணிதுடர்தல்சேளு ............................*
திருவருளாலேவந்த தீவினைக்கரேமல்ல ............................*
குருவருள்சாபத்தாலே கொடியதீவினை தானென்றே ....................(௧௧௫)

இதுவுமது

தீவினையாலே எய்தும்குணங்குறி சிசுவுக்கேதான் ............................*
மாவனைபித்தத்தின் காமாலையில்சோகையாகில் ............................*
மேவினைபிறக்குநோய்தான் விளக்கமே ஏதென்றுற்கால் ............................*
நாவினால் உரைக்கக்கேளு நாயகனாலேநோயே............................ (௧௧௬)

இதுவுமது

நாயகன்குணத்தைக்கேளு நாம் உரைப்பிறிவிந்நூலில்............................*
காமக்கக்காரன் காமபோகத்தால் விரகஞ்சூழ்ந்து ............................*
சேயக மாதினோடே சேர்ந்துதான்புணர்ச்சிசெய்து ............................*
காயமேவியர் வைத்தட்டக் களைக்கவேபோகித்தாலே....................(௧௧௭)

இதுவுமது

களைக்கவே இந்தவிதம் கன்னியோ டநுசரித்து ............................*
விளைக்கவேதாதுநஷ்டம் மேவியேசெய்வோராகில் ............................*
துளைக்கவே அன்னம் உண்ண துடிதுடித்துயிர்பசிக்கில்............................*
இளைக்கவேபுணர்ச்சிசெய்வோர்க் கிவ்விதம்நடக்குநதானே ............(௧௧௮)

இதுவுமது

நடந்தநாயகனும்பெண்ணாள் நாடியே அநுபோகத்தில்............................*
படர்ந்துதான்கருவிலாகி பார்தனில்பிறக்கும்பாலன் ............................*
செடமதுபித்தநீரால் தெளித்ததால் தேகமெங்கும்............................*
* கடமதுகனக்க ஊதி கண்ணுமேவெளுக்குந்தானே....................(௧௧௯)

* கடம் - சரீரம்

இதுவுமது

வெளுத்திடும் இரண்டாண்டானால் வினையதுசூழக்கேளு ............................*
களைத்திடுசடலந்தன்னில் கனலதால்வரட்சிக்காணும்............................*
பழுத்திடுந்தேகம் ஊதி பாண்டுகாமாலைப்போலாம்............................*
கொழுத்திடுகுடங்கள்போல குறி வயிறுபெருகுந்தானே ....................(௱)

இதுவுமது

வயிறதுபெருகிற்றேதான் வற்றிடுங் கால்கட்டையும் ........................*
தயிரதுபோலேபேதி தனித்தடிக்கடிக்குபாயும்..........................*
துபரமே அதிகமாகும் தவண்டிடும் அசதிகாணும் ........................*
பயறது போலேபுண்கட் படருங் காமாலையாமே ........................(௬௧)

இதுவுமது

பித்தசோகைக்கு

## எண்ணெய்

படருங்காமாலையிந்தப் பாரநோய்தனக்குகேளு ............................*
இடரது வாராதெ இந்நால் இயம்பிடும் எண்ணெய்க்கேளாய்......................*
நிடரும் மாம்பட்டை அத்தி * நிம்பதோல் முக்கத்தாரி .......................*
திடமென சித்திரமூலி சிற்றாமுட்டி அமுக்கரூவேர்.........................(௬௨)

* நிம்பத்தோல் - வேப்பம்பட்டை

இதுவுமது

வேரொனு மூங்கில்வேரும் விடத்தலே எருக்குதானும் ........................*
வாரொனும் பிரப்பம்வேரும் மல்லிகை சிற்றாமல்லி..........................*
கோரொனும் அழிஞ்சில்முல்லைக் குரும்பனே ஆமணக்கு ......................*
தேரொனுஞ் செங்கதாரி திருமேனியழகியாமே ........................(௬௩)

இதுவுமது

மேனியும் பொன்னுவாரை மிளகதின் கருணைவாடி ........................*
ஞானியாம் நத்தைச்சூரி நன்னாறி முசுட்டைப்புங்கு ........................*
வானிறமானகூனா வன்னியும்கமுகின்வேரும் ............................*
கானிற வகைவகைக்குக் கருதிடும் பலந்தான்வேரோ........................(௬௪)

இதுவுமது

வேருடன்வகைகள்வாங்கி மிருத்ததோர் ரவியில் மூன்று ........................*
சீருடன் தாள் உலர்த்தி செப்பிடும் உரலில்தாக்கி ...........................*
பாருடன் இடித்துதோண்டிப் பாங்குடன் தூணிநீரில் .........................*
காருடன் இட்டபின்னும் கருதுவோம் மூலிச்சாறே ........................(௬௫)

இதுவுமது

மூலியிரம் * நிலத்துழாயும் முருங்கையும் புனல்முருங்கை ........................*
வேலியின் பரித்திவெள்ளைச் சாரணைக் கீழ்வாய்நெல்லி ........................*
காவிமா தளையுநொச்சில் காக்கணான் பிரமிதுத்தி ...........................*
பாலிநெய்ச்சிட்டி † நீலிபரிவுடன் இவைகளவாங்கே ........................(௬௬)

* நிலத்துழாய் - நிலத்துளசி † நீலி அவுரி

இதுவுமது

வாங்கிடும் வகைவகைக்கு வளமதாய் சொல்லக்கேளு ..........................*
தேங்கிடவேண்டாம் இந்த சாறுமே பலம் இரண்டு..........................*
நாங்கவேமுன்புநீரில் நளினமாய் இதனையிட்டுப்..........................*
பாங்குடன் இன்னங் கண்டுதிப்பிலி மிளகுசுக்கே.......................... (௬௭)

இதுவுமது

சுக்குடன் பரங்கிப்பட்டை சொல்லிய தும்பராஷ்டம்..........................*
தக்கவே தான்றிக்காயும் தாளிச பத்திரியும் ஏலம் ..........................*
புக்கவே லவங்கப்பூவும் புகலவே கடுக்காய்மாஞ்சில் ..........................*
சிக்கவே சிற்றரத்தை செவ்வியம் சிங்கிதானே ..........................(௬௮)

இதுவுமது

சிங்கியாங்கடகம் சாதிக்காயுடன் * சிவந்தபத்ரி..........................*
அங்கியா அக்ரகாரம் அதிகமாம் செண்பகப்பூ..........................*
கங்கிசீரகமுங்கோஷ்டம் கருதிடும் வகைவகைக்கு ..........................*
பொங்கவே பலங்கால்வாங்கி புகலவே இன்னங்கேளே ..........................(௬௯)

* சிவந்தபத்திரி - சாதிபத்திரி

இதுவுமது

இன்னங்கஸ்தூரிதானும் இயம்பிடும் புனுகுங்கூட்டி ..........................*
அன்னரோசினையும்வீதம் அவ்வகை விருகன்வாங்கி..........................*
முன்னைய சரக்கதெல்லாம் முறைவறுப் பாகச்செய்து..........................*
உன்னித மாகக்கல்லு உரலினில் தாக்கிடாயே ..........................(௭௰)

இதுவுமது

தாக்கியே இடித்துமாப்போல் தடையிலா வடியேகட்டி..........................*
ஆக்கியே முன்புநீரில் அடவுடன் இதனையிட்டு ..........................*
தோக்கியே சொல்லக்கேளாய் நுசிதஅப்பிரகம்காந்தம்..........................*
தூக்கிடுங் கெவுரிதாவி துத்தமும் தாரமாமே ..........................(௭௰க)

இதுவுமது

துத்தமும் தருசுவெள்ளை துதிபெறும் வீரம்பூரம் ..........................*
வித்தக லிங்கம்வாளம் மேவிடும் சூதம்கெந்தி..........................*
சித்தமே இவைவகைக்கு செப்பிடு முக்கழஞ்சு ..........................*
உத்தமர் மொழிந்தநூலின் உரைதனை அறிந்திடாயே ..........................(௭௰உ)

### இதுவுமது

அறிந்திடும் இதனைவாங்கி அருள்பெற தூளதாக்கி.............................*
தெரிந்ததோர் முன்புநீரில் திருத்தமாய் இதனையிட்டு..........................*
பிறிந்திட வேண்டாம்பின்பு பேராமணக்கின் எண்ணெய் .......................*
பறிந்துநீபடிரண்டிட்டுப் பாரதோர் அடுப்பிலேற்றே.................(௯௰௩)

### இதுவுமது

ஏற்றியே முச்சாமந்தான் எரியதாய் எரிக்கும்போது ...........................*
பார்த்தியே யாமாகிற்றான் பசுமையாய் வருதல்காணும் ........................*
போற்றியே நீசொல்லாந்தான் புகலக்கேள் சுண்டும்பாரு........................*
ஆற்றிடு இறக்கிப்பின்னும் அடவுடன் வடித்திடாயே .................. (௯௰௪)

### இதுவுமது

வடித்துமே கலசத்திட்டு வாலையின் பதமேவைத்து ...........................*
மடித்துமே பித்தத்தின்கா மாலையின் சோகைதீர ...............................*
துடித்ததோர் வினையும் ஏகும் துன்பமே அணுகிடாது............................*
குடித்திடகுழைந்தைகட்கு குணங்குறி செப்புவோமே ...................(௯௰௫)

### இதுவுமது

குணமதை சொல்லக்கேளாய் கொடுத்திடு நவநாள்தானும் ......................*
கணம்இரு கழஞ்சஎண்ணெய் கருதிடு சிசுவுக்கேதான்.............................*
தினம்ஒரு நாள்தப்பாமல் திருத்தமாய்க் கொடுக்கும்போது........................*
இனமென்ன தேகந்தானும் எழுபோல வலுக்குந்தானே..................(௯௰௬)

### இதுவுமது

வலுக்குவே குழைந்தைப்பெற்ற மாதாவுக் கென்னபத்தியம் ...................*
தெலுக்கவே மிளகுகாரம் செய்திடா வெந்நீர்ச்சாதம் ............................*
குலுக்கவே வறுத்தஉப்பு * தின்றிபும் இரண்டுவேளை...............................*
பலுக்கவே அதன்மேல் ஒன்றும் பாவிப்ப தாகாதென்றே...............(௯௰௭)

* தின்றி - சாப்பாடு

### இதுவுமது

என்றெனநவநாள்தானும் இப்படி இருந்தாராகில்...................................*
குன்றெனும் வினையும்போகும் கூறுவோம் இன்னங்கேளீர்............................*
நன்றென தேசவஜ்ரநலமதாம் சுபஸ்தம் நன்றும் .....................................*
அன்றெனக்கைவல்லிய அந்தாதியின்பெருமைதானே .....................(௯௰௮)

### பித்தசோகைக்கு வேறு

## கியாழம்

கையாந்தகரை நீர்முள்ளிக் கமழ்நாயுரிவி வேர்க்கிட்டம்...........*
செய்யாச்சுக்குமிளகுடனே சீரகம் இவைகட் சமனாக ...........*
மெய்யாக்கியாழமாய்ச்செய்து மீறும்அந்திசந்திகொடு...........*
பொய்யாம்பித்தச்சோகையறு போகும்போகும்கண்டாயே............ (கூயக)

### பாண்டுகாமாலைசோகைக்கு அடைக் கியாழம்

### எண்சீராசிரியவிருத்தம்

சுத்திசெய்த * மண்டூரம்பலம் ஓர்எட்டுச் † சூதஇலைநீர்முள்ளிக்கீழ்வாய்நெல்லி, சித்திரமாங் கரிசலாங் கண்ணியோடு சிறப்பாக வகைக்கஞ்சு பலமேகூட்டி, புத்தியுடன் சீரகமும் பலம்ஒன்றாக ‡ புனல்படிஆர் எட்டு விட்டு வற்றக்காய்ச்சி, பத்தியுடன் அடைக்கியாழ மாகத்தானே பண்பாக அந்திசந்தி கொடுத்திடாயே ...................(கூஉய)

* மண்டூரம் - செங்கற்சிட்டம் † சூதஇலை - மாஇலை ‡ புனல் - சலம்

### இதுவுமது

### கலிவிருத்தம்

கொடுத்திடபாண்டு கொடியசோகைகளும்...........*
அடுத்தகாமாலைஅனைத்துமேதீரும்...........*
படித்திடும் இச்சாபத்தியங் காத்தி...........*
தொடுத்த வியாதிகள் எல்லாந் தூலையுமே ...........( கூஉக)

### பாண்டுகாமலை சோகைநீர்க்கோவை உடம்புவீக்கத்திற்கு மருந்து

## பிரம முனி

### எண்சீராசிரியவிருத்தம்

* மேதியிளந் தயிர்படிகால் † அச்சாணிப்பால் விதமாமூன்றுத்துளிவிட்டுக்கலக்கி, ஓதியேமிளகேழுபொடித்துப்போட்டு உண்டுவர இப்படியே நாள்மூன்றுக்கு, நீதியாய்க்கடும்பத்திய மூன்றுநாளும் நினைவாக மறுபத்ய மூன்றுநாளாம், ஏதியே எழாநாள் தலைநீர்வார்த்தே எட்டாநாள்புளி உப்புவழுத்துக்கூட்டே ...........(கூஉஉ)

* மேதி - எருமை † அச்சாணிப்பால் - அந்தஎருமைச்சாணிப் பால்.

### இதுவுமது

### வெண்பா

கூட்டவேபாண்டுக் கொடுங்காமாலைச்சோகை ...........*
நீட்டுடம்புவீக்கம் நீர்க்கோவை - ஓட்டமிடும்...........*
* அன்னவஞ்சூழ்பூவில் அழகொழுகும் பெண்மயிலே...........*
பன்னிப் பரவசத்தைப்பார்...........(கூஉங)

* அன்னவம் - சமுத்திரம்

ஊதுகாமாலையின்

## குணம்

அறுசீர் விருத்தம்

ஊதுகாமாலைக்குணங்கேளு ஊதிமுகமுங் கால்அதைக்கும்.................*
பாதிசாமம்பசியெடுக்கும் பசித்தவுடனே மந்திக்கும்............................*
சீதஞ்சிறுத்து வயிறுவிடும் சிந்தைமயக்கம் உண்டாகும் .......................*
காதும் அடைக்கும் இளைப்புண்டாம் காமாலை யூதக்குணமிதுவே .....(௬௨௪)

இதுவுமது

காதுடன் உடம்புங்கண்ணும் கனக்கவேவீங்கும்வற்றும்..........................*
போதவேநாவும்புண்ணைப் பொருந்தியசுரம் உண்டாகும்......................... *
வேதுகைகாலுஞ்சோர்ந்து வெறுத்திடும் அன்னந்தன்னை .........................*
ஊதுகாமாலையென்று உரைத்தனர் முனிவர் தாமே ............................(௬௨௫)

ஊதுகாமாலை மஞ்சட்காமாலை வரட்காமாலைக்கு

## மருந்து

எண்சீர் விருத்தம்

கிட்டமுடன் அரப்பொடியும்வெள்வெண்காயம்கிளர்முருங்கையிலையுங் *கோகனந்தன்னோடே, திட்டமுடன்முற்றியதோர்தேங்காய்ச்கூட்டிச் சிறந்த இளநீர்வார்த்து அரைத்துக்கொண்டு, வட்டுருமுலையாளே இரண்டுநேரம் வாசாக அரைக்கழஞ்சு குழவிக்கீய, சட்டமதாய் ஊதுகாமாலைமஞ்சள் தனித்தவரட்காமாலைத்தணியுந்தானே... ........................................(௬௨௬)

* கோகனம் - கரிசலாங்கண்ணி

மஞ்சட்காமாலையின்

## குணம்

அறுசீர் விருத்தம்

குண்டி அக்கரமிருத்தால் குளுப்பையாய்முகங்கால்வீங்கும் ....................*
விண்டிடரத்தம்வற்றும் வெதுப்புமேல் விலாவில்தோன்றும் ....................*
* பண்டியின்மலமுஞ்சிக்கிப் பசுமஞ்சட்சிறுநீர் ஆகும்.................................*
கண்டியாய்கண்வெளுக்கும் மஞ்சட்காமாலையாமே...............................(௬௨௭)

* பண்டி - வயிறு

மஞ்சட்காமாலைக்கு

## மருந்து

எண்சீர் விருத்தம்

சாற்றினேர்அதிமதுரம் சங்கன்வேரும் தனித்தநிம்பப்பழத்தரைத்துதானேஆவின், சாற்றினேர் பால்தனிலே உண்ணவேதான் தணியுமஞ்சட் காமா

லை தரணிதன்னில். சாற்றினுர் கண்டூரோ கீழ்வாய்நெல்லி தழைத்தமணித்தி க்காளித்தயிரில்தானே, சாற்றினுர் அரைத்துசொடு குழவிகட்கு தணியுமஞ்ச ட்காமாலை சபலந்தானே.................................................... (ஆஉஅ)

வரட்காமாலையின்

## குணம்

வெண்பா

தின்பச் செருக்கும் காலோய்ந்துடம்புலரும்...................................*
தண்ணீர்க்குமெற்றத் தவிக்குமே - பெண்ணே....................................*
இருட்பிழம்பைப் போலும் * இளவலுக்கு தான் சூழ் ..............................*
வரட்காமலைக்குணத்தின் வாறு ..................................................(ஆஉக)

* இளவல் - குழந்தை

வரட்காமாலைக்கு

## மருந்து

மணித்தக்காளிக்கீழ்க்காட்நெல்லிமகிமீது .......................................*
கணித்துசமூலம்நிம்பக்காயளவு - தணித்தரை.....................................*
எருமைதயிரில் இனிதாக உண்டு......................................................*
எருமைதயிர்பால்நெய்யிடு...........................................................(ஆநடய)

## சோகைகாமாலைவகுப்புமுற்றிற்று

அகத்தியர் திருவடிகளே

சரணம்

பற்பல வியாதிகளின்

# வகுப்பு

பால்உண்ணுதகுழந்தைக்குமருந்துவேறு

## எண்ணெய்

எண்சீர் விருத்தம்

அவுரிவேர்ச் சத்திச்சாரணையின்வேரும் அழுக்சராவேர்நிலப்பனைக்கி மூங்கு, விவரகருங் காவியிலை கஞ்சாங்கோரை மிளசருணைப் பட்டை மூர்குரட் டைவேரும், தவருடைய * திரிகடுகு பரங்கிப்பட்டை தும்பராஷ்டங்கடுகுசிரக ந்தான், பவுரியிவை வகைவகைக்குவிருகன்ஒன்று பசும்பாலில் அரைத்துவடி விட்டுக்கொள்வே ......................................................... (ஆஙக)

* திரிகடுகு - சுக்கு - மிளகு - திப்பிலி

இட்டுக்கொள்ளொருசங்கு வார்த்திட்டாற்கால் இளங்குழைந்தைப்பால் குடிக்கும் இதுவல்லாமல், மட்டுமிந்தமருந்தெல்லாம்கூட்டித்தானே மகிழ்சிறுமணக்கெண்ணெய்த்தன்னிற்போட்டு, சட்டமுடனே எரித்துபதத்திறக்கி தயவாக அளவறிந்துப்புகட்டிவிட்டால், நட்டமுடன்பால்குடியா திருந்தபிள்ளை நலமாகப்பால் உண்ணும்நாட்டிப்பாரோ... ............................(௯௩௨)

இருமலுக்கு

இண்டிலையும் தூதுவளைச் கண்டங்கத்திரி இயல்பாக வகைக்கொருபிடியேகொண்டு. மண்டியே திப்பிலியும் வெள்ளைப்பூண்டும் வகைக்குஒரு துட்டைதான் வாங்கிவந்து. பண்டியொரு படி நீராவிட்டுச்காய்ச்சிப் பரிவாக அந்திசந்தி பத்துநாளும், கொண்டிடவே இருமலது தீருந்தீருங் குணமான இச்சாபத்திய மாய்க்கொள்ளே... ........ ................................ (௯௩௩)

உண்ணாக்குக்கு

## மருந்து

வெண்பா

ஏவச்சாரங் கற்சுண்ணம் இரண்டும் பழச்சாற்றால்......*
அவச்சாரமாக அரைத்து - சுவைச்சேர் .................*
உண்ணாக்கிலேதடவ உண்ணாவு தான்வளர்தல்............*
கண்ணாரஓடுமதுக் காண் ........................... (௯௩௪)

கக்குவான்

## குணம்

கொச்சகம்

கெக்கரித்துத்தும்பிக் கிளர்ந்திருமல் உண்டாகும்...............*
கொக்கரிததுப்பறகடித்துக் கோழைகபமேஇறங்கி ............ *
வக்கரித்துஆண்பெண்ணும் மற்கட்டியிட்டாற்போல் ......... *
நக்கரித்து தாணும்நவில்கக்குவானதுவே ........... (௯௩௫)

கக்குவானுக்கு

## நெய்

வெண்பா

தூதுவேளைத்தான் துவைத்துமே சாறுகொண்டு ......*
கோதில்படிநெய்யுங்கோஷ்டங் - மாதேநீ...................*
கூட்டியெரித்தருந்த கோரகக்கு வானதுவும்...............*
தாட்டியின்றி யோடிவிடுந்தான்......................(௯௩௬)

நாவரட்சிக்கு
## குடிநீர்
எண்சீராசிரிய விருத்தம்

கோஷ்டமுடன்சிரசமும்ஏலம்சுக்குக் * கூவிளவேர் அதிமதுரம் † கூர்மத்தோடு, வாட்டமுடன்சந்தனமும் சுலேமான்கொம்புவரப்பூலாவேரும் நெற்பொரியும்நேராகத், தேட்டமுடன் குடிநீராக் குடிக்கவேதான்தேசதது சிறுவோர்க்கு தேனேசேளாய், நாட்டமுடனே மயக்கம்சோபதாபம் நாவரட்சியுந் தீரும் நாட்டுள்ளோரே ............(ருஙஎ)

* கூவிளவேர் - வில்வவேர் † கூர்மத்தோடு - ஆமையோடு

தாகத்திற்கு
## கியாழம்
அறுசீர்விருத்தம்

ஏலம்மதுரம் பற்படகம் ஏற்றச்சீந்தில் * அறுகு † சந்தம் ............*
சாலவில் வப்பழத்துடனே சவிலாமிச்சம்வேப்பீர்க்கு............ *
கோலிரு நாழிநீர்விட்டுக் கொதிக்கக்காய்ச்சிஉழக்காக்கி............*
வாலர்ப்பெரிய மாந்தருக்கு வருந்திகொடுதாகப்போமே ............(ருஙஅ)

* அறுகு - அறுகம்வேர் † சந்தம் - சந்தனம்

தாகத்திற்கு வேறு
## கியாழம்

புளியம்பட்டை மிளகுடனே புங்குவேலி நாயுருவி ............*
அளிய இலேகட் சமன்சாம்பல் ஆக்கிலும் விருசனெடை ............*
நளியப் பொரித்து நீர்விட்டு நலமாய்க் காய்ச்சி யிறுத்துகொடு ............*
துளிய * மூளைக்குத்தணியாத தாகம் போகுங்கண்டாயே ............(ருஙஅ)

* மூளை - குழைந்தை

### வீக்கத்திற்கு குடிநீர்
வெண்பா

நினத்தாளிசங்குசுனா சிறுநெருஞ்சிற்குறிஞ்சான் ............*
மனத்தாநீர்முள்ளி உள்ளிமாமலேயின் - கனத்துவரில்............*
வெண்காரமேபொடியாய் மேவுகுடிநீரருந்த............*
கண்காணவீக்கம்போங்காண் ............(ருசய)

### பொருமல்வீக்கம் வயிற்றிற்கட்டி உப்பலுக்குக் குடிநீர்
எழுசீர்விருத்தம்

சங்குநெருஞ்சில்சாரணைகொவ்வைத்தன்னுடன்நீர்முள்ளித் ............*
தான்றிகடுக்காய்புளியிலேநெல்லித் தாமொனும்வேப்பந்தோல்............*
மங்கிபகிட்டம் இரும்பின் அரைப்பொடிமஞ்சளும்நன்னாறி ............*
எழுகலேவொன்றைவிழுதிக்குமரி மணலிசுனாக்கொடியும் ............(ருசக)

பங்கம்பூளைச்செங்கத்தாரி பாதிரிகுறிஞ்சாவும் ...........*
பழகியகாடி * கோசலம்விட்டேபாகமும் எட்டொன்றுய் ...........*
பொங்கியகுடிநீரானதைபருகப் பொருமலும்விக்கமுடன் ...........*
போதவயிற்றிற்கட்டியும் உப்பலும்பொடியாகுந்தானே ...........(௩௪௧

* கோசலம் - கோமயம் இதுபெரியவர்க்குஞ்சிறியவர்க்குமாகும்.

அசிரணத்திற்கு

## கியாழம்

அறுசீர் விருத்தம்

வெற்றிலைப்பதக்கெடுத்து வெண்டுங்கண்ணும்புபூசி ...........*
வைத்திடு அடுப்பிற்சுட்டி மடிகுடிவெற்றிலையைப்போட்டு ...........*
ஒத்துடன்வறுத்துநன்றாய் ஒருபடிநீரைவார்த்து ...........*
பற்றற எட்டொன்றாக்கிப்பாங்குடன் இறுத்துட்கொள்ளே ...........(௩௪௨)

இப்படிச்சொல்லவேதான் இதமுடன் அசிரணங்கள் ...........*
தப்பியதாதுசன்னி சுயித்தியம் வாந்தி * பிராந்தி ...........*
செப்பியவயிற்றின்நோவு சீதமுங்கடுப்புதாகம் ...........*
அப்பொழுதோடுமென்று அகத்தியர் உரைசெய்தாரே ...........(௩௪௩)

* பிராந்தி - மயக்கம் இதுபெரியவர்க்குமாகும்

நமெக்கல்வாந்தி அசிரணத்திற்கு

## கியாழம்

சோறுடன் அசமதாகம் துப்பதோர்வசம்புதானும் ...........*
பாரிய துணை * தமாலம் பருமிளகுடனேகூட்டி ...........*
வேறுவேறாய்நறுக்கி விதங்கொட்டாங்காய்ச்சி ஓமம் ...........*
நாரியே காய்ச்சிக்கொள்ள நமெகல்வாந்தியுந்தான்போமே ...........(௩௪௪)

* தமாலம் - இலை

விக்கலுக்கு

## மருந்து

தேற்றான்கொட்டைச்சந்தனமும் திசமுங்கலைமான்கொம்புடனே ...........*
கூற்றும்விழிப்பெண்முலைப்பாலில் கொட்டைப் * பாகு அளவரைத்து ...........*
ஆற்றுவெல்லங்கூட்டியிட அகலும்வெண்காரம்பொரித்து ...........*
போற்று இளநீரிற்கொடுக்கப் போகும்விக்கல் ஆமென்றே ...........(௩௪௫)

* பாகு - பாக்கு

விக்கலுக்கு வேறு மருந்து

## தேரையர்

கலிவிருத்தம்

எட்டுத்திப்பிலியீரைந்துசீரகம் ...........*
கட்டுத்தேனில் கலந்துண்ணவிக்கலும் ...........*

விட்டுப்போகும் விடாவிடிற் * புத்தகம் ......................*
சுட்டுப்போடுநான் தேறனுமல்லவே................ (௬௪௬)

* புத்தகம் - மயிலிறகு

விக்கலுக்கு வேறு

## மருந்து

வெண்பா

திப்பிலியும் ரோகணியும் சேரவறுத்துப்பொடித்தோர் ..........*
துப்பாமயிலிறகுஞ்சுட்டுநான் - தப்பாமல்...... ...................*
செந்தேன் கலந்திழைத்துச்செப்பநாவிற்றடவ ...............*
பைந்தொடியே விக்கல் அறும்பார் ..................... (௬௪௭)

சர்த்தி விக்கலுக்கு

## கியாழம்

கலிவிருத்தம்

நீடுமோதளைநெற்பொரி சர்க்கரை..........................*
கோடுத்திப்பிலி தேனிற்குழைத்திட ..........................*
பீடுசெய்யும் பெருத்தநோர் சர்த்தியும் ........ ........ *
ஓட ஓட ஒருத்துவதுண்மையே ............ ......(௬௪௮)

வார்திக்கு

## மருந்து

எண்சீர் விருத்தம்

தினமானகுழைந்தைகட்கு வாந்திக்கண்டால் சிங்கியென்றுகலங்கோம் புந்திப்பிலிகூட்டி, இனமாக அதிவிடயங் கூடச்சேர்த்து இன்பமுடன் பொடி செய்துதேனிலிட்டால், கனமான வாந்தியெல்லாம் விட்டுப்போகும் கைகண்டமருந்திதுதான் கருதிப்பாரு, மனமானமனதறிவாயிருந்துக்கொண்டு மசத்தானசுருதியிலே மனத்தைநாட்டே ..................................(௬௪௯

வாந்திஓக்காளத்திற்கு

## மருந்து

அறுசீர்விருத்தம்

காடிச்சோறுவசம்புடனே கனத்தமிளகுபற்பமதாய் ..........................*
ஆடிச்செய்துக்கியாழமிடு அன்றிவாந்தியானூற்கால்...........................*
கேடில்நன்னாறிப்பட்டைக் கியாழத்தைாத்து நல்கிடவே ........................*
ஓடிப்போகும் வாந்தியுடன் ஓக்காளந்தான் போமென்றே ............ (௬௫௰)

வாந்திவிக்கலுக்கு

## மருந்து

வெண்பா

பேசுங்கிராம்புடனே பேர்சிரகம் ஏலம் ...........*
வீசுமயிலிறகு மேற்சாம்பல் - தேசுபெற ...........*
நாலேயுந்தூளாக்கி நன்ருகத்தேனிலிட ...........*
வாலர் தன் வாந்திவிக்கல்மாறும் ...........(ரு௬ க)

வெள்ளோக்காளம் பித்தம்விக்கல்சர்த்திக்கு

## மருந்து

பரித்திவிளைபருப்பும்பசர் ஏலந் திப்பிலியும் ...........*
தரித்ததொருநெற்பொரியுஞ்சர்க்கரையும் - திருத்தமுடன் ...........*
கொண்டால்வெள்வாந்திக் கூறுபித்தம்விக்கல்சர்த்தி ...........*
கண்டால்விரைந்தோடுங்காண் ...........(ரு௬ உ)

மார்புச்சளிகோழைகட்டுக்கு மருந்து

## தேறையர்

கலிவிருத்தம்

நாட்டிடுபிரண்டைநறுங் கொன்றுதான் ...........*
வாட்டிடுப்பிழிவாங்கு ரசந்தனைப் ...........*
போட்டிடும் இருபோதும் ஓரைந்துநாள் ...........*
கூட்டிடுஞ் சளிக்கோழைகட்டோடுமே ...........(ரு௬ ௩)

அமரத்திற்கு

## மருந்து

வெண்பா

ஆமணக்கின் எண்ணெயிலே அங் * கடுதூதுளைக்குழப்பி ...*
தேமணக்குஞ்சிலேயினிற் தோய்த்துப் - பூமணக்கும் ...........*
கண்ணிற்பிழியக் கருதும் அமரந்தான் ...........*
விண்ணிற்பறந்தோடுமேல் ...........(ரு௬ ச)
* கடு - கடுக்காய்

கண்ணோய்க்கு

## மருந்து

புளிமாதளேயைப் புகழும்ரசமெடுத்து ...........*
சுளுவாய்நற்கற்கண்டைத் தூள்செய்து - வளமிரண்டுங் ...*
கண்ணிற்பிழியக் காதலர்க்கண்ணோய்தீரும் ...........*
மண்ணிற்பெரியவர்க்குமாம் ...........(ரு௬ ரு)

மாலைக்கண்ணுக்கு மை

## தேரையர்

கலிவிருத்தம்

சீரவேசிறுநாம்பை யிலையின்சாற்............................*
சேரவேபிழிந்திருகரத்தாலிழை............................*
பாறவேமைப்பறிந்திடுங் கண்ணினுள் ............................*
மாறவே அந்திமாலைவிட்டோடுமே ............................ (௩௩௬)

ஓடுமேபத்தியமுன்னறிந்துக்கொள் ............................*
போடவே எழுபோதிருநேரமும் ............................*
சாடுமே உப்புகைப்புப்புளிதவிர் ............................*
நாடவேவெந்நீர் அன்னம் உண்ணேடுமே ............................(௩௩௭)

பிளித்தக்கண்ணுக்கு மை

ஓடுவெண்கலம் ஒன்றாகிழாகவை............................*
சாடுசெங்கிலைச்சாற் பிழிந்திட்டுமேல் ............................*
ஆடுஞ்செம்பினுல்அந்தமையானபின்............................*
போடுநாளேழுபிளிச்சக்கண்ஆறுமே ............................ (௩௩௮)

ஆறும்பாசிப்பயற்பருப்பாவின்பால்............................*
சேருநற்புழுங்கலரிசியின்மா ............................*
நேருஞ்சர்க்கரை நெய்ச்சுக்குசீரகம்............................*
கிருநற்களிக்கிண்டிப்புண் இல்லையே ............................(௩௩௯)

செவிநோயின்குணம்

அறுசீர்விருத்தம்

கண்களும்பீளைச்சாரும்கையொடுதலைபுந்தேப்த்து ............................*
பண்களுங்குரலுந்தாழ்ந்து பாலகன்மெலிந்தவாடி............................*
புண்படுமேனிபோலேபுரண்டுதானழுமேயாகில் ............................*
பண்டுசெவிநோயென்று பகருவார் அறிவுள்ளோரே............................(௩௪௰)

காது நோய்க்கு

## மருந்து

சீதேவியாரின் செங்கழுநீர்ச் செழியக் கிழங்கும் உள்ளியுடன்............................*
மாதேவசர்பு வேப்பெண்ணெய் வார்த்துக்கொதிப்பித்தே யிறக்கி............................*
காதில்விடவே நோயெல்லாங் காணுதோடும் இவ்வுலகில் ............................*
பேதைமயிலே வைத்தியர்க்குப் பேசும் ஆபுர் வேதமதே ............................(௩௪௰௧)

காதுநோய்க்குவேறு மருந்து

## தேரையர்

கலி விருத்தம்

ஆறுமே சதுரக்கள்ளியை அனல் ...................... *
நேருமே வதைக்கி இருநேரமும் ...................... *
சாறுமே பிழிந்தடைசெவிதனுள்தான் ...................... *
தீருமேபத்தியம் புளிதள்ளிடே ...................... (௫௱௨)

காது சீய்க்கு

## மருந்து

அறுசீர் விருத்தம்

அக்குத்திப்பிலியுங் கோஷ்டம்சுகந்தசம்பிந்தலவணமுடன் ...................... *
வக்சுமுத்தங்சாசுள்ளி வசம்பு வகைக்கு * மாடஎடை ...................... *
தக்கக் கசூர்க்காய் எருக்கிலைச்சாற் றானேகலந்து எண்ணெயிட்டு ...................... *
திக்கக்காய்ச்சிச்செவியிலிட சீயுமாறுக்கண்டாயே ...................... (௫௱௩)

* மாடஎடை = உழுந்தெடை

காதில் நாயீப்புகுந்தால்

## மருந்து

வெண்பா

குப்பைமேனிச்சாறும் கோலச்சிறுநீரும் ...................... *
ஒப்பிக்காதிற்பிழிய ஒண்டொடிகேள் - செப்பினதோர் ...................... *
காதிற்புகுந்தசடியநாயீச்சாகும் ...................... *
தீதில்லாதிம்மருந்தைச்சேர் ...................... (௫௱௪)

காதில் நாயீப்புகுந்தால்வேறுமருந்து

## தேரையர்

கலிவிருத்தம்

ஓடுங் * கோழிச்சாறுத் திருமேனிச்சாற் ...................... *
தேடுங்கூட்டிச் செவிதுளை விட்டிடில் ...................... *
வேடுநாயீவெளிப்படும் ஓலமிட் ...................... *
டர்டுமில்லாவிடில் அழிந்துநீறுமே ...................... (௫௱௫)

* கோழிச்சாறு - கோழியவரைச்சாறு

பல்ஈறில்இரத்தம்வந்தால்

## மருந்து

அறுசீராசிரியவிருத்தம்

பிச்சைநன்னறிவேளைப் பரிவுடன்கொண்டுவந்து ...................... *
மிச்சையில்வெந்நீர்விட்டுவிசிதமாய் அரைத்துப்பின்னர் ...................... *

கொச்சைபுள் நரம்பைப்போக்கிக்கொட்டைப்பாக்களவுவெந்நீர்................*
இச்சையாய்க்கொடுக்கப்பல்லு ஈறினில்ரத்தம்போமே..................(௱௬௰௬)

முடிசாய்ந்துபோனதற்குக் குளிசமும்

## மருந்தும்

உற்றசெவ்வலரிதன்னில் * உத்தரவேர்ப்பிடுங்கி..................................*
அற்றவேகுளிசமாடி ஆணெனில்வலதுகையில்.......... ..........................*
எற்றப்பெண்பிள்ளையாகில் இடதுகையதனிற்கட்டி ..........................*
நற்றவ காணிச்சாறும் நல்லெண்ணெய்ச்சமனாய்க்கூட்டே................(௱௬௰௭)
* உத்தரவேர் - வடக்கேபோகிறவேர்

கூட்டிசங்கெடையேவார்க்கக் குழந்தையுந்தெளிவதாகும் ................ *
தாட்டிக * சிகரந்தானும் சாய்ந்ததுநிமிர்ந்து நன்மைக் ........ ..............*
காட்டிடுங்களிப்புமாகும் † கமலவன்விதித்ததென்றால் .........................*
பாட்டையும் பாடியென்னப் ‡ பயந்தாளின் பாக்கியந்தானே ......... (௱௬௰௮)
* சிகரம் - தலை † கமலவன் - பிரமதேவன் ‡ பயந்தாள் - தாய்.

இதுவும் முடிசாய்ந்துபோனதற்கு வேறு

## மருந்து

எண்சீராசிரியவிருத்தம்

சிறுதுரத்திவேர்வரப் பூலாக்கொழுந்து திகழ்விடத்தேரிலை வேப்பந்து ளிரும்நல்ல; முறுது ஒருதலைப்பூண்டுஞ்சமனாய்ச்சேர்த்து முலைப்பாலில் அரை த்து உள்ளுக்குவார்க்க; குறுகுறுத்தமுடிசாய்ப்புத்தீருந்தீரும் கொடிமினிடைக் குவளைவிழிக்குமுதச்செவ்வாய், நறுவிகங்கநடைக்கமலவதனமாதே நவையி ல்குழைந்தைப்பரிதாபத்தைப்பாரே ...... ....... ..........................(௱௬௰௯)

ஆண்குழைந்தைகளின் விரைவாதத்திற்கு நூல்நூற்கிறக்கதிரால்சூடுபோடலும் மருந்தும்

எண்சீராசிரியவிருத்தம்

பார்க்கவேகுழைந்தைகட்குவிரையைப்பற்றிப் பக்கத்தில் உப்பிசமாய்க்கண்டுதானால், நேர்க்கவே அடித்தொடையைக்கையினாலே நிமுட்டிப்பார்த நம்பதுவுந்தடிப்புப்பார்த்து; வேர்க்கவேகதிரதனைவெதுப்பிக்கொண்டு விரைக்கி எட்டுவிரற்கடைக்கீழ்ச்சுட்டுப்போடு, சூர்க்கவே அனலடுப்பிற் * காயமிட்டுச்சுட்டெடுத்து மூன்றுநாளடவாய்த்தின்னே..................... ............(௱௭௰)
* காயம் - பெருங்காயம்

தின்னயிலேபத்தியமோ ஒன்றுமில்லைச்சிறுமஞ்சட்யொடியில்விளக்கெண்ணெய்விட்டு, புண்ணெனனுந் தொடைதனிலே தொட்டுப்போட பொங்கியேபுண்ணுகி ஆறும்போது, மண்ணெனவே விரைதனிலேகண்டவீக்கம் * வா

யுமுதல் † வாதமுதல்வாங்கிப்போகும், கண்ணுரக்கண்டறிது சொல்லிப்போட்டோம் காசினியிற்காட்டாதே இந்தநூலே ..........................(தூஎ௯க)

* வாயு-அவ்வாயு (௰) † வாதம்-அவ்வாதம்-(அ௰) (வாதவாயு) மீமிசை

மயனைப்புழு நோயின்

## குணம்

அறுசீர்விருத்தம்

சோருஞ் சீதமலந்தண்ணீர்த் துலங்க விடாமலே கழிந்து ...................*
சேறும் மலம்போல் அபானத்தைச் செய்ப * உயிராலே சார்ந்து ............*
† காரினிறம்போல் கத்தரிக்காய்க் கசங்கிப் போன்று கழிந்ததெனில் ......*
வாரும்வடமுந் திகழ்மூலையாய் மசனைப்புழுவின் குணமாமே .........(தூஎஉ)

* உயிராலே - மூச்சாலே † காரினிறம் கறுத்தனிறம்

மான்விழிமாதேகேளாய் மயனைநோய் வருத்தத்தாலும் .......................*
ஊன்வயிறுளைந்து பின்னர் உடன்மலங் கருகினின்று ........ ..................*
கூன்குதவாயிற் குத்திக் குமுறியே * குருதிவீழ்ந்து ........ ......................*
தீன் மலத்துடனே சீதஞ்சிதறியே உதப்பைத்தள்ளும் ..................(தூஎ௩)

* குருதி - இரத்தம்

தள்ளினல்குருதிசீதம்தருகியே குதவாய்நின்று ..................................*
கிள்ளியே எடுக்குஞ் சீதம் கிழவயிறுளைந்து நோகும் ..........................*
மெள்ளவே தீர்க்கும்வண்ணம்விளங்கவேமுனிவர்தானும்.........................*
உள்ளநன் * மேதிநெய்யில் உறுமதை உரைக்கலுற்றூர் .......... (தூஎ௪)

* மேதி - எருமை

மசனை நோய்க்குமேதி

## நெய்

மசனைநோய்தீரக்கேளு வருமேதிநெய்யுழக்கு..... ..................................*
திசையா மஞ்சளும்சுருள்ளித் திரிகடு வசம்போடேலம்...........................*
தசைநறும் பூளைவேரும் தரும்அதன் இலையின்சாறும் .........................*
அசையுறும் மசனைமீனின் அதன்தலைதானுங்கூட்டே.... ...............(தூஎ௫)

கூட்டிமுன்சாறுவிட்டுக் கூர்மையாய் அரைத்துநெய்யில் ..........................*
நாட்டமாய்க்கலந்துக்காய்ச்சிநற்பதமெழுகதானல் ..................................*
தேட்டமாய்வடித்தோர்காசு திசமுநெய் க்கொள்ளத்தீரும் ..........................*
வீட்டமே இன்னமொன்று மென்பசு நெய்யிற் சொல்வாம் ............(தூஎ௬)

மசனைநோய்க்குவேறு

## ஆவின்நெய்

மசனைநோய்க்குக்கேள்மானே மருவும் ஆவின்நெய் உழக்கி ல்.....................*
குசையில்நாயுருவிமேனிக் கொழுஞ்சி தூதுளையோர் நாலும்......................*
வசம்புடன்சுக்குமஞ்சள் வகையோர்ப் பாக்களவு கூட்டிப் ..........................*
பசைபதமெழுகாய்க்காய்ச்சி பரிந்துண்ணமயனை நோய்ப்போம் ......(தூஎஎ)

கிரிநோயின்

## குணம்

* மஞ்சுடை † மதலைதானும் மருவிடும் பால்பாலர்க
மிஞ்சியே வயிற்றிற்பூச்சி மேனியுமலைத்துக்காட்டும் ....................*
நெஞ்சொடு விலாவிற்றட்டி நெறிக்கெட்டுப் பேசுமாகில் ....................*
அஞ்சவே கிரிநோயென் றறிந்துக்கொள்ளமுகுமாதே ..... .......... (௬௭௮)

* மஞ்சுடை - அழகுடைய † மதலை - பிள்ளை

கிரிநோய்க்கு

## மருந்து

கேளுங் கிரிநோய்தனக்கு கிளர்ந்த பசுவின் நெய்உழக்கு ....................*
கேளி அரைச்சா ருெப்பாய்க்கிராம்பு சாதிக்காய் மதூரம் ....................*
தோழிஓமம் சுக்கேலம் * தூ கோஷ்டம் † அறுகால்ஒன்று ....................*
மாளஅரைத்து நெய்க்காய்ச்சி வருநெய்க்கரண்டிக் கொளத்தீரும் ... (௬௭௯)

* தூ - பரிசுத்தம் † அறுகால் ஒன்று - வகைக்கு - கழஞ்சிருகனெடை

கிரிப்பூச்சிவீழ

## மருந்து

வெண்பா

நித்தம்எலிச்செவியும் நீள்முருங்கைநல்வேரும்... ....................*
அத்தத் * திரிபலையோ டாங்குடிநீர் † ரத்தகணுப் ....................*
வாய்விளங்கமேல் தூவி மைந்தர்வயிற்றின்உள்ள ....................*
தாய்விழுங்கப்பூச்சி விழுந்தான்....................(௬௮௰)

* திரிபலை - கடுக்காய் - தான்றிக்காய் - நெல்லிக்காய் † ரத்தக் கணு
ய்-சிவந்தக் கண்களையுடையாய்

இதுவுங்கிர்ப்பூச்சிவீழ வேறு

## மருந்து

அறுசீர்விருத்தம்

கிரிப்பாம்புவிழமருந்துகேளீர்முருங்கைஇலையதனை....................*
நேர்ப்பாய் அவித்து நால்நாழி நீரோவார்த்துநாலிலொன்ருய்....................*
ஏர்ப்பாய்க்காலமேகொடுத்து இலையைவயிற்றிலேவைத்துக் ....................*
கோர்ப்பாய்க்கட்டச்செத்துவிழுங் கொடியக்கிரிப்பாம்பதுவே .........(௬௮௧)

நாகப்பூச்சியின்

## குணம்

வெண்பா

பேச்சை இனிகேளுபெருவயிறு * கொப்பூழும்....................*
சாய்ச்சலுடன் ஒக்காளம் கக்குமே - மேப்ச்சலது....................*

பூச்சியதுநாகம் பூவையே நீ அறிந்து ..............................*
